12

அகத்தியர் உபநிஷடம்

60

60

ஜ
கீழ்பாக்கம்
சென்னை
"அகஸ்தியர் வாகட

60

தேதி: 6.5.64.
ஓலைச்சுவடியின் பெயர்: "அகஸ்தியர் வாகடம் கட்டு-50"
உரிமையாளரின் பெயர்: கீழ்பாக்க மருத்துவக் கல்லூரி, மனை நூல் நிலையம்.
இடம்:- கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி, மனை, சென்னை-10.

***

அகஸ்தியர் வைத்திய வாகடம். இது அச்சில் இல்லாததால் முழுதும் எழுதப் பெறுகின்றது. மிகுதியாக மருந்தும் செய்முறையுமர்கவு சிறப்பான்மையாக நாடி நோய் குறிகளும் ஆக நூல் முடிந்துள்ளது.

**

1. வேத நான் முகத் தோனுயுள் வேதத்தில் விதித்துச் சொன்ன
கோதிலா வியல்பினுலே குரு முனி யருளிச் செய்தார்
ஆதலாற்ற மிழினுலே யாய்ந் துணர்ந்த வருரைத்த
மூதுரை வாகடத்தின் முறைமையை மொழியலுற்றும்.

2. எலும்பினுல் கால்கள் நாட்டி யிசைந்ததோர் வளையைப் போட்டு
நலம் பெலும்பாக்கிப் பிசின் நரம்பினுல் வலி மேய்ந்த வீட்டில்
வலம் பிணிப் புற்றதோர் வான் வயித்திய யென்னலாமே.

3. வயித்தியன்று நல்ல வங்கிஉடப் பதியிலுள்ளான்
குயிந்த தோர் பிறவி சத்தங் குணமது உள்ளானுகில்
உயத்ததால் தீரு நோய்கள் உபாயமாய்த் தீர்க்க வல்லான்
னெயிந்திய வுலகுக் கெல்லா மேத்திய தந்தையாமே.

4. பூவுளோனருளில் வந்த புங்க வன்றனைப் போற்றி
யாயுறு வேதந் தன்னிலடைவது முன்னோர் சொன்ன
வாவறு மென் சானீள மதிமுப் பெண்ணன் கென்று
பாவைபே யதனுள் வியாதி பயத்தினைப் பகரக் கேளே.

5. பகர் நாலாயிரத்து நானூற்று நாற்பத் தெட்டும்
புகலுறப் பெண்ணன் கோடு பொருந்திய பொன்னே கேளாய்
சிகையுறு சிகையுறு சிரத்தில் ரோகஞ் செப்பிலா யிரத் தெட்டாகும்
வகையுற பேர் சாத்தியம் சாத்தியம் வகுக்கலாமே.

6. மேவிய உச்சி தன்னில் விளம்பிய வியாதி கேளாய்
காவியங் கண்ணினுளே கருதிய நாற்பத் தாறு
சீவிய அமுர்த மீது சேரு நோய் பதினுறும்
பாவலர்க் குரைத்தாக் காதில் பற்றிய வியாதி நூறே:

7. நூலவருரைத்தா ராயுள் வேதத்தில் நூறு மாகு
மேல்வார் குழலினுளே யியம்பிய நாசி தன்னில்
சாலு நோயென்பத்தாறு சாற்றிய விழியில் ரோகம்
மேலுடன் தொன்னூற்றும் கன்டென விதித்தார் மேலோர்.

8. நாரிய உருவம் ரெண்டில் நாதனுருரைத்தார் மேலோர் கான
சீரிய முப்பத்தாறும் சிறந்திடும் கவளி ரண்டில்
வார் முலை மாதே நாற்பத் தொன்பதாம் வரிசேரலில்
ரு*தொள்*குதந்த*தேனில்*தோ* சேரு நோய் முப்பத்தேமா என்று தான்
செப்பலாமே.

9. ஆகு மென்னன் குதந்த தேனில் நோய் நாற்பத்தஞ்சாம்
தோகையே யஞ்ஞாற்றும் துரோகமுஞ் சொல்லுங் காலை
நாகமா முனி யுணர்ந்த முப்பத்து நாலா மென்பர்
பாகமா யறிந்து நாக்கில் பற்று நோய் யிருபதாமே.

10. தானமா யிதனிரண்டில் சாற்று நோய் பதினுறும்
மானனுய் லாடந் தன்னில் வயிங்கு நோயிருபத்தாறும்
மூணிறக் கண்ட மீதிலுதித்த நோய் நூறதாகும்
பானலம் விழியினுளே பகர்ந் துரை வேதந்தானே.

11. மெல்லி நல்லாரே கேளும் விளம்பிய பிடரி தன்னில்
புலகு நோயிருபத் தெட்டும் பொருந்திடும் புருவந் தன்னில்
சொல்லிய பதினுறும் சேற்கையே கருத்து மீதில்
தில்லையு நாடி சொன்னர் தெளிந்து கொள் முப்பத்தாறே.

12. ஆதியு மிறைவன் கூறுமா யுரு வேதஞ் சொன்ன
நீதி சேர் சிரத்தில் ரோகம் நிகழ்த்திலா யிரத் தெட்டாகும்
ஈதி யென்னூற்று நாற்பத்தேழுமே உணர்ந்தால்
தீதில் நூற்றுவா தொன்னூந் தேக மென் சாறுந் தானே.

13. என்னிய சிரத்தி.ன் மீது இப்படிப் புரிந்து சொன்ன
வன்மையா முறுப்பும் பயத்தே திரண்டதா மதனிலுச்சி
நன்னிய வியாதி நாற்பத்தாறையு நவிலக் கேளு
முன்னிய பொருவீராய்ந்து துயிற்றிய நூ விதாமே.

14. கனத்திடும் சுமைகளாலும் கடு வெய்யில் கருதலாலும்
நனைத்திடும் என்னை தன்னை நாள்ப் பட முழுகையாலும்
புனக் கொடி மட நல்லாரை விடா துறப் புலக்கையாலும்
சினத் தரைப் படுக்கையாலும் சிரசில் நோய் சேருங் காணே.

15. இரு செவி நாசி யுடேயீ வண்டு யேறினும்
முருக்விழ் குழலீர் கண்ட சுனே யிட்ட மூழ்கினும்
மருவிய நீ போக்கதால் மயலுற வருந்தலாலும்
சிரமிசை யனேகந் தோஷம் சேர்ந்திடுந் திரு நலமாதே.

16. நெறியுடன் குருபாதத்தை நினைந்து நீர் நேரதர்க்கி
குறி யடையாளம் நாடிக் குறித்து நீ யறிய வேணும்
செறிவுடன் குணங்கள் தன்னை தெரிந்த தறிந்தனர் வேணும்
அரி யெட்டுக் குணத் தானின்னம் அவனல்ல வயித்திய னென்றே.

17. அட்டமாங் குறிகள் நாடி யறிந்து நீருணரவே வேண்டி
வட்டமா முகங் கண் பல்லு வாயதில் நாக்குக் காயம்
கட்டுறு மல சலங்கள் கை தனில் நாடி தானும்
திட்டமா யறிந்து செய்யும் சிகமுள்ள வயித்தியனென்றே.

18. வாதரோக மனிதர்கள் மாமுகம் மோதிலே கறுப்பா யிடும் உண்மையே
வேத நீதி விளங்கிய பித்தத் தோர் மீது வாய் முகம் மேல் மஞ்சள் ளோறுமே.

19. எய்யிது சேற்றும மெழுந்த வாதன் முகம்
மெய்யதாகக் கருகி வெளுத்திடும்
அய்யகுருரை செய்ய அருமறை
விழி-கறுத்து-வறி-சிவந்தே-யிருக்கு செய்த வாறுதிற வயித்தியராவதே.

20. வாதத்தோர் விழி கறுத்து வறி சிவந்தே யிருக்கும்.
தீதறப் பித்தத் தோர்க்குஞ் செய் விளி மஞ்சணித்து.
கோதற்ற சேற்றுமத் தோர்க்கு கூர் விழி வெளுத்திருக்கும்
யேதற்ற தொந்தத் தோர்க்கு யிரு விழி பல நிற மென்னே.

21. விளம்பிய வாத ரோகி பல்லது மிகக் கறுக்கும்
வளம்படும் பித்த ரோகி பல் மஞ்சள் நிறமதாகும்
உளங் குளிர் சிலேற்றும ரோகி பல் லொளி வெளுத்திருக்கும்
துளங்கிட வறிந்து கொண்டு சொல்லுவை குணங் கண்டானே.

22. வாதத்தோர் நாவு கறுத்து வன்னி துன்னி மாறுவை
பித்தத் தோர்க்கு---மஞ்சணித்துப் பேதமாய் கசந்திருக்கும்
பெய் வளையே சேற்றுமத் தோர்க்கு நாதி நா வெளுத்து நோய் தாகும்
மொண்ணுதலே..

23. சேத்தும வாத ரோக------தேனே யுடல்
பித்த ரோகத்தைப் பார்க்கில் வெச்செனவெருக்கு
கூருஞ் சிலேற்றும சடம் வேர்வை கொதிக்கும் குணங்கள் தான்
பாரும் பாரும் மானேர் தேகக் குணம் பார்த்து பகரும் குறிதானே.

24. மேவு வாதமுடையவர் மெய் மலஞ் சீவி தாக கறுத்திடும் செம்மையே
பாவை பித்தத் தோல் மலம் பார்த்திடில் லாவியே யெழும் மன்னிற மஞ்சளே.

25. மன்னு சேத்து மத்தோர் மலம் வாள் குறி
அன்னிலா யத்திரளாய் விழும் வெண்மையே
சொன்ன விக் குணம் மன்றியே தொந்தத் தோர்க்
கென்னில் பலவாய் விழு மென்பதே.

26. ஓங்கிய வாதத் தோர்க்கு நீர் விழும் குண முரைக்கில்
பூங்கொடி கறுத்து நொந்து செறுத்துடன் பொருமி விழும்
பாங்குறும் பித்தத் தோர்க்கு பசிய நீர் விழுந்து காட்டும்
மேங்கவே சுறுக்கதாக யெறித்து மஞ்சளித்து விழும்.

27. விழுமே சிலேற்றுமத் தோர்க்கு நீர் விழுங் குண முரைக்கில்
நாளுமே வெளுத் துளைந்து நயம் பெற வீங்குங் கண்டாய்
வாள் விழி மானே சேர்ந்த மானிடர் தமக்குத் தானே
கொள் பலவாகி விழும் மென்று தான் குறித்துக் கொள்ளே.

28. கரந்தாறும் வியாதிக் கெல்லாம் துறையென வீத்திருக்கும்
கரந்தாயும் பலத்து மேவுங் காலற்கு சமளுய்ப் பேசும்
அரந் தாறும் தக்கன் யாகம் அழித்திடும் போது வந்த
வரந் தாறும் நெத்திக் கண்ணில் பிறந்தது சுரம் நல் மானே.

29. ஆய்ந்த தோர் சுரமும் மேழு வகையுண்டு அணங்கே கேளாய்
மாயமாம் வாத பித்த சிலேற்றுமம் வன்மையாக
தாயமாம் தொந்த பூதம் சீரணம் சன்னி தோஷம்
பாய் கயல் விழியினளே பல விஷ சுரமுமாமே.

30. உண்டியில் குளிக்கும் நீரில் லோங்கிய மலத்தில் காயம்
மிண்டியே வேலை செய்யும் வேதனை யதனில் மெய்யே
மண்டியே கபாலந் தாறும் வறண்டதில் மாதராலும்
தொண்டையின் கனிவாயாளே சுரமது தோன்றுந் தானே..

31. சுரமது தோன்று மன்று பட்டினி கிடந்து தாய் தாய்
பரிவுடன் இரண்டாம் நாளில் பல்லது விளக்கி நாக்கு
வரிசையாய் விளி வெந்நீரை வாங்கியே முகங் கை பூசிச்
[illegible]ிவில் வெட்டிக் கட்டி யிடக் கைச் சீற்ப் படுக்கச் செய்யே.

32. செய்யதோர் மூன்று நாளில் சிறப்புட னெழுந்திருந்து
பய்யவே தேத்தாங் கொட்டை பாங்குட னெண்ணெய் தின்று
உய்யவே நாலொன்றுய்க் காய்ந்த நீருழக்குக் கொண்டு
துய்ய நல்லங் கணங்கள் துடங்கிடத் தோஉஷம் போமே.

33. தோஉஷமே போகு மஞ்சில் சுக்குக் கஞ்சி யேழு நாள்
தொடு மூன்று நாளவுஉஷதங் கொண்டாக்கா லருளவே சுரங்களேழுகுஞ்
சுரம் விட விட்ட பின்றிலங்கள் வீழவே மருந்து கொண்டு
கறி வகை விரும்பிக் கொள்ளே.

34. கருத்தில்லான் கிழவன் பாலன் கண்ணெரந் தோனதி சாரத் தோன்
இரைத்திடுங் கசரோகத் தோன்னிலைத்தவன் வழி நடந்தோன்
உரைத்த கெற்பிணி வேந்தர்க்கு முறு சுரம் வந்து தோன்றில்
பருத் தெழுங் கொ வகை மாதே பட்டினி யிடலாகாதே.

35. வாச மிகும் பூப் புனுகு சந்தனம் சாந்து மருவு பாக்கிலை சிவப்புக் கொடிச்சீலை
பாச மிகும் நெய் பாலோ டன்ன மெண்ணெ பருகு நல்ல வெல்லமொடு பனையின்
வெல்லம்
ஆசை மிகும் பெண் மோகம் பட்டுச் சீலை யகற்றிடு வரித்தனையு மறிவுள்ளோர்கள்
தூ சணியு முலை மாதே செப்பக் கேளாய் சுத்தின மேல்த் தோஉஷம் வரும் சொல்
லினேமே.

36. சிவந்த சீலை புதுப் புடவை செருக்கும் பாக்கு நெய் வெல்லம்
சுகந்தங் காற்றுக் கோவித்தல் துய்ய தயிர் நெய் பால பஞ்சு மெத்தை
யுகந்த மின்னுர் உலகில் பாஞா ற்றிடு நாக்கு மடித் தஞுதல்
விளந்த சிரசில் முழுகுவதுங் கடின சுரத்துக் காகாதே.

37. சுரம் விழில் மூன்று மூன்று நாளஞ்சாறெழில் தோஉஷம் வந்தால்
பரிந்த தொரு மருந்து செய்து பார்க்கவும் வேண்டாம் சொன்னேன்
அரந்தரு யேழு நாளைக் கப்புறந் தோஉஷம் வந்தால்
நிரந்தரமாகத் தீரும் நிச்சய மென்று கானே.

38. <u>வாத சுரத்தின் குணம்</u>:-

வாத சுரத்தின் குணங் கேளீர் மயிருஞ் சிலுக்கல் குளிரிருமல்
போத நடுக்கல் கீழ் முதுகு பொருந்துங் கை கால் குடைத்தல்
காத தண்ணீர் மிகத் தேடல் கருதுந் தலை நேர்க்காட்டுடனே
மீறு கோபம் சலங்கள் மிகுங் கடுக்கும் மெல்லியரே.

39. பித்த சுரத்தின் குணங் கேளீர் பிதத்றும வெகுவாய் நித்திரை போம்
உத்த மலமு மிகச் சிவந்து உரைக்குஞ் சிறுநீர் சிவந்து விழும்
சத்தி யெடுக்கு மூர்ச்சை வரும் தாக மெடுக்குந் தளர்ந்து வரும்
மெத்த நடுக்கும் வாயுலரும் விக்கலெடுக்கும் மெல்லியரே.

40. வாய்நீர் கோத்து உடம்பு பல வற்னமாகும் வலஞ் சல மடைக்கும்
தானே குளிர்ந்து மிக வெதுப்பும் தரியா திருமல் தானுண்டாம்
தேனே நாவு தித்திக்கும் சிறந்த மூக்கில் நீர் பாயும்
மானேர் விழியாய் சிலேற்றும மாய் வந்த சுரத்தின் வகையாமே.

41. உத்ததொடு காரியத்தை மெத்தனவா யென்று உழல்வதே தொழிலாக வுரைப்ப
தெல்லாம்
மெத்த மெத்த வெகும் பொய்யை மெய்யதாக்கும் வெங்கனலை மிகக் காயும்
மிகத் தலையுங் கனமாம் சற்று மயி---னெருங்காமல் சிதறியே நீரும் தவித்திருக்கும்
தன் புனலை விரும்பாது தளர்ந்தும் மற்று மிக உடம்பு தனித்திருக்கு மாகில் வாதத்
தின் குணமிதென்று வகுக்கலாமே.

42. நல்விளமை தனில் நரைத்தல் நாகும் நோதல் நயன விழி கடை சிவத்தல் உடம்பு
வேர்த்தல்
சொல்லு முறை மெற்றென்ற வட்சிக் கென்றல் துடி யிடையார் மேலின்பம் மிகவுந்
தோன்றல்
வில்ல மரு சுற்றமொடு விருப்ப மெய்தல் விளங்கிய தால் மிகவுரைத்தல் போயவத்தில்
பல கலைகள் மிகத் தெரிதல் பலரும் போற்றல் பயித்தியத்தின் குணமிதென்று பகர
லாமே.

43. துய்ய உடல் சிக்கென்றல் மலஞ்சிக் கென்றல் தோகை யரை டண்ட மேல் துரத்தி
யொட்டல்
பொய் நாடி மிக வுரைத்தல் புதல்வர் போற்றல் பொந்து கனவிடை வெள்ளம்
புனலே கானில்
மய மருவுந் தலையு மயிர் நீண்டிருத்தல் வருந்தாதே யுண்டியுடன் வாழ்வதாசி
செய்ய மலர்த்திரு மாதே யிச் குணங்கள் சிலேற்றுமத்தின் குண மிதென்று செப்பலா
மே.

44. ஓடிடும் நாடி பார்க்கும் உண்மையே யுரைக்கக் கேளாய்
ஆடவர் வலக்கை நாடி யரிவையர் யிடக்கை நாடி
பாடமாய்த் தேரு நாடி பரிவுடன் பார்க்க வேணும்
கூடறிந்துரைக்கும் நல்ல உத்தம வயித்தியனுமே.

45. சொல்லிய வுந்திக் கீழே சுழித்ததோ ரெழுத்தைப் பற்றி
யெல் லையிற் சிறந்த நாடி எழுத்திரா யிரத்தில்
வல்ல தோரீசர் பாதம் வணங்கியே யோடி நிற்கும்
நல்லதா மூன்று நாடி நயந்து நீருணர்ந்து கொள்ளே.

46. அருமறை ஞ லையாய்ந்து அங்கையில் நாடி பார்க்கில்
பெரு விரலாங் கூலத்தில் பிடித்து நடுவே தொட்டால்
ஒரு விரலோடில் வாதம் இரு விரலோடில் பித்தம்
~~திரு -விரல் -மூன்று -மோடில் -சிலேத்தும -நாடி -லோடில் -பித்தம் -~~

47. திருவிரல் மூன்று மோடில் சிலேற்றும நாடி தானே.
47. அன்னமே கோழி ஒன் மயிலென நடக்கும் வாதம்
பின் னை யூராமை யட்டை பெருத்திடில் பித்தமாகும்
சொன்ன தேன் மொழியினளே சுற்றிய தவளை பாம்பு
அன்னமே அய்ய மென்று யியம்பினர் பேதந்தானே.

அங்கையை முறுக்கி நெட்டி யடவுடன் மையை வாங்கி
செங்கையைப் பிடித்திழுத்து திறமுடன் பார்க்கும் போது
பங்குறு பருத்த நாடி பய்யவே ஒடு மாகில்
மங்கையோர்க் காசே யீது வாதமாம் நாடி தானே.

48. உத்ததோர் நாடி தானும் நொந்து யார்ந்து பற்றி யோசல்
பித்தமாம் நாடி யென்று விசக் கள வறிந்து கொள்க
மெற்றவே யிரண்டு தொங்க விரைவுடன் தெறிக்குமாகில்
சித்தமே யறி நீராய்யா சிலேற்றும நாடி தானே.

49. ஆனதோர் வாத நாடி அறிந்து ரவ்வவாய் நிற்கில்
ஊனமா முடலில் நோய்கள் உலர்வினல் நிற்குமாகில்
தானம்ாம் பித்த நாடி தான் வலுவாகி நிற்கில்
க்ானம்ா நிலவினலே காச்சலும் கடினமாமே.

50. வாதமும் அய்யந் தானும் வலுவுற நிற்குமாகில்
மோதிய வியாதி தீர மூன்று நாள்ச் செல்லு மென்க
ஆதலால் பித்த நாடி யனிலது போலே ஓடி
வேதினையான காச்சல் மீரு மென்றறிந்து கொள்ளே.

51. பித்தமும் அய்யந் தானும் பிரண்டெழுந் தோடுமாகில்
சித்தத்தில் வெறுப்பும் நீரும் சிறு குளிருந் திருமல்
பத்திமே சுரந்து வேர்த்து பசி கெடும் மலஞ் சலமுண்டாம்
சாற்றியும் வழு வழுப்புச் சரீரமும் வெளுறுந் தானே.

52. வாதமும் பித்த மய்யம் வன்புத் தெழுந்தோடு மாகில்
யெறுக்குள் பலத்து சீதம் ரேசுக ரேக்கவ தானும்
தீதற்ற வபை படுத்தும் திரி தோஷத்தில் பல பிணியாம்
தாதுக்கள் கை கால் மெய்யுஞ் சத்தி கெட்டு லையுந் தானே.

53. வாகிய அன்னங் கோழி மயிலென நடக்கும் வாதம்
யேகிய ஆமை அட்டை யிவை யென நடக்கும் பித்தம்
போகிய தவளை பாம்பு போல் வரு சிலேற்றும மென்க
ஆகிய நாடி மூன்றும் அமர்ந்திடில் சன்னி யாமே.

54. அந்தித்த நாடி தானும் அரணை வால் துடியே போல
சந்தித்து மாதரோடே தான் புக்கில் மீண்டா ரென்ன
வெந்தித்து வித்தி யோடி வேதினை மிக வுண்டாகும்
வந்தித்து மதங்களாலே மதியுள்ளே அறிந்து கொள்ளே.

55. பித்தமும் வாத நாடி பேசிய அய்ய நாடி உத்ததோர் சரியாய் தன்னில்
உலாவியே நிற்கு மாகில் சுத்தமா முடலந் தன்னில் சொல்லவே வியாதியில் லை
முத்தனி முலை நலமாதே மொழிந்தனர் முனிவர் தாமே.

56. கையை நீ பிடித்துப் பார்த்து கடுகவே நிமித்திப் பின்னும்
முய்யவே வேனு மென்று உகந்து நாடி சொல்லும்
பைய்யவே தொங்கித் தொங்கி பத்தியே நிற்குமாகில்
அய்யமே நாடி யென்று அறிந்து நீ விட்டுப் போமே.

57. நாடியிற் றெளிவினலும் நற்குறிகுணத்தினலும்
நீடியார் விழியினலும் நிலை பெறு தேகத்தாலும்
சூடிய வியாதி தன்னைத் தொகுத்து நீரறிய வேண்டில்
தேடிய குருடன் கைய்யில் சிக்கிய கோலதாமே.

58. வாத பித்த சிலேற்றும பிறவி நிலை :-

வாதமோடய்யம் பித்தம் மத்துள்ள வியாதி தானும்
நீதமா யறிந்து கொள்ள நிகழ்த்தவே கேளாய் மானே
பாதமும் சிரசு கை மேல் பறந்திடு மூன்று தானும்
மீதினிலுள்ள வர்றும் விபரமாய் முனிவன் சொன்னன்.

59. உந்தியி லொதுங்கி நிற்கும் முறுப்ப யிதெட்டு வாதம்
நந்து நாற் குலையில் நிற்கும் நாற்பது பித்தந் தானும்

பிந்து நேரிடது மார்பில் லய்யமும் இருவதாகும்
சிந்தையிற் கரப்பான் தானும் சேர்ந்திடு மொருபத் தொன்றே.

60. என்பது வாதத்றக்கு மியலதா மஞ்சு வாதம்
குண்டல வாதங் குடல் வாதங் குடலறி வற்னன் வாதம்
நன்பென நடுக்கும் வாதம் நடு மதியஞ்சு பேரும்
தன்பென வறிந்து சொல்வுந் தலைவர்கட் கழகுமாமே.

61. சுகமது சுருட்டு வாதம் சுரோணிதக் கட்டு வாதம்
தகமெனும் க்றணை வாதம் தனிச் சீலை வாதந் தக்கன்
அகமது முருட்டு வாதம் அகம் புரி முழக்கு வாதம்
மகமுடன் சொல்வதெல்லா மந்திரி தலைவனளே.

62. வாதமே காலில் சேரும் வயித்திலே மத்தம் சேரும்
சேதமே செய்யு மய்யம் சிரத்திற் கண்டத்து மேலே
நாதனூர் அருளிச் செய்ய நான் முகத் தரசு பாரில்
வேத நூல் விதி யிதென்று விரும்பியே விளம்பினரே.

63. என்பது வாதந் தன்னை யிருவகைப் படுத்துக் காணில்
நண்பென அரைக்கு மேலே நாற்பது வாதமாகும்
பண்பு சேரரைக்குங் கீழே பத்து நான்காகும் வாதம்
வண்பு சேர் குழலினளே வாகடத்தியல்வு தானே.

64. வாத பித்த சிலேற்றும உற்பத்தி முற்றும்.

வாதத்தின் குணமே தென்னில் வயறது பொருமிக் கொள்ளும்
தாதுக் கருவைந்து கை கால் சந்துகள் கடுத்துக் காணும்
தீருத்த சிறுநீர் தானும் சிறுத்துடன் எறித்து விழும்
பேரற்ற வாத மென்று புகன்றனர் புலவர் தாமே.

65. <u>இதுக்கு மருந்து</u>:-

வேளை நீருள்ள தென்னும் வேர்க் கொம்பு வெள்ளை யுள்ளி
யான நீர் களஞ் சொவ்வொன்றாய் யன்னீரி லரைத்துச் சேர்த்து
யேளையே யெள்ளி லெண்ணை யிரு களஞ்சதனிற் சேர்த்து
தானமர்ந்திரு நாளை கொள்ள சமனும் வாதந்தானே.

66. மயங்கிடு மெய் தளர்ந்து மஞ்சணித்திருக்குங் கண்கள்
தியங்கிடும் சிறு சிறுத்து செருக்கு நெஞ்செரித் திடித்துக்
கயந்திடும் நாவும் பல்லும் கருகு மெய் கண் மயங்கும்
தயங்கிடும் பித்த ரோகந் தன் குணம் தான் காண் மாதே.

67. <u>இதுக்கு மருந்து</u>:-

சுத்த நேர்வாள மொன்று சுகமுள தனியுண்ண
பித்த நோய் குணமா மென்று பேசினர் முனிவர் தாமும்
முத்தக் காசுமுக்கு சுக்கு முந்திரிப் பழம் பால் காச்சிப்
பத்து நாள் சீனி கூட்டிப் பருகவே பித்தம் போமே.

இனிப்புடன் வெருக்கும் நாவும் மெடுக் கொணு நடக் கொணது
பனித் தண்ணீர் சிறுநீர் பாயும் பஞ்சு போல் வெருக்கு மேனி
செளிப்புடன் குறைந்து வாடி செலப் பில மில்லாதாகும்
முனிந்திடுஞ் சிலேற்றுமத்தின் குண மென் முனிவன் சொன்ன்.

69. <u>இதுக்கு மருந்து</u>:-

சுக்குடன் கடுக்காய் தன்னைச் சுடு சாம்ப விட்டெடுத்து
தக்குடன் சமனே கொண்டு தக்க திடித்தே வடித்துச்
சிக்கென வைத்துக் கொண்டு தேனதிற் குழைத் தருந்தத்
துக்கஞ் சேர் சிலேற்றமந் தான் துணிவுடன் துலையுந்தானே.

70. ஆனதோராதி வாதம் அரண்டு வந்துற்ற காச்சல்
தான மில்லாதிருக்கும் தனத்துடல் விரையல் சேரும்
கானமாங் கால் கரங்கள் கரித்துடன் கடுப்பாய் வந்தால்
வானகை மின்னே சொன்னேன் வாதத்தின் குணமிதாமே.

71. சீரக மிரண்டு குப்பை திரிகடுகு சமனாய் நோக்கி
வேரின் தோல் சமனாய்க் கொண்டு விளங்கவே பொடித்துத் தேனில்
வீரமாய் விடி வேறந்தி மின்னனாய் தின்று வந்த
பாரதுங் குணங்கள் தன்னை பகர்ந்து போம் வாதந்தானே.

72. எண்ணிய பித்தமாகி லிப்படி சிரசு நொந்து
கண்ணுடன் சிவப்பு கூடிக் கருணையு மய்யல் கூடும்
தின்னை மதகந் தோன்றுஞ் சிறு சுரம் விஉகமு முண்டாய்
உஞ்– உண்ணு நாவுலர்ந்து பிச்சு உற்றதோர் நிறமுமாமே.

73. இஞ்சியைக் குத்தி நன்றாய் யிரு கன்னில் புளிய வேணும்
மிஞ்சிய மிளகிந்துப்பு ஏலமும் கடுக்காய் சுக்கு
வஞ்சி சேர் சீனி முந்திரி வகையுடன் பொடித்து வெல்லம்
தஞ்சமாய் தின்னும் போதே தகர்ந்திடும் பித்தந் தானே.

74. தலை கனத்துடல் வெதும்பி தன் செவி மூக்கடைக்கும்
மிலகிய முதர முற்றி விரைந்து மெய் சுருகக் குத்து
விலகிய அசனம் வேண்டாம் வெதும்பிய சிலேற்ப்மத்தின்
நிலவிய சுரங்கள் கண்டு நிச்சய மருந்து செய்யே.

75. இதுக்கு மருந்து:-

திரிபலையுடனே யேலம் திரிகடு கதிவிடையம் அதி கடுரோகணி
ஓமம் அக்கிரு கொத்தமல்லி
திரிபட பத்திரி சீரகம் சேரவே பொடித்து வெல்லம்
மறி படு ரோகி தின்ன வளம்படு முடலந்தானே.

76. வாதகதிப்பு:-

வாதமே கதித்த போது வாயுமே யெழும்பி மீளும்
வாதமே யிருமலா இத்தொடர்ந் திடுஞ் சன்னி வாதம்
பேதமை செய கிராணி பெரு வயறு திர தோஷம்
போதவே வருமீ தென்று பொருந்தவே முனிவன் சொன்னான்.

77. இதுக்கு மருந்து:-

நொச்சிச் சாறு அஞ்ஞாளி நொய்தா யென்னை அய்யுழக்கு
பச்சைத் தகரங் காயங் கோட்டம் பாவுஞ் சதகுப்பை எருக்கம் வேர்
நற்சீரகம் மோதகம் நற்கடுகுள்ளி நவிலுஞ் சுக்கிவை காச்சிக் குடிக்க
கொச்சைப் படுத்தும் வாத மெல்லாம் குணமா மென்று கூறினரே.

பித்தக் கதிப்புக் குணம் மருந்து:-

78. பித்த மேகதித்த போது பெருத்திடுஞ் சத்தி குன்மம்
சித்தமே நெஞ்செரித்து சிறுநாள் கழிச்சல் தோன்றும்
மெத்தவே வாய்வு கொண்டு மிக வழன்றுழலை செய்து
கைத்திடுங் கார்க்கஞ் காறு கனங் குழலரிய மாதே.

79. இதுக்கு குடிநீர்:-

நெற் பொரியும் சிறு பயறும் வில்லை வேரும் நேரிய சீரேலமுடன் சுக்கு நெல்லி
முற்படவே யிளநீரில் காய்ந் திரன் டொன்றுக்கி முற்றிய பின்னெடுத் தூ த்தி
வடித்தூ த்திக் கொள்ள
சொற் பெரிய சத்தி குன்ம சுரத்தின் சத்தி துயரமுள்ள சிறு சிறுப்பு உழலை
மூச்சு
பத்தறு மென்றினிய வரும் ரிஷிகள் தானும் பகர்ந்தனர் முன்னருந்த மிஷினி
மிழின் படி யீதாமே.

80. சிலேற்பும கதிப்புக் குணம் மருந்து:-

அய்யமே கதித்த போது அசதி யுற்றிருமல் காச்சல்
நய்யுழல் மாந்தை மீளை நளிர் குளிர் விக்கல் சத்தி
செய்யுமா மூச்சடைப்பன் தீறு காசங் கிராணி
தொய்யுமாம் வினைகள் ளெல்லாம் தோன்று மேன்றரனார் சொன்னார்.

81. இதுக்கு மருந்து:-

காட்டுக் கறணை கொடி வேலி கிராம்பு திரிபலை திரிகடுகு
நாட்டு நெற்பொரி லவங்கம் யேலம் நற்சீரக மமுக்கிரு நாகப்பூ
கூட்டுஞ் சர்க்கரை நெய் தேனிற் குணமாய்க்கூட்டிக் கொள்வீரால்
ஓட்டித் துரத்துஞ் சிலேற்றுமத்தை உள்ள வியாதியும் ஒழிந்திடுமே.

82. வாத பித்த தொந்திப் பின் குணம் மருந்து:-

கொள்ளுங்கை வாதம் ரெண்டும் கொடும் பித்தம் ஒரு காலோடிக் கள்ளமாய்
வயறு விம்மிக் கனக்கவே வாய்வு தோன்றும்
தெள்ளிய கோதையார் மேல் சிந்தனை மிகவுஞ் செய்யும்
துள்ளிய வாத பித்த தொந்திப் பென்றுரைக்கலாமே.

83. சந்தங் கோஷ்ட மதிமதுரஞ் சமுத்திரா விடையம் சதகுப்பை
கெந்தங் காந்தம் மஞ்சளி லவங்கந் திகடுகு காதிக்காய் கிராம்பு யேலம்
வெந்தயம் பத்திரிகொத்தமல்லி விளாலுட னிரண்டு சீரகமும்
அந்தப் பொடி தேன் வெருகடி கொள்ள வகலும் வாத பித்தமுமே.

84. இசைந்திடும் பித்தம் ரெண்டும் மீரரை வாத மோடில்
பசிந்திடும் வயிறும் நெஞ்சு பறந் தெறிந் தழன்று மெய்தான்
வசங் கெடுந் தலை சிறுகளும் மயங்கிடு முடல் வெதும்பும்
முசிந்திடும் பித்த வாத முறைமை யறிந்து கொள்ளே.

85. சுக்குடன் கடுக்காய் யேலம் சுக் சுகமுடன் மிளகு நெல்லி
திக்குள மதுரஞ் சந்தஞ் சீரகம் கொத்தமல்லி
தக்குடன் சமுத்திராக் காய்ஞ் சமன் முந்திரி சீனி நெய்யில்
பக்குவப் பொடி தின்றக் கால் பயித்திய வாதம் போமே.

86. உயர்ந்திடும் வாதம் ரெண்டு ஒரு சிலேற்றும மதாகில்
அயர்ந்திடும் கை கால் நொந்து அடி வயறதைத் துக் காட்டும்
தியங்கிடுந் தாது கெட்டுத் திறங் குறைந்து வாடும்
மயங்கிடும் வாதத் தோடு மருவிய அய்யந் தானே.

87. வசம்புடன் திரிகடுகு வடமோதகமும் கொடுவேலி
திசம் பெரும் கடுக்காய் ரெண்டு சீரகம் கொத்தமல்லி
கசம்படு கடுகு ஓமம் காயமும் உள்ளி யிந்து
வசம்பட யிடித்துத் தின்ன வாதமும் அய்யம் போமே.

88. பாரித்த அய்யம் ரெண்டும் பரிந்தொரு வாத மோடில்
கூரித்துக் குளிர்ந்து கூசிக் கும்பியில் குணக் கேடாகும்
நேரொத்த காயம் வற்றி நெறிதலை ரேகம் நோகும்
சீருற்ற அய்ய வாதந் தொந்திப்பாம் திரி நல் மாதே.

89. ஏலமோடி லவங்கம் பச்சிலை நாகப்பூ யிருவேலி யிலாமிச்சம் சந்தனமாம்
வால் மிளகு கொத்தமல்லி கடுகுடன் திரிக்கடுகுடன் திரிகடுகு வசுவாசி திரிபலையுமா
நீல்மோடு சீரகங் கருஞ் சீரகஞ் கிராம்பு நெல் பொரியுங் கோஷ்டம் துவாம்
வாலுளுவை தார மதிமதுரம் அக்கிரு வசம்பு அரத்தை அதிவிடைய முக்கிருவாம்
சீல மரமஞ்சள் சதகுப்பை தேனில் கொள்ளச் சிலேற்றும வாதம் போய்த் தெளி
வாகு முடலமுது வர்மே.

90. மர்தராய் பித்தம் ரெண்டு மருத்தொடு சிலோற்றும மோடில்
சேதமாய்த் தலை வறண்டு திமிர்த்திடும் பிடறி நோகும்
போதவே வயறெரைக்கும் புந்தியில் குணக் கேடாகும்
தீரூறு பித்த சிலேற்றுமம் தொர்ந்திப்பான திரி நல்மாதே.

91. சந்தனம் பிச்சிலை க்ச்சோலம் சாதிக்கர்ய் பாதிரிப் பூவுடனே
வந்த திரிப்லை கடுகு வ்சம்பு கோட்ட மிலவங்கம்
யிந்து ஓமம் சதகுப்பை யிரு சீரகத் தோடு கொத்தமல்லி
யந்தத் தேன் சீனி யிஞ்சிக் சகலும் பித்த சிலேற்றுமமே.

92. ஓங்கிடும் சிலேற்றுமம் ரெண்டும் ஒரு பித்தமொரு காலோடில்
யேங்கிடு மிருமலீளை யிடர் செய்யும் வ்ாய்வுஞ் சீறும்
மூங்கிடும் முதர மெய்யும் முருதியுங் கெட்டலைந்து
மாங்கிடு மய்யத் தோடு மருவிய பித்தந் தானே.

93. அக்கிரு மிளகு நெல்லி அமுக்கிரு திப்பிலி யரத்தை
சுக்கொடு கடுக்காய் தாளி சொல்லதி விடைய மதிமதுரம்
தக்கதாய் யேலஞ் சீரம் சமனிது பொடித்து நெய்யிற்
சிக்கென வருந்தும் போது சிலேற்றும பித்தம் போமே.

94. வாத பித்த சிலேற்றுமம் தொந்திப்புக் குண மருந்து:-

இருத்திடும் வாத பித்தம் சிலேற்றும மிடறுமருவல்
பருத்திடு மேனி தர்மம் பதங் கெடும் பசியுமில்லை
கருத்திட விடுப்புக் கை க்ால் சந்துக்கள் கடுத்துக் கர்ணும்
முருத்திடு மூல ரோகம் மூவ்ருந் தொந்தித்தாலே.

95. திரிப்லை அக்கிரு ஓமம் சிவதை மதுரம் அதிவிடையம்
திரிகடுகு் கொத்தமல்லி சீரகத்துடனே குப்பை
அறி வசம்பத்திரி காயேலம முக்கிரு அரத்தை
அறிவு சேர் ப்த்திரியோர்டு யது சமன் சேர்த்துத் தேனிற்
குறியுடன் கொள்வீரர்கில் குணமர்ம் தொந்த மூன்றே.

நாடி வாதத்தின் குணம் தயிலம்:-

96. ஓடிய வாதமாகில் உடல் தலை நெஞ்சு சந்து
தேடிய கால் கரங்கள் திமதாய்ப் பலங் கொட்டாது
வர்டிய மேனி தானும் வறண்டுமே நாவும் பல்லும்
மோடிடும் முடல்க்ள் தோலும் முளைவுடன் சுத்து மென்றே.

தயிலம்:-

97. மலை யிஞ்சி கவுவை மஞ்சள் வன்னெச்சியா மணக்கு
சிலங்கள் தான் நாளி நாளித் தெங்கினெண்ணை நாழி
விலமதர்ம் கோட்டம் தாரம் வெந்தயம் சனி நாயகம்
பலமதாய்க் காச்சிப் பூசியுள்க் கொள்ளத் தீரும்.வாதம்.

98. துடிப்புக் குணத் தயிலம்:-

ஓடுந் துடிக்கு முடலேப்பம் பறக்கும் நீடு மிகச் சித்துடலில் நின்றே யடங்கிடும்
தேடுந் துடிப்புடைய வாத மென்று தெரிவை யீர் நாடொறுந் துடிக்கும் மென
வோது.

99. வாதமடக்கி நொச்சி வளர் கொற்றுன் மாவிலிங்கு பித்த
மாடாதோடை யாமணக்கு மாதுள்ள கள்ளிச் சாறு
வேதியா வேப்பெண்ணையும் வெள்ளுள்ளி நாளி நாளி
யோதவே கல்கத்தாலும் உரைத்திடக் கேளாய் மாதே.

100. சாதிக்காய் கிராம்பு சீரகஞ் சதகுப்பை கடுகு ஓமம்
நீதியாய் திரிகடுகு நேருந் திரிபலை யிந்துப்பு
வாதற்ற உலைவா மஞ்சள் மரமஞ்சள் வசம்பு ரேனி
மாதற்ற பெருஞ் சீரகம் வரு கடுகு சீரங்காய்.

101. கேளின்னிஞ் சனி நாயகங் கிறிசக் கிர வரத்தை
பாளது தீர்க்குந் தாரம் பத்திரி யதிமதுரம் சந்தனம்
வாளசில் பீதி நாறி வகை யிரு களஞ்சதாக
கோளியின் ரத்தங் கூட்டிக் காச்சியே கொள்ளே பூசை.

102. உதிரமுஞ் சுரந்து மங்கி உவாந்தியு மூச்சையுண்டாம்
அதிரமுங் கருகி மேலும் அறமே கடுத்து நோகில்
திதமுறு வான வஸ்திராதிரு முனி யருளிச் செய்த
பதமுறு வேத நூலின் படி யிது பகருவீரே.

103. உளையு முடலந் தனி லெங்கும் உளையாதிருக்கி அறுப்புளையும்
களையு மிகுத்து வ்யறளத்தி கன்க்கச்சு வர்ந்தி வாய் நீரும்
விளையும் வெறுப்புத் தாலுண்டாம் விடாதே மிகுந்து தலை கனத்தும்
வளையும் புருவ நுதலாளே வறண வாத குணமிதுவே.

104. வென்கா யுள்ளி யறு பலமு மிகுந்த திரிகடு கொரு பலமும்
நண்பா யிந்துப் பொரு பலமும் நலஞ் சேர் கொடுவேலி நாற் களஞ்சு
மண் சேர் குமரிச் சாற் சரியாய் வகையா யக்வுந் தர்னெடுத்து
பண் சேர் நறு நெய் தனிற் கூட்டிப் பத்து நாளு மெரித்து நக்கே.

105. இரத்தமுங் காய்ந்து வாடி யெலும்புக்குத் தசையுங் கெட்டு
நரம்பது வலுவாய் விம்மி நடப்பது குன்று வாய்வு
உர மிகு சரீரந் தானும் உசுதி கெட்டுளையும்
வெற்பு சிரதுடல் கண் போல தவறு திமிர் வாத மென்றூர் முன்னோர்.

106. என்னைக் கிழா மிது தாலும் யிதமாய்ச் சொல்வோம் யினிக் கேளாய்
திண்ணம் நொச்சி முடக் கொத்தான் தீரும் வேலிப் பருத்தி கொன்றை
யின்னே விழி பாவட்டை யியன்ற ஆட்டாங் கொர்டியுட்னே
வன்ன முதிரன் திரிபுரத்தான் மருவுங் கள்ளி சதிரக் கள்ளி

107 யெருக்கு முருக்கு மாவிலங்கு யியன்ற ஆடாதோடை திருய்
நறுக்கு வெளரு மதங் கழல்கொடி நன்றுய் சிறு செருப்படி யீரனமும்
பருக்கும் பலங்களா யெடுத்து படி நீர் முப்பத் திரண்டதில் விட்
டெரிக்கும் கசாய மெட்டொன்றுய் யெடுக்கு மருந்து யினிச் சொல்வோம்.

108. சதகுப்பை யரத்தை மரமஞ்சள் தகருங் குங்கிலியம் திரிகடுகு
யிருக்குக் கம்பிப் பிசினுனே யிரு சீரகம் வெப்பாலை
மோஞுரு முள்ளி சவுக்கார்ம் முசுறு முட்டை அதிவிடைய
முடனிந்துப்பு அரிதாரத்துடன் சாதிலிங்கம்.

109. கோட்டம் விளாலரிசி கலங் கொம் குலவி மஞ்சள் அதிமதுரம்
மீட்டும் வசம்பு பெருங்காயம் மிதிலெல்லான் யிரு களஞ்சு கூட்டி யொன்றித்தே
காச்சிக் கொண்டே வடித்து மிகப் பூசி பூச
வாட்டும் பெரிய திமிர் வாதம் மற்றும் வாதம் மாறியதே.

110. நாக்கு விழுந்து ஒரு சர்ய நன்றய்க் கை க்கால் வீழ்வதன்றி
வேர்க்குஞ் சரீ மஞ்சனிக்கும் விஷம் போல் மேனி தொட்ட வொட்டா
ஆக்கை சரியு நாளத் தான் ஆகும் பற்றுப் பதினைந்து
ஊக்கமுடனே தப்பினக் கால் உண்மை பிழைப்ப தென்றனரே.

111. வெருகங் கிழங்குக் கோர் பலமதனில் மேவுந் நாழி நீர் விட்டு
உருகக் காச்சிக் குறுணி யதாய் யுகந்த காடி யந்த மட்டும்
பெருக்கக் கூட்டிக் கசாயத்தைப் பேணிக் கட்டும் பித்தா கேள்
உருக்கும் நல்லெண்ணை நாழிக்கு உகந்த அரக்கு நாற் பலமே.

112. கூட்டிக் கசாயம் கொதிக்க வைத்துக் கூறு மருந்து சதகுப்பை
நீட்டு மரத்தை யிலவங்கம் நீடு மேலந்தி திப்பிலியும்
வாட்டுங் கிராம்பு மதுரமுடன் மஞ்சளுடன் கஸ்தூரி மஞ்சள்
கூட்டும் விளாலுங் கோட்டமுடன் கொண்ட சீரகம் பெருங்காயம்.

113. கற்பூரங் கடுகுரோகணியுங் கனக்குங் கோலொன்றிரு கழஞ்சு
நற்பதமான யென்னை யது நாளி கள்ளிப் பாலர்ளாக்கு
மெய்ப்பா யுள்ளி வசம்புடனே மிகுந்த தொட்டி பாக்களவு
நற் பதமான யென்னை யது உண்ணக் களஞ்சு கொள் பூசே.

114. <u>நறித் தலை வாதத்தின் குணம் :-</u>

தரித்திடும் வாதம் வாய்வு சருவ நீர் கோவித் தொன்றுய்
யரித்திடும் தலை மே கை கால் அங்கமோடுளைந்து வெம்மி
முரித்தது விறங்கி வந்து முளங் காலில் வளைந்து கூடும்
நரித் தலை வாத மென்றே நவின்றனர் முனிவர் தாமே.

115. விடத் தலை பிறண்டை யிவை யிரண்டு மிகாமல் தேசிக்காயளவு
திடத்தோட னரைத்துப் பனை வெல்லம் சேரக் கலந்து கலத்திலிட்டு
அடுத்த மருந்து கூட யிட்டு அதினில் பிசைந்து நெருப்பில் வைத்து
மடுத்த நல்லெண்ணை தான் வார்த்து மகிழ்ந்து சேர வறு மருந்தே.

116. இந்த மருந்து ரோகத்துக்கு ஒரு களஞ்சுதி தின்று வென்னீர் குடிக்க வாதந் தீரும். பத்தியம் கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

மங்கைய்ய வருடி மெத்த வாத பித்தங் களய்யந் தங்களில் சிதறி வாதந்
தள்ர்ந்திடும் கால்கள் கை கள் அங்கருந் தாருந் தாள பித்த
அரைக்கு மேலதுவுங் கோபந் திங்கள் போல் முகத்தா யய்யம்
சிரசிலே சினப்பதாமே.

117. உடலது வெதும்பிக் கை காலு ளைவுடன் கடுத்து நொந்து
கடலதாய்க் கால் கரங்கள் கனத்த போலயர்ந்து காணும்
சடமது விருத்த தாகுஞ் சலங் கெட்டுத் தோஷ முண்டாம்
முடமதாங் கை தான் கால்தான் முடங்கின வாதந் தானே.

118. நொச்சிச் சாறு தருதாழை நகார நெருக்குப் பாலுடனே
யிச்சை சேரும் பொடுதலையு மியன்ற குப்பை மேனியுடன்
விச்ச ஆயில் புங்கு நிம்பல் மருவு மிலுப்பை சிறு குறிஞ்சா
அச்ச மில்லா வேலிப் பருத்தி யிரு மஞ்சள் தேங்காய்ப் பால்.

119. ஒரொன்றொரு படியாய்க் கொண்டு யுகந்த கடுகு எண்ணை யிருபடியும்
நேரே கலக்கி வசம்புள்ளி நீடு மாடாதோடை சீந்தில்
பாரே பெருமுட்டி நீலி பருக்கும் பெரு மரப் பட்டையின் வேர்
சீரா யரைத்துக் கலக்கி வெந்து சிறந்த பதத்திலே வடியே.

120. பதத்தில் வடித்து நாளொன்று பருகி ரெண்டு காசிடை தான்
விதத்தில் காய மேல்ப் பூச மிகுத்த சந்து தடவிடவே
உதித்த கை கால் முடங்கினதும் உண்ணும் விஷங்கள் பல தீரும்
கதித்த வாத மிவை யெல்லாங் காததோடிப் போய் விடுமே.

121. சுருக்கு வாதம் எண்ணை :-

கை கால் விரல்கள் சுருண்டு விடும் தித்த நாவு குன்றி விடும்
மெய்யாய் வடிவினழகு கெடும் வெதும்பும் மேனி வெப்புண்டாம்
அய்யா விது தான் குணந்தி/ சொன்னோ அறிவீர் புத்தியதனல் செய்
தொய்யச் சொற் குளறுஞ் சுருக்கு வாத குணந்தானே.

122. நத்தை பலாவின் பாலுமக்கு நல்ல நொச்சிச் சாறுமக்கு
மெத்தப் புளியிலைச் சாறுமக்கு வெள்ளாட்டுடைய பாலுமக்கு
அத்தா மணக்கெண்ணையு முழக்கு அஞ்சுங் காய்ந்து வடித் தெண்ணை
நித்தம் பூசி யுள்ளருந்த நில்லா தென்பது வாதமுமே.

123. சுரோணித வாத குணம் பொடி :-

கை கால் நெற்றி தலை பிடறி கனத்து நொந்துளை வுண்டாம்
மெய்யாய் ரூபந் தான் கெட்டு வெதும்பி விதன மிகவுண்டாம்
தொய்யச் சுருட்டி முடுக்கி விடும் சுரோணித வாத குண மிதுவே
அய்யா முனிவர் தமிழதனல் அறியச் சொன்னு ரறிவாயே.

124. பாவு களச்சி பதினறும் பதிவாய் மதுரம் பதின் கழஞ்சு
யேவுந் திரிபலை அறு களஞ்சு யிசைந்த கச்சோலக் கிழங்கு லவங்கம்
மேவுந் தோல் தேவதாரமுடன் மிகவே விடையந் திரிகடுகு
தாவு மருசி யாறு வகை சுகமாய்ப் பொடித்துத் தேனிலுண்ணே.

125. உன்னிடில் வாத மென்பதும் உறு சிலேற்பன வாத சுரம்
தின்னப் பித்தங் காமாலை சீத கடுப்புச் சுடு வாதம்
மென்னிய சுரோணித மொட்டிய புண்ணிவை யெப்போதும் காதிருந்திடில்
வண்ணக் குழலாய் நான் சொன்ன மருந்து பொய்யா துறுதியதே.

126. சூரிய வாத குணம் மருந்து :-

சூரிய வாதந் தொன்றித் தும்மலுஞ் சளியும் வெப்பம் பாரிச உடல் கனத்து
பரந்துடல் சிரசு நொந்து மூரி கொட்டாவ்வி யிட்டு முனிந்து மெய் தளர்ந்து நொ
ந்து
சீரித்து மயங்கி நன்னுத் தியங்கிடு மென்று செல்லே:

127. நிம்பழமும் களஞ்சி நொச்சி நீரது நாழி நாழி
யம்பிசின் சுக்கரத்தை மதுர மிவை களய்ங் களஞ்சு
தம்பமா மெண்ணை நாழி சுற்றியே காச்சித் தேச்சால்
பம்பிய சூலை வாதம் பறந்து போ மென்பர் முன்னோர்.

வறச்சி வாத பித்த குணம் நெய் :-

128. தலையுங் கனத்து வலித்து மிகச் சத்தே காது மந்தித்து
தலையும் மங்க முளைந் தளைந்து அடங்கக் குத்திக் கிறு கிறுத்து
அலை

வலையுஞ் சரீரம் நோய் மிகுந்து வறள யுலத்தி வாதை மிகும்
முலையும் வறள்ச்சி வாத பித்தம் யுறதி யிது கண்டுரையீரே.

129. நன்னாரியுடன்குருந் தொட்டி நல்ல ரோகணி சந்தனமும்
மின்னார் சூடும் விலாமிச்சம் வேர் மிக்க திப்பிலி கோரைக் கிழங்கும்
மன்ன நடையராய் சரி சரியாய் யாவி னெய்யில் வெந்து கொள்ள
மன்னுற வறச்சி வாத் பித்தம் பாரு முடல் பருக்குமதே.

130. இருக்கு எண்ணை:-

கற்றாழை கரிப்பான் பிரமி புடைல் கனக்க யிடித்து நீரெடுத்து
மற்றும் திரிபலை யரக்கு யிவையும் வகையாய் பொடித்துச் சாற்றிலிட்டு
பத்திரி கோட்டம் சந்தனம் மதுரம் பச்சிலை கச்சோலந் தார மிலவங்கமய
கொத்தான் சாறு நல்லெண்ணையில் வெந்து குளிக்கக் குணமாகும்.

131. அக்கினி யுழலை குலையா வுலந்திருக்கும் காச்சல் மிகக் காதிரைச்சல்
மந்த மிகுந்திடும் குளி மூக்கினீர்கள் தக்கதோர் மயக்கத் தோடு தலைவலி
சந்து நோவு கைக்கு நாவறச்சி பித்த வாத மாங் கண்டு கொள்ளே.

காந்தங் கிட்டந் திரிகடுகு கய்யாந் தகரைச் சாற்றரைத்து
வாய்ந்த மாகத் தின்பீர். பத்து. நாளைக்குத் தின்பீராகிற்
சேர்ந்திடும் வாத பித்த வறச்சியள் செப்ப கை மாறி
சாந்தமாய்த் தீருமென்று தமிழ் முனி சாற்றினரே.

132. சன்னி வாதத்தின் குணம் தயிலம்:-

பூலா வெற்றிலை கரிப்பானும் கைக்கும் புளியிலை கொற்றான் நொச்சி
பொன்னாங்கண்ணி முருங்கிலையும் யேலங் கடுகு திரிபலை யிருவேலி விலாமிச்சிரு சந்தன்
அரத்தை யிரு சீரகம் கண்டில் வெண்ணை இலாங் கோட்டம் கிராம்பேலம் மதுர
மிலவங்கம் நன்னாரி கச்சோலம் பச்சிலை சாதிக்கா யெல்லா மொன்றித் தெண்ணை
காச்சிக் குளிக்க ஒளியும் வறச்சி பித்த வாத உய் தலை வலியுங் கண்ணோவும்.

134. கையுங் காலுமொரு பக்கம் கனத்துத் திமிர்ந்து கண் தூங்கும்
மெய்யும் மறவே மெலிந்து வரும் வெகுண்டே நாவுந் தடுமாறும்
செய்யுங் குணத்தை நாடியக் கால் செப்புஞ் சன்னி வாதமதே
மன்று உய்யும் மடிக்கு வகை கூறு உலகோரறிய உரைத்தோமே.

135. முருங்கை வேர் பிறண்டைத் தண்டு முதி தண்டு முதிர்ந்த யெருமை மூத்திரத்தில்
விழுதா யிடித்துத் தான் பிழிந்த் வேம்பி னெண்ணை தனிற் சேர்த்து
அரிதாரமுடன் சாதிலிங்கம் யெருக்கம் பால் விட்டுக் காச்சி
வடித்திருவே சற்றே யுட் கொள்ளத் தீரும் சன்னி வாதமதே.

136. மரண வாத சன்னியின் குணம்:-

கண்ணும் வாயுஞ் சோபிக்கும் கையும் காலும் அயர்வாகும்
நன்னும் நர்வுஞ் சொற்றலர்ந்து நடுக்கி யிருக்கும் நாவுலரும்
மென்னுவுஞ் செவியுஞ் சில்லென்று யிருகால் தன்னை நோவிக்கும்
வன்னமிது வே கண்டாக் கால் மரண வாத சன்னி யிதே.

137. வேலிப் பருத்தி கழல் கொடியும் வெருகுஞ் செருப்படி யெருக்குலையும்
ஆலின் பருப்பு ஆவிலிங்கு ஆடாதோடை திருகு கள்ளி நீலி
நீலி வேளை சமனிடித்து நீரை வாங்கி யதிற் கள்ளிப்
பாலுடனே வேப்பெண்ணை பகர்ந்து காச்ச மருந்தைக் கேள்.

138. சுக்கு வசம்பு வெள்ளுள்ளி சோமன் மோதகம் ரோகணியும்
தக்க கோட்ட மதிமதுரம் தாரம் விடையம் சனி நாயகம்
மிக்க வரத்தை வலம் புரிக்காய் வியன் பூநகம் வெந்து பூசி யுட் கொள்ள
நிற்கும் மரண சன்னி வாத சன்னி நிகழ்ந்தே யோடிப் போய் விடுமே.

139. [illegible] குதிரை வலியின் குணம்:-

என்னிய சன்னி வாத தள்ளி தவங்கு குதிரை வலி யென்னில்
கன்னிற் பிவடந கறுப்பதாங் கையுங் காலு மொரு பக்கம்
மென்று நரையு மிகுந்து தள்ளு மிதுவே திருக வலியுண்டாம்.
வின்னைப் பார்த்து விழி நிக்கில் மீளாதிதுவுந் திண்ணமிதே.

140. சுக்கு மிளகு திப்பிலியுஞ் சோமலுப்பு வெள்ளுள்ளி தக்கம்
கொந்தாளம் பருப்புத் தருகா வசம்பு யிவை கூட்டி
யொக்கத் தேசிப் பழச் சாத்தி லொன்று யரைத்தஞ்சன வுண்டை
மிக்க குதிரை வலிப்பது தான் மீளத் தேசிப் பழத்திலிடே.

141. எண்ணை:-

கொள்ளுங் குதிரை வாலரிசி கூரிய நொச்சி ஆடாதோடை
முள்ளே யுள்ள குறுவட்டு மூக்குங் கை மூலி தூதுவளை
வெள் வேல் மிக்க சாறணை வேர் மீறுதே சற்றுக் கொடுவேலி
யுள்ளே யெரித்த வேப்பெண்ணை யுதவக் குதிரை வலி போமே.

142. பிற வீச்சுக் குணம் :-

அடுத் தடுத் தெடுத்தக் குத்தி அதிகமாய் விரைத்து வேர்த்து
படுத்த நாடிக்கும் பேசில் பல்லது கிட்டி நெஞ் சு யடுக்கவே
கட்டிச் சீறியங்குமும் பிறகே வீழில் திடுக்கெனப் பிற வீச்சென்று செப்பலாஞ்
செப்பலாமே.

143. உள் வீச்சு குணம் :-

குத்துமே யடுத் தடுத்து குளரி யேங்கியே நிமிர்ந்து
மெத்த விரைத்துள்ள டங்கி வேற்கும் விகற்ப மிகவுண்டாம்
பற்றி யின்றி யெதிர் தள்ளும் பசப்புடன் பல்லும் பூட்டும்
மேற்றிய உள் வீச்சென்றே யென்னலா மியம்பலாமே.

144. கச்சுரை வலியின் குணம் :-

மாலை யிதுதரந் தன்னில் மதிப்புடன் திடன மேறுது
ஆலையில் நாவி தன்னி லப்படிக் கிடந்து நொந்து
நாலையா---முறுகு தன்னில் நகுந்தே பத்தி நோவுண்டாம்
காலைப் பற்றியே யிழுக்கும் கச்சுரை வலி யென்றறிவீரே.

இதுக்கு நிவர்த்தல் :-

145. கடித்த மஞ்சள் கடுகுள்ளி தேங்கா யிந்துப்பு வேப்பெண்ணையிற் சாச்சி
முடித்த கூந்தல் கிளி மொழியே முழுது மிரண்டு கிழி கட்டி
கடித்த பல்லு தலை பிடறி கால் கை சந்து சடங் குத்து
பிடிக்கச் சூத *பஞ்ஞ* சுரை வலி வாத சன்னி பிற வீச்சுள் வீச்சுப் போய்விடுமே,

146. மாட்டொடு தன்னை நன்றாய் வடியவே பொடித்துப் பின்னை
யோடது தன்னிலிட்டு உறைப்புடன் வறுத்துக் கொண்டு சூடுடன் கிளிகள் கட்டி
சுரு தளக்குற்று வீராய்
போடுமே வலி களஞ்சும் மோடு மென்று ரைத்தார் முன்னோர்.

147. பிள்ளைப் பெற்றவள் சுவாச காசத்தின் குணம் மருந்து :-

பிள்ளை பெற்ற தாயார்க்குப் பெருத்த சுரமாய்த் தலைவலியும்
முன்று முழலை தவனமுண்டாம் உதர யிரப்புடன் களிச்சலுமாம்
மெள்ளத் தொடுத்த களை மூச்சு விளியின் தெளிவுங் கெட்டிருக்கும்
துள்ளித் துடித்த சுவாச காசந் துளக்கி யுயிரை வளர்த்திடுமே.

148. அசமோதகமு மாறிரண்டு ஆன சீரக மதிற் பாதி
நமயமாஞ் சுக்கு முக்களஞ்சு நல்ல கிராம்பு மதிற் பாதி
செயமாம் பத்திரி யதிற் பாதி சேர்த்துப் பொடித்து தேனிலுண்ண
பயமா காச சுவாச நிற்கும் பாரில் முனிவர் பகர்ந்தனரே.

149. நத்தைச் சூரி குதிரை வாலி நாகப் பாம்பு நாயுருவி
பத்துக் கோழி முட்டை தனிற் பரிந்து தயிலந் தானெடுத்து
மத்தச் சன்னி மோகித்து வாக்கு மறந்து கிடந்தவர்கள்
சத்தப் படாம லெழுந்திருப்பர் தப்பா தென்றுஞ் சத்தியமே.

150. சன்னியின் குண மறியும்படி :-

கருத்துறு சன்னி தன்னைக் கசட்ற அறிய வேண்டில்
யுருத்தி ராக் கிசத்தை நன்று யுரைத்து நாவதனிலா ட்டித்
திருத்தமாய்க் கருத்துக் கண்டால் திதமுறு சன்னியாகும்
பெருத்தது வெளுத்துக் கண்டால் பின்னை யதல்லவாமே.

151. குணங் குறி மிகுந்து தோன்றில் குத்தமே குறைந்து நின்றால்
விளங்கு மந்திர மருந்தாலிவைகளால் மீள்வதின்ன
குணங்களாற் குற்ற மேறிக் குறி குணங் குறைந்து நின்றால்
பிணங்கிடா தகன்று சீவன் பிரிந்ததாய்ப் பேசலாமே.

152. குளி யானை மயிலிறகு குணமான வலம்புரிக் காய்
சளி வானி பூனைக் காட்டஞ் சாதிலிங்கம் சிலந்தி மஞ்சள்
வருவதிரத வசம்புள்ளி சுக்கு யெருமைக் கொம்பு பொடிப்
பருதற யிடித்துக் கம்பிளியில் பரப்பித் திரிப்புகை யேற்க
முறுதும் வலி சன்னிக்கு முறிந்தோடும் மென்றனரே.

153. சமுத்திராப் பழ மிலுப்பை தரும் புன்னைக் கறுவுஞ் சுக்கு
அமுக்கியே பொடித்து நன்று யது குழல் வைத்தே ஊத்தி
திமுக்கென் றெழுந்த சன்னி தீருமே வலி களஞ்சுங்
~~கமுத்தி-முக்கென்-றெழுந்த-சன்னி-தீருமே-வலி-களஞ்சுங்~~
கமுக்கென வந்த பேயுஞ் சாடியே யோடிப் போமே.

154. முகவாத சன்னியின் குணம் தயிலம் :-

கன்னித் தலையில் புருவத்தில் காதில் செகிட்டில்க் குத்துண்டாய்ப்
பன்னிப் பறிக்கு முகமதனைப் பச்சம் பற்றியே திருகி
லென்னிச் சொல்லு முக வாத மிடறுஞ் சன்னி யீதென்று
நன்னிச் சொன்னேஞ் சிர வாதம் நாடுங் குணமு மிதுவாமே.

155. நத்தைச் சூரி நரி மிரட்டி நலமாந் துத்தி வேப்பந் தோல்
தொத்து முசுறு துடை கயறு துலங்கு நில வேர் பருத்தியுட னத்து
நல்ல பாம்பு கண்டந் தாக்குங் கோளி குடலுடனே
வித்து முதியவே வேப்பெண்ணை வேறே யுரைக்க மருந்தைக் கேள்.

156. கேளீரின்னம் வசம்புள்ளி கிராருங் காயம் வாலுளுவை.
கோளி யிரத்த மிரைப் பொட்டி கொள்ளுஞ் சன்னி நாட்டி
தெளிவா யோரொன்றிரு களஞ்சு திறமாய்க் காச்சி வடி கொள்ளே.

157. தொட்டுப் பூச உள் நச்சுத் துலங்கு தழலிற்றா ப மிட்டுட்டேன்
அடையுங் காது தனிலிசையுங் குமிலத் துள்ளி விட
மட்டும் படாத மார் வலியும் மறவுஞ் செவி கண் வாய் கோணல்
முட்டுப் படவே முறிந்தோடும் முண்ட கபால சன்னியுமே.

158. கால் தலை வயறு நெஞ்சு கமர் விழி முகங்கள்
சாலவே சிரசில் நின்று தழலை வெரிந்து காட்டி
மேலெல்லாம் குத்தி நொந்து மீன் விழி யெரியுங்கள்
வேலவே அரி நலாரே அறிந்து கொள் பித்தந் தானே.

159. கிட்டக் கல்லுக் காந்தமுடன் கேருஞ் சுக்கு மிளகுடனே
நாட்டும் நல்ல அமுக்கிறா வேர் நன்றாய்ப் பொடித்துச் சர்க்கரையிற் கூட்டி
தின்னப் பித்தமறு குடி போமென்றுர் குறு முனிவர்
தோட்டமாக நல்ல தென்ற திடமாய்க் கொள்ளு மானிடரே.

<u>பித்த குணம் மருந்து</u> :-

160. பித்தமே சிரசிலுற்றால் பின் வருங் குணங்கள் கேளாய்
யுற்றதோர் நயனந் தானு மொளியது மாறி நிற்கும்
கைத் திரு நாக்கைத் தானும் கனக்குமே சிரசில் நின்று
நித்திரை தானும் வாரா நெடிய கொட்டாவியாமே.

161. நெல்லிக்காய் மிளகு தானும் நேரிய . மஞ்சள் கோட்டம்
நல்ல சந்தன மதிமதுரம் நற்புடல் கய்யான் பாலிள நீர்
நல்லெண்ணை தன்னை யதில் விட்டு நன்றாய்க் காய்ச்சி முழுகுவீராய்
சொல்லிய பித்த போமென்று சுகமா முனிவர் சொன்னரே.

162. பித்தஞ் சுளத்திக் கிறுகிறுத்துப் பெருக்க நடக்கத் துயராகி
யொத்த வுண்டை யுடனிட்டு உதிர்ந்த பாக்கில் களியிட்டு
சித்தத்துள் நீருஞ் சிறு பயறுஞ் சீரகமுடனே சீனியுமாய்
மற்றப் பசும்பால் நெற் பொரியு மளவே களஞ்சி கொள்ளுவதே.

163. மிக்க மிளகு நேர்வாளம் மிகு மாலை முத்துண்டை யுருட்டிச்
சூரிக் காயள வுந்தத் தேசிப் பழச் சாற்றில் நன்றாய்ச்
சுழற்றும் பித்தமதே.

164. பித்த முதலய்யம் சுர வீக்கம் பெருத்த வாய்வு சல மறிப்பு
சுத்த முறவே விரோசனமாய்ச் சுகமா முட்டுக் கலை தீர்க்கும்
மெத்த தடவே வென்னீர் கொள்ள விரோசிப் பாகுஞ் சற் தி செய்யும்
மெத்தப் புரை யேறு மிடற்றில் மிகுந்த பசும் பால் களஞ்சி கொடே.

165. <u>வறட்சி பித்தக் குணம் நெய்</u> :-

தலையும் வலித்து உடலுந் தாது கெட்டுத் துயருண்டாம்
மலையுந் திரிய வொட்டாது அடுத்து மிகவே சிறு சிறுத்து
முலையு மிகவே மன மடிக்கும் மோடி யடங்கும் வறட்சி பித்த
கலையு மிகவே கற்றுணர்ந்து கண்டே முனிவர் கழறினரே.

166. சீதேவியார் குறுணி சேரும் பால் நாழி நெய் நாழி
மாறு சத குப்பை கொத்தமல்லி மதுரம் வன் கோட்டஞ்
செண்பகப்பூத் தான் சந்தனம் நற்சீரகம் சாதியிற் கடகம் மோரோரர் கழஞ்சு
தான் சேர்த்து
தீதின்றிக் காச்சிக் குடித்திடுகில் தீரும் வறட்சி பித்தமதே.

167. <u>காமாலையின் குணம் மருந்து</u> :-

முகமும் வீங்கி கண் வெருத்து மூச்சு நடக்கில் முட்டது வாய்
முகமுந் துடித்து நாவறண்டு அறுகுந் தாது கெட்டிருக்கும்
மிகவு மசனஞ் செய்யாது மேனி வறண்டு வெருப்பேறுஞ்
செகமே சொன்னேன் காமாலை செய்யுங் குணங்களிது கண்டாய்.

<u>இறக்கு மருந்து</u> :-

168. இரும்புக் கிட்டங் காந்தம் மொரு பலங் கொண்டு வந்து கய்யாந் தகரைச்
சாற்றரைத்து
யேந்து கற்றாழஞ் சாத்தினி லியல்பாய் மூன்று நாளரைத்து
வாய்ந்த திரிகடுகுப் பொடியுடனே வாய்ப் பாய் தின்ன வல்லீராய்
சேர்ந்த காமாலை பாண்டு ரோகஞ் செரியாக் குணமுந் தீருமென்றே.

169. கை கால் வெளுப்புக் கண் மேல் வெளிருங் காமந் தாது கெட்டதுவும்
மய்யார் குழலாய் மாத விடை மாறல் பொருமல் வயறு வலி
நோவும் பய்ய மறந்தே யேகி விடும் பரிவாய் முனிவர் பகர்ந்த படி செ
செய்யுங் காந்த பற்பும் தெளிந்து செய்வீர் செகத்தோரே.

<u>மருந்து</u>:-

170. கையாந் தகரை யாமணக்கு கற்றாளை கொடுப்பைப் புடோலுமுடன்
வெய்ய நீர் முள்ளி சீந்தில் வில்லங் குறுந் தொட்டி வேர்ப் பூலாத்
தய்யல் வளையம் புளியிலை நெல்லிக்காய் தாழை ஆல விழுது சமன்
பய்ய யென்னை பாலின நீர் பரிவாய்க் கூட்டு மருந்து கேள்.

171. நெல்லி கடுக்காய் தான்றிக்காய் நேரிற் சீரகந் திரிகடுகு நிம்பத் தோல்
அதிமதுரஞ் சொல்லுங் கோட்டமுந் திரிகை தூய்ய சந்த மிரு வேலி
விலாமிச்சுடன் மோதம் வல்லீர் செஞ் சந்தனம் லவங்கம் வகை யிரண்டு களஞ்சதிற் சேர்த்து
கல்லித பதங் கண்டே காச்சி தேச்சே முழுகக் காமாலை பாண்டு போமென்றே.

172. <u>பாண்டு ரோகத்தின் குணம்: நெய் என்னை</u>:-

இருமலு மிளைப்பு நெஞ்சி லிடிப்பது மிகவு முண்டாய்
பெருகவே நடக்கும் போது பேச்சு முட்டதுவே யாகும்.
வேறுறக் சிறு சிறுத்து மேனியும் வெளுத் ததைக்கில்
பெருகிடும் பித்த பாண்டு வெனப் பல பேசலாமே.

173. நெல்லிப் பசளி சதாவேலி நெய் பாலிளநீர் சரி சரியாய்ச்
சொல்லுங் கோட்ட மதிமதுரந் தூய்ய சீரகங் கச்சோலம்
வல்லி யேலம் திரிபலை திரிகடுகு வாய்ப்பா யோரொன்று இரு களஞ்சு
மெலிதாய்க் காச்சிப் பதமானல் மேற் பொடியிட்டு வடிப்பது கேள்.

174. கேளீர் சர்க்கரை முந்திரிகை கிளரும் பலமே ஒரொன்று
தாளப் பாத்திரந் தனிலிட்டுத் தருக வடித்துக் குடிப்பீராய்
வீரும் வீக்கம் பெரும்பாடு விக்கலி ரத்த பித்தம் பாண்டுடனே
வாளாதோடி மாய்ந்து விடும் வல்லி நெல்லி நெய்யிதுவே.

175. பிரமி கரப்பான் கற்றாளை பின்னிலுச் சம்பாலிள நீர்
உரமே யென்னை யிருநாளி உகந்த சந்த மிரு வகையும்
அரத்தை கோஉஷ்டம் நன்னாரி மதுரம் அமுக்கிறா லர்மிச்சிறு வேலி
திளையக் காச்சித் தேய்ப் பீராய் தலை நோய் பாண்டு தங்காதே.

176. <u>உள்க் காச்சல் குணம் மருந்து</u>:-

வற்றி மேல் வெருக்கும் பித்தம் மயங்கிடும்
சொற்ப தாபம் பற்றியே யனலுந் தோன்றிப் பகலிர விசலுங் காயும்
முற்றதோர் குளிர் வேருக்கும் உடலையும் விறகிற் கற்றும்
முற்றியே யனலே யீது முழுதும் உள்க் காச்சலாமே.

177. ஆவின் பாலுடனன்புறு சீனியும் மேவு சமுத்திரா வேதியுமாகவே
தாவு நாற்பது நாளது தான் குடி பாவும் உள் சுரம் ஓடிப் பறக்குமே.

178. பாலுடனிள நீரோடு பழம் பாசி நீர் நெய் நாழி
ஆலுடன் சதா வேலி நீரதி நெப்பங் கூட்டிக் கொண்டு
வாலுளுவை சந்தம் வேலி மிச்சமும் கோட்டம் பச்சை
சாலவே மதுரம் ரேணி சமனதங் கூட்டி நக்கே.

179. என்னை பாலு மிளநீரும் மித்தொடு கூட்டி நன்றாய்
வண்ணமாஞ் சந்தங் கோஉஷ்டம் மதுரமு மரைத்துச் சேர்த்து
திண்ணமாய் முழுகி வந்தால் தியங்கிடும் உள்ச் சுரங்கள்
உண்மையாய் விட்டுப் போ மென்றுரைத்தனர் முனிவர் தாமே.

180. <u>பித்த குணம் மருந்து</u>:-

பரபரத்துடல் கனத்து பரந்துடல் தடித் திரைந்து
கரகரத் துளைந்து நெஞ்சு கனப்பு இளைப்பு மூச்சு
சரசரச் சொறிந்து மீந்து தயங்கு நீர்ச் செறுப்பும் வெற்பும்
வரவர யிருமல் கோபம் வந்து தாம் பித்த மென்னே.

181. வெற்றிலை கொத்தான் கையான் வேளை புடல் நெல்லி தேசி.
கற்றாளை யவிரி காடி யென்ன கனக் கொரு படியிற் கரைத்திடு மருந்து கேள் நீ
முத்தமுங் கடுக்காய் சுக்கு மோதஞ் சாறணை வேர் முந்திரி மிளகரத்தை
சித்திரப் பாலாடை யதிமதுர மிரு சீகத்தோடு சேரிரு களஞ்சி ரெண்டே.

182. மூப்பட மருந்து தன்னை முறைப்பட எடுத்திடித்து தப்ப வெல்லாரைச்
சாற் தனிலரைத்ததிலே சேர்த்துச்
செப்பமாய்க் காச்சித் தேய்சால் சிரசில் நோய் ரெத்த பித்தம்
முப்படும் வியாதி யெல்லா முறிந்து போமென்று முனி யுரைத்தனர்.

183. இந்த யென்னை யுரி யளந்து யெலுமிச்சை நெல்லி முசுமுசுக்கை
யிரு நாவுரி நீர் அதிற் சேர்த்து வெந்தயஞ் சுக்கு
கடுக்காய் வெண்கார மிந்து மிளகேலம் மோரோர் கழஞ்சு
செந்தெங் கிளநீர் அரைத்துச் சேர்த்து காச்சிக் குடிப்பீராய்
வந்த ரெத்த பித்த வாய்வு மூலம் மற்ற வியாதியு மாறு மென்றுரே.

சிலேற்றும குண மருந்து :-

ஈதலா யுடலந் தண்ணீர் ஆமென விசைந்து காட
மாதுர முகம் பெருக்கு மலஞ் சலம் களிந்தே நாளும்
போதமும் விரும்பிடாது புந்தியில் வலியுந் தோன்றுந்
ஞா தனு ரருளிச் சொன்ன நலங்கிய சிலேற்பனந் தானே.

184. இவ்வகைக் கிணங்கி நிற்கு. மிருமிய சிலேற்பன மென்று
தவ்விய காசத்தோடு தயங்கிய சிலேற்றுமம் எட்டு
ஒவ்விய பித்தத் தோடு உன்னிய சிலேற்றுமம் ரெண்டு
கவ்விய வாதத் தோடு கலந்திடு மிரண்டதாமே.

இருக்கு மருந்து :-

185. இப்படிச் சேற்றுமங்கள் இருப்பது நிலையிலானற்
தப்பிடு முடலுயிர்க்குத் தவறிடா மருந்து சொல்வோம்
அப்பிரு காரங் கிட்டப் அரைப் பொடி காந்த மொன்றாய்
செப்பிடும் தேசி நீரில் சேர்த்தரைத் தொரு புடம் போடே.

186. தீப் புடமெடுத்து திரிபாலே திரிகடுகு வாய்ப்புடன் சமனாய் சேர்த்து வன்மை யறிந்தெடுத்து
ஆப்புடன் கைய்யான் நீரிலஞ்சு காமரைத் தருந்த சீப்படுஞ் சிலேற்றும ரோகம் திரி தோஷந் தீருமென்றே.

187. ஆனதி லதிகமானால் லஞ்சனு சுரங்களுண்டாம் தானது மிகுதி கண்டுந் தன்னுயிர்ப் பயங்களாலும்
மேனியில் முறிவினாலும் மின்னு மேல் மயலினாலும் கானலே பீடையாலும் கற்ப பித்தம் புலைக் கையாலும்.

188. இருக்குடன் மருந்து மாற யிவையில் முச்சுரங்கள் வந்தால்
சதிரமா நினைவு நாசி சங்கையாய்க் கரிந்து காட்டும்
பதிநாரவையுங் கலங்கிப் படைகள் போல்க் குத்தி நோவும்
முதித்த மூச்சு வாங்க முண்டாம் முற்ற சரீரமும் விரைய்வுண்டே.

வாத சுரத்தின் குணம் :-

189. வாத சுரத்தின் குணங் கேளீர் மயிருஞ் சிறுத்துத் தலை நொந்து
போத நடுக்கில் கீழ் முதுகு பொருந்துங் கை கால் முளையுங்
கர்தல் பெருத்த தண்ணீர்க் காதுந் தலை நோய்களுடனே
வீதி பெருந்த மலஞ் சலமு மிகவும் கடுக்கும் மெல்லியரே.

190. வாத சுரத்தின் குணங் கேளீர் வகுத்த வன்ன முரைத்திடவே
சீத சுரமாய் வந்திட்டு சிந்தை கலங்கு மெய்யிறங்கும்
பாதந் தன்னில் வருஞ்சுரமும் பயந்து அசந்து விழு மாப் போல்
பேதம் பெறவே களையு முறும் பெருக்கப் பசியுந் தோன்றுதே.

191. நடுக்கித் தியக்கி தியக்கி மயிர்க் கூச்சிட்டு நமுவுந் தலையு மிக நொந்து
கடுக்குங் கை கால் முறி நிமிர்ந்து கண்ணுந் தோரு மிக நோவாம்
திடுக்கிட்டு தடும் வாய்நீர் வற்றி சேற்ப வரிய மேற் சுவாசந் தான்
முடுக்கென வந்த போதே வாத சுரமென்றுஞ் சொல்லலாமே.

192. வாத சுரத்தின் குணங் கேளீர் வந்து குளிர்த்தல் பயப் படுத்தல்
சீத மிகுந்து நுரைக் கரிதல் செறிந்த ரோமஞ் சிலுப்பேறில்
சேதங் கண்டு தலை நோவுந் திருந்து திருந்துந் தொப்புள் சலங் கடுத்தல்
பாத முளைந்து நீர் குடிப்பாய் பல கால் வெதுப்பு விடாதிதுவே.

193. விடாதே கை கால் கீழ் முதுகு மிக்க யிரண்டு விரல்ப் புறமும்
தொடாதே நோவுங் குடலதுவுந் தொழுகிற புண் போல் நோவுண்டாம்
குடாதே கஞ்சி யேழு தினங் கொடுத்தா லதிக சுரமு முண்டாம்
அடாதே மிகவும் புரண்டுடலில் அடுக்கும் வாத சுரமாமே.

194. ஆமே யேழு நாளளவு மசனந் தோடாதே பட்டினியாய்
தோமே யிந்தக் கஞ்சி தண்ணீர் சொன்ன படியே தானதுவும்
ஆமே யேழு நாள் கழித்தால் அடாதே வந்த சுரந் தானும்
போமே யேழு நாள் கழித்தால் பொருந்து மசனங் கொடுப்பதுவாம்.

195. ஆமே வாத சுரந் தனக்கு அமுது சிறுகாஞ்சொறி முத்தம்.
மீமே சுக்கு காடொவ் வொன்று மீருதே மூன்றிது களஞ்சு
தாமே நாலு நாளி தண்ணீர் தன்னைக்குறுக்கி யுழக்காக்கி யருந்தப்
போமே வாத சுர மென்று பொன்னே முனிவர் புகன்றனரே.

196. விஷ சுரக் குணம் :-

ஒரு விடங் குளிருங் காயும் ஒரு விட முடம்பு தன்னில்
அருகுறத் தொடுத்துப் பார்க்கி லதிகமாய்க் காய்ந்திருக்கும்
பெருகிடுந் தண்ணீர்த் தாகம் பின்னையு மன்னஞ் செல்லாது
வெருவுறப் பத்தியேசும் விஷ சுர மென்னலாமே.

197. மெய்யில் விஷ சுரம் வந்தாக்கால் விட்டு விட்டு வெதும்புங் கை கால்
கைய்யும் வெதும்பு முடலெல்லாம் கனத்தே யிருக்கு முழைலயுமாய்
பய்ய வந்தே பார்ப்பவரைப் பயந்தே கட்டிக் கொள் ளென்றும்
அய்யோ பிலையே யென்றுஞ் சொல்லு மதிகமாகும் சுரந்தானே.

198. ஒன்று ரண்டினில் மூன்று நாலாறினில் யென்று யேழினில் யெட்டினில் பத்தினில்
நின்று நின்று நிலவரமாய் வரும் வென்றிசெய்யும் விடசுர மென்பதே.

199. சடங்க மிரு வேலி பற்படாகம் வேம்பு சந்தன மிலாமிச்ச முத்தம்
யிடங் கடுக்காய் வேர்க் கொம்பு யிருநாழி வெள்ள முழக்காய்க் காச்சி யருந்த
யடங்குஞ் சுரமும் முழுவே தண்ணீர்த் தாகம் போம் யம்மையுமை யாவே
தடங் கண் மாதே தயங்காதே தானே சுரம் போம் மென்றூரே.

200. <u>பித்த சுரத்தின் குணம் மருந்து</u>:-

பித்த சுரத்தின் குணங் கேளீர் பிதற்றம் வெதும் உடலமுற்றம்
மெத்த தண்ணீர் தாகிக்கும் மிக வாய் கைக்கு நாவுலரும்
ஒத்த சிறுநீர் மலந் தாறும் ஒளி சேர் நன்றுயச் சிவந்திருக்கும்
சுத்தி யடங்கு முகங் கருக்கும் சொல்வா யிடறும் புண்ணுமே.

201. பித்த சுரங்கள் பலஞ் செய்யும் பெருக்க வ்யறிளசிக் களியு
மெத்த நாறும் மலந் தாறும் மேவிக் குளிரும் பட வேண்டும
ஒத்த அன்னந் தான் வேண்டாம் உகந்து தண்ணீர் மிகப் பருகும்
சுத்தமாக விது தாசம் சொல்லும் பித்த சுர மென்றே.

202. பித்த சுரத்தின் குணங் கேளீர் பெருகத் தண்ணீரது வாங்கும்
முத்தக் காசு அரசந் தோல் உழக்காய்க் காச்சி யது வாத்தி
மெத்தப் பருகுமது தாறும் வேண்டும் போது கொள்வீரால்
பித்த சுரமும் வயத்தழிவும் பின்னிட்டோடுங் கண்டீரே.

203. அறியோ மென்று சீந்தில் சுக்குமான் செங்கல் யிருவேலி
யுறுதியான விலாமிச்ச மோரொன்றளவு முக்களஞ்சு
வறியே நொமென்றெண்ணுதே யறிவா யத்தைக் காச்சி யெட்டொன்றாய்
பொரியாய்த் தூவித் திப்பிலியைப் போட்டுக்குடிக்கப் போம் சுரமே.

204. வஞ்ச மிகக் கண்ணும் பல்லும் மலமுடன் சலமு மெய்யும்
மஞ்சனித்திருக்கும் வாயும் கசக்கும் நீர் வாங்கும் போத
யஞ்சே யெரித்தே மிகக் கருக்கும் மேவும் பித்த சுரந்தானே.

205. போமே தான்றி கடுக்காய் நெல்லி போத்துந் தாமரை யலிவங்கம்
மாமே கொண்டைத் தோலறு களஞ்சு மற்ற திரு களஞ்சு
நாமே தக்க திரு நாழி நீர் நய்ய வெந்திட்டுளக் காக்கித்
தாமே திப்பிலி தூவிக் கொள்ளத் தக்க சுரமுந் தங்காதே.

206. <u>வாத பித்த சுரத்தின் குணம் மருந்து</u>:-

கையைக் கொட்டிப் பாடுவதுங் கண்ணே யிமையா லொளிப்பதுவும்
மெய்யே முழுதும் வலிப்பதுவும் வேண்டா தெல்லா முரைப்பதுவும்
பய்யச் சீறி நெடிப்பதுவும் பகர்ந்தே வாக்குப் பகர்வதுவும்
மையைப் பொருந்து கண் மடவார் வாத பித்த சுரந்தானே.

207. திரிகடுகு திரிபலை யேலஞ் செண்பகப்பூ லவங்கம்
மறுபடி நாகப்பூவும் மதுரங் கோட்டம் வில்வம்
நறிய நன்னாரி சீந்தில் நாலிரண் டொன்றாய்க் காச்சி
யறியவே யெட்டுப் போது யருந்த வாத பித்த சுரமே.

208. மேற்பொடி சுக்கு சீரகம், யேலம், நெல்லிப் பருப்பு வறுத்துப் பொடி செய்து கொஞ்சம் சீனியு மேற்ப் பொடியாகப் போட்டுக் கசாயங் கொடுக்கவும்:

<u>சிலேற்றும சுரத்தின் குணம் மருந்து</u>:-

208. ஆகாத வுண்டி யெல்லாம் ஆசரித் தடைத்து விம்மிப் போகாத வெதுப்புத்
தோன்றும் புத்தியை மயக்கும் போதப்
பாகரு மொழியினுள் பசர்ந்திடப் பரிந்து கொள்ளாய்
சோகமே மீசுஞ் சிலேற்றும சுரமென விளம்பலாமே.

209. மூக்கு நீர் வெள்ளோக்காளம் பொடுகுரை மூச்சுண்டாம்
தேக்கிடும் வாய் நீருண்டாய் தித்திப்புக் குளிருஞ் செய்யும்
பார்க்கிற போதுங் கண்ணும் பருத்துடல் மாச்சல் உண்டாம்
தீக்குணம் போலெரிக்கும் சிலேற்றும சுரம தென்னே.

210. அன்னமே சிலேற்பனத்துக் கடையாளம் உடம்பு வேர்க்கும்
முன்னிய சிறுநீர் தாறும் உண்மையா யுடைந்து விழும்
மன்னிய தேகந் தாது மயக்கமாய் விடுக்கு மென்க
பன்னிய சிலேற்பனத்தின் பயனிது யறிந்து கொள்ளே.

211. மங்கை கேள் தாமரை அல்லி வளருங் கருநீர் மஞ்சிட்டி மதுரம்
நங்காய் சொல்வம் நன்னாரி நாறும் யிருப்பைப் பூவுடனே
சிங்கா தோரொன்றிரு களஞ்சு சேரக் காச்சி யெட்டொன்றாய்
பங்கு மிலாத் திப்பிலி தூவிப் பருகச் சுரமும் பாழாமே.

<u>அத்தி சுரத்தின் குணம் மருந்து</u>:-

212. ஆமே சுரத்தின் குணங் கேளீர் அதிகமாக வெதும்பாமல்
சாமந் தோறும் வெதும்பு விக்கும் தனியே யுரக்கந் தானுண்டாம்
சேமமாக உடம்புமுன்பு சீறி யிருக்கும் பசியில்லை
நாமந் தளரும் உடல் நோயும் நடுங்கி யிருக்கு மிதுவாமே.

13.5.64.

213. ஆமே நல்ல கடுக்காய் நெல்லி மருதும் வீழி யிருவேலி
தாமே சொல்லும் விலாமிச்சம் சாற்றுந் தாமரைக் கிழங்குடனே
ஓமே யோரொன்றிரு கழஞ்சு ஒளிரக் காச்சி யெட்டொன்றாய்
வேமே வெந்தால் குடிப்பீரே வினைகளொன்றும் வாராதே.

214. அத்தி சுரத்தின் குணங் கேளீர் அழலும் வெதும்புங் கண் சிவக்கும்
சத்தி யெடுக்குந் தலை கனக்கும் சந்து தோறு நொந்துடல்
வற்றியிருக்கும் வயறெரிக்கும் மாதே வேதப் படி யிதென்று
முத்தமாகப் பொதிய மலை முனி வருரைத்தா உருண்மை யிதே:

215. இந்த அத்தி சுரந் தனக்கு யிதமாய்க் குடிநீர் தனைக் கேள்
அந்த அத்தி வெந்தோலான ஆனைசந்த யிருவேலி வந்த பயறு கடுக்காயும்
மதுரங் கொத்தமல்லி சுக்கு
முந்தக் காச்சிக் கொள்வரா முதிர்ந்த அத்தி சுரம் போமே.

216. இந்தச் சுரங்கள் மலமடைத்தால் யிதமா மலம் போம் வகை கேளீர்
அந்தப் பயறு கடுக்காயும் மாராங் கொத்தமல்லி சுக்கு
முந்தக் காச்சி யெட்டொன்றாய் முடுக்காய்க் குடிக்க வல்லீராய்
வந்த சுரம் போ மலமடைப்பும் மறுகா தென்றார் மாமுனியே.

217. பெருகிய சிலேற்பனத்தோடு பிணங்கிய வாதம் வந்தால்
கருதிய சன்னி வாதச் சுர மெனக் காணலாகும்
நிறுதியே கையுங் காலு நெஞ்சுற நோகு மென்க
மருவிய வயறு தாழும் வகைபடக் களியு மென்றே.

218. பங்கம் பாலை வேர் சுக்குப் பரந்த முத்தக் காசுடனே
யங்குன செரியு மகில் வெட்டி யளவாய்க் காச்சியது பருகிப்
பொங்கிக் களியுஞ் சுர மெல்லாம் பொல்லா நாத்தமது விட்டுச்
சங்கைப் படாமலிது மீளும் தப்பாதிறவுஞ் சத்தியமே.

219, பித்தமுஞ் சிலேற்பமந் தான் பிணங்கியே சுரங்கள் தோன்றிச்
சத்தியாய்க் கிள ரசச்சி குத்தல் தாகித்த விருமலீனை
மெத்தென வெதுப்புக் காட்டி வெந்திடு மகவாய்க் கண்ணும்
நித்திரை யதறு மேனி வெளுக்கு நீர் பெருக்குந் தானே.

220. அத்திப் பட்டை தானெட்டு வாழைப் பழங் கூட்டிப்
பொத்திப் பிடித்து பிளிந்து கொண்டு புகலுஞ் சாறு யது செஞ்சு கொண்டு
பித்த சிலேற்பனம் வயறிளிவு சுரமும் பேணீர்த் தீருங் காண்
யத்தனுனை யுண்மை யிது யன்பாய்ப் பாடுங் கண்டீரே.

221. வேப்ப நாக்குடன் வெந்தது நீர் குடி நாற்பது தேறக் குளிர்ந்து
நாசமா தெறப் பேறிச்சுரந் தீர்வது திண்ணமே ஆப்பனுத்த மெய்யானை
யதாமே.

222. ஒன்பதுமே மற சுரந் தீரச் சீந்தில் காஞ்சொறி பற்படாகம் வருதலை நிலவேம்பு
முத்தன்ன பகருஞ் சிறு தேக்கு சுக்கு மூங்கில் செங்கழு நீர் கோட்டமொடு திப்பிலியு
மின்ப மிது நண்ணிடையாய் கசாயம் திப்பிலியே கொடுக்கிது மொன்பு பெருகு
மெனப் பட்ட சுர மெல்லாங் கெட்டு மாறல் பழஞ் சுரம் மென்னும் வகை
மற்றுப் போமே.

223. <u>சகல சுரத்துக்கு மாத்திரை</u>:-

காந்தக் கல்லு யரிதாரங் கருங் கூர் வெள்ளைப் பாசாணம்
நாந்த நாரி கெந்தகமும் நவச்சாரத்துடனே யோரொன்று
ஆய்ந்த சுத்தியது செய்து யவ்வளவே கொள் நேர்வாளம்
மூந்த நொச்சிச் சாறதரைத் துண்டை மிளகு பிரமாண மதிற் கொண்டால்
யெந்த சுரங்களிவை தீரும் யென்று முனிவரியம்பினரே.

224. மஞ்சக் கெவுரி யெலி மருந்து மனோசிலை துத்த மரிதாரம்
பஞ்ச நீலிச் சாற்றரைத்து பயறளவு உருண்டை தனைக் கூட்டி
யிஞ்சி மிளகு தனில் கொள்ள யெல்லாச் சுரமும் பாழாகும்
பிஞ்சி யேழுங் குடல் கரியும் மீண்டுஞ் சூலை மாய்ந்திடுமே.

225. துத்தங் கெவுரி யோரொன்று துய்ய சந்த மிரண்டதுவாம் வெத்திலை
சாத்தில் மிக வரைத்து மிருந்த குன்றிப் பிரமாணம்
பத்தி யேழுஞ் சுரந் தனக்குப் பருசீர் வென்னீர் தனிலதுவும்
சத்தி கெட்டுச் சுரங் களெல்லாம் தணியு மென்றார் தவ முனியே.

226. <u>மோரென்னை சுரத்துக்கு</u>:-

மோரென்னைக்கு நன்னாரி முத்தக் காசு மதுவு முடனெறுங் குறுந் தொட்டி
யிராமிச்சம்
யாருமரத்தை சுக்கு சந்த மதிமதுரங் கோமூர்த்த கோரோசினை யிந்துப்பு
பெருங் குரும்பை பொன் மெழுகு போரங் கடுத் தருங் கடல் நுரை தேவ
தாரமும்
நெருங்குத் தகம் மலை மஞ்சள் திப்பிலியும் வாளஞ் சிறு முட்டை கோளவே
நல்லெண்ணை நாளிக் களஞ்சி தான் சேர் மூன்றுகச் சேர்க்கரைக்க
ஆவிடை மோரது நாளியது முன் கூட்டி நேராய்ப் பதத்தில் வடித்திறக்கி
பாங்குடன் பூச விதத்தி லெழுந்த சுரம் விட்டுக் கதித் தெழுந்த சீத சுர

முழுலை தீய விச் சுரமும் மோதி யுள் வெக்கை யுட்டினமும் ஒட்டி விடும்
அத்தி பாழந் சுரத் தோட்டத்தனையும் விட்டே குமுற்ற திவை சொன்னே முறை.

227. வெருகென்னை :-

வெருகு சமூலம் விஷ்ணு கிரந்தி மருவிய சித்தாமுட்டி பேராமுட்டி
தருவது கூவிளஞ் சாறனை . கூறி தொவ்வொன்று தாய திருபது தண்ணீர் பதக்கு
யேயவே யெட்டொன்றாய்க் காச்சி யிரு நாழி யெண்ணை விட்டு அதிற் கற்கம்
உய்ந்துரைக்கில் பறவே நன்னாரி விலாமிச்சி நாவி யிருவேலி முன்னை யமுக்கிரு
முத்தக்காசு பின்னையு முன் காயத்திலோடு யரத்தை பேரரத்தை வன்காரம்
யேலமிலவங்கம் நாகப்பூ நெல்லி தான்றிக்காய் கச்சோலம் மாவிடை யங்கச்
சேலம்
பச்சிலை ஓமம் வசுவாசி குக்கில் வசம்பு மரமஞ்சள் ஏற்ற கோஷ்டம் திரிகடுகு
யிசையயா சாதிக் காய் தேவதாரம் அதிமதுரம், வாதி சுக்குங் கலமத மஞ்சிட்டி யீ
தொக்கச் சந்தன மகிழங் கூட்டித் தாரித்திவை யோரொன்று முந்த யிரு களஞ்சு முதன்
மையாய் சிந்தை யுறக் கூட்டி யஞ்சு நாள் நாட்ட முறவே வடித்து நன்றாக யீட்டமுடன்
பூச பூசவே மற்றும் புதைந்த சுரஞ் சீத சுரம் வீசியே விட்டு லா விஷ சுரம் பேசிய
தோர் ஒன்ற விட்ட நாலா நாள் மாற்று பைய மெனக் கண் லதிய சுரஞ் சுண்டிய
தோரெல்லாச் சுரமும் போமிதை யங்குறுந் தெரும் நல்லார்க்கிது சொன்னோம் நாம்.

சுரத்துக்கு சூரணம் :-

திரிபலை கொத்தமல்லி தேத்தான் வித்தேலம் வங்க மிந்து
திரிகடுகு சிவதை நாகப்பூ விருசீரகம் ஓமம் கிரியாந் தேழும்
திரிகடுகு ரேகணி தார மதி மதுரத் தோட முக்கிரு அதிவிடையங்
குறிப்புடன் வெல்லங் கொண்டிடச் சுரங்கள் போய்க் குணங்களாமே.

பித்த சுரக் குணம் மருந்து :-

மெய்யே நடுக்குந் தலை வலிக்கும் மேனி தளரும் கண் வெளுக்கும்
பொய்யே யுரைக்கும் கிறுகிறுக்கும் புள்ளி கறை போற் பொடி பறக்கும்
கை காலசந்து தள்ளி விடும் கண்ணூ மூக்குஞ் சன்னி கட்டு.
மய்யா மிகவும் வாய் வெருவி யறிவர் பித்த ரோகமிதே:

கண்ணும் பல முகமல நீரும் கை கால் முகமும் கறுத்திருக்கும்
யெண்ணுந் தடி போல் நெஞ்சிடிக்கும் மீரக் குலை மேற்பட படக்கும்.
மண்ணில் நடக்கில் கிறு கிறுக்கும் வலை போல் விளியுந் தெரிவரிதாய்
யெண்ணிச் சொல்லு மிக் குணங்களிதுவும் பித்த மென்றறியே.

மஞ்சள் பித்த குணம் :-

விழுந்திடும் பித்த தோஷம் வெதும்பி நாவறண்டு கொள்ளும்
தளர்ந்து கண் சுரண்டிருண்டு தலையது கிறுகிறென்னும்
சுளர்ந்திடும் நீர்ச் சிவந்து சுழக்கெலக் கடுத்து விழும்
வளர்ந்திடும் உடல் நடுங்கும் மஞ்சனித் திருக்கு மென்றே.

வாய் நீர் தளர்த்தும் வெய்யில் கண்டால்
வளரு முடலி லெரிப் பெடுக்கும் தானே சில கால் தலை சுழற்றும்
தறையில் நடந்தால் கிறு கிறுக்கும் தேனே மஞ்சள் குளித்தவர் போல்
தேக முழுது மன்னிறமாம். மானே செங்க மாரி யிது மஞ்சள் பித்த நிறமாமே.

செங்க மாரி மஞ்சள் பித்த
கை யொடு காலும் நீரும் கடுத்துடன் சிவந்து விழும்
மெய்யெல்லாம் பசுமை யன்றி வெதும்பிடுங் கிறு கிறு யென்னும்
துய்ய சோறதுவுங் கொள்ளாத் துயருடன் சடமும் வேர்க்கும்
மைய்யிடு விழியர்ய் செங்க மாரி நோயென்று கூறே.

சோறுஞ் செரித்துச் செல்லாது ஊக்க முடனே தலை கனக்கும்
நீரும் வெதுப்புங் கண்களெல்லாம் நீட்டில் மேல் கால் கடுக்கிடுக்கும்
சீறுங் கொர்டிய விழி மடவீர் செங்கை மாரி நோயிதென்க
கூறும் பெரியோர் தாமுரைத்தார் கொடிய ரோக மீதென்றே.

இதுக்கு மருந்து :-

உரைத்த யிரும்பின் கிட்டமதை யுன்னிப் பொடித்துக் கோசலத்தில்
சரத்தக் காந்த மறைப் பொர்டியும் தாக்கிப் பர்தி வெண்காரம்
அரைத்து மூன்று புட மிட்டு யடவர் யெடுத்து யதிலேடே
பிரத்த பிறண்ட பொடி சமமாய் பேணிக் கொள்ளப் போம் பிணியே.

கைய்யாந்தகரை மொசு மொசுக்கை கற்றாளம் புடலம் பாலுடனே
மெய்யாய் நாளி நாளியது விளங்க நல் லெண்ணை நாழுமுக்கு
அய்யா சந்தனம் கோர்உஷ்டம் மதுரம் அமுக்கிரா நெல்லி அய்ங் களஞ்சு
நெய்ய யரைத்து யதிற் கலக்கி நெருப்பிற் காச்சி வடித்து
பய்யத் தேச்சு முழுகி வரப் பாறும் பித்த ரோகமதே.

சத்தி குன்மத்தின் குணம் :-

மயங்கிடும் வெளுக்கு மேனி வாய்வு மிகுந் தூன் வற்றும்
செலங் கெடச் சத்தி பண்ணி செரித்திடா தெரிக்கு நெஞ்சு

நன்றதே கோட்ட மேலம் நல்கு வெண்கார மிந்து
சென்று மனத் தக்காளி சீரகந் திப்பிலி கொத்தமல்லி
மென்றிடுங் கிராம்பு சுக்கு மிக்க செங்கொட்டை கூட்டி
யொன்றிட வெந்த நெய் தானுடன் கொள்ளக் குன்மம் போமே.

போமதே வய்யமாந்தம் பொருமிய பித்தங் குன்மம்
தாமிக யெரிக்குங் குன்மம் தறுகிடா சத்தி குன்மம்
வாமமாம் வான வாத மறுகிடா வலிக்குங் குன்மம்
தாமதப் படாதே மீறும் தகுதியாம் நெய் தாமென்றே.

<u>வாத குன்மம்:-</u>

மேல் வயறு வலித் தளைத்தி யிளைப்பு முண்டாம்
மிக்கான பாதங் கருளைந்து பின்னுஞ் சாலவே கீழ் வயறு
தனிலடங்கிச் சத்தியே தோன்றிடுதல் தாரு முண்டாய்
ஆள் விட்டுக் குத்தும் போல் கண்கள் மிக வெருத்து
அதிக நயருண்டாகும் அதனைத் தானே
சீலமுடன் மனந் தெளிந்து கொண்டு நீயுந் தெரி வாத குன்ம மென்று செப்புவாயே.

காலுடன் நெஞ்சு வத்திக் கண்ணெரிந்து தலையும் பக்கச்
சாலவே செரி கபாலஞ் சற்றடல் பிரட்டிக் குத்தும் நே
நெல்படக் கிறகிறுத்து நிரை படக் குடல் வலிக்கும்
வால கோகிலமே மானே வாத குன்மங்களாமே.

சந்து காலுளைந்து பற்றித் தழலெழும் வயத்தில் மற்றும்
மந்த காரங்கள் தன்னில் அதிகமாய்ச் சரீரம் வாதை.
வந்து தான் தோன்றும் நாளில் வகை படர் வாத குன்மம்
அந்தமா முனிவன் சொன்ன ஆயுருவேத மாமே.

<u>இதுக்கு மருந்து:-</u>

கோட்டு முள்ளி யறு பலமும் கொடிவேலி மஞ்சள் நிலவாகை
ஒட்டும் வீழித் சாறனையும் ஒரொன்றொரு அவ்வாறு பலமாக
தேட்ட மிகுந்த திரிகடுகு தெளியுஞ் சோமலுப்பதுவும்
காட்டுக் கள்ளிப் பாலுடனே கலந் தொன்றாக என்னை கொள்ளே.

திரிபுர் மெரித்தான் சாறுந் திருட்டு வின் சாறு சாத்தே
கிரி யுரைகள்ளிச் சாறு கேடிலா முருங்கைச் சாறும்
சரி சரி சாத்தை வாரித் தன்னுடன் கூட்டிக் காச்சி
உரியொடு நாளியாக உற்று மணக்கெண்ணை கொள்ளே.

கொடிக் கள்ளி கத்தை ஒன்று அதை நெருப்பில் வாட்டிப் புளிந்த படி ½, ஏலம் பலம்.க பொடித்துப் போட்டுக் கொடுக்கவும். பேதியானல் மிளகு நீரும், மோரும், சோறும் கொடுக்கவும். பேதி நிற்கும். பேதி இறங்காதே போனல் வென்னீரும் சோறும் கொடுக்கவும். இதனல் தீரும் வியாதி குலை பதினெட்டு பாண்டு மகோதரம், காமாலை மேகநீர், பித்த நீர் குலையும் தீரும்.

<u>வெட்டைக்கு, பித்தத்றுக்கு நீரழிவுக்கு மருந்து:-</u>

கீழ்காய் நெல்லி ஒரு பிடி கொண்டு வந்து முன்று அறப்பாய் அறுத்து ஒரு சட்டியில் விட்டு சீரகம், மிளகு இது வகைக்கு பலம்.க, இது வெல்லாம் கூட்டி தண்ணீர் படி.க, விட்டு குறகக் கரய்ச்சின பிறகு படி.1/8 முன்று பொழுது கொடுக்கவும்.

<u>இது மருந்தல் முறிவு:-</u>

முருங்கை யிலையும், உப்புங் கசக்கி கொடுக்கவும் தீரும்.

<u>கபால குன்மத்தின் குண மருந்து:-</u>

வயத்தை யளத்தி மேல் நோக்கி வாய் நீர் பெரித்துத் தலை கனத்து
உயிர்ப்பை யழியத் தலைக்குத் தாய் ஓடியடங்கும் உடல் தன்னில்
அயர்க்கு மயர்க்கும் உடல் வெருக்கும் அதிகப் படவே வாதை செய்யும்
குயிற் சொற் பயிலுங் கொடியிடையாய் கொதிக்குங் கபால குனமிதே.

தலையுங் கனத்து வலித் தயரும் தறுகா தளற்றும் அமுகாமுடன்
அலையும் நடுக்குங் கிறு கிறுக்கு அயர்த்தியாச கண் துயிலும்
உலையும் பிடறி தனில் நரம்பு உளையும் மனமு மிகப் பதறும்
கலையும் பத்தி உடல் நடுங்கிக் கதிக்கும் கபால குன்மமிதே.

சாறனை கொடி வேலி வீழி சம்பீரந் தானுஞ் சாத்தே
வீறுள கொன்றைக் காயில் விரவிறு முருங்கைப் பட்டை
பேருடன் ஒக்கக் கூட்டிப் பெருக ஒன்றாக வைத்து
ஊறிய நாழி தண்ணீர் உடனது திடமாய் காச்சே.

காச்சியே கோதத் தள்ளி கலந்திடும் நறு நெய் நாழி
மூச்சுள்ள உள்ளி சுக்கு முதிர்ந்த திப்பிலி வெங்காரம்
வாச்சிடும் மிளகிந்துப்பு வன்மை சேர் சிவதை காயம்
காச்சியே தன்னி லொக்க கழ றிப்பால் காலந்து கொள்ளே.

இரத்த உன்மத்தின் குணம் மருந்து :-

உரத்திடுங் குமுறுங் காந்தும் உதரமும் விம்மி நொந்து சுரத்திடும்
வயறு நெஞ்சு சொறிவுடன் தினவு முண்டாம்
சிலத்திலுங் காலு மேலுந் திமிருடன் குத்தி நோவாம்
பிரைத்து கண் சுளத்தி வாயால் ரத்தமாங் உன்மமாமே.

இதற்கு மருந்து :-

கற்றாழை முசுமுசுக்கை கற்பூரம் வெள்ளி கரிப்பான் நொச்சி
வெற்றிலை கடுக்காய் நெல்லி வெள்ளுள்ளி பாலிள நீர்
நெய்யிற் தழை நாழி நாழியி லவங்கங் கோட்டந் தாரம் இரு சீரகம்
பத்திரி யேலம் கடுகு மஞ்சள் பச்சிலை கச்சோலம் சிராம்பு மோதகமே.

கஞ்சாவுடனே கொத்தமல்லி கார்கோலரிசி திரிகடுகு
ஏபஞ்ச லவணப் பருக்காய் வாலுளுவை பத்திய மறரம் வசம்புடனே
தஞ்ச முறு கற்பூரமுடன் சாதிக்காய் பெருஞ் சீரகமும்
கொஞ்சம் வெப்பாலை அரிசி வதையுடன் கொடி வேலி கள்ளிப் பால் வெடியுப்பே.

இந்துப்புடனே வெண்கார யிலவங்க முடன் சாதிலிங்கமுடன்
கெந்தகமோரோர் களஞ்சு யிவை களற யிடித்ததிற் சேர்த்து
சந்தமாய்க் காச்சி வடித்ததனைத் தரு காருள்ளே கொள்வீராய்
யுந்தி யெழுந் தரத்த பித்த உன்ம மோடிப் போகுமதே.

எரிமுக சூலையின் குணம் மருந்து :-

நாபிக் கீழ் கடிதாய் நொந்து நடு விரல் ஊடே யோடி
தாவிக் கைக் குழியில் குத்தில் தயங்குகை சிப்பில் குத்தி
கோவித்தே உயிரை வாங்கும் கொடுங் சூலை சூலை யென்று
தாவியே முனிவன் தானும் தமிழினால் அருளினாரே.

ஆணவண்டியைப் பற்றி அளந்து கீழ் முதுகைப் பற்றி
பாண்டடை உடலைச் சுத்திப் பாயவே வலிக்கு மாகில்
கண் படு நாவி தன்னை நடுவிற் சுழித்து வாங்கும்
ஏண் படு மிதனை நீயும் எரிமுக சூலை யென்னே.

மருந்து :-

கோழி முட்டை உப்பில் குளித்திடு ராத்திரி வாழியாகவே வைத்து எடுத்துக் கொள்
வேழியாரி விடியும் போதெட்டு நாள் வாழியாய்க் கொள்ள மாறு சூலை சூலையே.

கெற்ப சூலையின் குணம் :-

நாபிச் சீழிரு புறமும் நாற்பதா மதளையும் பத்திச்
சோபமே மிகவு முற்று சொல்லலாம் வலிப்பு முண்டாய்
தாவி யிப்படி யதாகில் தான் கெற்ப சூலை யென்று
தேவர்க்கு முதல்வனான தென் மலை முனிவன் சொன்னான்.

இதற்கு மருந்து :-

வேப்பங் கொழுந்து பிறண்டைக் கிழங்கும் வெள்ளாட்டுப் பால் தனிலே
கோப்பாய் அரைத்து எட்டு நாள் குடிக்கச் சூலை குன்மம் போம்
தோப்பா வாத கரப்பானும் தெரி பட்டோடு மென்றே தான்
ஆய்ப்பா முனிவனிது தன்னை அன்புடனுலகில் அளித்தனரே.

ஆம சூலையின் குணம் மருந்து :-

வெருத்தே உதிர மெல்லாம் வீங்கியே வலிக்கு மாகில்
ஆன தோராமை சூலையாகு மென்றறிந்து கொள்க
மூனுரு முதிரியோடு முனைத் தெழும் நாவி தன் மேல்
வானுற வலிக்கு மென்னில் அந்த கேசரியுமாமே.

பெருங்காயம் வசம்பு கொடுவேலி பேசுந் திரிகடுகு மோதகமும்
அரிய கடுக்காய் கருஞ்சீரகம் ஆன சிவதை கழல் பருப்பு
அரிய யிந்துப்பிவை சமனாய் யெடுத்தே பொடித்து வெள்ளுள்ளி
பரிவாய்ச் சேர்த்துப் பன்னிரு நாள் பரு சீராமை செவுசியுமே.

கோவிய் பேய்ச் சூலையின் குண மருந்து :-

நாபியை யுழலை தாக்கி நடுவுற வலிக்கு மாகில்
கோவிப் பேய்ச் சூலை யென்று கும்பமா முனிவன் கண்டு
லோவடு உயிற்றுப் பின்னை யுடது புரள வோங்கில்
தங்கமே மிகுந்து நோகில் தானது சிறியு மின்னே.

தண்டை வேர் வேப்பலகு சுக்குக் கிராமி சற்றருவும்
பண்டே பகரும் பெருங்காயம் பரிவான முள்ளிதீ மோதகமும்
கண்ட நொச்சிச் சாற்றரைத்துக் கவனமாகவே யருந்தில்
முண்டப் படுத்தும் கோவி குரிமி முருகப் பறக்குங் கண்டீரே.

குடல் கரி வாய்வு :-

கடை குடல் முருகன் தண்டு கையடி விரலைப் பற்றி
மிடை படப் பற்றிப் பின்னை மிக வுள நரம்பதெல்லாம்

14.5.64.

புடைத் தெரித் தளவு நொந்து புரண்டுடல் மருண்டு காணும்
மிடைப் புற முண்டி நோகில்லது குட கரியுமாமே.

ஆமணக்கெண்ணை நெய்தான் அழுகிய கானத் தன்னீர்
தாமது நொச்சிச் சாறுந் தக்கதோர் முடக் கொத்தானும்
காமிது இந்து லிங்க முள்ளி கடுகொடு வேலி சுக்கு
நீமது வெந்து கொள்ள நிற்குங் குட கரியுந் தானே.

குடல்_வாய்வின்_குண_மருந்து:-

கண்டிக்கு முதரந் தன்னிற் கதித்திடுங் கூப்பிட்டோடும்
விண்டிச்சை விரைப்பந் தன்னில் மேவிடு முறண்டு கால் போல்
சிண்டித்துச் சிதறி யோடிச் சினத்தடல் பாயந் தாங்கி
கொண்டி போய்ச் குடலில் குத்தும் குண்டல வாய்வு தானே.

இதுக்கு_மருந்து:-

திரிபலை மோதங் காந்தம் திரிகடு லிங்கந் தாரம்
மறி யிந்துகரும் பத்திரி யடுத்த சிறும்பு சிவதையுடன் பொடித்து
தேனிற் கொள்ளவே யுதர நோய்கள் செ
வெறி படுங் குண்டல வாய்வு விட்டேகு முண்மை தானே.

(வேறு)

ஆற்றுமை_வாய்வின்_குண_மருந்து:-

நீறதிய மழுது சொன்டால் நின்றிடு மன்டுவதாகப்
பறதிய மின்றித் தானே பலபட மலமுந் தள்ளி
சத்தியுந் தளவு காடித் தடிகிடாத பானமாகில்
அத்தனை குணங்கள் கண்டா லாற்றுமை வாய்வு தானே.

மிண்டியே யுதரந் தன்னில் விரைத்திடு மூலாக்கினி கொண்ட தோராங் காரத்தைக்
குமட்டியாற்றுமை யாகும் முண்டிடில் புளித் தெறித்து முடறுடன் மலமுந் தள்ளி
விண்டிடலாற்றுமை வாய்வு விதுவென விளம்பினரே.

இதுக்கு_மருந்து:-

காந்த மிரதம் அரப்பொடியுங் காரீயத்துடனே கெந்தகமும், யேந்றங் கஞ்சா
யறுகளஞ்சு, யிந்த மருந்து ஒரொன்று சாந்து போலே பொடி செய்து,
தானே கேளீர் கொள்வீரால் வாந்தி செய்யும் வன்மமது, வாங்கிப் போகுங்
கண்டீரே.

பீலிகை_வாய்வின்_குண_மருந்து:-

போகம் பல கால் வன்மமது பொருந்தாக் கழிச்சல் நீரிரைப்பு, நாமே
சொன்னேம் பிரமேகம் நவை சேரிருமலீளையுடன், நேம மிருபது நாளருந்த
நேரும் வாத கடுப்பகலும், போமே புபதி வெட்டு மாறன் புகன்ருர் முனிவர்
புவியோர்க்கே.

பீலிகை_வாய்வுக்_குண_மருந்து:-

வலத்தை யிறக்கும் மந்திக்கும் வலுவா யுதரந் தனைப் புரளும், பலத்தைக்
குறைக்கும் யீரலொடும் பெருகக் கனத்துத் திரண்டேறும், முலத்து வசனங்
குறைந்து வரும் மோக்காளித் தேப்பந் தான் புளிக்கும், வலத்திற் பெரிய
பீலிகையின் குணத்தைப் பேசுங் குறியதாமே.

இதுக்கு_மருந்து:-

ஆடாதோடை வேர் கடுக்காய் யக்கிரு சிவதை யிரு சீரகங், கோடரிசி
யாறு திரிகடுகு குருசானி மோத மிந்து மஞ்சள், வாடா காந்தங்
காரம் வங்காள விடையங் சிறும்பு பத்திரி சாதிக்காய், தேடிப் பொடித்துத்
தேனிலுண்ணத் தீரும் வாய்வு பீலிகையே.

எருத்து_வாய்வின்_குணம்_மருந்து:-

இன்புறு யுந்தியின் கீழ் யேருகின்ற யெருத் தறுக் குத்துன்பமே மிக விளைக்கு
சோர்வையும் உயிரை வாங்கும் அன்பிலா யெருத்தைப் போலாயா மிகக்
கொடியதிலை யின்பமாய் முனி யெல்லார்க்கு இப்படி யியம்பினரே.

உற்றருள் மார்பின் கீழே உன்னிலல் லங்குலம் விட்டு, மற்று மோர் பரு வூடோடி
மருண்டுறக் கனத்து விம்மி, பற்றுற வலித்துப் பின்னை பய்ய வான் கொடுத்துச்
சற்று சோரு, முற்றுமே யிதனை நீயும் மூன்றே குத் தென்று கூறே.

இப்படி மூன்றே குத்திருமலுஞ் செருமு மாகில், மெய்ப் படுமுயிவே குன்றி மேனியு
மெலிந்து செல்லு மைப் படு பின்னை வந்து மரணமே யாகு மென்று, முற்படு முனிவ
தாறும் முறை முறை வகுத்துச் சொன்னர்.

இதுக்கு_மருந்து:-

கொடிக் கழல் பருப்பு மோருள்ளி கொடிய காயமுட னிந்து, கொடிக் கள்ளி

குப்பை மேனி கொற்றலைச் சாறு யிடிச்சிலைச் சாறு நொச்சி யியல் பெறக்
காச்சிக் கொண்டு, குடித்திடிற் சூலை குன்மங் குடசரி யொருத்தங் கெட்டு,
நடுக்கி விட்டோம நாயனுனை நாமிது கண்டோமே.

உள்ளிச் சாறளவு நாழி யுற வண்டித் தயிலம் நாழி, கள்ளிப் பாலது வுழக்கு
கடு திரிப் பொடி உழக்கு தெள்ளிய யிந்து பத்து, ராமட மயங் களஞ்சு,
கொள் குமரிச் சாறேடு கூட்டியே விரவிக் கொள்ளே.

ஒத்த விப் பதத்திலிங்கு உறமிக வடித்துப் பின்னை, சுத்தமா முனியை நோக்கிச்
சுகம் பெற நகர்ந்த போது, குத்துவன் சூலை குன்மம் குடர் கரி வாய்வு தானும்,
சத்தி கெட்டே குத்து மாமும் சாந்தமா யதனைப் பாரே.

உற்றருள் செய்து விந்த யுய பல கிறிகை செய்சுப் யெல்லாம், சற்றமே
சாகா வண்ணம் தமிழினற் சாற்று கைக்கு, நற்றனையாகு மிந்த நூ பகனருளினலே
குற்ற மொன்றின்றித் தெய்வ குரு முனி யருளினரே.

<u>பக்க சூலையின் குணம் மருந்து</u>:-

வந்து பொருமு, மண்டலத்தில் வலித்து மிகவே தான் தோன்றி, நொந்து வுடலும்
புன் போலாம் நோவிருடனே தலை வலியும், யிந்தப் படியே யிது தோன்றி
யிதுவே பக்க சூலை யென்று, யந்தப் படியே முன்னேரு மன்பா யுலகிலருளினரே.

<u>அண்ட வாமத்தின் குண மருந்து</u>:-

அண்ட மார்புறத்தில் வீங்கி யரையுடன் கடுத்து நொந்து, மண்டியே வயறு நொந்து வானமே
வானமே நோக்கித் தாக்கி, வண்டமுந் துடையு மித்து வத்து போலே தோன்றும்,
மண்டிய அண்ட வாதமா மென்று வகுத்த வாறே.

கொண்டிடுங் குடலில் தங்கும் குறைந்தொரு விரையிற் தோன்றும், மண்டியே விதையிற்
தோன்றி வலித்துடன் வாதை செய்யும், மண்டு தானண்ட வாதம் பற்றிய கள வேறென்று,
யண்டரும் முனிவர் தானும் அவினி யிவரை செய்தாரே.

<u>இதுக்கு மருந்து</u>:-

பேய்க் குமட்டி மாவிலிங்கு பெரும் புங்கு, நொச்சி யுள்ள, வாய்த்த யிஞ்சி களச்சி
தும்பை, வன்னி யெருக்கு முருக்கு கள்ளி, சாய்த்த தோரொன்றது நாழி தாரம்
லிங்கம் காந்த மிந்து, காயஞ்சுக் கோமங் கடுக் காய் வசம்பு கள்ளி யெருக்கும்
பாலிவையே.

இவைகளிரண்டா யங் களஞ்சு யிடித் தரைத்ததிலே சேர்த்து, அவை யெல்லா மணக்
கென்னை யாட்டின் கோமியம் நாழி, நாழி தளவை யெனக் கூட்டிக் காச்சித்
தருசிடாதே வடித் தருந்தில், கவை பக்க சூலை யண்டங்களலேறு வாதம் போமே.

<u>மருந்து</u>:-

வெள்ளை யுள்ளி கடியதோர் முருங்கைக் கொட்டை, கழல்—மணி யழுவுடன் சுக்கு காரம்
அஞ்சு ரண்டாகக் கொள்ள, குழுட ஹதம் போல குமுறியே குடல் வாதங்கள்,
பழி யெனப் பக்க சூலை பகர் குன்மங் கழலேறு வாதம் போமே.

பெருத்த காயம் வெள்ளுள்ளி பேறுவ மிருசு வேர்க் கொம்பு, விருத்த முந்றஞ்
சாறனை வேர் வெட்டி நறுக்கி காச்சுகிலோ, திருத்தமா கயஞ் சொன்றாய்,
சேற்பத்துக் காய்ந்து கொண்டிடுகி லொருத்தர் தமக்கும் வாராமல் ஒடும் பக்க
சூலை யதே.

<u>இதற்கு மருந்து</u>:-

சீனிப் பாகுஞ் சாதிலிங்கம், திரிபலை திரிகடுகு சாதிக்காய் திப்பிலி மூலம் பத்திரியும்,
மா னிருகிரும்போலங் குங்கிலியம் மஞ்சள் வெப்பாலை சித்தரத்தை மஞ்சன்,
சீனக் காரம் பொரிக் காரம், தேவதாரம் மதுரம் சிறு தேக்கு கொடுவேலி,
மானிந்துப்பு வெடியுப்பு வால் மிளகு மஞ்சள், கருஞ்சீரகம் வாய் விளங்கம்,
மான விடையம் கழல்ப் பருப்பு அசமோதகஞ் சமஞய்ப் பொடித்துப்
பொடி தின்ன யடி யறு மண்ட வியாதியுமே.

<u>உள் குத்தின் குணம்</u>:-

வேர்த்து வெதும்பிப் பல் கிட்டி விறைத்துக் குத்தித் தாகிக்கும், சீத்த மிகுந்து
கஞ்சி தண்ணீர் தேடுங் கொள்ள வொட்டாது, பார்த்து மனிதரிருக்கிறமே பறியும்
வாயு கீழ் நோக்கி, பேர்த்துப் பகராதுள் குத்தும் பேனிச் சொல்வார் பெரியோரே.

<u>குடல் வாத குண மருந்து</u>:-

கடலிடை யோடி மீண்டுலைந்து கால் சந்து கைகள், குடலிடை கூப்பிட் டோடிக்
குமுறிடுங் குடலில் தங்கும், கடலிடை தரங்க மென்ன கலங்கிடு நலங்கி நிற்கும்,
நடலிடை குடல் வாதத்தின் குணமென நவின்றதாமே.

<u>இதுக்கு மருந்து</u>:-

வெண் பாசாணமொரு களஞ்சு மீறு நத்த மிரு கழஞ்சு, நண்பாந் தூரிசு யரைக்
கழஞ்சு நன்று யூமத்திலைச் சாத்தில், பண் சேர் மொழியா யரைத்தி தனைப்
பருத்திக் கொட்டைப் பிரமாணம், வண் சேர் யிஞ்சி மிளகிற் கொள்ள மாய்ந்தே
போகும் குடல் வாதம்.

கழல்க் கொடி பருப்போடுள்ளி களஞ்சு களாகத் தானே, வருக்காத சுக்கோர் கழஞ்சு வடியவே பொடித்துப் பின்னை, முருக் கோளி முட்டை மஞ்சள், முது கருவதுவுங் கூட்டி, யெருந் தீயில் வறுத்துத் தின்ன யேகு மானந்த வாதம்.

நீர்ப்_பாட்டின்_குணம்_மருந்து:-

வாத மடக்கி நொச்சி கொற்றான் வன்னி கழல் கொடி வெள்ளுள்ளி, கோது நீக்கி யோரொன்று குறையாதோர் பலங் கொண்டு, சீதா தேவி பழச் சாறு செலுத்து மொரு படி மருந்து கொள், சாதிலிங்க மோமம் பெருங்காயஞ், சதகுப்பை யிந்துப்புத் தாரமுமே.

நீர்ப்_பாட்டின்_குண_மருந்து:-

இப்புரு நீர்ப் பாடு விம்மி யிரைச்சலோ டெரிந்து நொந்து, தப்புறு களிச்சல் சத்தி சந்து கால் மெய்யுளன்று, பப்புறு நாவுலர்ந்து அடிக்கடி தண்ணீர்த் தாகம், வெப்புறு சன்னி யாலுல் மீளுவதில்லை யென்றே.

இதுக்கு_மருந்து:-

கறியுப்பு கழஞ்சரைத்துக் கலந்து நல்லெண்ணை கொஞ்சம் மறியவே யுழக்காய்க் கொள்ள யமர்ந்திடும் நீர்ப் பாடென்னே, கறி மஞ்சள் த்துச் சுண்ணங் கலக்கியே குடிக்க நிற்கும், மறி கலைங் கொம்புத் திராட்சம் அருந்த நீர்ப் பாடு தீரும்.

ரத்த_சூலையின்_குணம்_மருந்து:-

திரண்டு புறண்டு கீழ் வயத்தில் திறமாய் மாத விடாய்ப் போது, யருண்டு குருதி மிகுந்து விழும், மரையுந் தடையு முளைந்து வரும், முறண்டு சில நாள் சிக்கு விக்கும் முருங்கா கருவை யழிப்பிக்கும், மருண்ட யிரத்த சூலை யென வகுத்துப் பேசீர் மடமயிலே.

பொருமித் திரண்டு கீழ் வயத்தில் புண் போல் வலித்து யிடுப்பு வலையுஞ், சருவிச் சருவி மாத விடாய் தனையும் இருக்கும் தலை கனக்கும், முருவிப் புளிந்த பழம் போலேயுடம்பை யுலர்த்தும் உற்க்கமில்லை, கருவை யழிக்குங் கனங் குழலே கருதுங் கெற்ப ரோகமிதே.

கெற்ப_ரோகத்தின்_குண_மருந்து:_இதுக்கு_மருந்து:-

ஞாயத்துடன் வாடவரை நன்றாய் யிலை யரைத்திள நீரில் குடி, மாயாத புளி நறணை, தினை மாவுடன் மோர் கூளாய்க் கலந்துண்ணிலோர், ஓயாத யோர்டு புரையுங் கெற்ப ரோகம் ரத்த சூலை யுதிர மிகக் கிருமி செயவுள்ள தெல்லாம், நா யதாக கழிந்துருகிப் போமே யென்று சொல் முனிவர் தாமுரைத்த சூட்சந் தானே.

கெற்ப_வாய்வின்_குண_மருந்து:-

பொருமி யிரத்தந் தனை மறித்துப் போத மிகவும் வலியுண்டாம், குருதி சேர் வாய்வு வலி தீரும் கொள்ளுங் கெற்பந் தனை யழிக்கும், வருடி யிடுப்புக் கடுத் துளைந்து மலத்தை மிகவே விரு விடித்து, பெருகப் யணைக்கும் ரத்த மதில் பேசுங் கெற்ப வாயுவிதே.

திரிகடுகுள்ளி யிந்து சேர்ந்திடும் கழல் பருப்பு காயம், வளர்ந்திடு மாமணக் கெண்ணை அரைப்படியாகக் கூட்டி, விரைந்திடு மருந்து ஏழும் விராகன் ரெண்டாக சேர்த்தே.

சேர்த்ததிய என்னை தன்னை திறப்புடன் காச்சிக் கொண்டு, போற்றிய புசை பண்ணிப் பொருந்து நாள் கொள்வீராகில், மாத்திய ரத்த சூலை மகிழ்ந்திடும் கெற்ப வாய்வு, போற்றிய ஆம சூலை புரண்டதோர் எரி குன்மந்தான், தோத்துத் தான் போகு மென்று தவ முனி யுரைத்தவாறே.

வாய்வுக்கு_மருந்து:-

கடுக்காய் மஞ்சளிந்துப்புக் கடுகோடுள்ளி வெங்காரம், யடுத்த வீழியா மணக்கு யதுவும் நிலவாகையின் வேரும், தொடுத்து வேறு பலமாக்கி றலங்க எரித் தாமணக் கெ கெண்ணையில், கொடுத்தால் கெற்ப வாய்வு விடும் கூட்டும கள்ளிப் பால் கழஞ்சே.

திரண்டு புழுக் கருண்டு விழும் தீராச் சீயு மறித்து விழும், வறண்டு வுடல் தான் வத்தி வருவரும் வடிவுங் குறையுந் தாதுக்கும், திரண்ட தனதத்து மடந்தையரே தீராக் கெற்ப விப்புருதி, யுருண்ட புருக்கருள் மூலம் உலையுங் கெற்ப ரோகமிதே.

இதுக்கு_மருந்து:-

ஆவாரை வேப்பஞ் சாறு ஆவின் நெய் நாழி, தேவதாரத்துடனே மோதகஞ் சீரகங் கடுத்த சீரகமும், மாவளத் துடனிட்டுக் காச்சி மானே பதத்தில் வடித்துக் கொள்ள, காவலனுனை கெற்பங் கருவு முண்டா மென்றுரே.

கெற்ப_சூலையின்_குணம்_மருந்து:-

சுர முடனதிரங் காலில் தோன்றிடுந் திரட்சியாக, உரமிகப் புரண்டு வாய் நீருறி நெஞ்செரித்து வாந்தி, திற முடனதிரஞ் செய்யுஞ் செய்கையை யறிந்து கொண்டு, சுரமுறு கோளி ரத்தம் பல்லுள்ளி யுடனிந்துப்பு பலை திரிகடுகு மோதகஞ், சில்லெனக் கடுகு காய்ந்திருகு கள்ளிப் பாலு லிங்கங் காரங் சில்லெனக் காச்சிக் கொண்டால் கெற்ப சூலையும் விட்டோடும்.

மலட்டுப்_புழுவின்_குண_மருந்து:-

தலம்பயிலடி வயத்தில் தாக்கி யுள்க் குத்து மல்லால், திலம்பயில் மாதம் வந்தால் தினந் தினம் வருத்தம் பாரங் கொலம், பயில் பல நிறங்கள் கொள்கையாய்க் காணு மென்று, நலம் பெற முனிவன் தானும் நயமா யருளினனே.

இதுக்கு மருந்து :-

விடியும் போதெழுந்து நீ தான் வேப்பிலை கொண்டு வந்து, இடித்துடன் பிழிந்து நன்றாய் யெட்டு நாள் குடிப்பாயாகில், கடிப் புருக் கெட்டு மாய்ந்து கருவு முண்டாகு மென்று, தடுபியி முனிவன் றூந் தமிழிலே் சாற்றினரே.

கருவின் காலன் பேயின் குண மருந்து :-

கருவின் காலன் பேயின் காரண மு ரக்கக் கேளாய், அரிவையே மாத விடாயில் அடுத்தது தின்னமாகுஞ், சருவியே கனவு காட்டிச் சரீரமும் வறண்டு கொய்ந்து, யிருமது மயக்கும் வாந்தி யிடர் மிகச் செய்யுந் தானே.

இதுக்கு மருந்து :-

இந்தப் பேய் தனக்கு வேப்பிலைச் சாறு நாழு நாளி, யந்த நீர் தனிற் பிறுரி யரைத்து நாற் பலம் பூசகம், வெந்தமாய் நறு நெய் நாளி விட்டிதமாகக் காச்சி, சந்தமாய் வடித்து நக்கத் தானிந்த நோயும் போமே. (யெந்திர மென்றெழுதிக் கட்டவும் -)

கீழ்க் கவுசி மேற் கவுசியின் குண மருந்து :-

கனத்திடுஞ் சானை போலே கவிழ்ந் தடி வயிற்றைப் பற்றி, சினத்திடும் பாக்கு மாவி செருமியே பற்றி நொந்து, யனத்திடும் வறளும் பின்னை யாசையு மோக மற்றால், வினைச் செயுங் கீழ்க் கவுசை வீதமெனக் கூறலாமே.

கூறு மேற் கவுசி நோய்தான் குண்டலம் போலே வந்து, மாறிரு புறமும் பற்றி வலித்திரைத்தேரி விம், மீறிடு வாதை மெத்த விகற்பமும் மயக்க முண்டாய், யாறிடும் பின்னை வந்துய மனியாம் மதுவுந் தானே.

இதுக்கு மருந்து :-

வென்காரமுஞ் சிறு திப்பிலி மிளகானது சுக்கு, பன்பா யின நேர்வாளமும் படை யுப்புடன் காந்தம், நன்பாயின பெருங்காயமும் நன்னீர் கழல் பருப்புத், தன்பா யின மொன்பானிது சரியா யெடு யிடையே.

யிடையானது சரியாகவே யெடுத்தே யிந்த மருந்தை, யடவாகவே யெருக்கப் பூதீ பருப்பன் னீர் தனிலரைத்து, தடை தானற யெருக்கம் பழுப்பதலை் அதை மூடி புடமானது வெருள்ளிடு, பொதிந்தே புடமிடுவாய் இடுவாய் வளர் சாவல்ப் புடம் மியல்பாகவே சமைந்தால் அடு செந்தழல் விழ வெந்த பின்ன மரும் பத மறிந்தே.

உடுவே மென நீறும் யெரு யுள் வைத்தன மருந்தைத், கடுதாசி யெடு யரை கலப் பர்ணிற் கடுக்காய் வெந்த நீரா', நீலாலரை நன்றாகவே நிகளுண்டையுந் தேத்தான், சீரா மனக் கென்னை யிஞ்சிச் சாற்றுல்க் கொள்ளத் தீருந், தாரளமாய்க் களிந்தால் யிருத்த தன்னீருட னன்னம் பொசி, பேரானது ரோகம் பிணி பிசக்கும் வகை கேளாய்.

கேளாய் குண மெடுத்துடன் குளரும் வெற்பு பார்வை, கோளே செய்யுங் கீழ்க் கவுசி கோளே செய்யு மேற் கவுசியுடன் நாளே போகுங் குட கரியும், நரு வண்ட வாயுவிதவுஞ் சாளே செய்யும் விப்புருதி தனியா பீசுகங் குலை மூட்டி.

குலை மூட்டி சூலை குன்மங் கொரும் பல பித்தஞ் சோகை, மாலை பாண்டு, சல முட்டி பெரு வயறு சயரோகங் காச சிலேற்பனு, சில விட்டுக் காடைச் சேவல் சிறு கோளி கவுதாரி யூர்க் குருவி, வெள்ளாடுப்பு, முசல் நாடன் விரால் நத்தை முருங்கை முள்ளி சுண்டைக் கறி நன்றே.

(வேறு)

தனி வழி நீறு மாசித் தன் தலை செவி யடைக்கும், முனி வொடு பேசும் வார்த்தை மூண்டமைச் சுரமு முண்டாம், மன மிடி மிகவுண்டாகும், மலமது சிறு கவிழ்நது சனி வகையறிந்து பாரும் தலை சொரி நீராம்பலாமே.

இதுக்கு மருந்து :-

சுக்கொன்று மிளகு ரெண்டு திப்பிலி மூன்று கடுக்காய் நா , தாக்குங் கருஞ் சீரக மஞ்சு, தான் பொடித்தே வென்ன ரிவுண்ணத் தலைக்கு. சொறி சேர நீராம்பல் போம். வைக்கு மெண்ணைக் சிறு தன்னை வகையாய் நெல்லி நீர் கூட்டி, தக்க காச்சித் தான் முழுகத் தலை சொரி நீராம்பல் போமே.

நீராம்பல் குண மருந்து :-

உடம்புலந் துள்ளிரு மதுண்டாம், உதரம் வீங்கி நாவறண்டு, தடங் கண் வெளுத்துப் புறங் காலுந் தடித்து வீங்கித் தாகமுமாய், அடர்ந்தே மூச்சுத் துடர்ந்தோடும் அனந்தல் மிகவும் வாடாது மடந்தாய் சொன்னேம் நீராம்பல் வருத்தங் குணங்களிது வாமே.

பேராம்பல் குண மருந்து :-

மார்ப்புக்குள் வயறு தாழ்ந்து வகை பட வீக்கந் தோன்றி, நேரொத்த காயம் வற்றி நிறமது வெளுத்து நாவும், நீர் வத்தித் தன்னீர் தேடும், நினவுற்றுப் பலதுங் கேட்கும், வார் கட்டு முலையினிளே வகுத்து நீராம்பல் தானே வீங்குஞ் சலமு மிகக் கோக்கும்.

மிகுந்தே பொருமு முடலெங்கும் வாங்கு முறக்கந் தனைத் தேடும், மதசித்து யர

மிகுந் தெங்குந், னங்குங் கன்னு மேல் மூச்சுஞ் சுவையும் பிரியிற்ற சிக்கும், யேங்கு மிகவே பேராம்பலிறவே செய்யுங் குணமன்றே.

இதுக்கு மருந்து:-

காந்தக் கல்லு மரப் பொடியும் கருது மோர் பலமாய்க் கொண்டு, தீந்த வெங்காரம் லிங்கமுடன் சீனக் காரம் பலமுறைகள், வெந்த நாம வெடியுப்பிந்து வெண்கலங் காயங் கால் களஞ்சு, ஆழ்ந்திடுங் கடுகு மோதம் முள்ளியுங் கொடிவேலி கேள்.

யினமுங் கவ்ரி தாரங் களல் பருப்பு மஞ்சள், கிராம நல்ல சிறி யரத்தை வாள் கடுகு ரோகனி கெந்தம் சூதம், வகைக்கு யரைக்கால் பலமாக வெண்குமரி கடுக்காய் நீற்றில் விளங்கவே யரைத்து நன்றாய் நீள் நெல்லி பிரமாணம் கொள் நீராம்பல் போம்பல் பேராம்பல் பறந்து போமே.

கருவியும் நந்தம் பற்றிக் காயமும் மிகவே வற்றி, பெருகிய யுதிரந் தாரும் பிணங்கியே பொருமி விம்மி, மருவிய யுண்டி மாறி மலத்தையும் பறிப்ப தென்னிற், பெருகிய யுதிர தோஷம் பெரு வயறென்னலாமே.

இதுக்கு மருந்து:-

பெருங்காயம் வசம்பு, கொடுவேலி பின் னைக் கருஞ்சீரக மோதகம், சேருங் கொட்டை கடுக்காய் கழல்ப் பருப்பு சிவதை வெள்ளுள்ளி இந்துப்பு, வருங் காந்தம் வெந்தயம் மஞ்சளுடன் நற்சீரகமும், யிருந் திரிகடுகு பொடித் துண்ண யில்லை யுதிர தோஷ மென்னே.

வெப்பத்தில் வீக்கந் தோன்றி விரபமாய் முன்னோர் சொன்ன, வெப்பத்த கோளி முட்டை யுப் பிரி சாற்றில் வெந்து, செப்பதிலெழு நாளுந் தினப்படு சொல்லக் கேளு, தப்பிலா தருந்து வீராய் தகர்ந்திடும் வீக்கந் தானே.

இந்து கடுக்காய் மிளகு சுக்கு யிறவுங் கடுகு ரோகணியும், முந்த நிறையே களஞ்சு கொண்டு முதிருங் கிறியா நேர்வாளம், யந்தப் படியே யிது களஞ்சு யரியதே யிடவே சூரிக் காயளவே.

மகோதரம்:-

அங்கமு மடங்க வீங்கி யற மெலிந்தாசமாகி, மங்கியே யுதரந் தன்னில் வாயுவுஞ் சலமுங் கோத்துக் கங்குல் சேர் நேரமானல் கடியதோர் வாதை பண்ணும், மங்குதல் குலவு மாதே மகோத மென்னலாமே.

இதுக்கு மருந்து:-

காந்தமாப் பொடி கெந்தஞ் சூதங் கருஞ்சீரகமுடன் அரிதாரம், சுத்தம் மீய்ந்தது குருசு வெங்கார மிந்துப்புச் சீனக் காரஞ் சவுக்காரங் காயம் ஆய்ந்த வெந்தயங் கறியுப்பு அயமோதகம் வெடியுப்பித் திரிகடுகு கொடிவேலி, வாய்ந்த திரிபலை சிவதை சரி பொடித்துத் தின்ன மகோதரங்கள் தீரு மனிதருக்கே.

சுயமாக்கினி குமாரன்:-

நல்ல நாவி ஒன்று ரெண்டு நலத்த சீலை இரசம் நாலும், சொல்லுங் கெந்தகம் எட்டாம் துலங்குங் காந்தம் பதினறு, வெல்லும் அரப் பொடி என்றன்கு விரைந்தே இஞ்சிச் சாறதனில் வல்ல பொடியை யரைத்தனை வாகாய் வழித்தது தான் திரட்டே.

திரட்டே யேறண்டத் திலையை திரமாய் மும்மூன்றிலை பொதிந்து, முரட்டான் நாது சுத்தி யொரு மூலை தனிலே வைத்திருக்க, பெரட்டே யல்ல தீ யெரியும் பொருந்தா லாரிப் பொன்னெடுத்து, மிரட்டே செய்யும் வியாதிகள் நீர் விடவே யோடும் கண்டீரே.

நாலு சூதஞ் சீலை, ரெண்டு நல்ல கெந்தகம் நாலிரண்டு, தாலக் காந்தம் பதினறு தகரும் லோகம் மதின் ரெண்டி, யேலங் குழலீரமா மயிலே யியல்பாய் மூன்று நாளரைத்துத், தாலமதனிலே வைத்திருக்க தழலா யெரியுங் கண்டீரே.

கண்டீர் குன்மஞ் சூலை பெருவயறு கதித்த பித்த காமாலை குண்டல வாய்வு குடல் வாதங் குடல் கரி யேப்ப மீளா யிருமலண்ட வாய்வு யருச் செனிப்பு யக்கினி மந்த மட்ட பீலிகை யுங் கண்டு சொன்னே மிவை யெல்லாங் கருதிச் செய்யும் பெரியோரே.

பிறமேக குணம்:-

மண்டலந் தன்னிலுள்ள மனிதரான் பெண்ணுள்ளோர்க்கு இ கொண்டதோர் பிற மேகந் தான் கொள்ளு முன தேடு நோய்கள், கண்டிடு முடல் கை கால்கள் கண்களும் மெரித்தக் காந்தி, யுண்டா நாச்சுவறிக் கூட்டா அடையும் நீர் பாயுந் தானே.

கேளாய் போக மது தினமும் கீனு மட சிப்பதமதனல், கேளாய்க் குற்றம் பல தோஷம் கொடிய குருக்கள் பிற மாதா, வாழக் கன்னி கற்பழித்து வம்புங் கடந்து மாறிருமல், மாளா மாறும் வியாதியினல் வலிய சலமுமாய் விடுமே.

வெண்பா:-

மாதருடன் மாமயலில் மாமிகுதி தென்டியப்பாய், சேதமுற வரு நோய் தேடியே, யாதர வில் வந்து நொந்து மெள்ள வளரும் பிரமியங்கள் சிந்தை தனிற் காண்பார் தெளிந்து. வந்து மிகுந்து வளரும் பிர மியத்தில் முந்த யிரு வாத முளைக்குமே, பிந்தவே யண்ட மெறஞ் சூலை யறவும் பவுந்திரமும் முண்ட தெனவே யுரை.

கோதையார் கல்வி போதக் கொருத்த மீளிறைச்சி போதப், பாதுவாய் நெய்யும் பாலும் பரந்து நீருண்பீராகில், சோத பாண்டுருவ மிக்க சுக்கிலப் பிர மேகந்தான் ஒழி நீரழிவு சேர வுண்டென வறிந்து கொள்ளே.

உட்டின ரோகத்தாலு முறும் பெரும் பசியினாலும், கட்டவிழ் கோதை மாதர்
கல்வி மாட்டான்மை யாலு, முட்டரும் நாலு மாறும் மும்மூன்று மூன்று மென்று,
திட்டமாய் வருவதென்று திரு முனி யருளிச் செய்தான்.

இந்திரியம் நீறுப் போலு மிலங்கத்தின் மூக்குப் போலும், நந்தலை மூளை போலும்
நலியாதே புறப்பட்டாலும் அந்தலை வாதம் நாலு, அடுத்திடும் பித்த மாறும்,
வந்திடு சிலேற்ப மொன்பான் வரு மென வகுத்த வாறே.

வாதத்தால் வரும் நாலுக்கும் வரு குணமதனைக் கேளாய், நீரி யிடுப்புக் கடுப்
பென்றும் நிலையும் நாடையு மொன்றுசு, போ யசன மேருசு பிறமே நீறும் விளக்
செரியும், மாதே மற்றிடங் கோமியமு மாறி நாறு மன்னியரே.

பவத்தா லெடுக்கு மிவை நான்கும் பயந் தரும் பாலிரத்தம் நாறும், கலக்குக்
கலக்கெனப் பின்னெடுக்குங் சனைக்கு மிருமல் சற்று வரு மரிவக்கொ மூத்திர மிறச்சினீர்
னிணம் நீற்பிக்கும் பல குணமும் மிவற்குற் பனத்தை யளியாது யிட்ட மருந்து மேற்றே.

பித்தப் பிரமலை உப பித்தத் தால் வரு மாறுக்கும், பித்தத் தானை மதம் போலுறையுங்
கத்தாளை நாத்தம் நாசு, அங்கை காலெரிவு விந்து பால் நாறுவது முத்தேனீர்
பட்ட விடந் தோறு முனிந்தே யெரித்தே நாறுவதும், பத்தியுடல் போல் லளன்று
வரும் ஆகக் கடுத்துக் கனியு மென்னே.

நீல நிறம் மஞ்சள் நிறம் நித்த புளிய நிறஞ், சால நிறஞ் சாம்பல் நிறஞ்
சதிராயங் கரைத்த நிறம், கோல நிறமு மிரு மாட்டிறச்சி கொ நிணத்தில்,
பசாத திறம் மாலையை கிரி தவளை வடுவோடு பித்த நீரிதுவே.

உத்த தோரிள நீர் போலு உகந்து யிந்திரியங் காணும், வய்த்த பச்சை நிற
முண்டாம் மன்று மிவறுங் மைசை போலா, மெத்த யிரத்தமா போலும் மின்றும்,
பளுப்புப் பு வரிக்கும், மித்த நீர் பால் தயிர் வாச முண்டா மெலும் பீயும் விழுமே.

அடிக்கடி பருகு நீரு மதிகாசத்துடன் வரு வருக்கும், மிடுக்சி நீருமை வேர்வை
மெய்யுளை யற்ற பார்வை, திடுக்கென யிருமல் நேர்ந்தால் தென் மலை முனிவன் செ
சொன்னபிச அடுக்கமாஞ் சிலேற்பனத்தின் னென்பதின் கூறதாமே.

வெண்பா :-

மாதம் பல நாள் வருமே மிகச் சடைக்கும், சேத மிகுதியாய் செய்விக்கும்,
வாதம் வருமே பவுந்திரம் வளர் மேக சூலை, தருமே சலப் பிறமேகந்தான்

வந்து மிகுந்து வரலும் பிரமியத்தில், முந்த வரும் வாத மூளைக்குமே
பிந்தவே அண்ட மெறுஞ் சூலையதுவும் பவந்திரமும், உண்டதெனவே யுரை.

நீரை யொறுக்கும் நிறுத்து மடை படுத்தும் பார மிகுந் தோசத்தைப் பத்தி
வைக்கும் சேரவே கூடும் புணர்ச்சி மிகக் கூடாது தாது கெட்டு வாடும் பிரமியந்தான்
வந்து.

நீருங் கடுத்து சலமுடைத்து நின்றே யிளைத்துச் சலம் வீழ்ந்து, சேரும் யிரத்தந்
தன்னுடனே தினவாய் வறளில் வீழ்ந்து நிற்கும், பாருங் காயம் நாளொன்றில் பாழ்ய்
முடங்கும் படுத்தும் வாரஞ் சென்றுல் மானந் தான் மயக்கும் சலப் பிறமேக மதே.

பிற மேகத்துக் கெல்லா மருந்து :-

சீனக் காரம் பொரிகாரம் திரளிந்துப்புச் சவுக்காரம்
தானத்திதடுத்துப் பொடியாக்கி தனி நாயுருவி பனங் கதிரும்
பானக் கதலித் தண்டுடனே பரிவாய்ச் சுட்டுச் சரி சமனாய் தேனித் -கு-சு
தேனிற் குழைத்துத் தின்பீரால் தெரிக்குங் கல் துன் மாங்கிஷமே.

கல்லடைப்பு மாங்கிஷ அடைப்பு :-

பொன்னுங்காணி சீதே புது நிலவேம்பு சிறுகீரை, மன்னர் புகழ் கீழ்காய் நெல்லி
வகுத்த தாளி துயிலுடனே, முன்றேரோதம் நெய்த்தலுடன் மூழு நீர்ப் புலா முசுமுக்கை
யின்னூர் வராகி குளிப்பதுவு பினியதுடனே சித்த மல்லி.

பேராமல்லி நிலக் குமுள் முல்லை பின்னை நன்னாரி விலாயிச்ச முத்தம், மூரா வேலி
நரிப் பயறு பிருமட்டி தண்ணீர் முட்டான் சாரதுவும்/, மூரியாவின் பால் நாழி யிள
நீரொக்கத் தயிர் தண்ணீர் நாழி, ஏரிய சந்தங் கோட்ட மதிமதுர மிலவங்கம் சீரகந்
தற்கோலம்.

கோலஞ் சாத்திர வேதி கிளியூரல் கொடிய மாஞ்சில் சதகுப்பை, சீல மேலங் கச்
சோலஞ் சிறந்த சாதிக்காய் கிராம்பு யிருவேலி, வால வசுவாசி தன்னுடனே வகை
யோறொன்று யிரு கழஞ்சு, மாலொக்கக் கூட்டி நெய் நாழி வகையாய்க் குடிக்க
நல்ல திதே.

இரத மீயஞ் செங்கொட்டை யிலகுஞ் சங்கு வென்னீரும், புரமே செய்யு மஞ்சளோ
டொக்க வேரொன்றதுவுந் தான், தரவே நாலு களஞ்சாக்கிச் சமனே செய்து

பொடி கட்டி, விரவா யிடவே வெறப் புண்ணு மீரும் வாத பிரமியமே.

15.5.64.

~~விசஷ-யிடவே-வெரதப்-புன் ஜுமீளும்-வசத-பிர~~

வெற்பாலை யகிலா வாரை சந்தம் வேர்க் கொம்பு முத்தக் காசு, பற்படாகம் நில வேம்பு பகரும் புடோல வில்லங் கூட்டி, யுற்பனமுடன் கசாயம் வெந்து உண்டிடில் பிர மேகங்கள், விற்பனமுடனே தீரும் விஷ திரி தோஷம் போமே.

முள்ளி வேர் நாவல் வறட்புலா வெப்புலா முத்தமோடு, நன்னாரி முல்லை சீந்தில் தெள்ளிய செந்தாமரை சித்தா முட்டி சீதேவி திரு நல் வகையுடன், கொள்ளுவது யிரு வேலி பொன்னாங்காணி குலாவு மிச்ச மோடு குளி யாம்பல், மெள்ளவே யாவின் பால் விட்டுக் காச்சி மீளவே மூன்றொன்றாய் வெந்த பின்பு உண்ணற். பின்னெய்யாக நாளி யிடைய விட்டு யியல் யுடைய சீனி முந்திரிகை பேரீஞ் சீரகங் குன்ற விடு வென் கோஷ்டம் மேலங் குலாவு கருஞ் சீரகம் நாகப்பூ கச்சோலம் பச்சிலையும், மன்றல் மாஞ் சந்தமுடன் கெனிதை வேதி மருவுங் கிளி யூரல் வங்கங் கூட்டி, நன்றாக செண்பக மொட்டு மதுரம் நெல்லி நாடா விளத் தோல் பண்ண தாம் பழ நிம்பத் தோலும்.

இன்னம் நல்ல சீரக மியல்பாக வெந்தே தான் வடித்து, மின்னே யரை மண்டலமேவி விளவிக் கொள்ள விதமாகச் சொன்ன படி பிற மேகர் தலைந் தோடு மென்று சொல்லிய மிலாறு முனி யருளினரே.

விடையங் கல்மதமஞ்சனக் கல் வேர்க் கொம்புடன் முத்தக் காசு,
யடவாம்வெள்ளி லோத்திரமும் அமுகு ஏத மதி மதுரமுடனே,
பொடித்து முக் களஞ்சிட்டு முக்கைக் கரு நீருட னுண்ணில்,
திடமா மிரத்தம் யதிசாரஞ் சேர்ந்த யெலும் புருக்கியுமே.

ஆவிரை முல்லை மின்னிய கமுடன் சிறு வேற் காந்தம், மர்விடங் கொளுந்து அத்தி வசம்பு பூலாக் கடுக்காய், நீ யவரை சுக்குக் காச்சி நீ பத்து நாள்க் குடித்தல், பாவருந் திறி தோஷங்கள் பறந்திடு மேகந் தானே.

<u>பத்தியம்:-</u>

மாளுர் விழியீர் கறி கேளீர் மலம் நீர் கழிந்த மானிடர்க்கு, கானில் வாழு முயலுடும்பு காடை சேவல் கவுதாரி, யூளுர் வெள்ளாட்டுப்புக் கண்ட முள்ள மாது மிது வல்லால், மீனிற் சுறுவிரு லாமை நத்தை விதமாங் கிசங் களிவையாமே.

பூ மொய்த்திருக்கு முருங்கை யிலை பூவும் பிஞ்சு புடலங்காய், தீய்மை யிலாத முசுட்டை யிலை சிறந்த பொன்னுங்காணி வழளை, தாமை யதலைக் கறி கூட்டத் தப்பா தொனியும் பிற மேகம், மாமாம் வியாதி யடங்கலுக்கும் அடுத்த கறிகளிதுவாமே.

கொள்ளுங் காடி முமட்டிக் காய் கோழி பன்றிபூசனிக்காய், முள்ளுப் பெரிய பாகல் காய் முழுது மணலில் சுரைக்காயும், கிள்ளிக் கீரை அரைக்கீரை கிளருஞ் சேம்பு பயறுடனே யெள்ளத் துனை தான் தின்பீரர்ய் எல்லா மருந்து மீளந்தீரே.

மாங்கா யிளநீர் வழுதலங்காய் மாப் பண்டங்கள் புளி கடுகு, தேங்காய் நாறும் பெருங்காயம் திருவுக் கீரையாந் திரியுடனே, நீங்காதிருந்த மைதுனங்கள் நேசம் பயிலுஞ் சுரா பானம், வாங்கா திருக்கி வுண்ட மருந் தெல்லாம் பலிக்கும் வாய்மை யிதே.

<u>விஷ பாகக் குணம் மருந்து:-</u>

வீங்கும் வற்று மொரு பக்கம் மேனி வறண்டு வெம்பிடுங் கண், தூங்குந் தலையுங் கனத் திருக்குந் துயர மிகுத்துத் தாகிக்கும், வாங்கும் பொசிக்க மாட்டாது, வாய்வுடலில் விஷம் போலாம், ஏங்கிக் கொல்லும் விஷ பாகம் இதுவே செய்யுங் குணமாமே.

கிட்டங் காந்த மிந்துப்பு கிரியான சீரகந் திரிகடுகு, வட்டக் கையான் சாறு தனில் வடிவா யரைத்து உலர்த்திய பின், ~~திடசஞ்-சசச-தனில்~~ திடமாகத் தேனிலுண்ணத் தீரும் பித்த பாண்டுடனே, விட்டுக் கொல்லும் விஷ பாகம் விரைந்தே யோடுங் கண்டீரே.

<u>கச ரோகத்தின் குணம்:-</u>

இருமியே செயலுங் கெட்டு யிடை யிடை சுரமுந் தோன்றி, மருவியே மிடறுங் குன்றிய பற்பமே வாந்தியாகி, மருவிய யசனந் தானும் மருத்துலாந் தானும் வற்றி, கருவியைக் குறைத்து வாடிக்க கச ரோக மென்னலாமே

மாதர் ~~மை~~ மயக்க மருந்திட்டில் வந்தே யிருமல் புலால் நாறும், சேத மிகவே பயித்தியமாய் செரியா நெரித் தேப்ப மிரும் வாதை மிகுமே கடி விசம் போல் வருத்து மீளை யிருமலையும் நீதி பயிலுஞ் சிரத்தில் மிக நின்றே மசக்கிச் கொன்றிடுமே.

யிந்த நோய் நின்ற நாளில் யிது கச ரோகமாகும், முந்தவே வெப்பும் பித்தம் முடுகிடக் குளிரு மேலும், மந்த நோய்க் குணங்கள் கண்டால், யரந்திடு மெந்த நாளும், கெந்தொகையாவின் பாலுங் கீரையும் பருகலாமே.

சிறு சுண்டை வேர் பன்னிரண்டு பலம் சேரு நீர் பதினஞ்சு, படி, மருக நாலொன்றாய்க் காச்சி மாதளம் பூ நாகம் செரி சீரகம் மோர் பலம் நல் நெய் சேர் பால் மூன்று, நாழி யதும் யிறுகக் காச்சி வடித் துண்ண, யேழுங் காச ரோகந்தானே.

திரிகடுகு கிரும்பு ரெண்டு சீரக மோமம் நெல்லி முள்ளி, குறி பெறு மதுர மேலம் குணமுடன் சமனாய்க் கூட்டி, பொரி குன்றி யிலை நாள் பாதி பொருந்தவே கலந்து கொண்டு, வெறி படு தேனில் தின்ன வேறாறுங் கச நோய் சொன்னோமே.

பொக்கணம் பிச்சி மூலம் போதவே தானிடித்து, தக்க தோராவின் நெய்யில் தானது குளைத் தருந்தில், துக்கமே யெருப்பி மெய்யிற் றயருள்ள ரோக மெல்லாம், யிக்கையா மசக்குந் தீர்ந்து மிகுந்த வஞ்சிலையும் போமே.

காச சிலேற்றுமத்தின் குணம் மருந்து :-

இருமலு மிளைப்பு முண்டாம் யீளையு மிகுந்து வாங்கும், மருவியே வயறு தானும் மந்தமே பற்றி நிற்கி, ஊரு வழிந்துடம்பு வற்றி யுமிழ்தியைக் கெடுக்கு மாகில் அரிவை யெம் மயிலே சொன்னேன் அவிகாத மென்னலாமே.

விண்ணைச் சுழலுந் துயர மிகும் வெளுத்தே வற்றித் திமிர்ந் தெங்கும், கண்ணைப் பார்க்கில் மஞ்சளித்து கனத்தே முகமும் வெருப் பேறும், எண்ணிக் கரும மென்று செய்யி லிளைப் பேயருந்து துயர முண்டாம், நண்ணிப் பெரிய தாது கெடும் நவிலுங் காச ரோகமிதே.

இருக்கு மருந்து :-

கையாந் தகரை நீலி யிலை கடிய நொச்சி யாடாதோடை, செய்ய வளருமா மணக்கு சிறக்கு மிவை யினிலைச் சாறும், பொய்யா திரவும் நா நாளி போட்ட கிட்டம் பொடி செய்து, மெய்யாய் நாளிப் புடம் போட்டு மீளச் சுவற வெய்யில் வைய்யே.

வைத்தே எருக்கின் பால் சிறங்கை மணக்குங் கிராம்பு திரிகடுகு காயம், மெய்த்த நில விறப்புடனே மேவுங் கருஞ் சாரப் பொடியும், நெய்த்த வுள்ளிச் சாறு சாலை நிறை யோரொன்று முக்களஞ்சு, கைத்த தகரை பிரமியிலை கசக்கிச் சாற்று லரைத் துணர்த்தே.

உணர்த்திப் பொடி செய் யொன்று பட்டு ஒரு திநாளொன்று, வெரு கடி கொள், பிலத்த பித்த பாண்டு வெனிற் பேணும் நறு நெய்யதிற் கொள்ளு, நலக்கும் வெற்பு பார்வைக்கு நன்ருய்ப் பென்னே சீனி கொள்ளு, கலக்குங் காய ரோக மென்னிற் காயாய்ப் பசும் பாலதிற் கொள்ளே.

உள் மாந்தைக் குணம் மருந்து :-

இருமிச் சுரமாய்த் தலை வலியாய் யிறங்கா தன்னம் விசம் போலே, பெருக்கக் குத்தி யுணர்ந்து வரும், மிதற்றலும் பலது வாய் வெருவி, யுருகிச் செயலும் கெட்டு வரும், உறக்க மறவே துயிலாது நெஞ்சிடன் பருத்துப் பொருமை படவே கோளை கக்கும் உள் மாந்தைக் குணமிதுவே.

நெஞ்சுடன் பருத்துப் பக்கும் நின வழிந்திருமி நொந்து, போற் சுரமுந் தோன்றி பஞ்சு அள்ளே கோளை சுக்கி, அஞ்சவே செய்யும் பித்தம் அசமும் ஒருத்து வந்தால் துஞ்சிடா தன்மை சொன்னேன் உள் மாந்தை யென்னலாமே.

இருக்கு மருந்து :-

ஆடாதோடை புடி நாம்பல் அருத்த பலாவின் விதை யெட்டு, கோடா சுக்குத் தேவதாரம் கொடியாய்ப் படரு முடக் கொத்தான், வேடார் மஞ்சள் சிறு சுண்டை வேரும் நிறுத்துக் கழஞ்சாக, தேடா அத்தி திருவாத்தி செல்லு மூன்று பலங் கொள்ளே.

தாமரைக் கிழங்கு பலமாகத் தருமாங் கொட்டை கால் பலமும், வாமாஞ் சீரகம் நாற் கழஞ்சு மலர்ந்த நெல்ப் பொரி களஞ்சி ரெண்டு, யீமாந் தன்னீர் படி யெட்டு யிதனி லிடித்திட்டே காச்சி ஓமந் திப்பிலி பொடித் தூண் வுள் மாந்தைகள் தாவோடி டுமே.

பூவாஞ் சாறு நெய் நாழி பொன்னரி தார மரைக் கழஞ்சு மேவிக் காச்சி நன்ருக விதமாய் வடித்துக் கொண்டு பின்னை, யேவார் விழியா யெட்டு நாழி தனை யிருந்து வீராகில், யோவி வந்த யுள் மாந்தை ஓடி யொழியுங் கண்டீரே.

குன்றி முசுட்டை கொடிவேலி குறையா திரவும் பருத்தி யிலை, நின்ரூர் நிலத்தின் குமிள் வேரும் நீதி பயிலும் பீலி யிலை, சென்ரூர் பிடி கொள் சித்த மல்லி சேர வரைத்துப் பசுவின் பால், யன்றே குடிக்கிலுள் மாந்தை யகலுஞ் சயல்ப் புண்ணாறிடுமே.

வெந்தயஞ் சீரகஞ் சீனக் கார மதி விடையம், கொத்தமல்லி கல்நார் சந்தனத் திரிகடுகு திரிபலையுஞ் சிவதை சமலைக் களஞ் சோரைங் களஞ்சு, முந்தவே யாவின் நெய்யில் முயற்சியாய் வெந்து கொள்ள, யுந்தி யிலிருமவுள் மாந்தையும் ஓடிப் போமே.

நிலக் குமுள் அடரி பூலா நிலத்தூறும் நிம் பஞ்சம்பு, பலப் பட அஞ்சுங் கொள்ளப் பல சரக்கதனைக் கேளாய், நலப் படுங் கொட்ட முள்ளி நற்கடு தான்றி நெல்லி, குலப் படு மதுரம் பாடல் கூட்டியே யெண்ணெ வைய்யே.

வெண்பா :-

குறிஞ்சி யிலையைக் குழைவை நெல் மாவில், செறிந்தே களி என்னையுடன் தின்ன யறிந்தி யுள் மாந்தை யுள் மூச்சடம் பிலது நொயுங், கலை தீர்ந்து கண்ணடைக்குங் காண்.

வேங்கை மரத் தோலுடனே வெங் குறுவை நெல்லை, யாங்க தனைப் புட்டாவ தாக்கியே, பாங்குடனே யெண்ணை தனிற் சேரத்தருந்த என்னறு முள் மாந்தைஇ புண்ணதனைச் சீயோடும் போம்.

உப்பிலியின் வேரு முகந்த விடத் திலையும், செப்ப மொசு மொசுக்கை சேர் முள்ளி யிப்படியே கோவினறும் பாலில் குடிக்க விழுந்தோடும், நாவு முள் மாந்தை தான்.

சித்தருந்தஞ் சிவவேம்புந் திருந்த நிலத்திற் குமிள் வேரும், கொத்தங் கோட்டம் வெம்பாடங் குலவுங் கருஞ் சீரதி மறரம், மெத்த மிளகு திப்பிலியும் வெந்த யெண்ணை விளங்கினக் கால் பத்தே எட்டு நாள் தன்னிற் பறந்தே யோடு முள் மாந்தை.

<u>கோளை விப்புருதியின் குண மருந்து</u>:-

இடுப்புடன் முள்ளந் தண்டு யிரு புறம் விலாக்கள் நெஞ்சு, நடுக்கிடுங் குளிர் வெருப்பும் நய்யவே கொதித்துக் குத்தும், வுடுத்திடுஞ் சோப மாக்கும் யக்க மோடிரு மிச் சீயும், குடிக் கொள்ள விருந்த தென்னிற் குவளை விப்புருதியாமே.

இந்த நோய் நின்ற நாளு மிருமியே சீயு முண்டாய், வந்து தானும் வற்றி மடுத்திடுந் சோப மாக்கும், முந்தவே அய்யம் பித்த முடுக்கிடக் குளிர்ச்சி வெப்பு, வந்து முசசிளைப்ப ரத்தம் வற்றிடில் மரணமாமே.

<u>இதுக்கு மருந்து</u>:-

காரீய்ய திரத மரிதாரம் கஞ்சாத் திரிபலை திரிகடுசிந்து, சீரிய வக்கிருக் கொடுவேலி சேருஞ் சமறு குமரிச் சாற்றரைத்து, கூரிய் கையாந் தகரை யிற் குண முடனரைத் துலத்திக் கொண்டிடுந் தேனிலே தான், கோரித்த வியாதியான குவளை விப்புருதி போமே.

இலுப்பைப் புண்ணுக்குத் தன்னை யெடுத்திரு கழஞ்சுதாக வலுப்புடன் வென்னீர் விட்டு வலியவே யரைத்து நன்றுய், சலிப் பிலாதருந்து வர்க்குச் சதி செயு மிருமலீளை, குலக்கவே செய்யுட பொல்லாக் கோளை விப்புருதி போமே.

<u>ரெத்த காசத்தின் குணம் மருந்து</u>:-

அண்டியே யிருமிக் குத்து மடிக்கடி ரெத்த விழும், மண்டியே வெளுத்துக் காயம் வரு வருத் துலத்தும் வாயும், பண்டியுஞ் சுருங்கும் நாளில் பதங் கெட வருமே யாகில், கண்டிடாய் மயிலே ரெத்தக் காச மென்புரைக்கலாமே.

<u>இதுக்கு மருந்து</u>:-

கோவையு முசுமுசுக்கை குன்றியுங் கொடுப்பை நெல்லி யாவுரை கொத்தான் கறளையாம் பல்வளை யஞ்சம் பிர்மம் யாவின் பாலின நீர் நெய்தான் சமன் கோட்டஞ் சந்தம் பாவித் தெடு சேர்த்துக் காச்சி பகரு ரெத்த ரோகம் போமே.

<u>மந்தார காசத்தின் குண மருந்து</u>:-

தூயதோர் நாசி தன்னில் தும்மலு மிகவுண்டாகி, தோயும் நீர் விழுந்து நெஞ்சு துடித் துளைந் தீளை வாங்கும், மர்யு மந்தார காசத் தடவிது தானே என்று, மாயமா முனிவன் சொன்ன வளமையைக் கண்டு கொள்ளே.

<u>இதுக்கு மருந்து</u>:-

சாறணைக் கிழங்கு மற்ற சதா வேரிக் கிழங்கும் கூட்டி, விறுள்ள சீந்தில் விட்டு, விரும்பிே யாடாதோடை, மாரிய பிரமிச் சாறும் மாதளை வளையே மஞ்சள், ஆரிய அமுக்கிருவும் மறுவது பலமாய்க் கொள்ளே.

கொள்ளரு நாழி தண்ணீர் குமுறவே யொக்க விட்டு, மெள்ளவே காஞ்ச னாரி வெந்து தாளுழியாலும், யெள்ளின்ல் லெண்ணை நாழு மிரு நாளி கூட்டி யொக்கத், துள்ளியே துளாவிக் காச்சிச் சொல்லிய சரக்குக் கூட்டே.

சொல்லிய சரக்குச் சுக்கு திப்பிலி மிளகிந்துப்பு, நல்ல சீரக மோதஞ் சொல் நற் கடசிங்கி யோடு, வெல்லிடுங் கிரம்பு யேலம் வெள்ளுள்ளி கடுகுரோணி, செல்வு முக்களஞ்சு கொண்டு தின்ன மந்தார காசம் போமே.

நெல்லி திப்பிலி நெற்பொறி சர்க்கரை நல்ல தேனில் நறு நெய்யிற் கொண்டிடில் யில்லை யில்லை யிளைப்பு யிருமலும், சொல்ல வேணுமோ சோகையுந் தீருமே.

<u>பீனிசத்தின் குணம் மருந்து</u>:-

தலையும் வலித்தே யொரு நாசி சளியும் விழுந்து யொடுபட்டு, மலையும் நாளே ஏன் சென்மல் வறணம் யிருகித் திரண்டு விழும், உலையு மிகவே நாத்தமதா யூடே தண்ணீர் வீழ்ந்திருக்கும், பலமுஞ் சென்றே நாசடக்கில் பீனிச மென்பார் பெரியோரே.

<u>இதுக்கு மருந்து</u>:-

சீந்தில் வட்டுத் தூதுவளை சிவனார் வேம்பு, போந்தே கன்னிக் குரும் பனையும் பொன்னாங்காணி நிலக் குமிள் வேர், தேந்தே தேவியார் நின்பஞ் சித்தமல்லி பெருமல்லி ஆய்ந்த முத்தக் காசுமுக்கு அதின் மேல் பாட் விட்டுற வைத்தே.

ஊறிக் காச்சி யஞ்சிரண்டாய் உறவே வெந்து பிழிந்து வடி, யாறிப் போவதின் முன்னே யளந்து நெய்யும் நாழி யுரி கூட்டிடவே நல்லெண்ணை குறையாதளவாய் யொக்க விடு, வேறிட்டி டித்து வேப்பந் தோல் விளமிச்சைச் சாறு கூட்டே.

கூட்டிர் மிளகு திப்பிலியுங் கோட்ட மேல மதிமதுரம், மோட்கும் வசம்பு வெள்ளுள்ளி, யுலாவுங் கற்கடக சிங்கி நெல்லி வாட்டமில்லா யிருவேலி மற்றச் கிராம்பு வசுவாசி, காட்டிப் பயிலுங் கிளியூறல் கண்டில் வெண்ணெயது கொள்ளே.

கொள்ளே கொத்தான் மோதகமுங் கூழும் பச்சிலை கச்சோலம், நள்ளே காரிய சீரகமும் சீரமல்லி தள்ளா தொக்க முச்கிலெரடு, சடாமாஞ்சுடனே ரோகணியும், உள்ளே கொண்டு வருவீரால் ஓடிப் போகும் பீனிசமே.

<u>நசியம்</u>:-

இரசங் கெந்தகஞ் சாதிலிங்கம் மின்னரி தாரஞ் சங்கு முட்டி, வருகுந் திருக்கம் பாசாணம் வகையாம் நாருப் பட்டிவிட்டு, சாத முறவே கிரியாக்கித் தருசா நெய் சுவைத்துக் கொளுத்தி பிரதமுடனே நாசி தன்னில் விடப் பீனிசங்கள் வேரறுமே.

<u>மூக்கு நீர்ப் பாச்சலின் குண மருந்து</u>:-

கண்டமு முகமுந் தாடை கரகரத் தூர்வதே போல், ஜண்டமுந் தினவும் பற்றித் தும்மியே தண்ணீர் வீழ்ந்து, மண்டையுங் கனத்து நொந்து நாதமும் பகைக்கு மாகில், முண்டக மதிக்கு மாதே மூக்கு நீர்ப் பாச்சலாமே.

<u>இதுக்கு மருந்து</u>:-

சாறணைக் கிழங்கிந்துப்பு சாதமா மிளகு சீனி, கூறிய நறு நெய் நாழி கொண்டு முன் முலைப் பால் விட்டு, வீறதாய் நய்யத் தட்டி விடு மூக்கில் நசியமாகச் சீறிய முகத்திற் றேன்றத் தினவுடன் அடைப்பும் போமே.

சித்த முட்டி யரைக்கீரை சீந்தித் தண்டு நிலவேம்பு, முத்தமோடு ஆடாதொடை மொதறிழ் யமுக்கிறவும், உத்தம தாளிக் கொடியுடனே ஓரிலைத் தாமரை சமூலம், பத்தியுடனே நன்னாரி பறிந்த பலங்களோ ரொன்றே.

பத்து மொன்று ஒரொன்ற புலமா யிடித்துப் பாங்குடனே, யுத்த யாறு படி தண்ணீர் யுத்தி நாழியாய்க் காய்ச்சி எற்று நாழி யென்னை நெய் பால், தன்னையுடன் கலந்து சுத்த கோட்ட மதிமதுரம், தூய்ய சீரகம் வங்கமுமே.

மேவுங் கருஞ்சீரக மிந்து மிகுத்த வுப்புத் திரிகடுகு, தாவு மருந் தெல்லா மிடித்துத் தக்க மூக்கு நீர்ப் பாச்சல், மேவும் பித்த கசரோக மெல்லாந் தீரு மெல்லியரே.

நிலப் பனைக் கிழங்கு நல்ல நீர் வள்ளிக் கிழங்கு தாளும், நலக் கெளும் நெருஞ்சில் நல்ல நரிதடை ஆவரை முருங்கை யுலக்க நல் முத்தம் வெள்ளரிக் காயும் நல் சித்த முட்டி பலக் குமுள் நெல்லிக் கீரை பாலை புடோல் கரிப்பான்.

காட்டு மல்லி பூனைக் காலி கடிய நொச்சி தன்னுடனே, வாட்டமாவே யோரொன்று வகைக்கு நாலு பலமாகக், கூட்டு பதக்குத் தண்ணீரில் வைலப் போட்டுத் தீ யெரித்து, நாட்டும் படியே பதமறிந்து நாலொன்றாகத் தாக்கே.

கருப்பஞ் சார் பால் நாலு படி கனத்த யிஞ்சி முந்திரிகை, வந்த விலாமிச்சம் பின்னை வேலி மிளகு சுக்கு, முருத்த முத்தம் நன்னாரி மூத்த வகிலுந் தாரமுடன், மிருத்து மேல யிலவங்கம் யினைய மதுரங் கோட்டமதே.

கடக சிங்கி யிந்துப்பு கருஞ்சீரகம் வெந்தய மோதம், திட திப்பிலி சீரகஞ் சாதிக்காய் செஞ்சந்தனங் கிராம்பு, வடரும் வாசி தற்கோலம் வளர் நாகப்பூ சமுத்திராப் பழமுடனே சதகுப்பை திரிபலையும் உகந்த பகப்பு வாலுளுவை.

மஞ்சளோடு மரமஞ்சள் மஞ்சிட்டி பச்சிலை கச்சோலம், மிஞ்ச வோரொன்றொரு களஞ்சு மிகுந்த பசும் பால் தனை விட்டு, வஞ்சியே யரைத்துக் கலக்கி வகையாய்க் காச்சி யருந்தி வரத், தஞ்ச வருங் காமாலை பித்தம் பாண்டுவும் போய்த் தூளாமே.

<u>மண்டை வறட்சிக் குண மருந்து</u>:-

கண்டந் தன்னில் மேல் மூன்று கதிக்கு மண்டை வறட்சி தன்னால், அண்டம் புருவங் கூடும் நுதல், சுழியிற் கண்ணிற் குத்துண்டாய், மண்டுந் துயர மிகவுண்டாம் வலை போற் கண்ணுந் தெரிவரிதாய், மண்டை முழுதும் பரந்து குத்தி வருத்துங் கபால வறட்சி யிதே.

<u>இதுக்கு மருந்து</u>:-

பூவைப் பழமும், பழவரைப்பு பிரியு முளகோடிந்துப்பு, மாவத் தடங்கும் புகழ் கரிப்பானது வோடொக்சப் பொடி கொண்டு தாவு முலைப்பால் அதிற் கலக்கி, தருகாதே நாசியிலூற்ற பாவக் கபால வறட்சியுடன் பசாசு மகன்று போய் விடுமே.

தான்றி கடு பத்திரி நெல்லி யாமூக்கு சாறும் வெட்டி விலாமிச்சம், மூன்று பலமாய்க்குறுந் தொட்டி முன்னூறு படி நீரில், முயங்கக் காச்சி நாலொன்றாய் மீண்டு பசுவின் பாலிள நீர் றெண்ணி யிலவங்கங் கோட்டம் வாலுளுவை, கருஞ்சீரகம், தோன்றுந் தாளிச பத்திரி சாதிக்காய் கிராம்பு தூய்ய சீனி நாகமு மமுக்கிருத் தாரமுடன்.

16.5.64.

அதிமதுர முக்களஞ்சு மற்றிவை யோர் களஞ்சு, யடுத்த கிசாயந் தனை விட்டரைத்து கொதி யெழும்ப, மூன்று நாழுறிக் காச்சி கோதையே கற்றமுற முல்லைப் பூக் கூட்டி வெது வெதென மெழுகு பத மிறக்கிக் கொண்டு வென்னீரிலே முழுக மண்டை சூலை தலை வறட்சி வலி பத்தியுடைய கண்ணோய் தன்னுடனேத்திர வாய்வு தகர்ந்து போமே.

முட்டையுந் திணையும் நத்தை முருங்கைப் பூ அவினி கூட்டி, யிட்டமாங் கோட்டஞ் சீர யிழமிச்சம் பழந் தரைத்து சட்டமாய்த் தலையில் தப்பித் தயவுடனிருவீரால், திட்ட மாய்ச் சிரசிற் குத்தலுஞ் சிதறியே யோடுந் தானே.

<u>மூலம் ஆறு வகைக்கு குண மருந்து</u> :-

முதலா மொன்று வாதமா முனிந்த யிரண்டு பித்தமாம், திரமா மூன்று சிலேற்றுமத்தில் இறவு மன்றி நாலாகும், பதமாம் வாத சிலேற்றுமத்தில் பண்ணு மஞ்சு ரெத்தத்தில், பிதமாம் வாயு விரண்டாகும் பெருந்த மூலமது வகையே.

எல்லா வுயிர்க்கு மிந் தாவுண்டு யிதுவே தென்னி னார்க்கு குருவி, வல்ல தண்டிகை சுமக்கும் மவன் மாத்திர மன்றிப் புவி மீதில், அல்லால் மற்ற வுயிர்க் கெல்லா மறு வகை மூலமது வுண்டு, சொல்வோ மூல மூவகையாய்த் துலங்கக் கேளுங் குழ்ந்திருந்தே.

உள் மூல மிரண்டு வகையாகு உகந்த பானில் வலப் புறத்தில், உள்மூலம் பெண்ணுகி வுகந்த யிடத்துப் புறத்தாகிலும் உள் மூலத்தில் காயம் நன்றாகிய மிகவும் நன்று உறுதி கெடும் உள் மூல மொன்று வாதத் தாலுகந்த தண்டு பித்தத்தில்.

இந்தப் படியே யாறு வகை யிதுவே நாலு வகை புறத்தில், யந்தப் படியே கான் பிக்கும் அறவு மிரண்டு வகையாகு, முந்தப் படி யொன்று வாதத்தால் விரண்டாவது பித்த தாலே, அந்தப் படியே மூல வகை யறியுங் குணங்களிறிவோமே.

கண்ணில் தண்ணீர் தானெழுமே காயங் கனத்துக் கேடாகும் நன்றுய்ச் சத்தி தானெடுக்கும் நயந்தே காயம் நொந்திருக்கும், இன்னுள் சரீரந் தான் தடவி யிதுவு மிதமாய்க் கால் கையும் , நன்றாய் வெதுப்பி யிருப்பிடத்தில் நாடுஞ் சிரங் காயவாய் நாறும். சிறு நீருறுங் குத்திருமல் சிறந்த மூச்சு நெருக்கமாம் முறுமே சிரங்கு குத்தி -நோவும் உடம்பு சுடுகி ரெத்தம் விழும், மருமே முகமும் மஞ்சள் நிறம் மாகு னேந்துச் சமதா முறுமே, யிரத்த முதலற்ற சொரியுந் தான் விழுமே.

மூக்கும் நோகும் மலந் திரிசி முனிந்த பழம் போல் கழுத்திருக்கும், மிக்குஞ் சிவந்து விழுந் தொப்புள் மிகுந்த யிடுப்பு நொந்திருக்கும், தக்க பசி யுண்டாகாது வயிற்றைச் சுருங்கத் தான் பிடிக்கும், ஒக்கத் திரண்டு யிடிக்கிறமே, யுகந்த மிகுதி நேர்வாமே.

யுகந்த பித்தத்திலுண்டாகில் பெருத்த வல முந்திரிகை யுத்த பழம் போல்த் தான் விழுமே யுன்னுறு மல சலங் கன்னித்து, வவத்த பசுவின் பால் முலை போலே வருமே கண்ணுவுஞ் சிவரீரு, மெத்த மெத்த வெறுக்கும் வாய் நீரும் மிகுத்துச் செய்யும் பித்தமிதே.

வாத பித்த சிலேற்றுமத்தில் வருந்துங் குறிகள் மலங் கருத்துப்,
போதச் சிறு நீர் தான் மருத்துப் பொருந்தி விழுமே குடலோடே
மாதஞ் சேரு மது குத்தல் மருவு முதரத்திலுண்டானல்
லீதலால் மலஞ் சலஞ் சிவந்திருக்கு மெச்ச வாயில் நோவாமே.

இது இரண்டு வகையி லொன்றாகும் மெச்ச வாய்க்கு மேலாகும்
அறுவாம் வலந்தான் விழும் போது ஆன யிரத்த மலங் கூடே
பதமா யிரத்தந் தான் வடியும் பரிந்த குறியு மிது வென்று
இதமாய் முனிவர் தான் சொன்ன ரெண்டாவதற்கு முரைப்போமே.

எச்ச வாய்க்குள்த் தாபரிக்கு மிருக்குக் குறிதான் மலமிரச்சல்
வச்ச கூட்டில் வீழாமல் மகிழ்ந்தே நரம்பு தான் சிறந்து
பச்ச மறவே யிரத்தம் விழும் அது வாங் குறிகள் துவன்றி
நிச்சிய முனிவன் மானிடர்க்கு நிகழ்த்துங் குறி தானிதுவாமே.

வங்கிஉடத்தில் வருகிறது வறுக்க மூன்று வகையுண்டு,
யிங்கு வொன்று பருத்தி விதை யிதமாஞ் சதை போற்றுனிருக்கும்
அங்கிலி ரண்டில் மாதளம் பூ ஆன மொட்டுப் போலிக்கும்
யிங்கு மூன்றுவ தட்டை முகம் யிருக்குஞ் சதை நிரம் போலாகும்.

காற்றுப் பிறந்தால் வயற்றினிலே கதித்த நெருப்பில் வயிறெடுக்கும்
மாற்று மிறவே தோடாக் கொண்டு வாய்வு மிகுத்துப் பத்தியமும்
தோத்து மிகுந்து குறி பலவுஞ் சொல்லக் கேளுந் தோன்மேல்
மாற்றுஞ் சொன்னோ மூல வகை மாற மருந்து பகர்வோமே.

<u>மருந்து</u> :-

விராலி வேர் புங்கம் பூமான செந்திருக்கம் பூமி குருமஞ்சள்
வருந்த யோரொன்றிரு களஞ்சி வைத்துப் பானையிற் கோனி கட்டித், திரு
திரும்பக் குளம்பு காச்சி விட்டுச் செறுங் கோணி மேல் மூடி
மருவிக் காச்சி வாய் திறந்து மகிழ்தனல் காட்ட மூலம் போமே.

<u>மருந்து</u> :-

மருந்து:-

வெள்ளைப் பாசாண மரை பிரகும்பி குத்த காந்தம் தானரையாம்
முள்ளே யொருக்கங் கொகுந்தரைத்து யுரைத் தளவாகக் குகை பிடித்து
உள்ள நந்தந் தரிசுடனே யுகந்த யிரண்டுங் கால் களஞ்சு
கொள்ளு நாலும் பொடி செய்து குகையிலிட்டுத் தான் மூடே.

சட்டி யிலிட்டுத் தான் மூடித் தானே யெரிக்கு மேல் சட்டி சி
சிட்ட நெல்லுக் கருகிறல் யிறக்கி மூளப் பொடி செய்து
சிட்டர் மூலக் கற்கடகந்தான் செங்கொட்டைத் தயிலம் விட்டு
வட்டமுடன் சீலையைத் திரித்து மருந்துச் சீலை துனி நருக்கி
தண்ணீர் தோய்த்துப் பொடி தொட்டு தடவிப் படி மூன்று
தண்ணீர் காய மூசளமாய்த் தயிருஞ் சோறு மறுநாள்க் கட்டப்
புண்ணுந் தாறு முளை கனிந்து விழு மதுக்குப் பின்பு பருத்தியிலை
நல னேற, நல்லெண்ணெயிற் பொரித்துத் தான் கட்டப் புண்ணாறிடுமே.

குக்கில் கெவுரி பாஷாணங் கோலச் சுண்ணச் சரி கூட்டி
யொக்க வரைத்து மூல முளை யுகந்து தடவ விடி வேறு
மிக்க பக்கலு மந்திக்கும் மூல முளையிற் தான் தடவத்
தக்க முளை தான் கரைந்து விழுந் தானே பின் செய் மருந்து கேள்.

ஆமணக்கெண்ணை சீலையில்த் தோய்த்து யந்தப் புண்ணின் மேல்ப் போட
நாமே பருத்தி நால்ப் பலமாய் பட்ட நயந்த எண்ணையில் வெந்த பின்பு
போமே எண்ணையிலே தடவி பொருந்தஞ் சீலை புண்ணிற் போட
ஆமே மூல வகை யிரண்டு அறுக்குக் கரைந்து விடும் புண்ணே.

முன்ன முரைத்த மருந்துடனே முசியா யுருவி நாய் வேளை
பின்னு முரைத்துக் கூட்டிக் கொள் பெருகு மூலந் தாறெடும்
வன்னக் குழம்பு யிது வென்று வாழு முனிவன் சொற்படிக்கு
யின்னில மீதே செய்தாக் காலேகும் பிணிகள் வாராதே.

திப்பிலி கோரம்பை மாவுடனே சேர யிரண்டும் பொடி செய்து
ஒப்பில்லாத் திருகு கள்ளி யுகந்த கோரம்பை தான் தகர்த்து
இப்புவி தன்னிற் சட்டியிலே யிலகு நீர் வண்டு கட்டிச்
செப்பு மாவை மேல் வைத்துச் சேரப் புட்டாத் தானெய்யே.

அந்தப் புட்டு நல்லெண்ணையிலான வெல்லந்தான் போட்டு
யிந்தப் படியே யொன்பது நாளிலங்கத் தின்ன வுள் மூலம்
வந்து கூட்டோடே விழுங் காண் வருந்துங் கிரியை யினிச் சொல்வேர்ம்
அந்தப் படியே குரு முனி தானருளிச் செய்த வாறிதுவே.

வேப்பம் விரையை யெருமிச்சங் காயளவு வெள்ளைப் பாசாணங்
கோப்புடன் ஒருசு ரெண்டு கொள் முக் களஞ்சு தான் கூட்டி
யாப்பில் முளையில் பட வைத்து யப்படி மூன்று நாள் கூட்டே.

இப்படிச் செய்யிற் புழு விழும் முளை கரைந்து விழுகும். பிறகு யெண்ணை தடவப் பிற மூலமும் போகும்.

மூலத்துக்கு மருந்து:-

காரெள்ளு சுக்கு கடுகோடு திப்பிலி நேரொக்கவே கூட்டி நித்தமுந் தின்பீராய் யுரொக்கவே கெடுத்து உண்பவர் சுற்றம் போலே, வேரொக்கவே கெட்டு விடு மூல வியாதியே.

பூக்கநு குழம்பு:-

பேய்ப் பீர்க்கின் விரையின் பருப்பு பெருக அரைப் பணவிடை வெருப்பு
கோப்பாம் வேலி பணவிடையும் கொண்டே தேசிப் பழச் சாற்று
லார்ப்பார வெண்ணை தனிற் சேர்த்து யதனுள் தடவி யிப்படித் தான்
கோப்பாய் மூன்று நாள் தடவிக் கொதித்த வென்னீர் தனிற் குளியே.

சாமைத்த விட்டாகிலுந் திணையாகிலும் வைக்கோலாகிலும் புகை காட்டவும்.

கொடி வேலியின் வேர்த் தயிலத்தைக் கோலக் குளியில் தான் தடவி
அடுமே மூல முளைக் கொக்கு யப்படி மூன்று நாளில்
விழுமுடனே கரைந்து வீழ்ந்து பின்பு உத்தா மணக்கெண்ணையைத் தடவி
யடவாய் விழுமே தயிர் வார்த்து யாசன புண்ணிற் தான் கூட்டே.

மூலத்துக்கு தேன் குழம்பு:-

திரிகடுகு வெள்ளுள்ளி யிரு சீரகந் திரு வெளிச்சிப் பிசினிது தவிர
குறி யரை பொடி புளி யறணை சொண்ட பிறண்டை வேளை வேர்
யறிவாங் காட்டுக் கறணை வேர் யான சமதுய்த் தானோடே
யுறவே புழுங்கலரிசி தணை யுகந்த நல்லெண்ணை தனிலரையே.

எண்ணை தடவி மகிழ்ந்து யடை யிதமாய்ச் சுட்டு நல்லெண்ணை
தன்னிற் தேய்த்து எட்டு நாள்த் தின்ன நாடும் பத்தியம் நாமுரைப் போம்
யெண்ணை தனிற் பிறண்டைக் கொழுந்து யியல்புடன் பொரித்துத் தின்ன

மூலத்துக்கு தேன் குழம்பு :-

தேறுங் கள்ளிப் பாலுடனே சிறிய வழுதலைப் பழமும்
மானே கறணை மிளகு மஞ்சள் வருத்தி யோரொன்றிரு களஞ்சு
யேனே எண்ணை தனிற் கலந்து யிட்டவே மூல வகை எல்லாம்
போன விடமே காணமல் போகுமெனவே முனி புகன்றார்.

பீர்க்க யுருண்டை :-

பேயின் பீர்க்கங் கூடுதனைப் பெருகப் பொடித்துப் புளியுப்பு
மாயப் பிசைந்து யுண்டை செய்து மருவும் பவன வாயிலிட்டு
வெய்ய காற்றுத் தட்டாத் தலத்தில் நீ தானிருந்திடவே
பொய்யே யோடு மூலமுடன் பொருந்தி யிராமல் செய்திடுமே.

மூல மாறுக்குங் காரம் :-

வெண்காரம் பாசாணம் மிகுந்த சந்தனஞ் சுண்ணம்பு
பண்பா யோரொன்றரைப் பணவிடை பலகரை வகையி லிரண்டி லொன்று
நண்பாய்ச் சுட்ட சாம்பல் தன்னை நாடுங் களஞ்சு நேராகப்
பண்பாய்ச் சுட்டுப் பொடியாக்கிப் பரிந்து தாறு மணக்கெண்ணை.

அற்றை கற்றை தான் குழைத்து யான விரலில் தானிட்டுச்
சுற்றக் கரைந்து போர்மிது தான் சொல்லுங் கார மெனலாகும்
மற்றார் சொன்ன சொற்படிக்கு யருளிச் செய்தாரன்று முதல்
சுத்தக் காரந் குழம்பென்று சொன்னார் நல்ல வல்லோரே.

எட்டிக் குழம்பு :-

காஞ்சிரை வேரின் பழத் தோலைக் கதித்த நிம்ப எண்ணையிற் குழைத்து
ஆஞ்ச விரலி லபானத்தில் ஆகச் சுற்றி யழுத்திடவே
மாஞ்சு போமே வெந்தொன்றி மருவுங் கிழங்கைச் சீவி யதன்
றூஞ்சு பொறுக்குங் கரைந்தேகும் பான வாயிலேற்றிடவே.

மூலத்துக்குப் பீக்கங் காரம் :-

பேயின் பீக்கங் சுட்டுத் தூள் பேறுக வெண்ணெயில் தனில் குழைத்து
யாய விரலிற் தானிட்டு யபான வாயிலேற்றிடவே
தீயாய் கரையு மூன்று நாள்த் திருந்த விரலி விட்டேற்றவதேன்
ஆயும் வேதம் புகன்ற படி யப்பால் போகு மூலமதே.

கறணைச் சூரணம் :-

காட்டுக் கறணைக் கிழங்கது தான் கடுகப் பதிறு பலமிடித்து
மீட்டுஞ் செங்கொட்டை பலமெட்டு வேர்க் கொம்பதுவும் நாலு பலம்
மூட்டு திப்பிலி மிளகு சீரகம் முடுகி வோரொன்று பலமாக
வாட்டஞ் செவ்விய மஞ்சு பலம் மருவும் வேலிப் பலம் நாலே.

எல்லா மிடித்துச் சூரணமா யியன்ற சீலை வடி கொண்டு
நல்ல தான்றிக் காயளவு நாடும் வெரு கிண்டி மட்டும்
வல்லமைச் சூரணங் கொள்ள வருந்து மூல வகையாறும்
எல்லா மந்தாக்கினி கிராணி யிதுவும் செரியாமையும் போமே.

வாதக் கிராணிக்கு மருந்து :-

வயறு பொருமி வீங்கி வற்றும் வளரு மிரைச்சல் மிக வுண்டாம்
முயிரே குலையத் தானிருக்கும் உகந்த நீரும் வேதினையாய்
மயிர் சேந்திருப்புக் கை காலும் மயதிக் குழுதி கெட்டு விடும்
வயறே வீங்கி யிரைச்சலுண்டு வாத சீதக் கிராணி யிதே.

இதுக்கு மருந்து :-

தேவதார மாதளைய்ஞ் சிறிய தேக்குச்சுக்குடனே
மேவு பாவட்டை பேய்ப்புடோல் வெள்ளை யுள்ளி நிலவேம்பு
ஆவ சிறுகாஞ் சொறி நொச்சி யடரு முக்காவளை வேரும்
பாவு மாவரை யிலை தான் பன்னிரு கழஞ்சு.

பித்தக் கிராணி குணம் மருந்து :-

அடுத்த வெதுப்பு யாகாரம் ஆகாதண்டந் த--------ங்கும்
குடிக்குந் தண்ணீர் பலகாலும் குளிரு மொருக்கால் நீரிறங்கும்
அடுக்குங் காலு மிக விறைக்கும் வயறும் வீங்கு மிது வன்றி
பெடுக்கும் விகற்பஞ் செய்விக்கும் பித்தக் கிராணிக் குணமிதுவே.

இதுக்கு குடிநீர் :-

பேருமுட்டி மரமஞ்சள் பெருகுங் கொட்டை நெருஞ்சியுடன்
சீரா மணத்தக்காளி நலஞ் செறியுஞ் சாறணை மல்லிகையுடனே
யாராச் சனித தன்டுடனே வெள்ளாட்டு நீரில் கழுதை லத்திச்
சீராய்க் கசாயந் தனைக் குடிக்கத் தீரும் பித்தக் கிராணி யதே.

சிலேற்றுமக் கிருணிக்குணம் :-

அய்யுங் கிருணிக் குணங் கேளீரதிக நாற்ற மிக வுண்டாங்
கைய்யுங் காலு மனல் தோன்றுங் கடிய சுரமு மோடி வரும்
நய்யக் களியும் வயறு நாவில் நீரும் வத்தி வரும்
வெய்ய யெரிவு முன்றி வரும் விக்க லெடுக்கும் மெல்லியரே.

இதுக்கு குடிநீர் :-

சுக்கு பேராமுட்டி வேர் அய்ய பங்கம் பாலையுடன்
மிக்க சிறுகாஞ் சொறியதுவும் மிகவே கூட்டிப் பொடி செய்து
ஒக்க விடையம் நாவல் தோல் உகந்த வட்டத் திருப்பி முத்தம்
தக்க சித்தர் முட்டி யுடன் தானே காச்சிக் குடித்திடுமே.

வாய்வுக் கிருணிக் குணம் மருந்து :-

பொருமி யிரையுங் கழிந்திருக்கும் போதப் பிறந் தாளன்தத்து வரும்
மருவு மசன்கு செரியாது வறண்டு வுடம்பு வற்றி வரும் பருகுந் தன்னீர்
நாவறளும் பல காலனந்தல் கனவு மிகும்
வெருவும் வாய்வு கிருணி யென விசித்ரப் பெரியோர் விளம்பினரே.

பொருமு யிரையும் நெஞ்செரிக்கும் புளித் தேக்கிட்டுத் அயரமுமாய்
கருகி கழிந்து கன் அங்கும் காந்தந் தொப்புழ தனிலடங்கும்
வெருவித் தோடாதனை மிகவும் மிகவும் பசிக்குங் கழிந்திருக்கும்
ஒருமைப் படவே வாய் பிளிக்கும் உலத்தும் வாயுக் கிருணி யிதே.

இதுக்கு மருந்து :-

ஓமங் கடுகு திரிபலை யுள்ளி வசம்பு வெந்தயமும்
தாமங் கோஷ்டஞ் சந்தனமும் சாற்று மஞ்சள் சதகுப்பை
காமரிரண்டு சீரகமும் கடிதாய் பொடித்துத் தேனிவுண்ண
ஆமாம் வாயுக் கிருணிகள் விட்டகன்று போகுங் கண்டீரே.

பத்தியங் கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

பிற மூலக் கிருணிக் குண மருந்து :-

கீழ் வயறு தவிர விறைந் தலைந் திடுப்புக் கடுப்புத் தலைந்துருசித் தான் விழும்
வாழி பெருந் தோளரைக் கீழ் விசறமாய் மூச்சடங்கி மலங் கழிந்து வலியுந் தோன்றும்
நாள் வழியே யுடல் வற்றும் வெளிறி வரும் நாவரளும் சோப மிகுந்து யரமுண்டாம்
கேளிதுவும் பிறமூல மெனுங் கிணி யென்று தான் முனி யுரைக்கக் கேட்டதாமே.

இதுக்கு மருந்து :-

ஓமங் கடுகு திரிபலை யுள்ளி வசம்பு வெந்தயமும்
தாமங் கோஷ்டஞ் சந்தனமும் சாற்று மஞ்சள் சதகுப்பை
காமரிரண்டு சீரகமும் கடிதாய் பொடித்துத் தேனியுள்ள
ஆமாம் வாயுக் கிருணிகள் விட்டகன்று போகுங் கண்டீரே.

பத்தியங் கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

இதுக்கு மருந்து :-

புங்கந் தோலாலின் தோல் புதிய சாறனை கொடிவேலி
யிங்கிச மோதமுடன் சுக்கு யினிய திப்பிலி சாதிக்காய்
அங்கவை எல்லாம் பொடி செய்து சமலுய்ச் சீலையில் வடி கொண்டு
யோங்கு பெருங்காயங் கூட்டி யோரொன்று முக்களஞ்சு கொள்ளே.

கொண்ட வெள்ளாட்டு மோர் சுரணி குறுணி காடியது
உண்டே வெள்ளாட்டு நெய் நாழி யுகந்த மருந்து நாளியது
ஒன்றுய்க் கூட்டி மண் கலத்தி லகந்த மருந்து நீ யரிய
யின்றே நாரத்தம் பழந் தானிரண்டே யெட்டொன்றுய்

எட்டொன்றுய்ப் பிளந்து தொலி போக்கி யிதுக்குச் சுக்குப் பொடி போட்டு
வட்டக் கடுக்காய் நூறது தான் வளருங் கனலிற் றியாக்கி
யிட்டுக் குழம்பு தானிறக்கி யியல் சேர் காற்றுப் புகுதாமல்
கட்டுங் கோணிப் பட்டதினுல் கனத்த வண்டு தான் கட்டே.

நெல்லி லெட்டு நாள் புதைத்து நீ பின் சிறு காலையிலெடுத்து
நல்ல கீத்தொன்று விடிவேறு நாடு முச்சிக் கொரு கடுக்காய்
வல்லக் குழம்பு அந்திக்கு மகிழ்ந்தே கொள்ள மாறுதல் கேள்
கொள்ளுங் கிருணி குன்ம முதல் குலையும் ரத்த கிருணியுமே.
(உப்பு புளி விடவும்)

உள் மூலக் கிருணிக் குண மருந்து :-

வலத்தை யிறுக்கி மந்தித்து வரண்டு மிரத்த மலத்தில் விழும்
துலத்தி வருவ துன்மை யிவ யூடே வயறு வலித்து வரும்
தலத்தில் காறுதள் மூலம் தறு காறலையும் பானத்தில்
பலத்தைக் குறைக்கும் வியாதி யெனப் பேசி யிருப்பார் பெரியோரே.

19.5.64.

இதுக்கு_மருந்து:-

திரிபலை கஞ்சா மஞ்சள் திப்பிலி சுக்குக் காயோடறிக்
கடுக்காய் கிராம்பு யான சீரகம் நேராக
வெறி படு சமனெள் கூட்டி வேரு கடி தேனிலுண்ண
நறியு முள் மூலக் கிருமி நாசமா யேகுந் தானே.

மூலக்_கடுப்பின்_குண_மருந்து:-

வெப்புகள் தங்கித் தங்கி மேலெல்லாம் பரந்துலாவி முப்பத்தி ரெண்டுங் கூடி மூலத்தோடு
லாவிச் சுற்றி
அபப்பிய பிற மூலத்தில் அடக்கியே குடலைப் பற்றி பிறப்படும் ரெத்தங் கூடிப் பின்
வருங் குணங்கள் கேளே.

கீழ் வயிற்றில் நின்று சிறு சிறென விரையும் வாய்வு
மீளவுந் திரியே போலும் விதனஞ் செய்து ளைந்து சீயும்
வீருமே நாள்க டோறு மிரைந்திடு மிடை விடாமல்
நீளமே போகா வண்ணம் நினைவுடன் மருந்து செய்யே.

இதுக்கு_மருந்து:-

செய்குவா யசமதாகம் நற்சீரகம் சாதிக்கா யொன்று
நெய்யும் புத்திலை தன்னில் நாலஞ்சு கடுக்காய் சுற்றி
கொய் குறந் தோலை தன்னில் கூட்டியே யரிந்து கட்டிப்
பய்யவே யிதுக்குப் பின்னைப் பதஞ் சொல்லக் கேளு மின்னே.

கட்டியே யுமித் தீத் தன்னில் கடுகவே புதைத் தெடுத்து
தட்டியே யிரலிலிட்டு தகரவே யிடித்துப் பின்னை
சொட்டியே அம்மி தன்னில் குளவியா லரைத்துக் கொண்டு
வெட்டென விடியும் போது வெருகடி மருந்து கொள்ளே.

வெருகடி விடியும் போது கொண்ட பின் வெந்நீர் தன்னை
பருகிடும் பத்து நாளும் பதனமா யிருந்து கொண்டால்
யெரி கொண்ட வேப்பினாலே யெழு நீ மூலக் கடுப்பதெல்லாம்
உருகி விட்டோடு மென்றே யுகந்த வருரைத்தவாறே.

அத்தியோடுதியம் பட்டை யடுத்த சாறணையின் வேரும்
முத்திய தேங்காய் போலே மூன்றையு மரைத் தெடுத்து
வற்றிய பாகு தன்னில் வடுவற வெந்த போது
சுத்தியே யெண்ணை நாலஞ்சு சுவறவே விட்டுக் காச்சே.

திப்பிலி ஓமந் தாளும் சிறந்ததோர் மிளகு சுக்கு
நற்பத மிந்துப்போடே நலமுற களஞ்சி ரெண்டு
தப்பிலா யவின் களஞ்சி சாதிக்காய் பத்திரி கிராம்பு குரோசாணி
செப்பமாய் வறுத் தரைத்துச் சேரவே பதத்தில் வந்தால்.

உண்டிடு மந்தி சந்தி யொரு சுண்டைக் காயளவு
கொண்டிடும் பத்து நாளாய்க். குறித்த தோர் புளி தவிர்த்தால்
விண்டெழு கிருமி யெல்லாம் விரைந் தெழு மென்று சொல்லி
அண்டர்கள் வேதஞ் சொன்ன ஆயுரு வேதந் தானே.

வயறு_கடுப்புக்_குணம்_மருந்து:-

இடுப்புக் கடுத்து வயறு ளைந்து யிதமாஞ் சீத மிகக் களிந்து
முடுக்குந் துயர மதிகமுமாம் மூலந் தன்னிற் களிந் தடங்கும்
அடுத்தே யன்னந் தனைத் தேடா அறவே யங்க மிக மெலியும்
தொடுக்கும் வயற்றுக் கடுப் பென்று சொன்னார் துயரஞ் செய்யு மென்றே.

இதுக்கு_மருந்து:-

பனிச்சை நத்தி மலைதாங்கி பகரும் புலா முதகமுடன்
முனிச்சக் கொள்ளும் அதிவிடையம் முதிர்ந்த சீரக மோதமுடன்
தனித்த கைப்பு கிரியாந்தான் தானே களஞ்சு கொண்டு நெய்யில்
நனித்தே வேக வைத்து நக்க நாடும் வயத்துக் கடுப்பறுமே.

நற் சீரகத்தைப் புத்தோட்டில் நலங்கத் தான புடமிட்டு
பிற் சேர்த்திடித்து தூ.ள் செய்து பெருகுஞ் சீனி தனைச் சேர்த்து
சிற்று மணக்கே நறு நெய்யிற் சிறக்க வறுத்துத் தீர்வது கேள்
பறச்ச வயற்றுக் கடுப்புளதும் பறந்து போகுந் திண்ணமதே.

தாளிச பத்திரி களச்சி விதை கிருமி பதினெட்டுக் கஞ்சாவின்
தகப் பத்திரியு மத்தன் விரை கிரும்பு மேல மிளகு திப்பிலி
வயிற்றுக் கடுப்புக் குருசாணி யோமமென்று நற்றேந் தான்
விதையோடல மதி விடையம் உளைப்பு பசிந்து மசாளா
யவினி சாத்திர வேதி சுக்கு சாதிக்காய் சீரகத்துடன் வெப்பு சுர மதிசாரம்
நேக முத்திரைப் பழமும் வாள்வான வோரொன்று ஒரு களஞ்சதாக

வாய் விருமல் விக்கல் மாதளத்தின் பள மொன்று மருவ யரைத்திடவே
அரைத்திடு பெரு ஒக்கா மிருக் கெல்லாம் தாளிச பத்திரி மாத் தோலத்தித்
தோல் முத்தங் கோவை யுரைத்த சாறனைக் கிழங்கோர் பலம்தா யிடித் தெ
தெட்டொன்றாய் எரித்த நீரனை யத்தி யிம் மருந்தனை யவித்து குறுத்தமாய்க்
குன்றி மட்டுங் குளிகையாய்ச் செய்திடாயே.

ஆயதோர்க்கினி மந்த மலர் வயித்துக் கடுப்பு
நேயமா மிளைப்பு வெப்பு நீர் சுர மதிசாரங்கள்
வாயுவோடிருமல் விக்கல் வலிய ஒக்காளஞ் சுத்தி
ஞாய சீரகந் தன்னீரில் அய்த்திட ஒடுந்தானே.

அக்கினி மந்தத்தின் குணம் :-

உண்டியிற். பொருமலாலும் உடன் வளை கீதத்தாலும்
கொண்டு தான் களந்து தன்னீர் கொதிப்புடன் வெதுப்பினாலும்
மண்டியே வெருத்துக் காயம் மயங்கெட யுலர்தலாலும்
அண்டர் முன் வேதம் பேசும் அக்கினி மந்தமாமே.

மலமுங் களியும் சிறு சிறுக்கும் வறண்டால் வயறு வலித் துளையும்
செலமு மிகுந்து களிந்திருக்கும் சிறுக ரெத்த மலத்தில் விழும்
பலமுங் குறைந்து நயன முகம் பேதப் படவே வெருத்து வரும்
மலையுங் குணங்களிது கண்டால் அக்கினி மந்த மெனலாமே.

இதற்கு மருந்து :-

சுக்குடன் முந்திரிகை சுத்த பழம் பலமோரொன்று
வைக்கும் நீர் படிகளெட்டு வகுப்புட ஞென்றதாக்கி
நிற்கு நீரதனை வார்த்து நித்தலுங் கொள்வீராகில்
அக்கினி மந்தம் போமென்றறிந்த வருரைத்த வாறே.

திரிபலை மதுரந் தாரந் திரிகடு கேலமோமம்
முரு காயம் பத்திரி கிரும்பும் அமுக்கிரு விடையஞ் சீரம்
நறிய தாளிச பத்திரி நாகப்பூக் காயம் பச்சிலை [illegible]
யரிசிய நெய் தேனிற் கண்டில் அருந்தக்கினி மந்தம் போமே.

வாத கரப்பான் குணம் :-

உடம்பெல்லாம் வெதுப்பி நொந்து பிளந்து கால் சந்து கட்டி
யிடங் கொண்டு சுரந்து வீங்கி யிருப்பிது மிதாகையாலும்
முடங்கவே வெடித்துத் தான முத்தியே வெடித்துப் புண்ணாய்
இடங் கெடா கரப்பான் வாத மென்று தானியம்பலாமே.

இருந் தெழுந்திரிக்கும் போது மியாத்துக் காலுயர்ந் தயர்ந்து
வருந்திடத் திமிர்ந்து வீங்கி வறண்டியில் விசத்துப் புண்ணாய்
திருந்திய அங்கந் தானுஞ் செய மறப் பொருமு மாகில்
வருந்து மிக் குணங்கள் கண்டால் வாதமாங் கரப்பனுமே.

நொந்து பின் கன்னில் மிக்க நோவுடைக் கண்கள் தன்னில்
வந்து வல்லாயுதங்கள் வடுப் புறத்தைத்த போது
சந்து தான் மொளி பெருத்து தசைவு தானங்களாகில்
வந்து தான் கெடுக்கும் வாத கரப்பா னென்றியம்பலாமே.

வீங்குந் குதலை மிகச் செருமு விடாமல் திமிர்த்து விதனிக்கும்
மாங்க[illegible]திற் சலம் விழுந்தால் துவுந்தி ன வாய்ச் சொரி செய்யில்
நீங்கிச் செல்லத் தீராது நெடு நாள் படவே விளைமிக்கும்
தேங்கப் புதைத்துச் சுட்டு விடத் தீரும் வாத கரப்பனிதே.

சந்து கால் மொழி பெருத்து தானங் கனைந்து வீங்கி
வந்து தான் புண் போல்க் காயம் வருந்தியே யிருந்து வாடும்
நொந்து தான் திரும் பொன்னை நோவுடன் வெதுப்புத் தோன்றும்
மிந்த நோய் வரிலோர் வாத கரப்பனென்றியம்பலாமே.

இதற்கு மருந்து :-

கொன்றைத் தாது நிலவேம்பு குமிள வேர் கடுக்காய் நிலவாகை
சென்று வணங்குஞ் சூரியது சிவனார் வேம்பு சல மிஞ்சி
யென்று முத்தம் தாழி யுடனந்த நாயுருவியுடன்
நன்றே கொள்ளுஞ் சுரை யுட வேர் நன்னாரி துடரி கூட்டே.

கூட்டி யுள்ளி மர மஞ்சள் குலவு மஞ்சள் வெம்பாடல்
நாட்டில் பயிலும் வெண் கோட்டம் நல்குஞ் சொன்ன கரப்பழம்
யாட்டங் காலவஞ் சாதிககா யது கொள் கடுக்காய் தான்றி நெல்லி
கூட்டிச் செய்த வவையிட்டுக் கொண்டே எண்ணை கொதித்திடுமே.

குறிஞ்சா யிலையும் புங்கிலையும் கொடிச் செங்கழச்சிலை தானும்
அறிஞ்சே செய்வார் கடல் ராஞ்சி யதவு முள் தேக்கிலை தானும்
பகர்ந்தே வாத வெப்படச்சி பரிந்தே வேப்பினிலையாகும்
மறிந்தே சொன்னேன் முடக் கொற்று மதிநேடின்ன மருந்தைக் கேள்.

உள்ளி மிளகு சீரகமும் உற்ற கடுக்காய் திப்பிலியும்
தள்ளுஞ் சுக்கு மோதகமுஞ் சயிந்த வுப்புச் சிறும்பிறடன்
கொள்ளுங் கற்கண்டு ரோகணியும் கூட்டுந் தூது கடுகு நாழி
விள்ளுங் கரிய சீரகமும் விளம்புங் களஞ்சு மோரொன்று
தெள்ளுஞ் சற்கரையினிற் கொள்ளத் தீரும் வாத கரப்பானே.

எருமைப் பாலோடரி தாரம் எலியின் மருந்து கொடிவேலி
திருத்தமான வெள்ளுள்ளி தெளியும் வசம்பு சென்ன கரம்
பெருக்க வோரொன்றரைக் கழஞ்சு பேணி யரைக்கிலிடு கள்ளி
பருக்க வாட்டி யிலைச் சாற்றால் பதருதே கரைத்துக் கொள்ளுவதே.

கொள்ளே நறு நெய் நல்லெண்ணை கூட்டுஞ் சிற்று மணக்கெண்ணை
நள்ளே தீர்க்கும் வேப்பெண்ணை நலங்காவே சொட்டிடு மஞ்சள்
துள்ளா தொக்கப் பொடி செய்து தூவிக் காச்சி யெண்ணையுடன்
உள்ளே கொள்ள யிடு மேலே யோடிப் போகுங் கரப்பானே.

என்னை வெச்செனப் பிடித்தே வீக்கத்தி லிருக நாளும்
வண்ணமாய் ராத்திரிக்கும் வகையுட னெருக்கி லையை
பண்ணி ரெண்டிலையை வாட்டிப் பதத்துடன் கட்டுவீரால்
என்னிலா வாத கரப்பா னிறங்கிடும் வீக்கந் தானே.

(உள்ளுக்கு கொடுத்து மேலும் பூசி இப்படிக் கட்டவும்).

(வேறு)

<u>திமிர் வாத கரப்பன் குண மருந்து :-</u>

தலையுங் கனத்துக் குரல் நெரிந்து தருகாதுடம்பு திமிரு முண்டாம்
முலையுங் காலும் வீக்கமு மாய் முளை யாதிருக்கு முயிற் பற்றும்
மலையுஞ் சந்து மீளாது வலுவைக் குறைத்து விரண்டு வரும்
குலையுஞ் செய்யுங் குண வாத கொடிய கரப்பானிது வாமே.

கண்ணுந் தூங்கி நடுவுந்தி கனக்கச் சுரந்து வெதும்பு முடல்
நண்ணுந் தூடையுங் கன திமிராய்ச் சந்தே யடுக்குங் கிறுகிறுக்கும்
மண்ணில்ப் பிறந்தோர் தங்களிடம் வந்தே வருந்தி மயங்கிடில்
யெண்ணில் வாத கரப்பானே யிதுவும் பேசலாமே காண்.

<u>இதுக்கு மருந்து :-</u>

சாறணை யுத்தம தாளி தானே சிறு கிளா முடக் கொத்தான்
வாரணி சிறு வழுதலை முருங்கை வளரு மெருக்கைப் புங்கம் வேர்
யேறுங் கொடிக் கள்ளி மிளகுள்ளி யியற்ற பூத கரப்பானும்
கூறாய் வசம்பு ஆமணக்குக் கொட்டை யெண்ணையி லெரித்துடனே.

உள்ளுங் குடுத்து மேலும் பூசவும்.

தூதுவளை யோரிதழ்த் தாமரை வேர் தூய்ய நீலி யெருக்குக் கொடிவேலி
மோத மேலங் கருஞ் சீரகஞ் சுக்கு முந்து கடுக்காய் முக்கிரு
நீதி பெறச் சமனிடித்துக் கரப்பானுக்குக் கருப்பஞ் சற்கரையில் கூட்ட
தாதுவிளையுங் கரப்பானும் போம் சறுகாதே போம் சத்தியமே.

முள்ளி சின்னி முன்னை வேர் முசியாப் பிறண்டை யுடலுக உள்ள
வேலிப் பருத்தி யழிஞ்சில் வேர் யுகந்த சேப்பு நெருஞ்சில் வேர்
கொள்ளுங் கொளசி செங்கத்தாரி கோலத் தலை சுருளி குமிளம் வேர்
மெள்ளத் தண்ணீர் விட்டானும் வெள் வெங்காயம் வசம்புடனே.
யள்ளு மிளகா மணக்கெண்ணை யதில் வெந்து மேலிற் பூசுவதே.

<u>கண்ட கரப்பன் குண மருந்து :-</u>

போதச் சிரமே வறண்டு மிகப் பொருமு மூர்ச்சை விடுவதெனிற்
சேதப் படுத்தும் பித்த மிகச் செய்யுங் குணங் களிரெட்டும்
காதுங் கருத்து மிடர் சொரி வாங் கண்ட கரப்பனிது வென்று
போதஞ் செறிந்த தமிழ் முனிவர் புவியின் மீது புகன்றுரே.

<u>இதுக்கு மருந்து :-</u>

தூதுவளை யோரிதழ்த் தாமரையுந் தூய்ய முத்தம் நன்னாரி
யூதுஞ் சாறணை திரிகடுகு யுகந்த சீரகம் வசம்புள்ளி
காதுங் கையாந்த கரையுடன் கசக்கும் வேப்பந் தோல்த் தண்ணீர்
போது மெண்ணை தனிற் கூட்டிப்பொருந்த எரித்து நக்குவதே.

<u>வறட்சி கரப்பன் குணம் :-</u>

வாதஞ் சொறியும் மயங்காதே வறச்சிக் கரப்பன் வகை கேளீர்
ஊதுஞ் சொறியுங் கால் கர்த்து உடலு மிகவே யதைப் புண்டாம்
தீது மருந்து பரந் தேழுந் திதமாய்ச் சருமாப் பொருக் கெழும்பும்
வேறுமொருவர் குண்டெனவே சடையாய் புலால் நாறுமதே.

<u>இதுக்கு மருந்து :-</u>

தண்ணீர் மிட்டான் கிழங்கு தனிற் சாறும் நாழிதனைக் கொண்டு
வண்ணத் தூரிய வரிக்குமரி மடலில் சாறும், நாழியது
தன்னக் குறிய ஆவரை தன்னில் நாலு பலம் வேரும்
நன்னும் படியே சாரித்து நன்று யூறப் போடுவதே.

ஊறிப் பிழிந்து வழித் தெடுத்து யோரஞ் சிரண்டாய்க் காய்ந்த நீர்
நாறிப் போகு மதி லெண்ணை யடுக்காய் நாழி யுரி விட்டு
கூறிச் சிவந்த கொடுவேலிச் குலாவுஞ் சீரகம் வெம்பாடல்
ஏறக் கூட்ட வேண்டாங் காணிடராய்க் களஞ்சு யிவை கூட்டே.

கூட்டிக் காச்சி வடித்திதனைக் குணமாய்க் கொள்ள மேல்ப் பூச
வாட்டஞ் செய்யும் வறட்சி யது வாத கரப்பான் மாறிப் போம்
கோட்டி கொள்ளும் வியாதி எல்லாங் குணமா மென்றுர் குரு முனியும்
தேட்டமுடனே யிம் மருந்தைத் தெளிந்து செய்வீர் செகத்தோரே.

கபால கரப்பான் குணம் மருந்து:-

காதுந் தின வாய்க் கண் தின வாய்க் கண்டந் தின வாங்கா காத்து
ஓதுங் கண்ணீருற் றெழுகி யுண்ணு மூக்கில் நீர்ப் பாயும்
ஏது முழுக்கால் நற வதனல் லென்றைக் குறைந்து சீர் வறளில்
சேதப் படுத்து மருட்டதனல் சேருங் கபால கரைப்பானிதே.

இதுக்கு மருந்து:-

நன்னாரி முத்தந் ஆவரை நயங்கும் பொன்னூர் சீதேவி
சொன்னே மோரிதழ்த் தாமரையுந் தூய்ய சிவனூர் நிலவேம்பு
வன்னத் தாவும் பெருங் குறும்பை வட்டச் சாறணை வேருடனே
தன்னே யோர் பலங் கொண்டுகந்தே தண்ணீர் கண்டு கசாயமிடே.

சுக்கு மிளகு திப்பிலியுஞ் சோமனுப்புக் கடுக்காயும்
தக்க கருஞ்சரகம் வசம்புள்ளி சரி சொன்ன கரங் கச்சோலம்
மிக்க கடுகு ரோகணியும் வெருத்தப் பிசினு மதிமதுரம்
மொக்கக் களஞ்சி யிட்டே காச்சி யெண்ணையிட யோடுங் கபால கரப்பனிதே.

வறட்சி கரப்பானுக்கு மருந்து:-

கால் தலை யுடம்ப தெங்கும் கனக்கவே சிறு சிரங்காய்
சேலது கெட்டு வற்றித் தினவுடன் சொறி வுண்டாகிச்
சாலவே காது நாசி மிடறு தான்கர கரக்கில்
மால் திரு மடமான் கன்றே வறட்சி சேர் கரப்பனுமே.

மருந்து:-

புங்கங் கொட்டை பசு மஞ்சள் புதிய வெள்ளைப் பாசாணம்
மங்குஞ் சொன்னேம் வெம்பாடல் அவரிச் சாறு நல்லெண்ணை
பங்கமுப படாதே சொறியாதே பதத்தில் வடித்து மேல்ப் பூசி
தங்கிப் பின்னை வெய்யில் தண்ணீரில் தன்னில் குளிக்கத் தருகாதே.

கண்ட மாலையின் குண மருந்து:-

தலையுடன் பிடரி கண்டஞ் சன்னையுங் கனத்து நொந்து
உலைவுடன் கழுத்தைச் சுற்றும் உருண்டது வுடைந்து புண்ணும்
மலைவுடன் சுரமும் மாறாய்க் குணங் கண்டால் வேறே
கலை பெறு முனிவன் சொன்னன் கண்ட மாலையின் குண மிதென்றே.

இதுக்கு மருந்து:-

வெள்ளுள்ளி வசம்பு கோட்டங் கருஞ்சீரகம் வெம்பாடல் மதுரங் காரம் மஞ்சள்
திரிகடுகு சீனவாவும்
வெள்ளெருக்குச் செங்கொட்டை கொடுவேலி வேலிப் பருத்தி பொன்னுத்வரை
கடுக்காய் ஒரோர் பலமாய்
வெள்ளைப் பிசினும் குக்குலமே யெடுத்தார யோர் களஞ்சாய் வெள்ளாட்டு பாலெண்ணை
வேளை நீர் நாழி நாழி யதில் விதமாய் வாத்துக் கரைத்திட்டுக் காச்சி வடித்து
கொள்ளப் பூசப் புண்ணில் கள்ள மருத்துக் கண்ட மாலை கபால நோய் விப்புருதி
கரப்பன் வகை காத்துப் போலே போமென்று கருத்தில் முனிவர் கழறினரே.

அரையாப்புக் குணம் மருந்து:-

சுட்டது நீறிலும் அனுக்கரை சுருக்கிலும் மாடல் செய் புணர்ச்சியாலும்
அரும் பெரும் நடையினும் கேடுள்ள நீராம் நீந்தில் கெணித்திடும் அரையாப்புத் தான்
பாடுவன் முனிவன் தாறும் பரிவுடன் பழமையோர்க்கே.

இதுக்கு மருந்து:-

வசம்பு வெள்ளுள்ளி யாதண்டம் மருவுந் தும்பை தைவேளை
யிசங்குத் நத்தைச் சூரியிலை யிவை எல்லாஞ் சமது யரைத்து
யிசங் கழன்றிச் சிறு வெதுப்பியான மருந்து மூன்று நாள்
யிசங்கமாக அரையாப்பில் நீயே கட்டு நிகழாதே.

கோளி முடக்கல் சுண்ணம்பு குன்றி பனை வட்டு யாமணக்கும்
அரளி கூட்டிச் சாரித்து மகிழப் ப சீர்வை யன்றி
நீறும் பசு மஞ்சள் வெள்ளுள்ளி நிகழும் வெந்தயம் பனை விட்டு
யாருஞ் சுண்ணம்பு வரு மண்ணும் அது கோளி முட்டையி லரைத்திடுவீர்.

நீர் மேல் நெருப்புத் தாரைத்து நிகமொரு சாம மட்டாக
பாரு மூன்று நாள் கட்டப் பகர்ந்தோங் கட்டு மருந்தாக
ஊரில் முருங்கை வசம்புள்ளி யொட்டிக் கூட்டி நின்மை யெனத்
தீரும் வசம்புள்ளி கொடுவேலி திருந்துமாஞ் சுண்டை மாவிலிங்கை.

இரதமோர் பணவிடை வெள்ளை யரை யியன்ற கெவுரி தாரையும்
அரிசு யரையுங் காரீய்யுந் தலங்கு முருங்கை முகந் தனிலே
இரச மிட்டுத் தாதுருக்கி எல்லாங் கூட்டிப் பொடி செய்து
பரிசா மொரு நாளில் வளவாம் பருக்கச் சீலை பின்பு கை காட்டே.

மஞ்சாடிப் பிறமாணந் தின்று சீலையிற் கட்டிப் புகை காட்டவும்
குருந்த தண்ணீர் பரிமாறவுந் தீரும்.

<u>கிரந்திப் புண்ணுக்கு:-</u>

பரிந்துறுங் கிரந்தி நோய்கள் பரந்திடும் வெப்பினும்
அரும்புனல் தீனங் காலும் அடு புண்கள டுக்கையாலும்
கருங் குழல மாதர் தோலுங்கன்றி யுண்டாகு மென்று
வருந்திரு முனிவன் சொன்ன வாகட மறிந்து கொள்ளே.

<u>இதுக்கு மருந்து:-</u>

கல்நார் கல் மதங்களிப் பாக்கு கடிய யிரதங் காசுக் கட்டி
நல் வாய் துருசு நன்றாக நாடு மிவை யெல்லாஞ் சமனாய்
யல்வாய் சுத்தி செய்வதுவும் யது செய்தி ~~தி~~ பருத்தியிலைச் சாற்றில்
நெல் வாய் பசுவின் வெண்ணெயிலும் நேக வரைத்துச் சிமிளில் வைய்யே.

ஒரு கைய்யில் தயிர்த் தண்ணீரும் ஊமத்தை நீறு தாறும்
ஒரு குளி விட்டுளாவி யுண்டு பின் மூன்று நாளும்
கருதிடுங் கிரந்தி தானும் கனப்புடன் வீக்கம் போகும்
கருத்துடன் முனிவன் சொன்ன காரண மறிந்து கொள்ளே.

துருசு சுட்டு நீருக்கித் தாயா மணக்கு முத்துடனே
பருகிலேட்டில் விரை வருத்துப் பருப்பை யெடுத்துத்
துருசு சுட்டால் மருவய யரைத்துச் சீலையினில் மருவப் பிரட்டி
யிரு நேரம் யருகும் புண்ணில் தான் போட யதுக்கு விடுவீர் குளிர்ந்த தண்ணீர்.

ஒரு நாளைக்கு ஆறேழு தரங் குருந்த தண்ணீர் விடவும்.
இரத மடரு மஞ்சாடி யியன்ற துருசு மூன்றுகும்
யரிதாங் குன்றியள் வென்ன யான யிரதம் பருத்தியிலை
சரிதாய்ச் சாற்றில் முறித் தரைத்து தானே நீறு போலாக்கி
தூரிய குந்தம் பொடியாக்கி துய்ய பசுவின் வெண்ணெ கொள்ளே.

மருந்து வெண்ணெ யதடைடே மற்றித்திடவும் பயறளவாய்
மருந்து போட வெத்திலையில் மசிழ் வாட்டிப் பதறிட்டு
மருந்து புருசக் கிரந்தியின் மேல் மசிழப் போட்டு ஒரு சாமம்
மருந்தைக் கழுவி மறுநாள்ம மற்று மிப்படிப் போட்டிடவே.

கடுக்கா யிடித்துத் தாளாக்கி கனத்த துரிசு யுவர் மண்ணும்
மிடுக்காய்க் காச்சித் தண்ணீரில் வேதும் பிடிக்க யாதன்டை
யடுக்கர் மணக்கங் கோடுனே யான யெண்ணெ செய்திடலே
மிடுக்காய் வீங்குமா மாகி மேவுந் திரிசலை தானரைத்து
திடுக்காம் புரு சக் கிரந்திக்கும் சேரும் வீக்கமதில் பூசே.

பூசவும் வேது பிடிக்கவும்.

துத்த மிரதங் குங்கிலியம் சொல்லும் வெங்கலப் பொடியுடனே
வைத்த வங்காளப் பச்சையுடன் மன்னுங் காசாஞ் சதை கூட்டி
உத்த யாவின் வெண்ணெயுடன் உகந்த தேசிப் பழச் சாறும்
வைத்தே யரைத்துச் செம்பு கொண்டு மகிழ்ந்தே நீயுஞ் சிமிளில் வைய்யே.

வென்னீர் கழுவி மாதளை யிலையில் தடவிப் புண்ணில் போடவும்.

வெள்ளைக் குளம்பின் வகை கேளாய் வேறே வெள்ளைக்குங்கிலியம்
துள்ள வரைத்துச் சீலை வடி சொன்றேம் நல்லெண்ணை தான் விட்டு
மெள்ள யிளக்கிக் கொதிக்க வைத்து வேண்டும் வெள்ளந் தாளாத்தி
யள்ளிப் பிசைந்து சீலை தன்னி லடவாய்ந் தடவிப் புண்ணிலிடே.

சாதிலிங்க மொரு கள்ஞ்சு தனியே தத்த மிரு களஞ்சு
குதி துருசு ஒரு களஞ்சு சொல்வுமத்தை யிலைச் சாற்றில்
நேதி யரைத்து வெண்ணை தனில் நெகிழ வரைத்துக் கலப் புறத்தில்
சீதி யிளைத்துச் செம்பு கொண்டு சீலையிலொட்டிப் புண்ணிலிடே.

புத்தின் குண மருந்து:-

செங்கொடி வேலி புறத்தோல் களஞ்சி சிறங்கை வெள்ளி விட்டவிச்சு
யங்கத்தை வாங்கித் தான் தின்று யது மேலந்த நீர் குடித்து
யங்கத்தில் வேரரைத்து அதுவும் புண்ணில் தானிடவே
செங்காத் தொடி பதத் தானை தீருங் கிரந்தி புண்களுமே.

ஐந்து நாள் தின்று பத்தியங் கார்க்கவும்.

ரத்த மதுருண்டு கூடி யிறங்கிடுந் திரண்டு யாணி
யுற்றிடும் பருப்பிளவை யுயர்ந்திடுந் திரேக மெல்லாம்
கற்றிடும் பொதிகை மேவுங் காரண ஞான போதராம் பெரு
முனிவர் சொன்ன வாகட மறிந்து கொள்ளே.

சித்திரப் பாலாவி சீமாநெல்லி சிறக்க நாழி யென்னை தனில் வெந்து வடி
பத்திர மொன்பது நாள் குடிக்கப் பாரும் புத்துயரும் பறைக்
காத்திரமா யென்னை யுளக் குடுத்துக் காக்கை கொலி விரை முக்களஞ்சி யிட்டுக்
காச்சி
புத்திடப் போகும் முதிரைப் பத்தியமா முனிவன் மொழிந்தார் மொழிந்தார்
மொழிந்தாரே.

ஆறுத புண்ணு அழுகின சிலந்திக்கு ஒட்டிய புண்ணுக்கு மருந்து:-

உலுங்கின மெத்த மீறில் ஊறக் கெடு நீரு மேறில்
கட்டிடு மலங்கள் தீயில் கரப்பன் தன் குடிகளாகும்
திட்டமாய் விசங்களேற்கில் சிரங்கு புண் சிலந்தி தானும்
முட்டற வரு மிதென்று மொழிந்தனர் முனிவர் தாமே.

கோளியின் முட்டை தன்னில் குறித்ததோர் களஞ்சி கெந்தம்
கேளிதாய்ப் பொடித்துக் கட்டித் தேங்காய் நெய்யதனில் தான் பொரித்து
வாளிதாய் மூன்று போது வண்மையாய் நெய்யி தொக்க
சீளி செய் சிரங்கு சிலந்தி தீராத புண்ணும் போமே.

ஆறுத யழுகின சிலந்திக்கு:-

கடுக்காய் தான் வெதுப்பிக் கூழ்க் கொட்டை தனைப் போக்கிக் குணமாய்ப்
பொடித்துப் புண்ணிலிட யாறுப் புண்ணு மாறி விடு மதுவும் நாமுங் கண்டதுவாம்.
கூறும் முனிவரு ரத்த படி குணமாய்ச் செய்யும் பெரியோரே.

சூலைப் புண்ணுக்கு புகை:-

முக்களஞ்சி சிரசத்தோடே முசி தொமமணி வருத்து மிக்க பொடியுடன்
கொடிவேலி யிருந்த புன்னைக் காயளவு
யொக்க வெற்றிலைச் சாறு விட்டு யிரத முரிச்சு யசமதாகம்
துக்கப் பிசிரி யுலர விட்டு தானே போடும் கொடுவேலி
கொடுவேலி வேரும் பனை வெல்லங் கொண்டே விரலி யிளகா
யிடுக்கா யெடுத்து பதத்தில் வைத்து யான சொடிக் கழல் மருவாதி
திட்டமாய்த் தின்ன யெப் புண்ணுந் தீரும் பத்திய முருங்கைக்காய்
விடுமே முருங்கை யிலை யாகும் விட்டுக் கைப்பு புளியை விடே.

சூலைப் புண்ணுக்குப் புகை:-

இரதமோர் பணவிடை வெள்ளை யரை யியன்ற கெவுரி தானரையும்
தாரிசு யரையுங் காரீய்யந் அலங்க வுருகு முகந் தனிலே
யிரதம் விட்டுத் தாறுருக்கி யெல்லாங் கூட்டிப் பொடி செய்து
பரிசால் மொரு நாளிவ் வளவாய்ப் பருக்கச் சீலைப் புகை காட்டே.

மிளகு மணிப் பிரமாணம் முழுங்கவும். சீலை கட்டிப் புகை காட்டவும்.

குருந்த நீர் பரிமாறவும்.

இரத யிரண்டு காரீய மூன்று யிவை தாறு மரச காரீயம்
முருகிற முகத்திலே காரீயம் தானே ரசம் விட்டெடுத்துக் கொள்
ரச கெந்தகம் பெருங்காயம் மூன்றும் வெள்ளைப் பாசன்மும் சரி சமஞரொன்று
கமுஞ்சி கொண்டு தானே பொடி செய்ய அப்புகைக்கே.

அப்புகைக்கு வகையாகச் சுட்டிப் புகைக்கவும். பத்தியம் தயிரும் சோறு
முண்ணவும்.

கெந்தகந் தரு கெவுரி வெள்ளை கிளர் நேரொன்று அரையாக
வந்த யிரதா மோரொன்று மகிழு மீயம் பணவிடையும்
முந்த யீய முருக விட்டு முனிந்த யிரசம் விட்ட பின்பு
யிந்தப்படியே யொன்பது தான் ஆசப் புகைக்கும் வகை கேளே.

அரிதாரஞ் சங்கு பொடி செய்து யான யெருக்கஞ் சாத்தரைத்து
பரிதாங் கழலை தான் பூச பரந்து வெதும்பி மிகப் பிறங்கி
யொருகால் புறத்தால் பிறப்படுமே யுகந்த கழலை தான் தீர
வருமே யிரத்தக் கட்டியின் மேல் தி மகிழு மொருக்கம் பால் பூசே.

ஈயத் தகட்டின் மேல் யெருக்கம் பால் பூசிக் கழலை யுடைந்த புண்ணில் போட்டுக் கட்டவும்.

பேயின் வாழைப் பூ மலைப் பிட்டு உலத்திச் சாம்பலாய்
மாயக் கூரிய சுண்ணும்பில் மருவும் விளக்கெண்ணையில் குழைத்திடவே
வாய்மான புரைக் கழலை வந்த நாலு மூன்று நாள்
தீயப் பூசி லிக் குளம்பில் தீர வெடித்துச் சீ விழுமே.

கல்லுப்புத் தாளெரு சேரை பசும் பால் கலந்தே வேசித்து
நல்ல தரிசு பொடி செய்து நன்றாய் வெந்த யுப்புடனே
யெல்லா மொக்கூந் தேசி யென்றும் பிளிந்த சாற்றில் தானரைத்து
வல்ல காரந் தனிலிட வருந்து மின்னம் வகை கேளாய்.

கெவுரியைப் பொடித்து நன்றாய் கேளின்ன மாமணக்கு
ச்வி யெண்ணை தன்னிலிட்டுத் தான் குழைத்துக் கொண்டு
குவிந்திடு பானி தன்னில் குணமுடன் போட்ட போது
யவிர்ந்திடு மானி தானும் அலறியே யெழுந்து போமே.

கள்ளி வேர்ப் பட்டை நுணா மரத்தின் கதித்த பட்டை சிறு கிளா
யுள்ள சித்தவரை நன்குரி யுகந்த சாறணை புளி சடலை
வெள்ளை வேலங் கொழுந்துடனே.

வெத்திலை, சிரும்பு சாறுகும் கொன்று மதுரம், வெற்பாலை கோல மிளகு, காசுக் கட்டி

கருங் குங்கிலியம் களிப் பாக்கு கடுக்காய் கூட்டி நாளி யென்ணை
யொருங்கி லது மாவா யிடித் துள்ளுங் கஞ்சி தான் கொடுத்து
யிருங்குப் புரைக் கழலையில் பூச யிடறி யோடும் புண்சளெல்லாம்
மருங்காய்க் குறி தான் வேத முனி யருளிச் செய்த படி யிதுவே.

<u>சொறி குட்டத்தின் குணம் மருந்து</u> :-

சொறிதக் காய்ந்து மங்கிச் சுடு நீர் போல வெதும்பி மெய்யும்
ஆறொக்கப் போலிச் சார்ந்து யழலது வெதும்பி நிதி யங்கங்
குடெட்ன்ட போலத் தொலித்து குருதியுந் திவவாய் மூத்தி
துளெட்டை போல் சொறிந்தழுக்கும் சொறி குட்ட மென்னலாமே.

<u>இதக்கு மருந்து</u> :-

மஞ்சள் கிழங்கு யட்டை தனில் மருவுஞ் சுண்ணும்பு தான் கூட்டி
மிஞ்சக் கொடுவேலி சாறு விட்டு மேவக் குழைத்துத் தான் வைத்து
மிஞ்சு நெச்சன செங்கல் கொண்டு மிகவுந் தேய்த்துக் கழுவிய பின்
வஞ்சியாகத் தானெக்கி வண்மை சொல்வோம் மகிழ்ந்து கேள்.

முந்து மஞ்சள் கிழங்கு தான் முசியக் காயக் கெச்சன்மம்
பிந்தப் பூசி யிருப்பை யுடன் பெருகும் புன்னைக்கும் தாரைத்து
யந்தப் பிறகே தான் தேய்த்து யதுக்கு வெந்நீர் தான் விட்டுப்
பிந்தக் குளிக்கத் தானேடும் பெருகுஞ் சொறி குட்டம் பேசியதே.

கழல் கொடி யிலை மிளகு கருது நன்னல் பலங்கள்
யிளசவே யிடித் தரைத்து யென்ணையுடம் நாளி விட்டு
வளம் பெறக் காச்சிக் கொண்டு வடித்துக் குடிக்கத்
தேய்க்க குளப்பத் செய் சொறியின் குட்டம் குடி போகு மென்னலாமே.

<u>புளவை நிதானம் குணம்</u> :-

ஆயுரு வேத முன்னேட்டுடன் பேசி வைத்த நோய் மிகு பிளவை தன்னை
நோயதாய்த் தீர்க்க வேண்டி வாய்மையாய் மருந்து காரம் மற்றுள்ள பரிகாரங்கள்.
தூய்மையாய் தெளியக் கண்டு சுக்ம் பட மருந்து செய்வோம்.

பெரிய பிளவை முதுகெலும்பில் பெருச்சுப் பனைக்கில் நடு முதுகில்
யருமை யதுவு மாறுஞ் யடங்க வுழலை யற வெடுக்கும்
யரிய பொன்னுவாரை யல்லி யிலை யறவும் பின்னைக் காயளவும்
யுரிய பழு மோரில்க் குடிக்க தபன் முழலை யோடிப் போம்.

முதுகிடை யடைத்துத் தாள முள்ளமுந் தண்டில்
பத்தியத்வுங் காயம் போலே பார்ப்னெயவை யமுழுங் கண்ணு
மதமுற மருந்து நாலு மத்துள்ள கருவிளையும்
விதியது தப்ப மீள மருந்து கண்டிருந்து செய்வோம்.

வெப்புடன் குத்து மூச்சும் விடா நன்கு மியல் கோபங்கள்
தப்பிடா நாவறச்சி தருகிடா சந்தின் வாதை
முப்படத் தகனம் போன்றும் முறைமையில் வியாதி தானும்
மிப்படிக் குணங்களாலு மிரு வகைப் பிளவையாமே.

வெப்புடன் குத்து மூச்சும் விடா நன்கு மியல் கோபங்கள்
தப்பிடா நாவறச்சி தருகிடா சந்தின்
பக்கப் பிளவை மார்பு தனில் விரல் தனில் பார்த் தோன்று கோல் போலே
நெக்கட் செம்மையாக நேர்படும் நெஞ்சு தன்னில்
கக்கருங் குழலினுளே கருவியால்க் சீறிக் காரம்
வெக்கடப் பச்சச் சத்தம் புளவையும் விட்டுப் போமே.

முசகில் பத்தி யுறை போலே முள்ளந் தண்டில் தளைத்தபடி
யிறவே யருகில் கவுறும் யில்லை யெங்கில்க் கன்னைப் படு மத்திலே
மேனி குளிராகுந் தவன முழுலை கபிச்சலுடன் யிவை தான்
பக்கப் பிளவை யது யினிநாங் காரங் கீறியதே.

காரந் தரிசு பாசானங் கதியா தளவில் குறையுயாமல்
சேரப் பொடித்து வெண்ணையுடன் திரும்ப யரைத்துச் சீலையுடன்
யாரத் தடவி யடச் சீலை யதனைப் புண்ணில் தானிடவே
பாரப் பிளவை யியந்நருகிப் பறந்திடு மென்பார் பார் முனியே.

பரந்திடும் புண்ணிற் காரம் பகத் தவிலாமை தீரப்
பிறந்திடுந் தயிருஞ் சோறும் பிசைந்து வை மூன்று நாளில்
யரந்து வய்த்துப்புக் கட்டி யறிவித்து வேக வைத்துப் பின்னை
சிறந்திடும் யெண்ணை புண்ணில் தெளிய நீர் மருந்து செப்பே.

செப்பமாய் யெண்ணை வைக்கச் சிறக்க வேயாக நாளி
யுப்புடன் அடரி புலா ஒன்றெப்பும் பெருஞ் சரக்கும்
யிப்படி யிரண்டிடையாய் யிருபதாகத் தானெடுத்து
தப்பவே ~~சீ~~ பாலுங் கூட்டி சரக்குமா மனக் கெண்ணை வைய்யே.

என்னையுஞ் சீலை தானும் யிடை விடாப் பக்கலதற்கும்
நந்து மாவரை யிலை தானும் நயக்க வேருந்தான் கூட்டி
புண்ணின் மேல் வைத்துக் கட்டப் புள்வையு முலரவேண்டும்
யுண்மையா யுரைக்க முன்னோர் யுறுதியா யுரைத்தார் தாமே.

கண்டதோர் கறியால் நெய் கருத்தினி லூற்ற தெல்லாம்
கொண்டிடக் குத்தமாருங் குணமதுங் கூறினரே புளவையுளலை தவனம்
பெருந்தாப முள் மூச்சு சுரங்கள் வறட்சி குளறி வெப்பல் குறைக் கன்னைக்
கொள்ளாத் தனந் தலற பிடுத்தல் லமது செறியுங் கொடி யிடையே மார் வாதை
யது கண்டால் லமுவு விதி சேர் வாதை விளையது தான் மீள வறியாதே.

மத்திம மலசலங்கள் மற்றுள விளிகள் நாசி
உத்தம செவிகள் நாக்கு யுச்சியிற் பஞ்சிப் பாற்கில்
யித்தனை குணமுங் கெட்டு யிருந்ததே யருந்து கண்டால்
வத்தகர் தன் முன் சென்று மீளுவ தருமை தானே.

ஆவரை நெல்லி வில்ல மருவும் நீர்ப் புலா வேரும்
கோவினில் வெண்ணை தன்னில் குழைத்து வக்கத்திற் பூச
ஆவன நதல போதக வீக்கம் மதிகப் பட்டாலு தன்னலது
தனிய தாவிக் குழைத்து பார்க்கையிலே தயிருஞ் சோறுங் கட்டிடுமே.

வஞ்சிக் கொடியாய் நீ கேளாய் மருவு முலைப்பால் தன்றேடே
யிஞ்சி வராகிக் கிழங்கென்றும் யிடித்த யாவின் வெண்ணை யுடன்
தஞ்சப் படவே யரைத் தொன்றய்த் தானே புண்ணில் யிசப் போடப்
பஞ்சு போலே வெருத்தேசிப் பறந்தே யோடும் புளவையதே.

மலை சுமந்த மென் கொடியியும் வன் குருவை நெல்லரிசி
யலர் சிறந்த யாவரையும் மானதோர் தாது மன்றித்
துலை விலா நீற் பெருத்துத் துவனிலே யெது மிடத்து
கலை சிறந்தது யிம் மருந்து கருதியுள்க் கொள்ளும் போமே.

ஆவரை யிலை பரித்து ஆத் தீய வறத்தாவரை வெருகனைத் தானரைந்து
யிருத்தே சிவக்கப் பொடி செய்து பாரப் புளவை சீலை நீர் தான்
பரந்து புண்ணில் நெய் பசி சேரத் தாலுந் தடவி விடும் சிவறும் நீர் தான்
தீந்திடுமே.

ஏல மிலவங்கஞ் செங்கழு நீர் ரென்னுடன் கோட்ட மதிமதுரம்
மேலுங் கிரும்பு சித்தரத்தை மேவுங் கருஞ்சீரகஞ் சுக்குடனே.

கால மிளகு கடுக்காயும் கதித்த தான்றி நெல்லியுடன்
சாலச் சுட்ட விரை நாலுடனே தயங்கும் வெருகங் காமே

சந்தனந் தேவதாரமுடன் தானிரு வேலி விலாமிச்சம்
வந்த முனிவன் சிறு முட்டி வருந்தாந் காஞ்சொறி வெதுதலை வேர்
தந்த சீந்தில் ஏர் துவளை தானே கண்டங் கத்திரி நெருஞ்சில் வேர்
வந்த செப்பு நெருஞ்சியுடன் வாறுஞ் செங்கத்தாரி வேராமே.

முட்டி கொற்றன் விட்டுளறு சிராந்தி யுட்டன முனிந்த செங்கழுநீர்
சட்டி யடுத்த வெத்திலை தண்டின நீராவு தொன்று நன்னாரி
தொடுத்த கையயான் வளசியுடன் தோன்றுங் கம்பம் புலாம்
தடுத்த முசுகரை தயிலம் பட்டை தானத்தி யித்தி யரசுடனே.

அத்திப் பட்டை தென்னம் வேர் யான நிம்பப் பட்டையுடன்
மீந்தபுளியிலை நாக்குடனே யிடித்த படியு மொன்றுளும்
வாத்த நல்லெண்ணை ரண்டு படி மருவு மாவின் நெய்யுரியின்
கோத்த பசும் பாலிரு படியும் கொண்டே யெடுத்துக் கசாயமதாய்

~~குழலிக் கசாயந் தன்னில்~~

குழலிக் கசாயந் தன்னில் பாலெண்ணை கொண்டே நெய்யுந் தான்
புகட்டி யுருவிலா எண்ணை நாடும் பதமாய் மகிழ்ந்த வடித்துக் கொ
யுமுமே களஞ்சியுட் கொள்ள யுகந்து மேலந் தான் பூசி யறுமே சகல வியாதிகளும் யான
புள்வை விப்புருதி.

வெப்பாலை குமுளம் வேர் வென்னெற்று மிகத்த கோடக சாலையுடன்
யொப்பா மஞ்சள் மிளகுடனே யொக்கச் சமமாய்ப் பொடி செய்து
தப்பா தொரு படி யெண்ணை தனில் தானே வெந்து விட்ட பின்பு
யப்பா பசவுடன் கொள்ள யறுமே புளவைகளானது.வே.

சீனக் காரம் நேர்வாளஞ் சீரா யரைத்து வெண்ணையிலல்
பானப்பு புளவையி லிட்டாக்கால் பருக்கும் வேதினை மாயிறிடும்
தானமாக வுடையுமது சகலமும் நீரும் மாறியும் போம்
சீனிக் காரம் வெண்ணை பின்னை தீரும் புண்ணும் மென்பேர் முனியே.

<u>சன்னி வருகிற முதல்க் குணங்களிறியும்படி :-</u>

அறுபோக வியாதியாலும் மடி வயத்தடியிலும்
நினைவு குடியிலும் நின்றிடுங் குளமையாலும்
மனமது மருகையாலும் நாசி நீரோடத்ததாலும்
சனி முதலாக வந்து சன்னி தான் தோன்று மாறே.

சன்னி யெது மிந்த மயக்க சன்னி வாதக்க சீதரவுடன் தாப சன்னி
~~யெது-பித்த-மயக்க-சன்னி~~-குரை சன்னியுடன் திரக சன்னியுள் விலங்கியோடு மாகச் சன்னி
வன்னி சிறை கன்ன குறைச் சன்னியுடன் தாரணிமான் நிலை கெட்டவுடனே நிறை சன்னி
இன்னிவை பதிமூன்றுக்கும் மிளங்கிய பேரி தென்றியம்பினார் முனிவர் தாமே.

மந்தக சன்னியும் மயக்க முற்றனுஞ் சன்னி சந்தக சீதர சன்னி
தலை படுஞ் சாப சன்னி முந்தவே வாதத்தாலே முடுகிட வந்த தென்க
மந்த மாமுனிவன் தானும் வகுத்து நாலுரைக்க வுற்றான்..

விறையலாஞ் சன்னியோடு மேவிய தீர்க்க சன்னி
யரையலாம் விலங்கி சன்னி யமரில்லா மகா சன்னி நிறை கமள் குழலிருளே
நிவை நாலு தாலுங் கேளாய் பிறை நுதலணிந்த பேதை பித்தத்தில் வந்ததாமே
சிறை சன்னியுஞ் சேர் சிறை சன்னியும் நிரை தாரணியில் நின்ற நிலை சன்னியும்
பறையாத சன்னி பர்ந்த நிறை சன்னி திறை கொருஞ் சன்னி சிலேற்பனத்தாலிதுவே.

இவ்வகை பதிமூன்றந் தான் இறங்கியே மூன்றில் நிற்கும்
நவ்வகை நல்ல மொழியிருளே நவின்றிடக் கேளாய் மானே
யொவ்வாத சாப சன்னி யுயர் பித்த மாகா சன்னி
செவ்விலா சிலேற்பனத்தில் சேர் நிச சன்னியாமே.

<u>இதுக்கு மருந்து :-</u>

பற்படாகம் கடுகு கண்டங் கத்திரி வேர் பரிந்த ரோசினம் பேய்ப்புடல்
யெத் பரிசால் மல்லிகை சுக்கு இவை யோரொன்றிரு களஞ்சாய்
நிறப்பாக யிரு நாழி நீர் விட்டுழக்காய்க் சிறும்பு நீ தான் மேல் பொடியே
அப்பா கொண்டிடுகில் விட்டோடு மந்த வரும் வேறே.

<u>மயக்க சன்னியின் குணம் மருந்து :-</u>

எடுத் தெறியுங் கை கால் யிரு கண்ணுங் கன்னீரோடி
யடுத்திடும் வழியும் நட்டுயவர் பல்லு மிகவே கோர்த்து
எடுத்திடுஞ் செவி புதைத்து யியக்க மூன்றென்னுந் தோனில்
மடுத்திடுங் குழலிருளே மயக்கமாஞ் சன்னியாமே.

<u>இதுக்கு மருந்து :-</u>

யேந்தலாடா தோ டை ஆ தவளை யிருப்பைப் பூ வழுதலை வேர்
முந்தப் பற்படாகஞ் சிந்தா முட்டி முத்தக் காசு நன்னாரி புடல்
கூந்த சுக்குத் திப்பிலி சீரகமும் கொத்தமல்லி கூவிளமும்
சேந்த நீரெட்டொன்றுக் காச்சித் தேன் சேர்த்துக் குடி மயக்கந் தீரு மென்றே.

<u>சீதாங்க சன்னியின் குணம் மருந்து :-</u>

குளைந் துளைந்து லைந்து நொந்து குத்திடும் சரீர மெங்கும்
அளர்ந் தளர்ந் தங்கம் வேர்த் தடி பிடி நடுவே நெத்து
யுளர்ந் அலர்ந்தலர்ந்து நாவும் உத்த நீர் வத்து மாகில்
யிளந் திளங்கும் சன்னியது சீதாங்க சன்னியாமே.

<u>இதுக்கு மருந்து :-</u>

பெருவாகை பாதிரி குமிளம் பேராமல்லி வில்லஞ் சிந்த மல்லி
நெருஞ்சில் நன்னாரி கண்டங் கத்திரி நீர் விட் டெட்டொன்றுய்க் காய்ச்சி
யருந் தேனு மிஞ்சி நீருடனே வாய்ப்பாய்க் கொடுத்திடுகில்
அருண்டே யோடுஞ் சீதாங்க சன்னி யரணை யுண்மை யென்றே.

தாப சன்னி குணம் :-

தாப சன்னி குணம் :-

வில்லது போல் வளைந்து மெய்யு மேலெல்லாம் வேர்த்து நொந்து
சொல்வது யங் கொள்ளாது தனுக் கென்ன நடுக்க முற்று
நல்ல கண் சிமிட்டிக் காட்டி நடுக்கமுஞ் சுரமுந் தோன்றி
பல்லது கோத்து நிற்கும் பல தாப சன்னியாமே.

இதுக்கு மருந்து :-

வெங்கா யுள்ளி ரோகணியும் வேளை நொச்சி வேராகும்
மங்காச் சுக்குத் தேவதாரம் ஆக வேரொன்றிரு களஞ்சு
தங்க நீர் மெட்டொன்றாய் தருகா திருசி நீரெடுத்து
பங்காத் தாப பல சன்னி பதறி யோடிப் போய் விடுமே.

விரை சன்னியின் குணம் மருந்து :-

விடியலும் நடுக்கந் தானும் மேனியும் வெற்றலே மகு ய றையிலும்
கோப மாடு மயப் புரம்புறத்தே யோடி யிறை யிறை
யெடுக் கொண்டு யெனக் கூறு தென்று சொல்லி குறையது
பேசுமாகில் காதிரைத்திடும் வறையலாமே.

இதுக்கு மருந்து :-

வேளை நொச்சி வேருடன் சுக்கு யாளமாக யரைத்துப் புளிந்த நீர்
காளமாகவே காச்சிக்குடித்திடில் லேளங் கெட்டது யெவ்வுரை சன்னியே.

தாக சன்னியின் குண மருந்து :-

குமுகுமுப்போடு கொட்டாவி பின்னையும் மறு மறுப்போடு வாங்கிப் புரத்தலும்
முறுமுறுப்போடு மோக்காளஞ் சத்திலும் செய திறத்திவை செல்லுந் தீர்க்கமே.

இதுக்கு மருந்து :-

சீந்தி புடல் ராயிச்சம் சித்த மல்லி பேரமல்லி சிறு தேக்கு
வாய்ந்த ரோகணி வசம்பு திப்பிலி வாய்த்த யிரண்டாங் களஞ்சி
நீய்ந்த நீரெட்டொன்றாக நினவுடனே குடித்திடில்
பாந்தொடுந் தாகமெது பயனது அறிந்து சொன்னேன்.

வலங்கின சன்னியின் குணம் மருந்து :-

நெஞ்சு மெல்ல நெறிந்து வலங்கிடும் கஞ்சி சோறும் கலங்கக் கவிழ்த்திடும்
மஞ்சி மேனி மறைத்து நடுங்கிடும் விஞ்சுமேவி விலங்கிடும் சன்னியே.

இதுக்கு மருந்து :-

அரத்தை கொத்தமல்லிகை சுக்கு யான தாதவளை பற்படாகம்
உரைத்த பூசனித் தண்டு திராயுடனே முத்தந் தான் கூட்டி
விரைத்த நீரெட்டொன்றாய் விரவிக் காச்சிக்குடித்திடுகில்
யுரைத்த விலங்க சன்னியது யோடிப் போகுங் கண்டீரே.

மகா சன்னியின் குணம் மருந்து :-

வேர்வை கொள்ளும் முனிந்திடும் சிடக் குறதிக் கொண்டது
யகங் களயிகத் தந்தாலும் அன்னம் வெறுத்திடறுட் கொள்ளும்
பகங்களெரிந்திடுங் காலச்சி மிகவே பரந் தெரியா நிற்கும்
சிகங்கள் தன்னில் மகா சன்னி சேர்ந்தால் பிழைப்பதரிது தெரியுங் காலே.

(மேல் முடிவு யில்லை)

வேறு நூல் :

வங்க சூஸ்த்திரம் :-

1. கேளு நீ சார மொன்று கெடியுறு கார மொன்று
   வாரு நீ மாலின் தேவி வளம் பெற வொன்று கூட்டி
   தோரு யருப்பு நீரால் சுகப்பட அரைத்து மூன்றும்
   வேருயா தீயில் வைத்து விளங்கிய செயத்தைப் பாரே.

2. செயப்படா பின்பு தானும் சேர் வங்கத் தகட்டின் மேலே
   கயப்பட்ட வங்கந் தானும் கடிகியே நொறுங்கும் பாரு
   அயப்பட்ட வங்கந் தன்னை அரைத்து நீ வெள்ளி மேலே
   பயப்பட்டுப் புசி வாட்டிப் பருவமாய் புடத்தில் போடே.

3. போட்டிடாய் சீந்தாலும் புகழ் பெற்ற குருவே யாகும்
   ஆட்டிய குருவில் ரெட்டி அப்பனே சூதம் சேரு
   நீட்டி முன் தாகளத்தை லேபித்துக் கவசமாக்கி
   வாட்டியே வாட்ட மணி போல் கட்டும் பாரே.

4. பாரு நீ யிந்தச் சூதம் பாச்சு நூர் வங்கத்துள்ளே
   ஆறுயர் வெள்ளியாகும் அசையாது யீயத்துக்கு தேவயர்
   ரசித வித்தை தேவிக்கி யீசன் சொன்னார்
   காறுயர் நவ கோத்திரத்தில் காட்டி வெள்ளியாமே.

22.5.64.

5. ஆமிந்தப் போக்கைவிட்டு அறையுறேனேம வித்தை
காமிந்தக் சார மொன்று கடிய தோர் சார மொன்று
வாமிந்தக் கெந்தி யொன்று வார்த்தரை யுப்பு நீரை
சேமிந்தத் தீயில் வைத்து சியத்தைப் பார் சியத்தைப் பாரே.

6. பாரு நீ கெந்தி கட்டில் பாச்சு பின் கெந்தி யொன்று
தாறு னீ யரைத்துப் போட்டு தான் ரெண்டு மொக்கக் கட்டும்
சேரு நீர் நாக ரதம் சேர்த்திதைக் கவசம் கட்டி
நாறு நீடினலுக்குள்ளே யுறுதியாய் புடத்தைப் போடே.

7. போட்டிடில் ஒத நாகம் பொலிவுடன் அளன்று கட்டும்
ஆட்டிற் கட்டு மாட்டும் அப்பனே புசிப் போடு
கூட்டியே ஒதே நாகம் குறியுறச் சேர்த்த பின்பு
மூட்டியே நாவக் கொன்று முயற்சியே தங்கம் சேரே.

8. சேர்த்திடத் தங்கந் தாரம் சிறந்தனற் களங்கேயாகும்
கோத்திடில் நவலோகத்தில் கொடுக்கு முன்னே மாகும்
ஆத்திட ஈவ தென்னி லன்பருக் கொன்றே யீந்து
பார்த்திட் யீசனெந் தாய் பராபரைக் கருணுவாரே.

9. வாறு கேள் நோயில்லாத வளம் பெறு சடத்தைப் பார்த்து
தாழுமாம் பாண்டத்துள்ளே தனி மலம் விட்வும் சொல்லி
வேறி கேள முரி வார்த்து விளங்கிய குளம்பு செய்து
கூறு கேள் காச்சி வைத்து கொட்டி நீ கலசம் பாச்சே.

10. பாச்சியே கலசமாக்கி பதையாமல் சில்லுப் போட்டு
ஆச்சிய பிடத்தை யோட்டி லப்பனே தமர் சீறிட்டு
ஒச்சிய தமரின் வாயில் ஒக்கொரு கலயம் வைத்துக்
காச்சியாய் மூடி மேலே கடுக நீ புடத்தைப் போடே.

11. போட்டிடத் தயிலம் கீழே புகழ் மேலே சாம்பல் நிற்கும்
ஆட்டிய சாம்ப லொன்றில் அமுரி தான் பத்து வாரு
கூட்டியே கரைத்து வைத்து கொள்கியே மூன்று நாளும்
நீட்டியே தெளிவை வாங்கி நேர்படக் காச்சிடாயே.

12. காச்சிடு வார்த்து வார்த்துக் கடுகிய குளம்பில் வாங்கு
ஆச்சியே யினங்கள் சீன மதிரோடு வீரம் பூரம்
வோச்சியே சாரத்தோடு வுருகி யெழு ருசு அன்னம்
தாச்சிய ஆறுங் கேரு தனியாகு காரம் போடே.

13. போட்டு நீ தயிலம் வார்த்துப் புனர்ச்சியா யரைத்துக் கொண்டு
மூட்டு நீ குளம்பிலேடே மூதண்ட ரவியில் வையே
ஆட்டிய பீங்கான் கிண்ணி யதுக்குள்ளே யிதனை வைத்து
கோட்டு நீ வெயிலில் வைத்துக்குளம்பது முத்தாகுமே.

14. ஆமிதை முத்தா னென்று அறைந்திட்ட நாமங் கேரு
தாமிதிப் அண்ட வுப்பு தனிப் புளி ரெண்டுஞ் சென்று
காமிது நிறுப்பாய் கரு மலம் புளியே யாச்சு
வேமிதில் மூலத் தீயில் வித்திறல் பிறந்த வாறே.

15. பிறந்திடு மகிமையாலே பேராச்சு முத்ததா னென்று
அறிந்திதை யெடுக்க மாட்டார் அப்பனே நெகிழ்ந்த மென்பார்
பரிந்திடு வாதம் தாளம் பார்த்திதை அசித் தோற்று
முறிந்திடு நால் களெல்லா முத்தியுங் கிடையா தென்னே.

16. கிடையாத பிணி யிருப்பை கேட்கிறும் வல்லோர் சொல்வார்
அடையாத பணியிருப்பிடை வெல்லாத் சொல்லக் கேரு
உடையா சீன முப்பூ கூட்டிய மொ[illegible]கையாகும்
படையாத அருசு சனம் பகரிது மொரு கையாமே.

17. ஒன்றுன இனங்களோடு வூட்டு நீ புளிய மொன்று
ஒன்றுன நாதம் விந்து தானதாம் பிளியு முப்பு
குன்றுன கெந்தியோடு கல்லுப்பு புளியு முப்பு
வன்றுன என்னைப் பெற்ற மாயிக்கிச் சொன்ன வாறே.

18. ஆமென யின்னம் சொல்லி அறையிறே னறிந்த மட்டும்
தாமென் அண்டத்துள்ளே தந்த வெண் கருவேயுப்பு
வாமென் மருள மாற்கம் வழுங்கிய புளியே யாச்சு
நாமென் மேலிரேடு வுசந்திடு நாகமாமே.

19. வாறு கேருப் பேயீசன் வழுங்கியபுளியே சத்தி
கூறு கேள் ரெண்டிலும் கொள்கித்து வாத மெல்லா
மாறு கேள் சாரந் தாரம் வழுங்கிய மார்கங் கண்டால்
தாறு கேளாநந் தாண்டி தனி வெளிப் பறமுமாமே.

20. ஆமிது முப்பு அப்பனே புளியாங் கெந்தி
பேரமிது கிளிஞ்சி யுப்பு பருக்கையும் புளியு மாகும்
தாமது சங்கே யுப்பு தனிச் சதை புளியு மாகும்
வாமது நத்தையுப்பு வண சதை புளியுஞ் சொல்லே.

21. புளியுப்பு ரெண்டினுலே பெருத்தது வாத மாச்சு
புளியுப்பு ரெண்டுங் கண்டோர் பெரிய வராவர் கண்டார்
புளியுப்பு ரெண்டுங் கூட்டி பேறண்டச் சுண்ணமாமே.

22. சுண்ணத்தின் மாற்கம் சொல்லத் தலையாது யென்றுலக் கேளீர்
சுண்ணத்தை விட்ட அண்டால் சுக கார சாரம் சாகா
சுண்ணத்தை யறியாதர்க்குச் சொல்லில் லைக் குருவுமில்லை
சுண்ணத்தின் பெருமை சொல்லச் சுந்திரா மயங்கினுரே.

23. மயக்கமே தீர்த்து ஆத்தாள் வகையாகக் கேட்கக் கேட்க
தயக்கந்தான் கார சாரந் தனித்திடும் மாற்கங் கேளாய்
தயக்கிடு வுப்பே சாரம் தயங்கிய புளியே சாரம்
பயக்கிய ரெண்டுங் கூடிப்ப பதையாமல் சாகும் பாரே.

24. பாரு நீ சாவு தாரும் பரிசிக்கில் சேத்தும் சாகா
தாரு நீ இனத்தைக் கண்டு சரக்கெல்லாம் தாக்கிக் கொல்லும்
கோரு நீ தங்க மும் கூட்டி நீ களங்கு செய்யில்
வாறு நீர் வாய் நீரல்லால் மதி தொன்று வாரா தென்னே.

25. என்னவே கார சார மீயது பத்து நாலும் யென்னவே
யுபரசங்கள் இரு நூறு கார சாரம்
யென்னவே நாதம் விந்தா லெடுத்தது காரசார
மென்னவே போக நாதரியல்புட னுருவாரே.

முற்றும்.

வாய்வு_எல்லாத்துக்கும்:-

இந்துப்புக் கத்தாழைச் சாறு விட்டரைத்து வில்லை செய்து காய வைத்து ஓட்டில் வைத்துச் சீலை மண் செய்து கெச புடம் போட பற்பமாகும்.

இதற்கு_மேல்_மருந்து:-

சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, ஏலம், சுக்கு, திப்பிலி, மிளகு, லவங்கப் பட்டை, சீரகம், சித்தரத்தை இது வகைக்கு விராகனிடை.க, இதுகளை இள வறுப்பாய் வறுத்து சூரணம் செய்து பற்பத்துடன் கலந்து தேனும் இஞ்சிச் சாறும் விட்டு லேகித்து இரண்டு நேரமும் சாப்பிட குன்மம், வாந்தி, நெஞ்சடைப்பு சீரி பாரிச வாய்வு, தீரும். இருமல் தீரும்.

தோஷத்துக்கு_தளம்:-

ரசம், நேர்வாளம் சிரட்டைக் கரி இந்த மூன்று வகையும் சமன் கொண்டு தேங்காய்ப் பால் விட்டரைத்து ஒரு சாமம் சிமிளில் வைத்து தளம் போடவும்.

உப்புக்_கட்டு:-

தவசி முருங்கை வல்லாரை மேனி பெரும்பாலை, கருந் தும்பை சீந்தி அவுரி கருநொச்சி செவ்வகத்தி இந்த வகைச் சாத்தில் தனித் தனியே யரைத்து வில்லை செய்து காய வைத்து ஓட்டில் வைத்து சீலை மண் செய்து குக்குட புடம் போடவும் கட்டும். கத்தாழை சாறு விட்டு கட்டவும்.

சீனம்_வெடியுப்புக்_கட்டு:-

~~கத்தாழைச்-சாறு-விட்டு-கட்-~~ மால் தேவியில் கெந்தகம் கட்டும். கோவைச் சாத்தில் கெந்தகம் கட்டும். முருக்கிலைச் சாத்தில் தாளகம் கட்டும். லிங்கமும் கட்டும். ~~நவச்சாரக்~~

நவச்சாரக்_கட்டு:-

நவச்சாரத்தை முருக்கிலைச் சாறு விட்டரைத்து வில்லை செய்து காய வைத்து புனிரி லெரித்து வாங்கில் கட்டும்.

சுரத்துக்கு_ராச_காந்தரிக்_குளிகை:-

காந்த மிரத மரிதாங் கடுகுரோகணி, சீநாபி யொடு
காய்ந்த நிம்பளச் சாற்றிலரைத்து கடுகளவா யுண்டை
யீய்ந்தார் குமரிச் சாறதனில் லாதிருந்தால் முலைப்பாலில்
வீய்ந்த வெச்சிட்ட சுரமும் விடுமே நாலு நாளிகையில்.

காமேசுரன்_குளிகை:-

சுக்குடன் கடுகுச்சி அஞ்சு சொன்ன நேர்வாளம் மூன்று
மிக்க கெந்தக மிரண்டும் மிளகொரு மூன்றதாகும்
தக்க வெண்காரம் நாலு தானமாம் ரசமும மூன்று
சிக்கென யிலைக் கள்ளிச் சாறு வார்த்தரைத்துச் சேரே.

<u>சன்னி பதிமூன்றுக்கு:-</u>

வெங்காரம், சாதிலிங்கம் மிக்க மிளகு சரி கூட்டி
தங்கா யிஞ்சிச் சாறு விட்டுச் சரியாய் மூன்று நாளரைத்து
பங்காய் பாசப் பயறளவு பாகமாக நிழலுலத்தி
தங்கா யிஞ்சிச் சாத்திலிடச் சன்னி பதிமூன்றுடனே போகும்.

<u>சுராங்கிசக் குளிகை:-</u>

ஆகும் பாசாணஞ் சாதிலிங்க மரிய தார மிவை மூன்று
பாகலிலையுஞ் சாற்றரைத்து பாசிப் பயறள வுண்டை செய்து
வாகா யுளக்கு மோரிலிட மற்றும் பத்திய மோர்ச் சோறே.
போகதல்லாற் குளிர் சுரமும் போகும் சுரமும் போனதுவே.

<u>முட்டடைப்பானுக்கு:-</u>

ஊஞ்சல் பட்டை சிலை யூஞ்சல் பட்டை முருங்கைப் பட்டை, காட்டு முருங்கைப் பட்டை, மண்டை சீங்கிப் பட்டை, சீங்கிப் பட்டைடு புங்கம் பட்டை, முசுறு முட்டை ஒரு சேரை கட்டெறும்பு.15, வசம்பு, பெருங்காயம் இது வெல்லாம் சிறுநீர் விட்டு அரைத்து குளிகை செய்து நிழலுணர்த்தி சிறு நீரில் தொடுக்க மேல் சொல்லியது தீரும்.

<u>தாளக பற்பம்:-</u>

காடு பொன்னரிதாரம் வாங்கி வந்து சுண்ணாம்புக் கல்லில் சுத்தி செய்து குப்பை மேனிச் சாத்தில் சுருக்கு கொடுத்து கோழி முட்டைக் கருவெடுத்து வொளிக்கிப் போட்டு அந்தக் கோழி மொட்டில் எருமை வெண்ணையும் அரிதாரமும் பிடிக்க மட்டும் போட்டு வாய் மூடிச் சீலை மண் செய்து 10 எருவில் புடம் வைக்க பற்பமாம். இதற்கு அநுபானம் பூநாகம் கொண்டு வந்து இலுப்பைப் புண்ணாக்கில் சுத்தி செய்து மறுபடி பசும் பாலில் சுத்தி செய்து பொன்னிறமாய் திப்பிலியும் வறுத்து சரி நிறையாய்ச் சூரணித்து தேனில் குழப்பி வைத்துக் கொண்டு சுண்டைக்காய் பிரமாணம் அநுபானத்தில் பணவிடை பற்பம் சேர்த்துச் சாப்பிடவும் சுர முதலானது தீரும்.

<u>மாந்தத்துக்கு குளிகை:-</u>

திப்பிலி, மிளகு வசம்பு பெருங்காயம், சுக்கு ஒரு கொட்டைப் புடு களச்சி விதைப் பருப்பு இது வெல்லாம் பொடி தழை வாட்டிப் பிழிந்து அந்தச் சாறு விட்டு அரைத்துக் கடலை மாதிரிக் குளிகை செய்து வைத்துக் கொண்டு கண்டங் கத்திரி கசாயத்திலாவது, சமம் கசாயத்திலாவது ஒரு குளிகை மூன்று நேரம் கொடுக்கவும்.

<u>மேலும் காலும் வீங்கினதுக்கு:-</u>

நெல்லுமியைச் சுட்டுக் கருக்குப் பண்ணி இதில் பாவட்டைச் சாறு விட்டு அரைத்து மேல் யெங்கும் பூசித் தவளை யிட வீக்கம் வாங்கும்.

<u>அயச் செந்தூரம்:-</u>

அரப்பொடி ரசம், சவ்வீரம், நவச்சாரம், நாலும் சரியிடையாக கூட்டி மூன்று நாளரைத்து அடுப்பில் ஓடு வைத்து அதில் போட்டு தீ மூட்டி பனை ஓலை கொண்டு வறுக்கவும் ஓலை சிவந்தால் எடுத்து குட்டம் 80-க்கு 15 வீதம் வைத்து வலிக்கு கருப்பட்டியில் வைத்துக் கொடுக்கவும். பத்தியம் உப்பு வறுத்துக் கூட்டவும். மறு பத்தியமில்லை.

<u>பவள பற்பம்:-</u>

பவளத்துக்கு சீழா நெல்லி யிலை யரைத்துக் கவசம் கட்டி சீலை மண் செய்து புடம் போட பற்பமாம். மேகம் 21-க்கு நெய்யில் கொடுக்கவும். வாதத்துக்கு நொச்சியிலைச் சாத்தில் கொடுக்கவும். பித்தத்துக்கு மொசுமொசுக்கைச் சாத்தில் கொடுக்கவும்.

<u>தொண்டை கம்மலுக்கு:-</u>

சுக்கு, கடுக்காய், திப்பிலி, நாயுருவி விரை இதுகளை பொடி பண்ணி தேனில் நெய்யில் 5 நாள் சாப்பிடவும்.

<u>நேத்திர வாய்வு கண் புகைச்சலுக்கு:-</u>

கைய்யாந்தகரை நெல்லிப் பருப்பு, நீர்முள்ளி, வில்வயிலைச் சாறு. மிளகு, பசுவின் பால் படி $\frac{1}{2}$ விளக்கெண்ணை படி.$\frac{1}{2}$, இது வெல்லாம் யெரிச்சு முழுகவும். கண் புகைச்சல் தீரும்.

<u>மாட்டுக்கு மாடு சொக்கிலல் மருந்து:-</u>

மிளகு வெள்ளுள்ளி, குப்பை மேனி, வேலிப் பருத்தி இது நாலையும் துவைத்து உள்ளுக்கு புகட்டத் தீரும்.

<u>காது கேளாமல் சீ விழுகிறதுக்கு:-</u>

ஊமத்தை யிலைச் சாறு படி.$\frac{1}{4}$ நல்லெண்ணெ படி.$\frac{1}{2}$, அவுரி வேர், வெள்ளுள்ளி வசம்பு இது வெல்லாம் கட்டிக் காச்சிக் காதில் விடவும்.

வாழாத பெண்ணுக்கு:-

மருமத்தைங்காய், சிறுநீர் விட்டரைத்து நல்லெண்ணை உரி விட்டு மாவிடிச்சு பனிபாரம் சுட்டு மூன்று நாள் கொடுக்கவும். கருப்புக் கட்டி உப்பும் போடவும் கொடுக்கவும். நெருஞ்சி முள்ளை யெடுத்து திருகுக் கள்ளி மரத்திலே வைத்து எட்டு நாள் ஊறப் போட்டு எடுத்துக் காயப் போட்டு மிசிக்கவும். இதற்கு மாத்து எலுமிச்சம் பழச் சாறிலே வெள்ளாட்டு புழுக்கை சுட்டுக் கரியாக்கி முன் சொல்லும் சாறில் கலக்கிக் கொடுக்கவும்.

பிரமியத்துக்கு:--

நல்லெண்ணை ஒரு சிறங்கை நத்தைச் சூரி வேரில் ஒரு பாக்களவு கழுநீரில் இது மூன்றும் ஒன்றாய்க் கலந்து கொடுக்கவும். பத்தியம் புளி, புகை தவிர்க்கவும். குளிர்ந்த தண்ணீர் குடிக்கவும். கோழிக் காரத்தை தட்டி தண்ணீரிலே போட்டுச் சுண்ட வைத்துக் கொடுக்க நிற்கும்.

ரெத்தக் கழிச்சலுக்கு:---

வெள்ளாட்டுப் பாலில் எலுமிச்சம் பழச் சாறு விட்டு வாழைப் பழம் கட்டிக் கொடுக்கவும் நிற்கும். அம்மான் பச்சரிசியை வெள்ளாட்டுப் பாலில் கொடுக்க நிற்கும். தக்கு நல்லெண்ணையில் களிக் கிண்டித் தின்ன நிற்கும்.

கலிக்கம்:-

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகுரோகணி, வெங்கம், வாள் விளங்கம், கொத்தமல்லி, பெருங்காயம், இது வெல்லாம் பொடி செய்து வஸ்திர காயம் பண்ணி எலுமிச்சம் பழச் சாத்தில் ஒரு சாமமரைத்து சாறணைச் சாற்றில் ஒரு சாமமரைத்துக் கயறு போலுருட்டி நிழலிலே காய வைத்து எலுமிச்சைச் சாற்றிலாவது காடியிலாவது உரைத்துக் கண்ணிலிடவும். குளிர் சுரம் மாறல் இவையெல்லாம் தீரும்.

சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம், கொத்தமல்லி, குரோசானி, ஓமம் பெருங்காயம், கடுக்காய் களச்சிப் பருப்பு சற்றே சறுகச் சுட்டு இது வெல்லாம் பொடி பண்ணி வஸ்திர காயமிட்டு வெருகடிப் பிரமாணம் வென்னீரிலாவது முலைப் பாலிலாவது வார்க்கவும்.

சன்னி பதிமூனுக்கு:-

வெங்காரம், சாதிலிங்கம், மிக்க மிளகு சரி கூட்டி
தங்காயம் மிஞ்சி சாறு விட்டு சலிய மூன்று நாள் அரைத்து
பங்காயளவு பாகமாக நிழலுலர்த்தி தங்காய மிஞ்சிச் சாற்றுடன் விடச்
சன்னி பதிமூன்றுடன் போமே.

(இடையில் ஓலைகள் இல்லை)

பேதியாக லிங்கக் குளிகை:-

1. செய்யவே யின்னமொரு குளிகை கேளு திரமாகச் சாதிலிங்கம் பலந் தானென்று
பொய்யல்ல வெலிகாரம் பலந் தானென்று புகழ் சித்தி வாளமது பலந்தானென்று
நய்யவே தி குழிக கல்லில் பழச் சாறு விட்டு நாற் சாம மரைத்திட்டு ஒன்று போல
எய்யாம உருட்டியே நிழலுலர்த்தி யெந்தெந்த வியாதி கட்டும் யிடு ர்--க்கு.

2. எடுத்திடவே யின்னமொரு சேதி கேளு யியல்பா மேல் மருந்து நிறையாய் வாங்கி
கொடுத்திடவே குளிக் கல்லிலரைப்புக் கேளு கொம்புத் தேன் விட்டாட்டக் குளம்பதாகும்
மடுத்திடவே ரெண்டுந் தான் வகையாயத் தாளும் மற்க்கா மலரைத்து நீ பறனி வைத்து
வெடிப்பில்லாக் குளிர்ந்த தண்ணீர் கலக்கிக் கொள்ளு விதமாகக் குளம்பு சுண்டைக் காயளவுதானே.

குட்டோரித் தயிலம்:-

வேப்பெண்ணை படி.க, விளக்கெண்ணை படி.க, நல்லெண்ணை படி.க, புங்கெண்ணை படி.க, இலுப்பெண்ணை படி.க -கசாய மருந்து புங்கம் பட்டைகள், கள்ளிப்பட்டை, நொச்சிப் பட்டை, ஆய்ப் பட்டை, எருக்கம் வேர்ப் பட்டை கொடிவேலி வேர்ப் பட்டை ஆக வகைக்கு பலம்.4 இது வெல்லாம் யிடித்து ஒரு மிடாவில் போட்டு நாலு மரக்கால் தண்ணீர் விட்டுக் குறுணியாகக் காய்ச்சி தாளியில் வடித்து அதில் எருக்கம் பூச் சாறு படி.½, கண்டங்கத்திரிச் சாறு படி.½ வெள்ளாட்டுக் கோமியம் சாறு படி.½, சதுரக் கள்ளிப் பால் படி.3/4, இது வெல்லாங் கூட விட்டு இதுக்கு கலக்கம் மருந்து கொத்தமல்லி, கடுகு, வாய் விளங்கப் திப்பிலி, ஆனை திப்பிலி வெங்காரம், பெருங்காயம் அரிதாரம், மனோசிலை வெள்ளைப் பாசானம், கெவுரி பாசானம், தொட்டிப் பாசானம், சாதிலிங்கம் இது வகைக்கு விராகனிடை.½ இது வெல்லாங் கசாயத்திலரைத்துக் கலக்கிச்

சாறும் யென்னையும் பாலும் ஒன்றாய் தாளியி லாத்தி.க் காச்சி மெழுகு பதத்தில் வடித்து ஒரு கலசத்தில் வடித்து விநாயக பூசை செய்து தட்சணை வைத்து நிறை நாழி வைத்துப் பூசை பண்ணி வைத்துக் கொண்டு உள்ளுக்குக் கொடுக்கவும். மேலும் பசவும். கயில் படிக்கவும் இதுக்குத் தீரும் வியாதி உள் வீச்சு பிற வீச்சு, குமர கண்டன், முயலகன் நடுக்கு வாத சன்னி, சுர சன்னி, யிழுப்பு சன்னி மற்று முண்டான சன்னி மூன்றுந் தீரும். இது கை கண்டது.

<u>சித்திர வல்லாதி:-- ஆனந்தக் களிப்பு:-</u>

அத்தி முகனைத் துதித்தே தான் நல்ல அன்பான வல்லாதியின் இன்பமாய்ச் சொல் வேன் சித்திர மூலம் வெள்ளருகு நல்ல சிவனார் தம் வேம்புடன் சங்கம் வேர் குப்பி முத்தின தேங்காயின் நெத்து நல்ல மூலமாங் கெருடன் முக்கிலாம் வேரு புத்திலே முளைத் திலே முளைத்த வெள்ளெருக்கு சீர்த்தி போதவே சின்னி விளாத் திரு மிளகு வேரே.

2. சத்தி மிளகரணை வேரும் நல்ல சாதமாய்க் குன்று மணி செங்கத்தாரி வேரும்
உச்சிதமாய் வெப்பாலை வேரும் நல்ல உறுதியாம் வன்னியுடன் பிரப்பங் கிழங்கு
முத்தியாம் புத விருட்சம் நல்ல முனையான வாத சுரப்பனை பட்டை
சத்தியாங் கெந்தகர் ஒருசு நல்ல சரமான குதமது உத்தமுங் கூட்டே.

3. சித்திரமான சீரகமும் ரெண்டும் சிறப்பாய் மருந்தெல்லாம் பலமாய் நிறுத்து
விஸ்தார மாத் தலையின் எல்லம் நல்ல விளங்கிய யென்றும் வகைக்குச் சேர்
கொண்டு
முத்தின செங்கொட்டை நாலு நல்ல முதிரும் பறங்கிப் பட்டை பலமஞ்சு
பத்திரமாகவே யெடுத்து பரும் பாண்டத்தில் போட்டு நற் பால் தனிலே வெந்தே.

4. சித்திர வல்லாதி யென்று முனி செப்பினார் சீடருக்குப் தேசமாக
பத்திரமாகவே யிடித்து நறு நெய் பாகமாய் விட்டுத் தான் பாக்களவுண்டை
மண்டல மிரு போது கொள்ள நல்ல மாத்திரமாய் வியாதிநிய வகுத்துரைத்தேனே.

5. முத்தின சூலை கிரந்தி கால் கை முடக்குப் பிடிப்புத் திமிர்ப்புத் தடிப்பு
பத்தியுடன் மேகங்கள் வாதம் நல்ல பாங்கான கை காலிரல் வெருப்பு
வத்திய உடம்பிற் சிரங்கு நல்ல வகையான புழு வெட்டுக் கடி விஷ முதலாய்
சித்தி மித்தில மிருத்த வென் குட்டங் கிரந்தி சூலை அளி புண்ணுங் கபாலத்துச்
சூலை
கொத்திக் கிளித்து போலே நல்ல கூறான பாதத்தில் கீலாய் வெடித்து.

6. அந்தி கிரந்தி உன்னக்கு நல்ல ஆளக் கிரந்தியுந் தீராப் பறங்கியும்
சித்திர வல்லாதியைக் கண்டால் நோய்கள் திக்கென்று பட்சிகள் போலே பறக்கும்
பத்தியஞ் சொல்வேனிப் போது சிறு பாசிப் பருப்புத் துவரைப் பருப்பும்
முத்தின கத்திரிப் பிஞ்சும் வாழை மூங்கைப் பிஞ்சு சிறுகீரையாகும்.

சாதாவின் பால் மோரு நல்ல சதிரான வெள்ளாடு வீருல் குரவை கூட்டு
சத்தும் புளியைத் தொடாதே மிகு தையலா கூடச் சரசஞ் செய்யாதே
சித்தா மனக்கான யென்னை ரோகஞ் சீரான போது முழுகுவாய் வெந்நீர்
பத்தியாய் வல்லாதி தன்னை நல்ல பதருமல் ஆள்க் கண்டு பத்தியஞ் சொல்வீர்.

உட்டினங் கண்டால் நிறுத்து நல்லா உற்வான யென்னை வெந்நீரில் முழுகி
யித்தனையுந் தீரு மென்று நாதன் நல்ல யின்பமாய்த் தேவிக்கு அன்பா
யுரைத்தார் முத்தியா---------

<u>கவுரியார் குளம்பு:-</u> அகவல்.

சர்வேசுவரனார் சகலமும் படைத்தோன் சுருமறைப் பொருளால் யாவரும் பிழைக்க ஆகு பெரு சிவனார் குளம்பு சுரனந்தை திருவருளென்று செய்வித்த பேருக்கு யிரு நாளை நாளாற் றென்பதந் தீர சிறு வரு----வி செய் தானரன்றே.

கற்பித்த கடுக்காய் கடுகு யிந்துப்பு நற் பெருங்காயம் நல்ல மரேசிலை மெய் படு சீதம் மேவிய வெங்காரம் திப்பிலி சீரகம் சிறந்தரி தாரமும் ஒப்புடன் கடுகு ரோகணி நாவி அப்படி மருந்து யது பனிரெண்டும் இப்ப நேர்வாளம் யது சமன் கொண்டு யுற்பனைக்கு யுயிற வாங்கி நஞ்சது போக்கி நல்லின வறுப்பாய் அஞ்சாமல் சூரணமது பொடி செய்து கொஞ்சமாய்க் குளம்பு கூட்டிட வேண்டில் வஞ்சிய பாத்தலாஞ் சாற்றிலோர் நாள் ஆகாசப் பு---தின கரி சுட்டு பாகான யஞ்சு விராகனே சேத்து பாகான கருப்புட்டி படுபாதி சேர்த்து வேகா--ங்கின் பால் விட்டரைத்து சேகாத்துடனே சிமிளிலடைத்து வாருள்ள நோய்க்கு வகை குன்றி யொன்றே வெள்ளை யக்கரங்கள் வித மெமு தோஷம் கருத்த அக்கரங்கள் கண்டது யொருஞ்சில லத் தோஷம் சிலப்புகளோமும் மூவெழு தோஷ முரிந்திட வேண்டில் நாவிலே பணவிடை நன்றாய் தேய்த்து கூவிய வென்னீர் குடித்திடத் தீரும். சன்னிகள் பத்துந் தான் பதி மூன்று மின்னில மீதில் ~~/~~ எல்லாச் சுரமும் வென்னீரில் குன்றி விரைந்திடத் தீரும். கடுக்காய்ச் சாத்தினில் கள்ஞ்சுர கொள்ளி லடுக்கிச் சுரங்களிருபத்தேருமும். முடுக்குங் குளிர் சுர மூவொர்ன்பதேமும் முடுக்குஞ் சுக்கு கசாயத்திடலாம். சீதேவி சீரகக் கசாயத்தி லைந்து மூதேவி----வச்சிர முரிந்தோடு மென்றே.

யெட்டுச் சுரத்துக்கு மேல்க் கசாயத்தில் திட்டமாங் குன்றி சேர்த்திடலாகும். மாத்தமான வலிப்புக்கள் தீர சார்ந்த பார்த்தலாஞ் சாற்றினிலிடலாம். கட்டு மாந்தக்

கருத்தக் காளியில் செயிர் மாந்தஞ் சிறு புள்ளடியில் பூறு மாந்த முசந்த
பொருதனை பால மாந்தம் பாத்தலாங் கருக்கில் சொறுகு மாந்தம் கும்ப யத்திச்
சார் சேருமே குளம் சிறு குன்றி யளவு சுசுபிச் பாரினில் குடிக்கப் பரிகரித்திட
லாம். கொன்னைக் கொழுந்துங் கூற கடுக்காய்ப் பொடியும் வெண்ணையில்
கொள்ள வெங்கலப்பிசம் போம். சன்னி யிருமல் சந்தி யுள்மாந்தை சொன்ன
மோருடன் உசிலம் பட்டை யிலிள்ளைதை யிடித்து யிதருடன்குடிக்க தீருமே கடகன்ர
திக்கு முக்கடைப்பு பாரிய முலைப் பாலென்னையி லிடலாம். கூடு நோவுக்கு.
வளை விப்புருதிக்கு ஆடாதோடை யரத்தை பாலென்னையில் ஒட்வே களஞ்சரை
சுகத் போக குடிக்க யிளை யிரும லெங்கலப்பிசங்கள் குவளை விப்புருதி கட்டு
விப்புருதி ஆனை யறிந்து அரைக் கழஞ் செடுத்து வேளைக்கு மோரில் விரைந்திட
லாகும். பள்ள விற்புருதி பருத்த மருந்தீடு கொள்ளு மத்திப் பட்டையில் மோருடன்
சயம் பதிமூன்றுக்குந் தான் குன்றி நிறையாய் பயந்துடன் பசுவின் பால்
மோருடன் குடிக்கலாம். உள்ளிய ஈர பத்திரி மிளகு கொள்ளுவே திப்பிலி குன்றி நேர்
குளம் மள்ளுட னருந்த மார்பினி லடைப்பு கள்ள மத் தொண்டையில் கம்மல்
போமென்றே.

ஊஞ்சல் பட்டை யிழுமக்கு மோர் தன்னில் பேசுங் குடிக்கப் பெருத்த சுவாசம் போம்
சத்தி குன்மந் தகரைச் சாத்தினில் அத்தி இலை ஆமணக்கெண்ணையில்
பித்த குன்மம் புளியிலைச் சாத்தினில் வாய்வு குன்மம் வல்லாரைச் சாத்தினில்
எரிகுன்மம் இலந்தைப் பட்டையில் பயித்திய குன்மம் பழம் பாசி மோரில் நெஞ்செரி
குன்மம் நெய்பால் சர்க்கரை யெரி பித்த குன்மம் யிளநீர் சீரகம் சரி நெய்
பாலுலத்திக் குடிக்கலாம். வெரி வலி குன்மம் விளக்கெண்ணை தன்னில் பூரிய குளம்பு
அரைக்களஞ்சிடலாம். அண்ட வாதமாதி மாரிய குளம்பு அரைக் களஞ்சிடலாம்.
அண்ட வாதமாதி மணக்கெண்ணையில் கொண்டிடு குன்றி குடல் வாதந் தீரும் பண்டப்
பொருமல் பழம் பாசி மோரில் குன்றிடை தின்றிட குண்டக் கரியேகும். குண்டிகை
நோவு குளம்பு 'பால் சர்க்கரை செவ்விள நீரில் பாரிய குளம்பு பணவிடை யிடலாம்.
தீரு முஷ்ணம் திச வாய்வு ஒன்பதும் அண்டிய குட்டமது நலமாகும். கண்டு சர்க்கரை
நெய் காராவின் பாலுடன் உண்டிடு குளம்பு ஒரு குன்றிஅளவு பெண்டுகள் சூலை
பிற மூல மொன்பதும் பண்டைய பொருமல் பதினெட்டுச் சூலை போம். சுக்குச்
சீரகம் சுய கொத்தமல்லிகை ஒக்கவே நீரில் லொரு பயசுறு ,பயறளவு வெக்க
சுர மெட்டும் மீரொன்பதேழும் பாலுடன் மோர் நெய் பருகிடலாகும் ரெத்த
மூலம் நமு நெய் தன்னில் உத்த பால் சர்க்கரை ஒரரைக் களஞ் சில் நித்தங்
களஞ்சு நேரிடலாகும். மூலக் கிருமி முட்டு வலிக்கு யெலஞ் சீரகம், யிள நீர் நெய்
பால் காலனுங் குளம்பு காக் களஞ்சிடலாம் சீய் மூலம் சிறுத்துக் கனியுதல்
கோலஞ் செம்பிலிக் கொருப்பு நெய் தன்னில் காலனுங் குளம்பு களஞ்சரை யிடலாம்.
என்றிய மூலம் எழுந்த நோய் தீரப் பண்டிய பன்றி நெய் பழம் பாசி மோரில்
திட்டமாங் களஞ்சரை தேய்த்திடலாகும் மூலங்களொன்பதும் முளைகள் விழுந்தால்
சீலைக்கு களஞ்சு தேய்த்து நீ போடே கொழுப்புச் சதைகள் போல் கோழைகள்
விழுந்தால் வாளியா லருத்தவன் சீலை தன்னில் காளியாங் குளம்பு களஞ்சரை தேய்த்து
உள்ளிய புண்ணுக்கு போடு யுணர்ந்திடும் தாமரைக் கண் போல் சதை. மூளை
வளர்ந்தால்லா மெனச் சீலையிலதின் கார மிடலாம். முண்டியில் மூல முளைகள்
கரைய கண்டு சீலைப் புகை காரங்கள் போடலாம். உள்ச் சுர மொன்பது
மொளிந்து போகச் சர்க்கரை பசுவின் பால் சார்ந்த முலைப்பால் சிக்கெனக்
குழம்பு சிறு பயறளவு அக்கரச் சுரங்களது பதினும் முக்கியமான மூல வாய்
வொன்பதும் ஆமைக் கட்டுகளாக வொன்பதவும் போடு புளியிலை புகழ்ந்து
மோர் தன்னில் லோமே குளம்பு ஒரரைக் களஞ்சே.

பறங்கிப் பட்டைத் தூள் பதக்குப் பச்சரிசி சிறங்கையா லொன்பது செவ்விள
நீர் விட்டு உறங்கு ராத்திரிக்கு ஒரு தின முறையில் லிங்கிய சாத்தா லிது பயறளவு
சிரங்கு மேல்ச் சூலை யிது பதினெட்டும் யிரங்கிப் போகும். குடவுயி ரொன்பதும்
அரிசியின் தூளை அரைத்துக் கல்லாரலில் வரிசையா யோட்டில் வதக்கின பிறகு
பெருஞ் சிரங்குகளும் பெருத்த சூலை போம். யீருள்ளிசுக்கு யிரு சீரகமும் பாரிய
கொத்தான் பழம் பாசிச் சாறும் சேர்த்து ஒரு குன்றி போலிடப் பாரிய சூதகம்
பதினெட்டு வாய்வு போம். வாய்வு ஒன்பதுக்கும் முலைப் பாலென்னையில் காலங்கள்
கண்டு களஞ்சரை யிடலாம்.

மூல வாய்வு மூவொன்பதேழும் பாலுடன் மோர் நெய் பருகிடலாகும்.
ரெத்தந் தண்டி விரணந் தலைப் புத்து பண்டு சிலந்தி பவுத்திர ரோகம் கண்டமாலை
முக்கட்டுக் கழலை குண்டிகைச் சிலந்தி கொப்புள் கழலை அண்டிய மார்பில்
அரணைச் சிலந்திகள் பெண்டுகள் முலையில் பெருக்கும் நோய்கள் மூல முளைகள்
முதுகுப் பிளவையும் சீலைக் காரப் புகைகள் சேர்த்து நீ போடலாம். காலுகளில்
வரும் கழலைகள் சொரி வேன் அரையாப்புச் சிலந்தி யதில் புரை விழுந்தால்
குறையாத நடை வாளை கொடிப் பவுத்திரமும் உழலை படுவன் யூத்தைப் புண்கள்
கோழைப் புண்கள் தொங்கையில் சிலந்தி உதிரச் சிலந்தி நீடு பிளவைகள்
பக்கச் சிலந்தி படு தாமரைப் புண் சிலந்திப் புண்ணென்பதுந் தீர்ந்திட வேண்டில்
லந்திச் சீலைப் புகை நல்க் காரம் போடலாம். மூக்கு நீர் விழுதல் முக வாத
சன்னிக்கு தீர்க்கத் திரி புகை சிரத்துக்கும் நாசிக்கும் ஏற்கப் பிடிக்க யெழுச்சிகள்
பல நோய் மூற்கமாய் நிற்கும் முக யிசி வாதங்கள் தாக்கக் கபாலத்தில் தனிப்
புகை பிடிக்க நிற்குமே கபாலத்தில் செவி சன்னி நோவு போம். பார்க்கவீ
சளிக்கிப் பசு மஞ்சள்ளோ லையைக் காரத்தைக் காச்சிக் கருப்பட்டி சேர்த்து

பாருத்த குளம்பு பருங் குன்றி யளவு நேரொத்தக் கொண்டு நேர்ந்திடலாகும் சீராப்பு மண்டைச் சிரத்தில் கனம் போம். பேரொத்த குளம்பு மாட்டியே சீலையில் காரத்தைப் பொருத்தி கன் மூட்டி நாசிக்கு நீரது சளியும் நிலையில்லாதே ஓடுமே. மூக்கு நீர்ப் பாச்சல் முகவாத சன்னிகள் நாக்கில் திலந்திகள் நல்ல பல்லறனை சிறுப்பு மாதேவி செவிறடை நோவு கபால வாய்வு காதெழுச்சிகளும் திரி புகையாலே தீர்ந்திடு மென்றே.

குட்ட நோவு குறை நோவுகள் தீர்த்திட்டே நொச்சி தன்னில் குளம்பு சீலையில் தேய்த்து திட்டெனப் போட கால்க் குறை குட்டங்கள் களன்று போமென்றே. பதினெட்டுக் குட்டமும் பாங்குடன் தீரச் சாதி யெருக்கிலை சாத்தினில் குளம்பு அதிசயமான ஆலையின் வெல்லம் நதியெனக் குட்டம் நல மிரண்டேகும். வலஞ் சல மடைத்து வருகின்ற நோய்க்கு கலங்கிய குளம்பு காலரைக் களஞ்சு யிலங்கிய மோரு மிருத்திய சாரு பிலங் கெட்டு ஓடி பேதிக்கு மென்றே. மூவெழு மேகத்தால் மூர்க்கமாய் வலஞ் சலம் நாவிலே பனிவிடை நன் ய்க் குளம்பு கரிய சீகக்காய் குடிநீர் வேதான காவிய குளம்பு காலரைக் கழஞ்சு தலை மயிர் சுட்ட சாம்பலுங் கழஞ்சு குலவிய வெந்நீர் குடித்திடலாகும். பாரு நெல்லிக் கசாயத்திலே தான் சேரு நீ குளம்பு சிறு குன்றி யழவு காமாலை சோகை கனத்த மகோதரம் தீபனஞ் செய்யில் திரிக்குருப் பொடியில் ஆமணக் கெண்ணையில் ஆட்டுக் கோமியமும் யேம நற் குளம்பு யிரு குன்றி சேர்க்கலாம். பாண்டு காமாலை பன்னிரு வகையும் அண்டு நோயேங்களும் அடுத்த நோயேங்களும் ஆமணக் கெண்ணையில் வயறெண்டு கடுக்காய் வேமெனப் பொடித்து வெருகடித் தூரும் நீண்ட குளம்பு நிரை யரைக் களஞ்சு பூண்ட விஷ வாதம் போமென வுரைத்தார். வளையம் பு சன்னி வானவர்தங்கள் தளைப்புள் தாளமியின் சாற்றினில் கொடுக்கலாம். சருவ வாதங்கள் சன்னி சுரத்துக்கும் செருப்படிச் சாறு சேர் குன்றி தேய்த்திடு வாதம் யென்பதுக்கு வகையாய்த் தீரக் கோதையார் தன்னில் கொழுஞ்சிக் கசாயத்தில் நீதியாய்க் குளம்பு நிரை குன்றி சேரு சருவ குலைகளும் சந்து நோய்க் குடச்சலும் கருவிய கழுதைய ¼கால் நீர் தன்னில் பருதிய குலை பதினெட்டுந் தீர அருகிய கழுதை லத்திப் பால் தன்னில் ~~உதிருந்-தீர-அருகிய~~ உருதியாய்க் குளம்பு ஒரு குன்றியிடலாம் யிருதிய குலை யீரொன்பதுந் தீருமே. வாத கரப்பான் வலி பதினெட்டும் கோதையாங் கோளியவரைச் சாற்றினில் ஓதிய குளப்பு ஒரு குன்றியிடலாம். பூத கரப்பான் பொரி வண்டு கடிக்கு பேதமில்லாத புன்னைக்குப் பூடு சேத மில்லாமல் சிறு குன்றியிடலாம். கரப்பான் திமிரக் கடி விஷம் திவவு சிரப்பானிரங்கும் சிங்கி வேர் பட்டையும் யிரப்பான பூனை யீசுர மூலி வேர்க் கசாயத்தில் உரப்பான குளம்பு ஒரு குன்றியிடலாம். சருவ கரப்பான் தானது தீர செருவிய குளம்பு சிறு குன்றியளவு அருவிய அமுக்கிருச் சாற்றினிடலாம். வண்டு கடிகள் வகை பதினெட்டுக்கும் ஒன்றிய சிறு நீர் ஒரு குன்றி யிடலாம். எலி கடியானதும் யிது பதினெட்டுக்கும் கல்விய குளம்பு களஞ்சரை யெடுத்து குலாவிய வெல்லத்தில் கொடுத்திடலாகும். செய்யான் கடியும் சி பாம்புத் திவவும் அய்யாக் கடியில் களஞ்சரை யிடலாம். அட்டை கடியு மானைக் கடிக்கும் கட்டிய சுண்டான சாற்றினிலிடலாம். நாரிய பேய் நாய் நல்ல முளைக்கும். பரியான குதிரை பாம்பு விஷ கடி தேகத்தி லென்பது கரியான கருப்புக் க கட்டியில் கழஞ்சரை முரியாத விஷ கடி யிட முன்னா ற்றுபதும் ஆரிய தேகத்தில் ஆயிர நோய் போமே.

சிரியான சவுரியார் குளம் குரணமே முற்றும்.

⁂

<u>கபால குத்து யிடிக்கு முழுக்கெண்ணை:-</u>

இஞ்சி சாறு வேளைத் தழைச் சாறு, நொச்சி சாறு, வுதன்டை யிலைச் சாறு, குப்பை மேனி யிலைச் சாறு ஆக வகைக்குச் சாறு படி.½, நல்லெண்ணை படி.க, பசுவின் பால் படி.க, கற்க மருந்து கஸ்தூ ரி மஞ்சள், மரமஞ்சள், நல்ல மஞ்சள், தேவதாரம், வெளிச்சைப் பிசின் சாம்பிராணி, நல்ல கடுகு உள்ளி ஆக வகைக்கு விராகனிடை.க, மெழுகு பதத்தில் காய்ச்சி நாளு நாளைக் கொரு தரம் முழுகி வரவும்.

<u>நிலவாகைக் கற்பம்:-</u>

சனிக் கிழமை நாள் காப்புக் கட்டி ஞாயிற்றுக் கிழமை நாள் பலி கொடுத்து வேரறுமல் பிடுங்கிக் கொண்டு நிழலுலத்தலா யுலர்த்திப் பொடியாக்கிக் கொண்டு வெருகடிப் பிரமாணம் பசுவின் பாலில் கொள்ளவும். வீரியமுண்டாம். இப்படி நீர் கலந்து கொடுக்க வயிற்றில் விஷ ந் தீரும். துளசிச் சாற்றில் கொள்ளக் குளிர் வெதுப்புந் தீரும். நீரினில் கொள்ள கண்ணோவு தீரும். கொன்றைப் பட்டை கொள்ளக் குஷ்டந் தீரும். வெந்நீரில் கொள்ள யிருமல் தீரும். துளசி யிலைச சாற்றில் கொள்ள குலையுந் தீரும். ஒரு மண்டலம் பசுவின் நெய்யில் கொள்ள நரை திரை மாறும். தேனில் கொள்ளச் சேற்றுமம் போகும். <u>மேக வெட்டை யிருபத்தொன்றுக்கும் கை கால்களில் காண்கிற ஊரலுக்கும் என்னை வைக்கும் படி:-</u>

பறங்கிப் பட்டை பலம்.உ, பிரப்பங் கிழங்கு பலம்.உ, வெள்ளறுகு பலம்.உ, சிவனார் வேம்பு பலம்.உ, ஊரட்டித் தழை பலம்.உ, சித்திர மூலம் வேர் பலம்.உ, இந்த ஆறு வகை மருந்தும் ஒன்றரண்டாய் இடித்து ஒரு மிடாவில் போட்டுப் பதக்குத் தண்ணீர் விட்டுக் கசாயம் போட்டுக் காய்ச்சி யெண்ணை அளவு இறுத்துக் கொண்டு சங்கங் குப்பிச் சாறு தழுதாழைச் சாறு, கழுதையுடைய சிறு

நீரும், நல்லெண்ணை படி:க, இந்தச் சரக்கெல்லாம் நல்லெண்ணெயில் விட்டு காச்சிப் பதம் வந்த போது இறக்கிக் கொள்ளவும். இறக்கி எண்ணையை இறுத்துக் கொள்ளவும். இந்த எண்ணை காலம்பற அந்தி சந்தி மூன்று நாள் ஆறு நேரமும் சாப்பிடவும். சாப்பிடுகிற போது கற்கத்தைக் கை கரலுகளிலே நன்றாய்த் தேய்க்கவும். பத்தியம் கடும் பத்தியம். மூன்று நாளைக்கு எண்ணை சாப்பிட்டு மறு பத்தியம் மூன்று நாளைக்கு யிருந்து ஏழா நாள் தலை முழுக விபரம் தனக்குப் பொருந்திய எண்ணை தேய்த்து முழுகவும்.

<u>தாளக பற்பம்:-</u>

பொன்னரி தாரம் விராகனிடை.50, வெங்காரம் விராகனிடை.5, இவை இரண்டு முப்பது எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து வில்லை பண்ணிச் சட்டியில் பெரும் புசனிக் பழச் சாறு ஒரு வள்ளம் விட்டு இந்த மருந்தை டோளேந்திரமா யந்தச் சாறு நாலு விரக்கடைக்கு மேல் தொங்க விட்டு அடுப்பில் வைத்து சாறு சுண்டத் தீ மூடி எரித்து அதின் பின்பு டோளேந்திரத்தை அவிழ்த்து மடக்கில் வைத்து நீர் நிழலில் உலர விட்டு எடுத்து மறுநாள் டோளேந்திரங் கட்டி சட்டியில் இரண்டு படி வெள்ளாட்டுக் கோமியம் விட்டு டோளேந்திரங் கட்டி சட்டியில் இரண்டு படி நீர்ப் கய்யாந்தகரைச் சாறு கூட விட்டுச் சாறுங் கோமியமும் சுண்ட எரித்து அதை எடுத்து மடக்கில் வைத்து நிழுலத்தி கட்டி வைத்துக் கொண்டு பற்பம் பண்ண வேணு மென்றல் பத்து விராகனிடை தாளகமும், அஞ்சு விராகனிடை ரசமும் வெடியா மணக்கிலைச் சாறு விட்டு அரச்சு வில்லை பண்ணிப் பெரிய குண்டு சட்டியில் வைத்து அரைத்த அம்மியிலந்தச் சாறு விட்டுக் கழுவி அந்தச் சட்டியில் உரைத்துக் கொண்டு மேல்ச் சட்டியில் ஆமணக்கிலைச சாறு நன்றாய் தடவிக் காய வைத்து பின்பு கீழ்ச் சட்டியில் நாலு படி வெடியா மணக்கிலைச் சாறு விட்டு அடுப்பில் வைத்து சட்டி மூடாமல் அந்தச் சாறு சுண்ட சுண்டக் காய்ச்சி புசிப்புச் சாறு சுண்டக் காச்சி சட்டியை மூடி பதினொரு சீலை மண் செய்து பெரிய கடுந் தீயா யெரிக்கவும். தொன்னூறு நாழிகை ராத்திரி, பகல் எரியிட்டு ஆற விட்டுச் சட்டியைத் திறந்து பார்த்தால் வெள்ளையாய் விபூதி யுண்டை போலே பற்பமா யிருக்கும்.

அந்தப் பற்பத்தின் மேலே இருந்த கருப்பெல்லாம் நிதானமா யெடுத்துப் போட்டு மேல்ச் சட்டியில் ஒட்டி யிருந்த பற்பத்தையும் ஓலையில் கரைத்து சர்க்கரை எல்லாத்தையும் பறணியிலடைத்துக் கொண்டு இந்தத் தாளக பற்பம் அரைக்கால் பணவிடை தேனில் கொடுக்கச் சீத சுரம் போம். ஒரு மண்டலம் அரைக்கால் பணவிடை தேனில் கொள்ள பதினெட்டு குட்டமும் போம். சூலைப் புன் புரையோடுகிறது அரையாப்பு சூலைக் கட்டு சூலைகள் கெற்ப விப்புருதி வயத்தில் கண்டை சயரோகம், சுவாச காசம், மேல்ச் சுவாசம், மேக சன்னி தீராத வியாதி கால் கை முடக்கம் சாறு வாங்க சூலை சகல ரோகமும் போம். அநுபானம் வெள்ளைச் சீரகம் பசுவின் நெய், திப்பிலிப் பொடி தேனும் இந்த அநுபானத்தில் ரோகம் அறிந்து கொடுக்கவும். பத்தியம் அவரைப் பருப்பு அரக்கீரை, வெள்ளாட்டு வத்தல் பசுவின் பால், நெய், உப்புக் கொஞ்சம் வறுத்துப் போட்டுக் கொள்ளவும். புளி தயிர், மோர் தவிர்க்கவும். கரப்பான் பண்டந் தவிர்க்கவும். இது கை கண்டது. ஒரு தர மரைத்துப் புசணிக்காய் சாத்தில் சுத்தி பண்ணிக் கொள்ளவும்.

(இடையில் பல ஏடுகள் இல்லை)

<u>வல்லாதி லேகியம்:-</u>

கரி முகனடியில் மரு மலர் தூவி கடலை யோட வல் பயற தோசை கனி தொரு பக்கம் இனி தொரு பக்கம் பாங்காய்ப் படைத்து தேங்கா யுடைத்து தூபங் கொடுத்து தீப மெடுத்து கைய்யொடு பொத்தி வைய்யகந் தன்னில் வாழு மனிதர்க்கு நோயெலாந் தீர வல்லாதி லேகியஞ் சாத்தக் கேள் திப்பிலி மூலம், திரிகடுகேலம் கொத்தமல்லிகை, கூறுவாய் விளங்கம், ஓமஞ் செவியம் உயர் கருஞ் சீரகம் இது வெல்லாம் வகைக்கு அரைப் பலமதாய் பறங்கிப் பட்டை பல மஞ்சு செங்கொட்டை யிருவது சரக்குமிழ வெட்டி குமரி மடல்க் குள்ளே வைத்து வெந்த பின்னெடுத்து விர சாணி சாத்தில் பிளிக்கப் பிள்கிகி யினியிலை சாத்தினில் அப்படிப் பிளிக்கி படை மருந்தெல்லாம் காய வைத்திடித்து எள்ளரைப் படி இது செங்கொட்டையும் பனையின் வெல்லாம் பன்னிரு பலமும் உழக்கு நல்லெண்ணை விட்டு சேர்த்து யிடித்து கலைக் கொட்டை அளவு கள உருண்டை செய்து அந்தி சந்தி மண்டலங் கொள்ள இச்சா பத்தியம் யெதோ வெண்ணில் கரப்பான் பண்டம் கயினில் தொடாமல் யிருப்பீராகில் யிது தீரும் வியாதி செப்பிடக் கேளீர் அந்திர வாய்வு அழுகைக் குறைத்திடும். வந்திடு கிரந்தி வலு நோய் வாய்வு கய்யினில் கருப்பு காலினில் கருப்பு மெய்யினில் தடிப்பு வெகு புரை புண்கள் மயிரை உதிர்த்திடும் வந்திடு கிரந்தி மேகத்தில் வந்த வியாதிகளெல்லாம் போகத் தன்வந்திரி புகன்றவாறே.

(வேறு)

சங்கொடு சங்கங் குப்பி தயவுடன் சித்திர மூலம்
பொங்குமா அசுவ கெந்தி புகழ் நிலப்பனையின் வேரும்
யிங்கிவை செங்கத்தாரி யிசைந்திரு குமிழ் நெருஞ்சி
மங்கு புவரசின் பட்டை வகைக்கொரு பல முரைத்தோம்.

உரைத்திடும் ஓமங் கோஉட்டம் ஊசு நாகேசுரமுங் கூட்டி

பருத்த சுக்குடன் மிளகு பளகிய திப்பிலிப் பொடியும் திருத்தமாம்
வாய் விளங்கம் சேரவே லவங்கப் பத்திரி அரத்தையும் முருங்கைப் பத்திரி
அஞ்சடா மஞ்சி கூட்டே.

28.5.64.

கூட்டடா பறங்கிப் பட்டை குறிப்புடன் சமனுய்ச் சேர்த்து
தீட்டு சற்கரை நெய் தேனில் சேரவே சமனும் ஒன்றாய்
புட்டியே குளம்பதாக்கி புத்தியா யெடுத்துக் கொண்டு
நாட்டியே நாற்பத்தெட்டு நாளது கொள்வீர் தானே.

கொள்ளவே சகல மேகம் குட்டமுஞ் சூலை குன்மம்
பள்ளிய மலத்தின் கட்டு பயித்திய வாய்வு சோம்பல்
தெள்ளிய தாதுண்டாகும் சேர்ந்திடு ரணமுந் தீரும்
உள்ளத றியார் தான் உறைத்திடு ரசாயனந்தான்.

(வேறு)

பேணப்பா தயில வகை சொல்லக் கேரு பேருன மிளகு பலம் வாய்விளங்கம் பலங் கால் தான்
தோணப்பா வால்மிளகு கால் பலந்தானும் துகை சேர்ந்த கோஉஷ்ட மொரு பல வீதமாகும்
நாணப்பா சடாமாஞ்சி அதிமதுர முடனே நல மிகுந்த கஸ்தூரி மஞ்சள் வகை மூன்றும்
காணப்பா விராகனது மூன்றும் பின்னும் கருதரிய விலாமிச்சம் பலந் தானென்றே.

ஒன்றான பருங் கோரைக் கிழங்கு தனைக் கூட்ட உயர்ந்து
நின்றி விராகவ மோ நாலதாகும்
நன்றாக இது வெல்லாம் ஆவின் பால் விட்டு நயமாக அரைத்த பின்பு மருந்தைக் கேரு
சென்றுடு மொசு மொசுக்கை பொன்னாங்கானி சிறந்த தொரு கரிசாலை வகைக்கு கால் படிச் சார்
குன்றாத காத்தொட்டிச் சார் வார்த்தப்பா குறைவில்லாப் பால் விட்டுச் சாற்.புளிந்து கொள்ளே.

கொள்ளடா பசலைச் சார் கால்ப்படி தான் கூறு கெட்ட மாள்விடர்க்கு பளசை தனை யறியார்
விள்ளடா காராட்டுப் பால் கறந்து காச்சி வேறான உரை யுத்திக் கடைந்த மோரில்
தெள்ளடா பிளியிலை விட்டிடித்த சாறு திரமான பசலை யென்ற சேதியாச்சு
யெள்ளடா யெள்ளெண்ணை படி ரெண்டு விட்டு யேகமாய் மெழுகு பதங் காச்சி வாங்கே.

வாங்கி யொரு மண்டலந் தான் முழுகும் போது மருவி நின்ற குட்டம் பதினெட்டுந் தீரும்
தாங்கி நின்ற வெட்டை யென்பத் தெட்டுந் தீரும் சத்தி குன்மம் அஸ்தி சுரம் கபாலச் சூடு
தேங்கி நின்ற உள்ச் சுரங்கள் மண்டைப் பீனிசங்கள் தேகத்தில் உள் வறட்சி தீருந் தீரும்.

<u>மேகத்தில் யெடுத்த காந்தல் கண் சூடு மேக நீர் இதுக்கு எண்ணை மருந்து:-</u>

பொன்னாங்காணிச் சாறு, கய்யாந்தகரைச் சாறு, சீதா செங்கழுநீர் சாறு தேத்தான் யிலைச் சாறு, சிறுகீரைச் சாறு, சீந்தி கொடிச சாறு, எலுமிச்சம் பழச் சாறு ஆக சாறு வகைக்கு படி.1/8, நல்லெண்ணை படி.க, பால் படி.1/8 இளநீர் படி.1/8, கசாயம் கோரைக் கிழங்கு பலம்.½, வில்லை வேர் பலம்.க, அதிமதுரம் பலம்.½, சந்தனக் கட்டை பலம்.½, வெட்டி வேர் பலம்.½, விலாமிச்சம் வேர் பலம்.½, அருகம் வேர் பலம்.½, நெல்லிப் பருப்பு பலம்.½, இவ்வளவும் கொத்தி நொறுக்கி இடித்து கசாயம் சட்டியில் போட்டு இரண்டு தண்ணீர் விட்டு அரைப்படியாகக் காய்ச்சிக் குறுக்கிக் கொள்ளவும்.

<u>கற்க மருந்து:-</u>

கோஉஷ்டம், மிளகு, தேவதாரம், மரமஞ்சள், சாம்பிராணி, செஞ்சந்தனம், கட்டை, சடாமாஞ்சி ஆக வகைக்கு விராகனிடை.3, இது வெல்லாம் இந்த முறைக்கு எடுத்து நிறுத்து முன் சொன்ன கசாயத்திலரைத்துக் கரைத்துச் சாறு மெண்ணையும் கசாயம் மருந்து போட்டு தீ யெரித்து மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

<u>வெள்ளை ரத்தம் விழுகிறதுக்கு: உள்ருருக்கி பிற மேகத்துக்கு:-</u>

வல்லாரைச் சாறு படி.½, வில்லைத் தழைச் சாறு படி.½, அகத்திப் பட்டைச் சாறு படி.½, பழம் பாசிச் சாறு படி.½, குமிளம் தழைச் சாறு படி.½, இளநீர் படி இரண்டு பசுவின் பால் படி.½, ஆவரை யிலைச் சாறு படி.½, இளநீர் படி இரண்டு பசுவின் பால் படி.½, பசுவின் நெய் படி.க, கடைச் சரக்கு மிளகு சீரகம் சாதிக்காய், சாதிபத்திரி, லவங்கப் பத்திரி, லவங்கப் பட்டை, ஏலம், கோஉஷ்டம், கிராம்பு, சந்தனம், அதிமதுரம் ஆக வகைக்கு விராகனிடை.உ, இளநீர் விட்டு கடை மருந்தை அரைத்துப் போட்டுக்மெழுகு பதத்தில் வடித்து காலமே நெய்யும் அந்திக்கு கற்கமும் தின்று வரவும். இப்படி இருபத்தி நாலு நாள் சாப்பிடவும். உள்ருருக்கி, சூடு, பித்த மேகம் யிவை யெல்லாம் போம். புளி, புகையிலை தவிர்க்கவும்.

<u>பயித்திய பிரமைக்கு மருந்து தயிலம்:-</u>

பசு மாட்டுத் தலை யோடு விராகனிடை.10, மனிதர் மண்டை ஓடு, காடாத்து முன்னே எடுத்து வந்து விராகனிடை.10 நாய்த் தலை யோடு விராகனிடை.1 10 இந்த மூன்று ஓட்டையும நய்ய நருக்கித் தட்டிக் கழுதைப் பால் விட்டு அரைத்து

வில்லை செய்து நாறு எருவில் புடம் போட்டு எடுத்துக் கொண்டு இஞ்சிச் சாறு இரண்டு துட்டெடை முலைப் பால் படி.1/16, கரும்புச் சர்க்கரை ஒரு துட்டெடை முன் சொன்ன பற்பம் நேர் ஒன்றுக்கு ஒன்றே கால் விராகன் பற்பம் போட்டு இப்படிப் பனிரெண்டு நாள் அந்தி சந்தி சாப்பிடவும்.

பூச்சுத் தயிலம்:-

சீலை கழுதைக் குட்டி யிடத்து பக்கத்து சட்டை நல்ல பாம்புச் சட்டை முன் சொன்ன சீலை யிந்த இரண்டு வகையும் சீலையில் வைத்து திரித்து குருத்தில் கத்தி வேப்பெண்ணை கொண்டு திரித் தயில மிறக்கி அவளை போடவும்.

முருக் கெண்ணை:-

பசு மாட்டுக் கோமியம் படி.½, பசுவின் பால் படி.½, மொசு மொசுக்கை தழைச் சாறு படி.½, கய்யாந் தகரைச் சாறு படி.½, நல்லெண்ணை படி.½, விட்டுக் காய்ச்சி மெழுகு பதத்திலிறக்கி வைத்துக் கொண்டு முழுகவும்.

(வேறு)

வெள்ளை மெழுகு விராகனிடை.10, வெள்ளைக் குங்கிலியம் விராகனிடை.10 ரச கற்பூரம் விராகனிடை.க, இவ்வளவு தேங்காயில் விட்டு உருக்கி கீழே சட்டியில் தண்ணீர் வைத்து மேலே யுருக்கின மருந்தை சீலையிலாத்தி புளிந்து போட்டு ஆற விட்டு எடுத்து சீலையில் தடவி வைத்துக் கொள்ளவும். ரணத்துக்கு கொஞ்சம் கிளிச்சுப் போடவும்.

களிம்பு மருந்து:-

வெள்ளைக் குங்கிலியம் காசுக் கட்டி ரசகற்பூரம் மாசக்காய் மிருதார் சிங்கி சமனிடை முன் சொன்ன மருந்து வகைக்கு விராகனிடை.க, பசுவின் வெண்ணை தேங்கா அளவு வைத்து அரைத்து சாறு தண்ணீரில் இரவும் பகலும் இருக்க விட்டு அப்புறம் எடுத்து ரணத்துக்குப் போடவும்.

தாது வர்த்தனைக்கு:-

பறட்டை விரை பூமி சர்க்கரைக் கிழங்கு நத்தி வேர்ப் பட்டை, சந்தனம் தேத்தாங் கொட்டை, முருங்கை வேர்ப் பட்டை, கிழக்கே போனது பூனைக் காலி விரை, தேங்காய் பால் விட்டு அரைத்து வெள்ளாட்டுப் பாலில் சீனிச் சர்க்கரையும் மருந்தும் போட்டுக் குடிக்கவும். இப்படி மூன்று நாள் ஆறு நேரம் சாப்பிட்டு மறு நாளாற விட்டு ஐந்தா நாள் தலை முழுகி ஆறு நாள் புணர்ச்சி செய்யவும். கை கண்டது. அவ பத்திய மாத்திர மாகாது.

கபால சுரப்பானுக்கு என்னை மருந்து:-

நொச்சித் தழைச் சாறு, வேளைத் தழைச் சாறு, புண்ணுக்குப் பூடு தழைச் சாறு அமுக்கிலாத் தழைச் சாறு கோழியாவாரை யிலைச் சாறு சாறயம் தேங்கா யெண்ணை ஆக வகைக்குச் சாறும் என்னையும் சமன் கொண்டு கடைச் சரக்கு நத்தம் துருசு யேலரிசி கார்போகரிசி வெப்பாலரிசி, வாலுளுவை யரிசி, கொத்தமல்லி சீரகம், காசுக் கட்டி, அவினி வெள்ளைக் குங்கிலியம் மெழுகு வெம்பாடஞ் சருகு ஆக வகைக்கு விராகனிடை.½ மெழுகு பதம்.

நாய்ச் சிலந்திக்கு:-

பொடி தழையும், ஈர வெங்காயம் கம்பஞ் சோத்து நீச்சத் தண்ணீர் விட்டு அவைத்து சாறு பிளிந்து அந்தி சந்தி மூன்று நாள் குடிக்கவும். மூன்று நாள் மறு பத்தியம் கைப்பு, புளிப்பு ஆகாது.

புண்ணுக்கு கட்ட மருந்து:-

பொடி தழையையிடித்துச சாறு பிளிந்து போட்டு ஆண் பிள்ளைக் கென்றால் பெண் பிள்ளை சிறு நீர், பெண் பிள்ளைக் கென்றால் ஆண் பிள்ளை சிறுநீர் விட்டு வருத்துக் கட்டவும். இப்படி ஆறு கட்டுக் கட்டவும். நரம்பு கட்டோடே விழுந்து போகும். இது கை கண்டது.

நரித் தலை வாதத்துக்கு மருந்து:-

வீழித் தழை ஒரு குத்து, ஆவாந் தழை ஒரு குத்து, புண்ணுக்கு பூடு தழை ஒரு குத்து வெள்ளை வெங்காயமும் போட்டுத் அவைத்து மூன்று பிடியாகப் பிடித்து நாற் சதிரமாக மெழுகு அதில் மூன்று பாக்கு மூன்று வெத்திலை ஒரு பணந் தெட்சணை வைத்து நடுவே மூன்று மண்ணை வைத்து அதிலே ஒடு வைத்து அதிலே ஆமணக் கெண்ணை வத்தி வத்தி தூபங் கொடுத்து தீ யெரித்து முன் சொன்ன மருந்தை என்னையில ஒப்பிட்டுக் காட்டவும். நரித் தலை வாதம் போம். இப்படி மூன்று நாள் செய்யவும்.

உகாந்த பேதிக்கு:-

பொன் முசுட்டை வேர், மஞ்சள் சுக்கு, மிளகு, திப்பிலி, தெசாவரம், ஓமம், வசம்பு, சித்திர மூலம் செவியம், கோனியப் பட்டு ஆக வகைக்கு விராகனிடை.6 சட்டியைக் காய வைத்து இது வெல்லாம் யிடித்துப் போட்டு பற்பமாகிற

வரைக்கும் கிளறிக் கிண்டிக் கொடுக்கவும். அதின் பிறகு ஒரு உரலில் கொட்டிக் கருந்திலிடித்து தேன் விட்டு மிடித்து களி போலே எடுத்து பீப்பாத் தகட்டில் அடைத்துக் கொள்ளவும். பேதியான பேர்களுக்கு முதல் எலுமிச்சங் காய் மருவாதிக் கொடுக்கவும். இரண்டு நாழிகை பொறுத்து அதிலரை வாசி கொடுக்கவும். மூன்றுவது அதிலரை வாசி கொடுக்கவும். சன்னி வீச்சு இதுகள் கண்டால் இஞ்சி சித்தரத்தை புங்கம் பட்டை, பெரு மரத்துப் பட்டை, மாவிலங்கம் பட்டை இதுகள் தட்டிச் சார் பிழிந்து கரைத்து தேன் விட்டுக் கலக்கிக் கொடுக்கவும்.

உறுப்பு தள்ளினதுக்கு:-

ஆத்தி பஞ்சாங்கம் வகைக்கு ஒவ்வொரு பல மெடுத்து குவைத்து மூணு படி தண்ணீர் விட்டு ஒரு படியாக வத்தக் காய்ச்சி அந்தக் கற்கம் கொஞ்சம் எடுத்துக் கசச கசாயம் விட்டு அரைத்து பின்னுங் கசாயம் விட்டுக் கலக்கி எருமை மோர் விட்டுக் கொடுக்கவும். இந்தப் படி அந்தி சந்தி மூன்று நாள் சாப்பிடவும்.

சிட்டுக் குருவி லேகியம்:-

சிட்டுக் குருவி ஆண் குருவி நூறு மயிருங் குடலு தலை இதுகள் நீக்கிப் போட்டு பசுவின் நெய்யில் வேக வைத்துக் கடப்பாரையி லிடித்து களிப் போலே ஆக விட்டு அதிலே சீனி பலம்.6½ இது வெல்லாம் அந்த மாமிசத்தில் போட்டு இடித்துத் திரட்டி ஒரு தாம்பாளத்தில் வைத்துக் கொண்டு கடைச் சரக்கு சாதிக்காய் சாதிபத்திரி, கிராம்பு, கசகசா நான்றிக்காய், அதிமதுரம், கோஷ்டம், கடலை வால் மிளகு, மிளகு, லவங்கப் பட்டை, சடாமாஞ்சி, க்கடகசிங்கி, கடுக்காய், கருவேலாம் பிசின், கருவேலாங் கொழுந்துத் தழை, ஆலா மொட்டு ஆலாம்பால் கருவேலாம் பிஞ்சு, அத்திப் பிஞ்சு, அத்திப் பால் கல்லச்சி மொட்டு, கல்லச்சிப் பால் முருங்கைப் பூ, முருங்கைப் பிஞ்சு, பருக்கம் பால் ஆக வகை ஒன்றுக்கு சரக்கு பிசிறு பால் கொழுந்து மொட்டு வகைக்கு விராகனிடை.6, தேங்காய் பால் படி.க, பசுவின் பால் படி.க, வெள்ளாட்டுப் பால் படி.க, இளநீர் படி.க, இந்த நாலு வகையும் கலந்து அடுப்பேத்திக் கொதிக்கிற பதத்தில் பிசின் வகையைப் போட்டு முன்னிடித்த பதார்த்தையும் போட்டு சூரணத்தையும் போட்டு கிண்டவும். தேன் அரைப்படி விட்டு கிண்டவும். பசுவின் நெய் ஒரு படி விட்டுக் கிண்டி கணபதி பூசை செய்யவும். அந்தி, சந்தி களச்சிக்காய் பிரமாணம் நாற்பத்தெட்டு நாள் சாப்பிடவும்.

காதிரைச்சல், கபால குத்து, கபால வாய்வு, மந்தம் இதுக் கெண்ணை:-

கொள்ளு வேர் கால் துலாங் கொண்டு வந்து இடித்து நல்ல தண்ணீர் படி இரண்டு விட்டு கசாயம் சுண்ட வெரித்து அரப்படியான உடனே கற்க மருந்து சாம்பிராணி கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், வெளிச்சைப் பிசின், கடல் நுரை, வலம்புரிக்காய், கோஷ்டம், தேவதாரம் ஆக வகைக்கு விராகனிடை.உ, இஞ்சிச் சாறு படி.1/16, மஞ்சள் சாறு படி.1/16, ஆதண்டை யிலைச் சாறு படி இந்த மூன்று சாறும் விட்டு நல்லெண்ணை படி ஒன்று விட்டு மெழுகு பதத்தில் காய்ச்சி இறக்கிக் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி காதிரைச்சல், கபால குத்து, கபால வாய்வு காது மந்தம் இது வெல்லாந் தீரும். இது கை கண்டது.

அஷ்ட குன்மத்துக்கு திச வாய்வுக்கு எண்ணை:-

சாதிக்காய் விராகனிடை.உ, ஏலம் விராகனிடை.உ, கருஞ்சீரகம் விராகனிடை.உ, ஓமம் விராகனிடை.உ, சீரகம் விராகனிடை.உ, கிராம்பு விராகனிடை.உ, சுக்குவிராகனிடை.உ, மிளகு விராகனிடை.உ, வால் மிளகு விராகனிடை.உ அதிமதுரம் விராகனிடை.உ, இந்த பத்து மருந்தும் பொடி செய்து ஒரு படி யேரண்ட எண்ணையில் போட்டு சூரிய புட மிடவும். அந்தி சந்தி சாப்பிட பின்றலே குடிக்கவும். சகல வாய்வுந் தீரும். சகல குன்மமுந் தீரும். பெண் பிள்ளைகளுக்கு குதக வாய்வு தீரும். பிள்ளைப் பேறுண்டு. இது கை கண்டது.

அசுவ கெந்தி பலாதி சூரணம்:-

1. பாரப்பா அசுவ கெந்தி பலாதியைத் தான் பாடுகிறேன் தம்புராஷ்டம் சிறு
தேற்குறாடு
நேரப்பா அதிவிடையம் செவியம் ரேணுகம் நிலையான லவங்க மஞ்சிஷ்டி தேவ
தாரப்
காரப்பா சடாமாஞ்சி மதுரஞ் சுக்கு கனமான தாளிசம் தேற்கோல மிலாமிச்சப்
வார் கொற்றமல்லி லவங்கப் பட்டை வளமான வெற்பாலை அரிசி கூட்டே.

2. கூட்டப்பா தெசாவறம், லவங்கப் பத்திரி கூறினேன் சாதிக்காய் சரக் கெல்லாந்
தான்
நாட்டப்பா நாற் களஞ்சு சமந்தான் செய்து நலமான பரங்கிப் பட்டை களஞ்சு
நாலும்
நீட்டப்பா அசுவ கெந்தி களஞ்சு ரெண்டு நிலையாகச் சூரணித்து வடி கொண்டே தா
புட்டப்பா ஆவின் பால் நாளி விட்டுப் பொதிந்து நிழல் தனிலொரு நாள் வைத்தி
டாயே.

3. வைத்திட சூரணத்தை ஆவின் நெய்யில் (மேல் முடிவு இல்லை)

அர்த்த நாரீஸ்சுரன் மாத்திரை:-

கோரோசினை மனோசிலை, கெவுரி, நாவி குறையா மலோரொன்று களஞ்சினோடு
நேரான திரிகடுகு திரிபலை தாளும் நிறையோரொன்றிரு களஞ்சதாக சுத்தி செய்து

சீராக ஒர் பொழுது யிஞ்சிச் சாத்தி லரைத்து பிரமாக குளிகை மிளகளவு நிமல லத்தி

தோளுத வாதக்குச் சுரங்கள் தீர்க்க தொமெத்த முனி அர்த்த நாரீசந் தானே.

2. அர்த்த நாரீசன் சொன்ன ஆனதோர் குளிகை தன்னை
சித்தமாஞ் சீனி பத்து பணவிடை நிறுத்துக் கொண்டு
இத்துடன் குளிகை பாதி யிடச் சுரம் பாகமேகும்
லிட்டே யேகு மிப்பாதி யுண்டை இப்படி (முடிவில்லை).

வயத்துக் கடுப்புக் கிறுணிக் களிச்சல் அதிசாரக் களிச்சலுக்கு கருதப்பிலை லேகியம்:-

இளநீர் படி.க, சுக்கு பலம்.உ, கருவேப்பிலை அரிசி பலம்.க, இது இரண்டையும் அந்த இளநீர் தண்ணீரிலே இடித்துப் போட்டு அரைவாசி வத்தக் காய்ச்சி வடிகட்டி இதில் சேர்க்கிற மருந்து சாதிக்காய் விராகனிடை.க, காட்டாத்திப்பூ விராகனிடை.க, கருவேப்பிலை விராகனிடை.க, இந்துப்பு விராகனிடை.க, கசக்சா விராகனிடை.க, இது வெல்லாம் அந்த இளநீர் கசாயம் விட்டரைத்து ஒரு பழைய சட்டியைக் கழுவிப் போட்டு அரைத்த மருந்தெல்லாம் அதிலே போட்டுக் கலக்கிக் கொதிக்க வைத்து பசுவின் நெய் ஒரு வர கிண்ணம் விட்டு லேகிய பதத்திலிறக்கிக் கொள்ளவும். களச்சிக்காய் மருவாதி சாப்பிடவும். இதுக்கு பத்தியம் கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும். வாய்வான பதார்த்தந் தள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி வ்யத்துக் கடுப்பு கிறுணிக் களிச்சல் அதிசாரப் போக்கு இவை யெல்லாந் தீரும். இது கை கண்டது.

கண்ணு வலி அமரம் பூழு வெட்டு, கண் காசத்துக்கு மை விபரம்:-

துத்தம் விராகனிடை.க, ஜருசு விராகனிடை.க, வெங்காரம் விராகனிடை.க சீனிக் காரம் விராகனிடை.க, கடு காய்ப் பொடி விராகனிடை.க, வட்டியில் தண்ணீர் ஊத்திப் புழுங்கலரிசி அரைச் சேரை அரிசி போட்டு மூன்று அடுப்புக் கல்க் கட்டி ஒரு விளக்கில் நல்லெண்ணை ஊத்தி கருப்புச் சீலை திரி திரித்து விளக்கில் பெருத்தி கல்லி நடுவே வைத்து அதின் பேரில் வட்டி வைத்து மை பற்ற வைச்சது விராகனிடை.உ முன் சொன்ன மருந்தை யெல்லாம் பொடி செய்து வடி கொண்டு பற்ற வைத்த மையோடே யிந்தப் பொடியும் போட்டு வெத்திலைச் சாறு அடியில் பிளிந்து தாம்புர சிமிள் கொண்டு ஒரு சாமம் தேய்த்து அதின் பிறகு பசுவின் வெண்ணை போட்டு ஒரு சாமந் தேய்த்து எடுத்துச் செப்புச் சிமிளில் வைத்துக் கொண்டு துவரைப் பருப்பு மருவாதி மூன்று நேரம் கண்ணிலிடவும். இதுக்குத் தீரும் வியாதி கண்ணு வலி அமரம் புழு வெட்டு கண் காசம் யிவை யெல்லாந் தீரும்.

பித்த ஊடு தாது வத்தினைக்கு பால் சர்க்கரை லேகியம்:-

பசுவின் பால் படி.க, கொண்டு வந்து ஒரு பாண்டத்தில் ஊத்தி மேல் வேடு கட்டி வேட்டின் பேரிலே முருங்கைப் பூ பலம்.3, கொண்டு வந்து வேட்டு மேல் வைத்து மேலோடு மூடி சாமம் தீபாக்கினியாக எரித்து மறுபடி அந்தப் பூவைப் பாலில் பிளிந்து ஊத்திக் கொண்டு கடை மருந்து சாதிக்காய் விராகனிடை.3, சாதிபத்திரி விராகனிடை.3, கிராம்பு விராகனிடை.3, ஏலம் விராகனிடை.3, சீரகம் விராகனிடை.3, அதிமதுரம் விராகனிடை.3, சீனி சர்க்கரை பலம்.3, இது வெல்லாம் சூரணம் செய்து வடி கட்டி பாலில் போட்டுக் கிண்டி பதத்தில் இறக்கி வைத்து இரு நேரமும் களச்சிக்காய் பிரமாணம் சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி அசதி, பித்த ஊடு இது வெல்லாம் போம். தாது வத்தினை யுண்டாம். **பால் சர்க்கரை பண்ணும் விபரம்:-**

பசுவின் பால் படி.உ, கொண்டு வந்து பாண்டத்தில் ஊத்தி வேர் போட்டுக் கிண்ட பால் சர்க்கரையாம்.

எலும்புருக்கி பிரமேகம் தாது வத்தனைக்கு காமரசம்:-

தூதுவிளம் பூ முருங்கைப் பூச் சொல்லும் வகைக்கோர் நாழுழி
பாத நெருஞ்சி ஏலம் நிலப்பனை வேர் வகைக்கு பலமாகும்
மோதும் தூரம் நன்றுரி யொவ்வொரிரண்டு பலஞ் சேர்த்து
போதுஞ் சதா வேரிக் கிழங்கும் சுதழு மிரண்டும் பொடி செய்யே.

செய்யே பசுவின் பால் பதக்குத் திரமாய்த் தாளி தனில் விட்டு
மையுஞ் சீனி சர்க்கரையும் வாகாய்ப பலம் நாலதில் கூட்டி
தொய்யு நறு நெய் நாழியதில் கிண்டி யிளகி வரும் போது
கையா லெடுத்துப் பார்த்த பின்பு கருதும் பொடியைத் தூவி விடே.

தூவி மெழுகு பதத்திறக்கி தோகை மருந்தின் வகை கேளாய்
மேவும் பெரும் பாடதொடெலும்புருக்கி மிகுத்த பித்த பிறமேகம்

தாது மிகவே வலுவாகும் தவரு முப்பும் புளியாகா
மாவுஞ் சொறிந்த பொதிகை முனி மறையோருரைத்த வளமிதுவே.

மேகத்துக்கு உறை மோரு பண்ணு விபரம்:- 2.6.64.

பச்சை வெட்டுக் குங்கிலியம் பலம்.உ, பசுவின் பால் படி.உ, பூரால் சாம்பிறுனி பலம்.க, பசுவின் நெய் படி.உ, கஸ்தூரி பலம்.1/8 கற்பூர சலாசத்து பலம்.1/8, எலுமிச்சம் பழம்.32 இது வெல்லாம் சேர்த்த உறை மோரு கூட்டுகிற விபரம்.

பிள்ளை விழ மருந்து:-

சனப்பம் விரையை வேக வைத்து சாற்றை வடித்து எள்ரு பதரும் கூறிய சுண்ணும்பும் நெய்யைப் போட்டு அந்தச் சாற்றைக் குடிக்கப் பிள்ளை கூட்டோடே விழும். இது மெய். கை கண்டது.

அரையாப்புக் கட்டி கரைய மருந்து:-

கடுகுரோகணி, பெருங்காயம், குப்பை மேனிச் சாத்தில் ரத்த குதியில் தேய்க்கவும் மறைந்து போம்.

மேலும் ஆடு தின்னாப் பாளை உள்ளி, வசம்பு, நல்லெண்ணெயில் யெரித்துப் புங்கம் வேர் பட்டைச் சாறு பிழிந்து குளப்பி மெல்லிய சீலையிலாட்டி புண்ணைக் கழுவிப் போட்டுப் போடவும்.

புழு வெட்டுக்கு மருந்து:-

சீனக் காரம் மயில் துத்தம் கடல் நுரை யிது மூன்றுஞ் சரியாக கூட்டிப் பசுவின் வெண்ணெயில் போட்டு பால்ச் சங்கு கொண்டு இழைத்தக் கண்ணிலிடப் புழு வெட்டுத் தீரும்.

மேக நாதன் வெண்ணெ:-

பச்சை வெட்டுக் குங்கிலியம் பலம்.க, இந்த ஒரு பலங் குங்கிலியத்தையும் நன்றும்ப் பொடி செய்து இரண்டு தரம் வடி கட்டி பசுவின் வெண்ணெ விளாங்காயளவு கொண்டு வந்து அந்தக் குங்கிலியப் பொடியைப் பசுவின் வெண்ணெயில் போட்டு பிசைந்து ஒரு தட்டைச் சட்டியில் தண்ணீர் வத்திப் பிசைந்து ஏழு தரம் நன்றாய்க் க கழுவிப் போட்டு பூவன் வாழைப் பழம் கொண்டு வந்து அந்தப் பழத்தில் வெண்ணெ ஒரு நெல்லிக்காயளவு வைத்துப் பன்னிரண்டு நாள் சாப்பிடவும். இதுக்குப் பத்தியம் புளி உப்பு ஆகாது.

கிரந்தி சூலை இதுக்கெல்லாம் காந்த பற்பம்:-

காந்தம் விராகனிடை.3, ரசம் விராகனிடை.2, கெந்தகம் விராகனிடை.உ திரிகடுகு விராகனிடை.6, சித்திர மூலம் விராகனிடை.உ, சாதிலிங்கம் விராகனிடை.உ, ஓமம் விராகனிடை.உ, இதுகளைச் சுத்தி செய்து சூரணம் பண்ணித் தேனில் சாப்பிடவும். இதுக்கு தீரும் வியாதி கிரந்தி சூலைப் புண்ணு இது வெல்லாந் தீரும். கை கண்டது. இதுக்குப் பத்தியம் உப்பை சங்கிலையால் வறுத்து பசுவின் பாலுஞ் சோறும் சாப்பிடவும். இப்படி பனிரெண்டு நாள் சாப்பிடவும். நாற்பத்தெட்டு நாளைக்கு கிரந்திப் பண்ட மாகாது.

சுர வில்வாதி லேகியம்:-

வில்வ வேர் பலம்.20, குமந் தொட்டி வேர், தூதுவிளை வேர், நிலையா வாரை வேர், சித்தர் முட்டி வேர், செற்தொட்டி வேர், சிறுகீரை வேர், பொன்னுங்கண்ணி வேர், வெள்ளைச் சாறணை வேர், கண்டங்கத்திரி வேர், நன்னாரி வேர் ஆக வகைக்கு விராகனிடை.10 தண்ணீர் பதக்கு எட்டி லொன்றாய்க் குறுக்கவும். இஞ்சி சாறு படி.4, சீனி சர்க்கரை பலம்.10, சடாமாஞ்சி பலம்.க கோரைக் கிழங்கு, வலம்புரிக்காய், நெல்லிப் பருப்பு, மரமஞ்சள், கற்கடக சிங்கி, கஸ்தூரி மஞ்சள், தான்றிக்காய், கூகை நீர், வாய் விளங்கம், ஏலம், அதிமதுரம், சாதிக்காய், சாதிபத்திரி, சிறுநாகப்பூ, பறங்கிப் பட்டை, குரசாணி ஓமம், கொத்தமல்லி சன்ன லவங்கப் பட்டை, கருஞ்சீரகம், லவங்கப் பத்திரி, வெந்தயம், சுக்கு, மிளகு, திப்பிலி, சிறாம்பு, கடுகுரோகணி, கடுக்காய், சதகுப்பை, நன்னாரி வேர், கோஉஷ்டம் வகைக்கு விராகனிடை.30 தேன் படி.க, ஊசிக் காந்தம் விராகனிடை.10 வெங்காரம் விராகனிடை.10, முந்திரி பழம் விராகனிடை.10, பேரீச்சம் பழம் விராகனிடை.10 இது வெல்லாஞ் சூரணம் பண்ணித் தேன் விட்டு பதமாக லேகியம் செய்து கொண்டு பதனம் பண்ணிக் களச்சிக்காய் பிரமாணம் சாப்பிடவும். இதுக்கு தீரும் வியாதி அஸ்தி சுரம், கை கால் வீக்கம், கண்ணெரிவு சோகை பாண்டு, மகோதரம், விஷபாகம், மேக சூடு, அஸ்தி காந்தல் இவை யெல்லாந் தீரும். இதுக்குப் பத்தியம் புளி, புகை தவிர வாய்வான பதார்த்தம் தள்ளி விடவும்.

மருந்தீட்டின் குணம்:-

வந்திடு மருந்தீடுகுல் வாய் வளத்தவர் போலாறும்
அந்தியும் பகலுமொன்று யடிக்கடி யிருமும் வற்றும்

சிந்திடும் வேர்வை நீர் போல் தெரிவையர் விஷத்தின் கொட்டி
கந்திடு மேனி நொந்து கருத்தற வாடு மென்றே.

2. மிக்கதோர் பாம்பின் நெய்யால் மிகுத்தவன் கருவன் நெய்யால்
ஒக்கவே யறனை யோர்ந்தி யுண்டதோர் பானத்தாலே
தக்கதோரிருமுஞ் சாலச் சருவிடும் தேகம் வாடும்
முக்கிய மிதுவே காணு முடுகிடு மருந்தீடாமே.

3. மாதர் தன் கோட்டியாலும் வளவினிற் கறி சோற்றாலும்
குதகமான மாதர் தடற் கையாவனற் கையாலும்
மாதவராகப் பற்றி யடங்கிடும் நெஞ்சு தன்னில்
சீதவர் மொழியினுளே செப்பிடு மருந்தீடாமே.

4. உண்டதோரன்பான முவட்டிடு மறுகி யேறுந் தண்டியே
யிருமல் வந்து சாரம் போலூர் றுங் கோழை
மண்டியே நெஞ்சு கட்டி வளர்ந்திடுஞ் சீய்ப் போலுள்ளே
சண்ட மாரந்த மேகெடன்னும் போல் தவறிடுஞ் சீவன்றனே.

5. வேற்றிடும் வெடு வெடென்னும் விம்மிடும் வாய்வும்
போதச் சார்த்திடு மூலை தன்னில் தன்னைத் தான்றியப் பேசுஞ்
சித்த மெய் கருவி சோர்ந்து செங்குதிராக வோடும்
பார்த்திட தேனை வேண்டி பண்டிதரறியாரேவே.

6. அளத்திடும் நெஞ்சினுள்ளே யாசைகள் பலவும் வேண்டும்.
முளத்திடும் முதிரம் மஞ்சளுடலது நீய தாட்டுங்
களத்திடுஞ் சோவ வற்றி தமரிடு முடலினுள்ளே
முளைத்திடு பித்த வாத மையமே மருந்தீடாமே.

7. ஈளை இருமல் தோன்றி லெடுத்திடு முடலிற் சாருந் தாழையுஞ்
சாறு போல தன்னுள்ளே யூசுங் கோளை
காளையில் வந்து பற்றி கருத்தி மூவரண்டு தன்னில்
சோளையும் வற்றிக் கொதித்திடும் நெஞ்சினுள்ளே.

8. சீயது நெஞ்சினுள்ளே தேங்கிடும் வாந்தி போல
வாயது நாறுங் கோளை மயக்கிடுந் தியக்கும் வேர்க்கும்
மாயமே யிதாஞ் செய்த வறம மோகமு மென்பார்
தீயவர் மடவார் செய்ததித மிது மறன போகம்.

9. சீதக் களப முலையாள் தான் தெரிவை மாதருடன் கூடி
மேதக் கரிய விடத்தாலும் விரும்பு மமூர்தக் குணத் தன்னில்
மாதங்கிருவே தொழிலாக வகுத்தான் பிரமன் வகுப்பாமே.
9. சீதக் களப முலையாள் தான் தெரிவை மாதருடன் கூடி
மேதக் கரிய விடத்தாலும் விரும்பு மமூர்தக் குணத்தாலுஞ்
சேதப் படுத்தி வினை முண்டாஞ் சிவ தெரிவையு முலகு தன்னில்
மாதங்கிருவே தொழிலாக வகுத்தான் பிரமன் வகுப்பாமே.

<u>இதுக்கு_மருந்து:-</u>

10. எதா லெடுத்த மருந்தீடு மிரவைக் கொரு நாட் திரியாதே
மாதர் விரும்புங் கனி கொண்டு வடித்தே யிருப்புப் படி தனிலே
வேதா வுரைருங் கரிப்பான மிக்க களங்குந் தனிலரைத்துப்
போதாய் விடிந்தவுட னெழுந்து பொருந்த வடிந்துக் குடித்திடுமே.

<u>சுய_மக்கினி_குமாரன்:-</u>

1. நல்ல நாவி ஒன்று ரெண்டு நலத் தலை யிரத நாலு
சொல்லுங் கெந்தகம் எட்டாகும் தலங்குங் காந்தம் பதிறு
வெல்லு மரைப் பொடி என்னுங்கு விரைந்தே யிஞ்சிச் சாறு தனில்
வல்லபடியே அரைத்த தனை வாகாய் வழித்துத்தான் திரட்டே.

2. திரட்டே யேரண்டத் திலையை திரமாய் மூன்றிலை தான் பொதிந்து
முரட்டாய் நால சுத்தி யொரு மூலை தனிலே வைத்திருக்க
பிரட்டே யல்லத் தீ யெரியும் பொறுத்தா லாறிப் பின்னெடுத்து
பிரட்டே செய்யும் வியாதியள் நேர் விட்வே யோடுங் கண்டிரே.

3. குன்மஞ் சூலை பெரு வயறு கதித்த பித்தங் காமாலை
குன்டல வாதம் குடல் வாதங் குடல் கரி யேப்ப மீளை யிருமல்
அண்ட வாய்வு யளச் செனிப்பு அக்கினி மந்த மஷ்ட ப்ரிலிகையும்
கண்டு சொன்னே மிவை யெல்லாங் கருதிச் செய்யும் பெரியோரே.

1. மடலரிதாரஞ் சூதம் மனோசிலை சாதிலிங்கம்
விடையமது பொன்னூமத்தை வித்துக கெந்தக வெங்காரம்
திட நமச்சாரந் துத்தந் திரிகடு கிலவங்கந் தான்
கடுகு ரேவணி வெந்த கசாயத்தி லரைத்துக் கொண்டே.

2. கொண்டிட யிஞ்சி சாற்றில் குறித்தரை நாலு சாமம்
தண்டு யூமத்தஞ் சாற்றில் தாரை நாலு சாமம்

குன்றி போலுண்டை செய்து கொடுத்திட அநுபானங் கேள்
வென்றிடும் மிளகு யிஞ்சி வெந்த நீர் தன்னிலா ட்டே.

3. ஊட்டுவாய் சன்னி வாதம் உள் மூலம் அதிசாரங்கள்
ஓட்டன் கிரும்பு கட்டி உரைத்திடத் தீரு
மாட்டி யவன்னி தோஷம் வறட்சியும் விக்கல் தீரும்
காட்டு தேத்தான் விதை யரைத்துக் கலந்து நவ நீதங் குடே.

4. கொடுப்பா யின்ன மந்தாரங் கு---ழைப் பருவன் பல பிழை நோய்
ஒட்ட வெடிப்பாஞ் சூலை கடு விஷ நோய் மீளுஞ் சயங் கினிய தீரா.
அடிப்பாய் நொச்சி சதகுப்பை முதலனுபானஞ் செய்தால் விதியே
யெடுப்பாய் சன்னி பாதம் பதிமூன்று யில் லை இஞ்சிச் சாற்றாலே.

வெட்டு மான பற்பம்:-

1. வசுவாசி யிலவங்கஞ் சாதிக்காயு மத முடைய அவின் கஞ்சா வெங்காரங் கிராம்பு
காந்தம்
அசமோதகத்துடனே அக்கிலாக் காரம் அதிவிடையம் குரோசானி ஒமம் தானும்
பசையான முன் மருந்து பதினென்றுரும் பாதி யது ஊமத்தன் வித்து லிங்கந்
திசையாகக் கட்டி நன்றாய் பற்பமாக்கித் தேனிலே பணவிடை தான் கொள்ளு மென்றே

2. கொள்ளுகிலே களிச்சலுடன் கடுப்பு நிற்குங் குன்மாகுஞ் சுர முழுகுஞ் சன்னியோடு
விள்ளுகின்ற அதிசாரங் கிராணி குன்மம் மேலேப்ப முள் மூலம் ரோகந் தீரும்
தள்ளுகின்ற மருவில்ரே நரியேய் நாய்க்குந் ரத்தி வெட்டுமான் பற்பம் சொன்
னேம் சொன்னேம்
தெள்ளு தமிழாராய்ந்த மன்னர் கோமான்றிடை முழுதும் விளங்குகின்ற பற்பந்தானே

மேக நாதன் குளிகை:-

1. மேதினியோர் வாழ வேண்டி மேகநாதன் குளிகை கேளு
சாதிலிங்கம் வெங்காரஞ் சாந்த சுக்குத் திப்பிலியு
மாதே மிளகு இந்துப்பு வசம்பு காட்டா மணக்கின் வேர்
ஆதி சிவதை வேருடனே அசமதம் வாய்விளங்கந் தானே.

2. தானென்ற பெருங்காயம் ரோகணியும் சேர சமனிடையால் சம்பழத்தா லரைக்கும்
போது
கோனென்ற நேர்வாளஞ் சமனாய்க் கட்டிக் குளிகையது பிரமாணங் குன்றிச் சோடு
வேனென்ற விரோசனம் வென்னீர் ---விக்கல் சுரம் சுக்காகும் கடுக்காய் காசம்
ஆனுகின்ற குன்ம மென்று சீரகத்தில சீரண மந்த மெல்லா மடங்கிப் போமே.

3. போகுமே பாண்டு மகோதரம் பீலிகை போம் பேராம்பல் பெருவயறு நொச்சிச்
சாற்றில்
யேகுமே யிருமல் முதல் குஷ்டங் கிருமி யியல் பெரிய மேஹத்தி னமுரியாலே
வாகு பெரு குரு முனிவன் அருளினாலே மானிலத்திலிக்குளிகை வழுத்தினேனே.

வாத பித்த சேற்ற மதி கோபம் வருகிற லட்சணமாதம் மூல ரோகத்துக்கு மருந்து:-

காரெள்ளு சுக்கு கடுகொடு திப்பிலி நேரெரக்கக் கூட்டி நிற்றலும் உண்பீர்
ஊரோக கெடுத்து உண்பவள்சுற்றம் போலே வேரொக்கக் கெடும் விடு மூல வியாதியே.

மாதேவிக்கு யெண்ணை விபரம்:-

உதியம் பட்டைச் சார் படி 1/16, கருவேலம் பட்டை சாறு படி வீசம், நல்லெண்ணை படி வீசம், தேங்கா யெண்ணை படி வீசம், வசம்பு மெழுகு அவினி, குங்கிலியம், கருஞ்சீரகம், கடுக்காய், கஸ்தூரி மஞ்சள், காசுக்கட்டி, நுத்தம், நுருசு, கொத்தமல்லிகை, கார்கோலரிசி, வெப்பாலரிசி, ஏலம், வாய் விளங்கம், வாலுளுவை அரிசி, அதிமதுரம், வெம்பாடம் பட்டை ஆக வகைக்கு விராகனிடை.½ நஞ்சுண்டான் பட்டைச் சாறு படி.1/16, பொன்னிறமாய்க் காய்ச்சி மூக்கில் நசியம் பண்ணி புண்ணுக்கும் பசவும். மற்ற ரணத்துக்குமாம். இது கை கண்டது.

நவகோடி பாசாணத்துக்கு:-

எட்டிக்கு நாவல் யேரு தோணி தான்றிக்காய் வட்ட மலர்த் தாமரை யேழுமத்தை
யிஷ்டமுடன் ஆவாரை கள்ளி அரளி கடுக்காய் மேவிய நெய் தேறுக்கு வெந்த கரி
யோவியமே நற்சுக்கு மஞ்சள் நேர் வாளம் நல் வசம்பு வேற்ற சிவதை வெள்வேலா
போற்றி மிக நெல் வேறுஞ் சக்கரையும் நேரொக்கக் கொள்வார்க்கு
யெல்லார்க்குஞ் சொன்னேன் மிலாமிச்சு சொல்லரிய நாவி சிறுகீரை நற் குன்றி
வெண்காரம் தாவிய பாசாணந் தனி மிளகு யித்தினையும் நீலிக் குத்திரு மென்று
நேசமா முனிவர் போதித்துச் சொன்னார் புகழ்ந்து.

வீரியத்துக்கு ஆசனப் பவுத்திரத்துக்கு மருந்து:-

முடக்கு கொத்தானிலைச் சாறு வாங்கி பச்சை யரிசி ஊறப் போட்டு ரசமெல்லாமுங்க விட்டு இடித்துப் பிட்டு வைத்து யெரித்து பசுவின் நெய் விட்டுச் சாப்பிடவும். இப்படிப் பனிரெண்டு நாள் சாப்பிடவும். பசியானல் சாதத்துக்கு நெய் விட்டு சாப்பிடவும். இப்படிப் பனிரெண்டு நாள் சாப்பிடவும். பசியானல் சாதத்துக்கு நெய்

விட்டுச சாப்பிடவும். இந்த முறைக்குச் சாப்பிட்டால் நாற்பது வருஷத்துக்கு வீரிய விர்த்தியுண்டாம்.

__ஆசனப் பவுத்திரத்துக்கு:-__

செம்பிறண்டைக் கிழங்கு, புளிப்பிறண்டைக் கிழங்கு, நல்ல பிறண்டைக் கிழங்கு இது மூன்றையும் சமன் பட நிறுத்துப் போட்டு இடித்து வஸ்திர காயம் பண்ணி வைத்துக் கொண்டு ஒரு படி யெடுத்துக் கூங் குழவை யரிசியாவது கம்பரிசியாவது கூடப் போட்டு இடித்து களிக் கிளறி தின்னவும். தின்னும் போது வெந்நீர் வார்த்துக் கொண்டு ஈரமுள் முன்னே மருந்து தின்னவும். இந்த முறைக்கு மூன்று நாள்க் கொள்ளவும். பத்தியமாக இருக்கவும்.

__கிரந்தி மேகம் அகவை சோகை இருக் கெல்லாந் திரித் தயிலம்:-__

கெந்தகம் பலம்.5, நவச்சாரம் விராகனிடை.உ, இல்வீரம் விராகனிடை.உ வெடியுப்பு விராகனிடை.க, அரிதாரம் விராகனிடை.ங இது வெல்லாம் பசுவின் நெய் விட்டு ஐந்து நாழிகை அரைத்து வெண் சீலையிலூட்டி தீயில் வெதுப்பித் தயிலம் விழும். அந்த தயிலத்தை கல்கண்டு அகிலும் தேன் ஆகிலும் பணவிடை கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி குட்டம், சோகை பான்டு சூலை கிரந்தி, மேகந் தீரும். பத்தியம் புகை, புளி தவிர்க்கவும். உப்பு வறுத்துப் போட்டுக் கொள்ளவும்.

__கிரந்தி மேகத்துக்கு என்னை வைக்க விபரம்:-__

சீர் பெறுஞ் சிவகுரு திருவடி தொழுது பேர் பெற தன் மந்திரி செய்யு மியல்பு
ஓங்கு வியாதிகள் ஓடவே பாரில் பாங்கு கஸ்தூரிப் பட்டையும் நிறை தான்
அஞ்சு விராகன் ஆகாசக் கெருடன் பறங்கியினி பட்டை பகர் கருஞ்சீரகம்
ஓர் தருஞ் சீந்தி வேர் உயர் கஸ்தூரி மஞ்சள் வகை யொரு பத்து வராகனுமாக
செகத்துள்ள யீருள்ளி சேர்த் தொரு பலந்தான் ஒக்க யிடித்து உயர் குப்பை
மேனித் தக்கச் சார் விட்டுத் தான் அதை யரைத்து கடு விளக்கென்னை கலந்தொரு
படி தான் விடு அடுப்பேத்தி விளங்கன் எரித்துமே.

முத்தின பதத்தில் வெந்ததை யிறக்கித் தொழுது கணபதிக்கு-சொல் பொரி அரிசி பாக்கு வெத்திலையும் பகர் காணிக்கையும் தாக்கிய தூபந் தானது கொடுத்து யெடுத்திரு கறண்டியில் யென்னையைக் கொடுக்க விடுத்திடும் வேதி வென்னீரும் சோறும் உண்ணவு மாய்ப் புளி உப்பு மாகாது தின்னய் மறு நாள் நேர் விளக்கென்னை தேய்த்தால் போலே சீர் பெற முழுகிக் காதலியுடனே கனவதும் என்னை சாதகமாகத் தானதை யருந்தி அவ பத்தியம் யீரெழு நாளாக சிவ சத்தியமாய்த் தீரும் வியாதிகள் ஊதக வாய்வு தடராரையாப்பு பேறதக் கிரந்தி புண் சூலையும் போம்.

பிள்ளை யில்லாத பேர்களுக் காகுங் கள்ள கரப்பான் கடு ரோகங்களுந் தீரும் பிற மனைத் திருடன் சேர்ந்த காரிழை பேர் கொள் கடுர விருட்சம் பார் தனில் காய்த்திடாப் பாலுள்ள மரந்தான் அதினிய பிறனி ஆன கஸ்தூரிப் பட்டை தானென்று பகர்ந்தனர் முனிவர் அறிந்திது செய்தால் ஆன் விகள் பறந்திடுங் கை கண்டது பகர்ந்தோமே.

__உஷ்ணம் கெந்தக தாளிசி யென்னை:-__

தாரணங் கமழ் சீரகத்தொடு சாதிக்காயோடு யேலமு மறுகிரும்பொடு கெருட பச்சையும் தான் வகைக்கிரு விராகனே சீர் பொருந்திய தகரையும் சிறு கீரையும் பழம் பாசியும் செய கொடுப்பையும் அகத்தி அவ்வகை சேர்த்திடித்து சாறுரி நீர் பொருந்திய வெள்ளை பாலுரி நீர் விளக்கென்னை தாரி நிசமதாகவே மௌகினிய பதம் நீரியாக வடித்த பின் கறண்டி கொள் அந்தி சந்தியில் உஷ்டண வாய்வு கிரந்தியும் உள் சுரத்தொடு கெந்த தாளியும் உள்ள ரோகமுந் தள்ளுமே.

__மேகம் இருவத்தொன்றுக்கும், கிரந்தி சூலை முன்னூற்று அறுபதுக்கும், குழந்தை சுரம் மாந்தத்துக்கும் என்னை:-__

வென்னொச்சியிலை, சங்கிலை, சங்கங் குப்பி யிலை, சின்னி யிலை வீளி யிலை, செருப்படி யிலை, பாவட்டை யிலை, நுணாவிலை, களச்சி யிலை, சிறு தேள் கொடுக்கிலை, குப்பை மேனி யிலை, மணத்தக்காளி யிலை, தக்காளி யிலை, கற்பூர வள்ளி யிலை, வெள்ளருகு யிலை, கொட்டக் கிரந்தி யிலை, சிவகிரந்தி யிலை, வல்லாரை யிலை, கோழியவரை யிலை, கரு யீண்டி யிலை, வேளை யிலை நாய் வேளை யிலை, முடக் கொத்தானிலை, முன்னை யிலை, சிறு முன்னை யிலை, நல்ல துளசி யிலை, நறுந் துளசி யிலை, வட்டக் கிறு கிழப்பை யிலை, கையாந் தகர யிலை, கஞ்சாங் கோரை, கிழங்கு, பேய் மிரட்டி யிலை, சிறு பின்ன-புள்ளடி யிலை, ஆடு தின்னாப் பாளை, பிரமி யிலை, வேப்பிலை, புங்கிலை, நெருஞ்சி யிலை, சிறுகீரை யிலை சுடு துரத்தி யிலை, புண்ணாக்கு பூடு யிலை, நிலையாவாரை யிலை ஆக வகைக்கு ஒவ்வொரு குத்துக் கொண்டு வந்து விளக்கென்னை அருக்கிலை-யிலை,-திலை படி நாலு, மறுஊர் மூறி தேசி அமுரி பசுவின் முரி இந்த மூன்றும் முன் சொன்ன பச்சிலையில் விட்டு துவைத்து சாறு வாங்கி யென்னையில் விட்டு ரவியில் வைக்கவும். அதின் பிறகு சித்திர மூலம், நிலப் பனைக் கிழங்கு, சீந்திக் கிழங்கு, அறுகங் கிழங்கு, அமுக்கிருக் கிழங்கு, வெருகங் கிழங்கு ஆக காசுக்

கெருடன் கிழங்கு, புங்கம் வேரு, சங்கம் வேரு, மாவுலிங்கம் வேரு, வேப்பம் பட்டை கண்டங்கத்திரி வேரு, நாவல் வேரு இந்த வேர் வகை யெல்லாம் வகைக்கு பலம்.உ இடித்து நாலு படி தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் குறுக்கி எண்ணெயில் விடவும். மேற்பொடி கடைச் சரக்கு ஈருள்ளி, வெள்ளுள்ளி, மிளகு, சீரகம், வெப்பாலை அரிசி, நீரடி முத்து, பறங்கிப் பட்டை, கஸ்தூரி மஞ்சள், கத்தாழை மடல் சோறு இது வகைக்கு பலம்.க, இது வெல்லாம் முன் சொன்ன அமுரி விட்டு அரைத்து , எண்ணெயில் போடவும். மெழுகு பதத்தில் காய்ச்சி இறக்கிக் கொள்ளவும். இந்த எண்ணெயில் இரண்டு விராகன் ரச கற்பூரம் நணுக்கிப் போடவும். இதுக்குத் தீரும் வியாதி மேகம் இருவத்தொன்றும், கிரந்தி சூலை முன்னூத்திருவதும் குழந்தை சுரம், மாந்தை இது வெல்லாந் தீரும்.

கருவங்க பற்பம் வைக்கும் விபரம்:-

கருவங்கம் ஐந்து விராகனிடை கட்டி கொண்டு வந்து ஆவாரம் வேர் பட்டை நாலு பலம் கொண்டு வந்து இடித்து வங்கத்துக்குப் பொதிந்து மேலே கோணிய பட்டுச் சுத்தித் தேய்த்து ஒரு சீலை மண் செய்து ஒரு முழக் குழி வெட்டி குழி அடியில் நூறு எருவு போட்டு மேலே நூறு எருவு போட்டு தீப் போட்டுப் புடம் போட பற்பமாம். இது சுரங்கள் சன்னிக்குமாம்.

(இது முதல் உள உச ஏடு வரை சன்னிகளின் குணங்கள் கூறும் ஏடுகள் எழுதாமல் விடப்பட்டன).

அமுர்த பஞ்சா யமுர்தம்:-

அருமறை யோர் சொற்படி அமுர்த பஞ்சா யமுர்த்தை
பெருமையுடன் கூட்டும் வகை பேசக் கேள்
குரு மொழி கேள் தப்பாமல் சுதமது தான் கெந்தகம் நாவி
செப்பமுடன் நிறையாய் சேர்த்துக் கொள் தப்பறவாய் சாதிக்காயாறு நிறை தான்
நாக்கு திப்பிலியும் ஆதரவாய் ஒன்பது பங்காக்கிக் கொள் பேதமில்லாச் சேரப்
பொடி செய்யது சேர்த்திப் பணவிடை தாள் சாரமுள்ள இஞ்சிச் சாற் தன்னிலிடப்
பாரச் சுரம் போக்கும் கிருனிக் கிப் பொருந்தியிடு வெற்றிலையில் தாக்குஞ் சுவாச
காசந் தனக்குமே மூர்க முடன் திரிபலைக் கசாயத்தில் தீரும் வயற்று வலிக் குருதி
மிளகு பொடியில் கூட்டலாம். உருசை தரும் பஞ்ச லவணம் வறுத்து பற்பங் குன்மத்துக்
காகும். வஞ்சியரே சிலேற்றும மந்தாக்கினிக்கு மிஞ்சியதோர் வேப்பம் பட்டை சாறு
தன்னிலிட மூட்டி விடும் மூத்திரக் கிறிச்சிக்கு யிளநீருடன் அளசிச் சாற் தன்னிலிட
சட்டமுடன் சுகமாக வாந்திக்கு சுட்ட புளித் தோல்ச் சாம்பல் பகவானைப் போற்றிப்
பறந்தோடும் அகமதனில் மார்பில் நோயாறுக்கால் வறுத்த திப்பிலி பொடித்து தீரு
மதில்தனில் தின்றக்கால் சேராத யொப்பும் அசீரணத்துக் கோமமது பொடித்து தப்பா
மலிம் மருந்தைத் தாக்குவாய் அற்பமாய் ஆசனத்து மூலமது அறவுங் கடுந்தாக்கால்
வாசமுறுஞ் சுக்குப் பொடி வாகாகும் யீரனூர் பத்தியமோர் சேர்ந்த பசுவின்
தயிராகும் மெய்ப்பாகக் கொள்வாய் விரைந்து.

இஞ்சி லேகியம்:-

சுக்குடன் மிளகு, திப்பிலி சுத்தமாய் கொத்தமல்லி
அக்கமான கடுகுரோகணி அதிமதுரங் கோரங் கிழங்கு
பொக்கமான லவங்கப் பட்டை போனதோல் யேலங் கிரும்பு
தக்கமான ஓமமுடன் சமுத்திராப் பச்சையுந் தாறு முண்டாம்
சிக்கமான சீரகமும் சிறந்த இஞ்சி லேகியமே.

உள் மூலத்துக்கு அதிசாரக் கிருனிக்கு மருந்து:-

கிள்ளை மொழி மானே கேள் கிருனி கேசரியை யுள்ளபடி யாமுரைக்கக் கேள்
நன்று மிரத மொடு உயர் சாதிலிங்கம் காரமுடன் காந்த மோடோமம்

கண்ட குரோசாணி அவின் கசகசா நெற் பொரியு மீண்டு அதிவிடையம் யேலமுடன்
ஒன்றோடி யீர் மாசக்காய் தான்றிக்காய் மத்தங் கிரும்புடனே
ஆயமொடு பத்திரிகளை மூன்று நாசமதாய் நல் முத்தமாங் கொட்டை
மாதளந் தோடிற் சிறந்த யவை கோரக்கர் மூலிச் சாற்றில் அரைத்தே
கிறள் வுண்டை செய்து நிழல் உளரா யுலத்தி வாட்டமில்லா
மேதித் தயிலத்தில் விரைந்து குடித்திடில் ஆவி தணையான அதிசாரம் போம்.

கணை என்னை:-

1. ஆமென்றேன் கணை தானும் ஆறுண்டாகும் அப்பனே தீர்ப்பதற்கு வகையைக் கேளு
தபமென்றேன் இண்டோடு நெருஞ்சி சின்னி தப்பாதே சிறுகீரை பொன்னாங்காணி
கோமென்றேன் கோவையிலை கொடியதாகுங் குறையில்லாத் தகரை யிலை மணத்
தக்காளி
நாமென்அறனு நரிப் பயத்தின் கொடிய நாகும் நலமான சிறு புள்ளடி யிலைய
தாமே.
2. இலையின் சாறு வகை நாளியாகும் ஈருள்ளிச் சாறதுவும் சமமாய் சேர்த்து
விலை கோளுமே கடைச் சரக்கு விபரங் கேளு வேர்க் கொம்பு வசம்புள்ளி
சாதிக்காயும்
திலை தவளுக் களஞ்சி வகை மூன்றதாக நேர் கடுக்காய் அங்களஞ்சு பத்திரியும்
பலம்
கலயத்க்கிடு நாள் தாக்கி பாகமாய்ச் சாற்றிலே சேரு சேரே.

3. சேர்த்ததிலே ஆமணக்கின் எண்ணை சேர்த்து திறமான அடுப்பதிலே தானும் வைத்து
வைத்ததிலே மெழுகு பதமாகும் போது மைந்தனே கணபதிக்கு பூசை பண்ணு
கோர்த்ததிலே குருவினுட பதத்தைப் போற்றிக் குணமான எண்ணையைத் தான் இறுத்துக் கொள்ளு
பார்த்ததிலே நித்த நித்தம் காசிடை தானுண்ணப் பறக்கு கணை தானுங் கண்டு கொள்ளே.

4. கொள்ளவே கணையாறு மெங்கே போச்சு கூடுகின்ற மாந்த மெங்கே வலிப்பு மெங்கே
மெள்ள வாய் நாத்தம் உஷ்ண மெங்கே மேலான மேக கணை தானுமெங்கே
உள்ளிலே ஊர்ந்துகின்ற கிருமி யெங்கே உபாயம் போல் வந்த தொரு பிணி தானெங்கே
கள்ள மெல்லாந் தீர்ந்து விடுங் கணையு மற்றும் கனமான எண்ணையைத் தான் கண்டவாறே.

<u>மேகம் இருவத் தொன்று கருங் குட்டம் கிரந்தி முதலானதுக் கெல்லாம் பூவரச எண்ணை</u> :-

சிகம் தனில் மாந்தருட தேகமதிலுள்ள சகல கிரந்தி நோய்தான் தீர
மகமேருவில் மேவு முனி முன்னுள்விதமா யுரைத்தபடி பூவரச யெண்ணை புகலக் கேள்
பாவலரே கன்னி யெனும் பூவரசங் காய்ச் சாறு நாலு படி பண்ணுங் குப்பிச்
சாறு படி யரையாம் இனமுமே வேண்டுங் களச்சி சார் மிக்க அரைப்படியாம்
தான்டு வெருகங் கிழங்குச் சாறரையாம் மீண்டும் அசுவ கெந்தி கோளியவரை
சென தசிவுள கொட்டான் கரந்தைச் சாறரையாம் வசமான சாடும் பெரு
மருந்து சாறுங் கோடைக் கிழங்கு கூடும் படி யரையாய்க்கூட்டிக் கொள்
வாடாதே தழுதாழை பூவரசு சாறு வகைக் கெல்லாம் நருகாதரைப் படி
சாற் நாட்டிக் கொள் வளமாக பலமான பூவரசம் பட்டை பலமொன்று
நலமாம் பெரு மரத்து நார்ப் பட்டை பலமாகு சாகு தனி கொடிவேற் ஆம்
மரப்பட்டை யளகான மாவிலங்கு ஞாய சிறுப்பா யுட நஞ்சுண்டான் வேர்
நெய செங்கத்தாரி சிவனார் வேம்பு தம்பான நீலி வேர் கூறரிய வேம்பு
மொன்றாய்க் கூட்டியே காரியமாய் பட்டை வகைக் கெல்லாம் பரிவாய்ச் சரியாகச்
சட்டமுடனே பலம் பத்தாய்ச் சேர்த்தி மட்டுமே . பரிவா யிடித்தெல்லாம்
பானையிலே போட்டுச் சரியாக யெட்டு வள்ளத் தண்ணி விட்டு ஒரு வள்ளம்
ஆக வடித்த பின்பு அந்தக் கசாயத்தில் வேகமுள்ள பச்சிலைச் சாற் விட்டுடனே
வாகாக அடுப்பிலே யேத்தி யெரித்து மந்த ஆவி தன்னில் கெடிப்பாம் அரிதாரம்
கெந்தகமும் வெடிப்பான நல் துத்தங் காந்தமொடு [illegible] நாவ சரக்கு வகை
கலத்துற்று மேந்திரமாய்க் கட்டியே மலத்து மிக ஒரு நாளிருக்க விட்டு
மறு நாளெடுத்ததிலே திரமாய்க் கடுகுரோகணி சீரகமும் திறமாக வரிசையுடன்
காட்டுச் சீரகமும் வாலுளுவை யரிசி பறங்கி யதின் பட்டை யுரிசையுள்ள தளிருஞ்
சிவனார் வேம்பு சாதி காய் சாதிபத்திரி உளமா மிளகு வகை ஒன்றுக்கு
வளமாக அஞ்சு விராகனிடை ஆகப் பொடித் தெல்லா மிஞ்சிக் கசாயத்தில்
விட்டரைத்து அஞ்சாமல் எண்ணை படி மூன்றுக்குள் இயல்வாய் கரைத் தெரித்து
வண்ண மெழுகு பதம் வந்த பின்பு நன்றாய் மெள்ள வடித்து விதமாகக்
காலமே உள்ளுக்கு ஒரு கரண்டி உண்டு வரத் தள்ளாதே சேரு மரை மண்டலங்
கால் மண்டலம் நீ தின்று வந்தால் தீரும் வியாதி தன்னைச் செப்பக் கேள்

பாரினிலே விரிவாய்க் கருங் கிரந்தி வெள்ளை குஷ்ட மேகம் இருபத்தொன்றுந்
தீரும் இதல்லால் பெருமையாய் போகாக் கிரந்திகளும் போய் விடுமே
பத்தியங் கேள் பாகான பாசிப் பறய் துவரை வாகான முளகு யிளங் கீரை
தன்டு வில்லுரேன்று வாம் வளர்ப்புச் சங்கிலை யால் வழுத்துக் கொள்
நறுவாமல் பசுவின் நெய் பால் தயிரும் பண்பாக யில்லாட்டால் யிசையும்
வென்னீர் சாதமே யின்பமாய் நிசமாக சொன்ன வியாதி யெல்லாஞ் சுடியாகத்
தீரு மென்று சென்னி மலை மேவு பரன் செப்பினார்.

முற்றும்.

<u>விக்கலுக்கு</u> :-

1. பாலின் நெற் பொரி சர்க்கரை தேன் விட்டுக், கோலமான் கொம்பு கூட விரைத்திட்டு
மூலியான கசாயமும் நீருண்ண பால சத்தியும் விக்கலு மாறுமே.

2. வில்லை பத்திரி நெற் பொரி சர்க்கரை நல்ல திப்பிலி நாரத்தியுண்பீராய்
கொல்ல வந்திடுஞ் 'சத்தியும்' விக்கலும் இல்லை யில்லை யென்றே மறையில்லையே.

3. நெல்லி [illegible]க்குடன் நெற் பொரி சர்க்கரை நல்ல திப்பிலி நாரத்தி யுண்பீராய்
கொல்ல வந்திடுஞ் சத்தியும் விக்கலும் இல்லை யில்லை யென்றே மறு மில்லையே.

4. நீடு மாதளை நெற் பொரி சர்க்கரை தேடு திப்பிலி தேனில் குழைத்துண்ண
பீடை செய்யும் பெருஞ் சத்தி விக்கலும் ஓட ஓடத் துரத்திடும் உண்மையே.

<u>அதிசாரத்துக்கு</u> :-

மாதளை யோடு பருத்தி விரை மாவுங் கற்கடக சிங்கி
போத யேல நெற்பொறி பொருந்துஞ் சீனி சர்க்கரையும்

ஆத ரேணிய முக்கையுடன் அக்கு கார மதி விடையம்
வேத முறையாய்ச் செய்வோர்க்கு விடுமே, கிருணி மூலமுமே.

பெரு மரம் முத்தக் காசு பேரதி விடையங் காந்தம்
பருகிய வில்வ மோடு பாதிரி பங்கம் பாளை
யுரியுடன் நாரி நரிவா ற வே யெட்டொன்றுக்கி
கரியாமல் கைய கேளீர் கட்டிடு மதிசாரங்கள்.

ஆவரை அத்தி யிச்சி அடுத்ததோர் கடலிருஞ்சி
மேவிய மருந்தின் தோலும் விரும்பி மெய்ப் பொடியாய்ச் செய்து
பூவினில் மெல்லியாரே புதிய தேன் தன்னிலுண்ண
காவிரி யாறும் வற்றிக் கடல்களுஞ் சுவறந் தானே.

(அத்திப் பிஞ்சு, மொந்தன் வாழைக் கச்சலும் பத்தியம்).

<u>சத்திக்குக் கசாயம்:</u>-

கொத்தமல்லி நெற் பொரி குருந்த முட்டி காவளை
ஒத்த சுக்கு முத்தமோடு மோங்கு திப்பிலிம்புடன்
வத்தக் கண்டு சர்க்கரை மனந்த கசாய முண்பீராய்
சத்தி யென்றுந் தொன்று மோசகத்திலுள்ள மாந்தரே.

<u>செய்யான் கடி, எலிகடி, சுசுசுட்டுப் காட்டுப் பூனைக்கு மருந்து:</u>-

எருமை மோரு இருப்புப் படியில் ஊத்தி மதுக்காறன் காய் முவைத்துக் கிளி கட்டி
அந்தப்படி மோரில் பிசைந்து கொடுக்கவும். அப்பால் கம்பஞ் சோறு கொடுக்கவும்.
அப்பால் சாயந்திரம் தலைக்கு தண்ணீர் ஊத்திக் கோழிக கறியுஞ் சோறுங் கொடுக்கவும்.

<u>உள் மூலத்துக்கு:</u>-

உள் சுருங்கி சமூலமும் பருத்தி விரையும் பச்சரிசியும் களிக்கிண்டி தின்னவும்.

<u>பிற மூலத்துக்கு:</u>-

ஈர பிற சுருங்கி சமூலமும் பருத்தி விரை சமூலமும் பச் ரிசியுங் களி கிண்டி
ஆறு நேரம் சாப்பிடவும்.

<u>காசம் இருமலுக்கு அடை சுட்டுத் தின்கிறது:</u>-

கையாந்தகரை, நாயுருவி, கருவேல், சங்கு, ஆவளை,
மெய்தான சிவந்த யெருக்கு மொட்டு வேலிப் பருத்தி யிவை யேழும்
நெய்தாள் தவிர யெண்ணை யிட்ட னெக அரைத்து அடை சுட்டு
கைதா னெடுத்துத் தின்பீராய் காச விருமலகன்றிடுமே.

காட்டுக கறணை கறிச் சேம்பு காசம் பிறண்டை பிளி நறளை
தேப்ட வெருகு கொடிவேலி தூய்ய திரிக்கடுகு நிலவாகை
கூட்டி யிடித்துத் தூளாக்கி குலாவுந் தேனிலுண்பீராய்
நாட்டிலுள்ள மூல மெல்லாம் நடுங்கி யோடுங் கண்டீரே.

<u>கிரந்திக்கு மருந்து:</u>-

கெவுரி, [illegible], கருஞ் சீரகம், கஸ்தூ ரி மஞ்சள், இது வெல்லாம் ஓர்
நிறையாய்த் தூக்கி நறுக்கி நல்லெண்ணெயில் போட்டு சிவக்க வெந்ததின் பிறகு இறக்கி
மேலுக்கு தேய்த்து சாயந்திரம் எருமைச் சாணி தேய்த்து வென்னீர் தண்ணீர் விடவும்.
இப்படி மூன்று நாள் செய்யவும்.

<u>நாலாம் மாறலுக்கு:</u>-

எருக்கம் பூ ஒருக் கொட்டைப் பூடு வெள் வெங்காயம் ஒரு சேரை மிளகு
அரைச் சேரை, பெருங்காயம், களஞ்சி விராகனிடை.3, பாகலிலைச் சாறு விட்டு
அரைத்துக் கடலைப் பிரமாணம் வெத்திலையில் தின்னவும் தீரும்.

<u>சன்னிக்கு இந்திராணித் தயிலம்:</u>-

வேப்பம் பட்டைச் சாறு படி.உ, கொளிஞ்சி சாறு படி.உ, துளசிச் சாறு
படி.உ, கச்சந்திராச் சாறு படி.உ, ஆடாதோடைச் சாறு படி.உ, புகைம் ஒரு
மாங்காயளவு, நல்லெண்ணை படி.உ, வேப்பெண்ணை படி.உ, கடைச் சரக்கு விபரம்
மர மஞ்சள், திரிகடுகு, தேவதாரம், வசம்பு, கோஷ்டம், சதகுப்பை, அதிமதுரம்,
கடுகுரோகணி, சந்தனம், லவங்கம், ஏலம், சீரகம், கற்கடக சிங்கி, மஞ்சள்,
சங்கம் வேர், கண்டங் கத்திரி, திரிபாலை, அதிவிடையம், அரத்தை, மந்திட்டி, நில
வேம்பு, குக்கில், அக்கிலாக் காரம், கண்டு பறங்கி இது வகைக்கு விராகனிடை.உ,

(முடிவு இல்லை)

<u>கபால சன்னி குண மருந்து:</u>-

பெருத்த நரம்பின் பிடரி தன்னை போப்பிரிய வொட்டாது
வருத்தி மிகுந்து தலை காது மதிக்குத் திமிரத் தினவும்
திருத்தமுடனே இடாடி திரியந் திரிய ஒட்டாது
கருத்தைக் கொடுத்தத் திமிரப் பெரும கபால சன்னி யெனக் கருதே.

விக்கல் சிலேற்பம மேல் மூச்சு விழிகள் சொருகல் மேல் மயக்கம்.
தக்க நாடி நிலை பதத்தில் தாடை வத்தல் சல உழத்தல்
நக்க னருளாவிவை கண்டால் நமனூர் வச மென்றிடலாமே.

<u>மருந்து</u>:-

சூத்தம் நருசு வெங்காரம் சூதம் நாபி நேர்வாளம்
சத்திச் சார மரிதாரம் சாற்றுங் கெவுரி பாசாணம்
சித்திர மூலம் கெந்தகம் மிந்துப்பு வெள்ளைப் பாசாணம்
சித்த மகிழும் மனேசிலையும் சேர்ந்துச் சரியாய் நிறுத்து விடே.

நிறுத்திட்டெருக்கம் பால் விட்டு நேசு வரைத்து வுண்டை செய்து
வருத்து முலைப் பாலுடன் பூடு வைத்து பிளவை விப்புருதி
கடுத்து வீங்கும் பவுந்திரமும் கண்டமாலை முதலாக
செறுத்த விரணந் தீர்ந்து விடும் சீரா மிரண கேசரியே.

<u>காதில் வியாதி, இரைச்சல் குத்து சீ விழுகிறதுக்கு</u>:-

ஆமப்பா செவியடைப்பு இரைச்சல் குத்துக் கன்பான வேப்பெண்ணை யதனில் கேரு
வேமப்பா வெம்பாடம் வேளை வேரும் வெள்ளுள்ளி பெருங்காயம் அவினி சுக்கு
தாமப்பா அரியாறு பூச்சிக் கூடு தனித்த பூ நாகமுடன் முசுரு முட்டை
யேமப்பா பாச்சையுடன் இது வெல்லாந் தான் இது சமன் தான் யெண்ணை தனில்
காச்சி யூட்டே.

(ஈடையில் உள்ள ஏடுகள் தாது லெட்சணமும் பிறவும் விடப்பட்டன).

<u>பல் ஊலை, நாவிப் புத்து சிங்க ரோகம் இக் கெண்ணை</u>:-

வன்னிப் பட்டை யெருக்கம் வேர் பட்டை ஆவாரை வேர் பட்டை மருக்காரம் பட்டை, வெள்வேலம் பட்டை, மருதம் பட்டை, கடுக்காய், களிப்பாக்கு சுக்கு வகைக்கு பலம்.½ எல்லாங் கொத்தி நருக்கி ஐந்து படி தண்ணீர் விட்டு அரைப்படியாகக் குறுக்கி அதில் எலுமிச்சம் பழச் சாறு படி.½ விட்டு நல்லெண்ணை படி.½ கோழி ரெத்தம் படி.½ இது மூன்றும் கூட விட்டு முறசின பதத்தில் வடித்துக் கொப்பளிக்கப் பல்லூலை, பல்லரணை, நாவிப் புத்து, சிங்க ரோகம் இவை தீரும்.

<u>தாளக பற்பம்</u>:-

தாளகம் விராகனிடை.5, புளியந் தோடு சுட்டு அந்தச் சாம்பலுக்கு கோழி முட்டை வெள்ளைக் கரு விட்டு அரைத்து குகை சேர்த்து தாளகம் அரைக்கிற விபரம் தாளகம் விராகனிடை.5, கோழி முட்டை தோடு விராகனிடை 2½ சுண்ண தண்ணீர் விட்டு அரைத்து காய வைத்து சீலை மண் மூன்று செய்து குக்குட புடம் போடவும் பற்பமாம்.

<u>கபால மண்டை ஊலை வலிக்குத் தயிலம்</u>:-

வெள்ளாட்டுப் பால் பலம்.½, நொச்சிச் சாறு படி.½, துளசிச் சாறு படி.½, ஆதண்டஞ் சார் படி.½, வேளைத் தழைச் சாறு படி.½, இஞ்சிச் சாறு படி.½, முயிறு முட்டை, பூலகம், கற்கம் மருந்து சாம்பிராணி கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், வெளிச்சைப் பிசின் மிளகு வெள் வெங்காயம், கடுகு, மரமஞ்சள், தேவதாரம், செஞ்சந்தனக் கட்டை ஆக வகைக்கு விராகனிடை.3 (முடிவு இல்லை).

<u>காச்சலுக்கும் கண்ணில் தண்ணீர் வடியிறதுக்கும் யெண்ணை</u>:-

பொன்னாங்காணிச் சாறு, கய்யாந்தகரைச் சாறு, எலுமிச்சம் பழச் சாறு, சீந்திக் கொடிச் சாறு, மலை நார்த்தஞ் சாறு, சிறுகீரைச் சாறு, பசுவின் பால் ஆக சாறும் பாலும் வகைக்கு படி.½ கசாயம் சரக் கொன்றைப் பட்டை முத்தக் காசு வில்லை வேர், விலாமிச்சம் வேர், வெட்டி வேர், அறுகம் வேர் இது வெல்லாம் கசாயம் கடைச் சரக்கு, ஏலம், செஞ் சந்தனக் கட்டை, மர மஞ்சள், செம்பக மொட்டு, கோஷ்டம், லவங்கப் பட்டை, கிராம்பு, நெலிப் பருப்பு, கஸ்தூரி மஞ்சள் வகைக்கு விராகனிடை.உ, என்ணை படி.க, (முடிவு இல்லை).

(வேறு).

<u>அகஸ்திய சுவாமி சூஸ்திரம் நானூற்றெட்டு</u>:-

இதில் யோகம், வாதம் விடுத்து மருந்துகளே எழுதப்படுகின்றன.

<u>கெற்ப ரோகத்துக்கு</u>:-

கானப்பா வயித்தியந்தான் கெற்ப ரோகம் கடுஞ் சூலைக்காய்த் தீர்வதற்கு கடுகு
மஞ்சள்
தோனப்பா யிந்துப்புக் கடுக்காய் வீளி நைவேளை நிலவாகை தானே உள்ளி
பாணமது வெங்காரம் ஆமணக்கிலையும் பரிவாக மூன்று பலம் வகை யொன்றுக்கு
தோனவே விளக்கெண்ணை படி நாலென்று சொல்லுகிறேன் கொடிக கள்ளிப் பால்
களஞ்சி வாரே.
வார்த்து நீ யெரித்த யெண்ணை கொடுக்கக் கேளு மாத விடாய் மூன்று நாள் முழுகும்
போது
காத்திடுவாய் பத்தியந்தான் ஒன்று மாகா கடின மென்ற வாயு வறுங் கெற்ப
முண்டாம்

சாத்துவேன் சதா சிவத்தினுனை சொன்னேன் சண்டாளப் பயல்களுக்கு சாற்ற வேண்டாம்
குத்தமே வருமாகில் சித்தர் தீயால் கொடுஞ் சுபீக்கா மண்ட முதல் புவனம் வேமே.

<u>சூட்டுக்கு:</u>- 4.6.64.

பாரப்பா பால் படி யுரிதான் வாங்கி பாங்கான முசுலியுட பூவை யாட்டி
ஆரப்பா குடித்திடு நீ வெட்டை போகும் அரையாப்பு மருந்து வகை யறைகிறேன் கேள்
சீரப்பா ஒரு சிறங்கை வெள்ளை யுள்ளி சேர்த்திடு நத்தைச் சூரி வேர் பிடி தானென்று
வாரப்பா நல்லெண்ணை படி யரைக் கால் விட்டு வளருந் தை வேளைச் சாற் கூட்டிக்
கொள்ளே.
கொள்ளவே யரையாப்புத் தெரிந்துப் போகும். குடர் போலே திரண்ட போதே
கரப்பன் தீரும்.
மள்ளவே விப்புருதி கிரந்தி தீரும் வளமான உப்பிருட செந்தூ ரங் கேளு
பள்ளவே தேசி நீர் விந்து விட்டு பார்கவே யிருபது நாள் பட்டருந்தானே.

<u>கிரந்தி மேகத்துக்கு எண்ணை:</u>-

கொட்டை முத்து காய்ப் போட்டு வசுத்து யிடித்து யெண்ணை வெந்து வற போது தொட்டெண்ணை யிறுத்துத் தொட்டெண்ணையில் கொல்லங் கோவைக் கிழங்கு ஒரு தேங்காய் மருவாதி சீவி ஈர வெங்காயமும் அப்படிச் சீவிக் கொத்தம் பாலையும் நசுக்கிப் போட்டு அருக்கும் பிறகு தொட்டெண்ணையைக் காச்சி பொன்னிற மாகும் அருக்கும் பிறகு இறக்கி முன் சாப்பிடுகிற போது மூன்று கறண்டி யெண்ணை சாப்பிடவும். இரண்டாங் காலம்பற ஒரு கறண்டி யெண்ணை சாப்பிடவும். சாயங்காலத்துக்கு கற்கஞ் சாப்பிடவும். உப்பு, புளி தவிர்க்கவும். ஏழா நாள் தலை முழுகவும். எந்தக் கிரந்தியும் ஆறும்.

<u>மேக சூலை குட்டம் வெடி சூலை இதுக்கெல்லாந் திரிப் புகை:</u>-

சாதிலிங்கம் அரை விராகன் நிறுத்து யெருக் கலங் கரி சமன் நிறுத்து இரண்டும் அரைத்து துணியில் பறத்தித் திரித்து வியாதியாளனின் கட்டிலின் மேல் வைத்து முக்காடு போட்டுக் கொண்டு அபான வளியாகத் திரி பிடிக்கவும்.

<u>அண்ட வாதம் வயத்து வலி இதுக்கு எண்ணை:</u>-

முடக் கொத்தான் தழை கொண்டு வந்து அரைத்து தேங்காய் மருவாதி இதுக்கு எண்ணை படி ½, கடைச் சரக்கு வசம்பு விராகனிடை.3, சுக்கு விராகனிடை.3, மிளகு விராகனிடை.3, உள்ளி விராகனிடை.3, காயம் விராகனிடை.உ, சங்கம் வேர் தோல் விராகனிடை.3, சித்திர மூலம் வேர்த் தோல் விராகனிடை.3, ஆவினத் தோல்ப் பருப்பு விராகனிடை.உ, களச்சிக் காய்ப் பருப்பு விராகனிடை.உ, இது வெல்லாம் அரைத்து எண்ணையில் போட்டுக் கிண்டிக் காய்ச்சிப் பொன்னிறமான போது இறக்கிக் கொள்ளவும். காலமே எண்ணை சாப்பிடவும். சாயந்திரம் கடுகு சாப்பிடவும். கயிப்பு, புளிப்ப தவிர்க்கவும்.

<u>புவுந்திரத்துக்கு எண்ணை:</u>-

சித்திர மூலம் வேர்த் தோல் விராகனிடை.7, சுண்டான் பட்டை விராகனிடை.7, சிறு கிளா வேர் பட்டை விராகனிடை.7, நல்லெண்ணை படி ½, சுக்கு, வசம்பு, மிளகு உள்ளி ஆக வகைக்கு விராகனிடை.க, இது வெல்லாம் அரைத்து எண்ணையில் கலக்கிக் காய்ச்சிப் பொன்னிறமான போது இறக்கிக் கொண்டு காலமே எண்ணை சாப்பிடவும். அந்திக்கு கற்கம் சாப்பிடவும். இப்படி மூன்று நாள் சாப்பிடவும். மூன்று நாள் மறு பத்தியம் ஏழா நாள் தலை முழுகவும். கைப்பு, புளிப்ப தவிர்க்கவும். இது கை கண்டது.

<u>அரையாப்புக் கட்டி கரைய மருந்து:</u>-

நீர் மேல் நெருப்பு யிலை அரைத்துக் கட்டி மேல் நாலு நாள் போடவும்.

<u>ருதுவாகாத பெண்ணுக்கு:</u>-

அம்மான் பச்சரிசி வேர் ஒரு பலம் இடித்து வென்னீரில் பிசைந்து வடி கட்டி மூன்று நாள் கொடுக்கவும். நெடு நாள் ருதுவாகாத பெண் ருது ஆவாள்.

<u>வாய் சூலை சூட்டிலல் கசாயம்:</u>-

வெள் வேலம் பட்டை, கருவேலம் பட்டை, எருக்கம் வேர், துளசி வேர் வகைக்கு பலம்.5, பச்சைத் தண்ணீர் படி.10 ரெத்தங் கண்டால், பசுவின் தயிரும் வெல்லமுங் கொடுக்கவும்.

<u>கற்பூராதி சூரணம்:</u>-

அரத்தைரேணுகம், கருங் குங்கிலியம், அத்திக் திப்பிலி, வெங்காரம் உசிரத்த கிராம்பு, குருசாணி யோமம், சிவதை, கற்பூரம், வருத்தும் பச்சிலை சிறு நாகப்பூ, வளரும் ஏலம் யிலவங்கம் பெருத்த செண்பகம் சாதிக்காய் பேசுந் தாரம் அகிலுடனே.
அகிலுந் தனிச் சந்தனமும் ஆன சாதி பத்திரியும்
புகலுந் திரிகடுகு வெம்பாடம் பொன்னூர் தேத்தான் விரை கூட்டி
பகருங் களஞ்சு ரெண்டாகப் பதமாய்ப் பொடித்து தேனிலுள்ள
தவருஞ் சய நோய் உள்ளுருக்கி தக்க ரத்த பித்தமும் போம்.

பித்தந் தெடுத்த பிறமேகம் பலத்த பாண்டு ரோகமுடன்
யெத்தும் பெரிய விஷ பாகம் யெய்ப்பு யிளைப்பு வறட்சி பல்

சத்தி யெடுப்பு காமாலை சலியர் வாத சுரம் போகும்
சத்தி யடங்கு மேற் சுவாசமும் போம் பொன்னே முனிவர் புகன்றனரே.

குட்டுக்கு _ _ எண்ணை :-

ஈர வெங்காயச் சாறு பசுவின் பால் வல்லாரைச் சாறு, பொன்னாங் காணி சார் அகத்தி யிலைச் சாறு, சிறு கீரைச் சாறு, மொசு மொசுக்கைச் சாறு, இளநீர் சர்க்கரை ஆக வகைக்கு சாறு படி ½ எண்ணை படி. ½ கடைச் சரக்கு சாதிக்காய், சாதிபத்திரி கிராம்பு, சோம்பு, ஏலம், அதிமதுரம், வால் மிளகு ஆக வகைக்கு விராகனிடை.க, இது வெல்லாம் சாத்தில் அரைத்து கலக்கி மெழுகு பதத்தில் காய்ச்சி உள்ளுக்கு சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி பிறமேகம், நீர்க் கடுப்பு, உந்திப் புண், கெற்பத்தின் மேல்---

மருந்தீடு _ விழ _ மருந்து :-

நிலையாவாரை வேரை யரைத்து வெள்ளாட்டு பாலில் கொடுக்க மருந்து விழும். விழுந்ததின்பிறகு கோழி அடித்துச் சாறு வைத்துக் கோழிச் சாறு முன்னே கொடுத்து அதின் பிறகு சோறுஞ் சாறுங் கொடுக்கவும்.

அஸ்தி _ சுரம் _ பித்தத்துக்கு _ மருந்து :-

சுக்கு, மிளகு, திப்பிலி, யேலம், கிராம்பு, சாதிப் பத்திரி, தாளிச பத்திரி, தெசாவரம், வகைக்கு ஒவ்வொரு விராகனிடை கூட்டித் துணியில் சுத்தி துணி மேல் மொசுமொசுக்கை சுத்தி மொசு மொசுக்கை மேல் துணி சுத்தி துணி மேல் சாணி சுத்தி 75 எருவடிக்கி புடம் போட்டு சாணி கருகிற பக்குவத்தில் தீயைப் பிரித்து அந்த மருந்தை யெடுத்து மொசுமொசுக்கைக் சாறு பிழிந்து அரைத்துக் கொடுக்கவும். அஸ்தி சுரம், உள் காந்தம் பித்த மென்னப் பட்ட தெல்லாம் தீரும்.

துருசு _ பற்பம் :-

துருசை வாங்கி பழம் பாசியிலைஅடியில் இரண்டு யிலை வைத்து அதின் மேல் துருசு கட்டியை வைத்து அதின் மேல் இரண்டு யிலை சுத்தி மூன்று துணி கோழி முட்டைப் பிரமாணம் சுத்தி வைக்கப் பற்பமாம். கபத்துக்குத் தேனில் கொடுக்கவும். ஸ்ரீ

விஷத்துக்கு _ நசியம் :-

துத்தத்தை வாங்கி வந்து சிறுநீரில் நய்யத் தட்டி மூக்கில் நசியம் விடவும். இது கை கண்டது.

இந்திர _ கோப _ கற்பம் :-

இந்தி கோபம் ஒரு பங்கு சீனி சர்க்கரை இரண்டு பங்கு பச்சை மூங்கில் குழாயில் போட்டு டிம்மி போட்டு 40 நாள் வைத்திருந்து ஒரு மண்டலம் ----
(முடிவு இல்லை)

அக்கினி _ குமாரன் _ செந்தூரம் :-

நல்ல நாவி ஒன்று இரண்டு நலத்த சிலை யிரம் நாலு
சொல்லுங் கெந்த மெட்டாகும் நலங்குங் காந்தம் பதினென்று
வெல்லு மரப் பொடி யென்றன்கு விரைந்தே யரைப்பா யிஞ்சி தனில்
வல்ல பொடியை யரைத்திதனை வாகாய் வழித்துத் தான் திரட்டே.

திரட்டே யேரண்டத்திலையில் திரமாய் மூன்றிலை தான் பொதிந்து
முரட்டா நாலு சுத்தி யொரு மூலை தனிலே வைத்திருக்க
பிரட்டே யல்ல தீ யெரியும் பொத்தாலாறிப் பின்னெடுத்து
மிரட்டே செய்யும் வியாதிகள் நேர் விட்டே யோடுங் கண்டீரே.

கண்டீரே சூலை மன்மத் கதித்த பித்த காமாலை குண்டல கிரந்தி, உந்திப் புண், கெற்ப வாய்வு வயத்து வலி இதுகள் தீரும். இச்சா பத்தியம்.

க்ஷய _ வியாதிக்கெல்லாம் _ மருந்து :-

சுடு காட்டில் பிரேதத் தெலும்பை கொண்டு வந்து மலம் ஒரு எலுமிச்சங் காயளவு எடுத்து கேசரி நீர் விட்டுக் கரைத்து புதுப் பானையில் தெளிவை வடிகட்டி சுண்டினதுக்குப் பிற்பாடு அந்த லவணத்தை யெடுத்து ஆவும் பால் விட்டுத் துவைத்து காய வைத்து வஸ்திர காயம் செய்து வெருகடிப் பிரமாணம் தேனில் குழைத்துச் சாப்பிடவும். இப்படி ஆறு நாள் சாப்பிடவும். புளியும் புகையுந் தள்ளி விடவும்.

வாத _ மடைச்சல், _ சருவாங்கி _ மேக _ சூலை _ இதுக் _ கெல்லாம் _ களி _ மருந்து :-

வெடி தர்த்தி வேர்ப் பட்டை கரிப்பாலை கொடி வெள்ளைக் கத்தைக் கொடி, கொடி வேலி வேர்ப் பட்டை, களச்சி வேர், நாயுருவி வேர், வாத மடக்கி வேர், புங்கம் வேர் இது வெல்லாம் ஒரு நிறையாகக் கொண்டு வந்து கம்பரிசியில் போட்டு இடித்து மூன்றுப் பங்கிட்டு மூன்று நாளைக்கு மூன்று காலம்பற கருப்புட்டிப் பாகு காய்ச்சி நெய் விட்டு சாப்பிடவும். மறு பத்தியம் குழைவை நெல்லரிசி, உப்பில்லாமல் சாப்பிடவும்.

கருவேப்பிலை லேகியம்:-

சுக்கு விராகனிடை.5, கருவேப்பிலை விராகனிடை.5, இந்துப்பு விராகனிடை.5, இந்த மூன்று மருந்தையும் எருமை மோர் விட்டு அரைத்து குழம்பு போல் கறண்டியில் அத்தி பசுவின் வெண்ணெய் போட்டுக் கிண்டி பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும். முள்ளிக் காயளவு அந்தி சந்தி சாப்பிடவும்.

(வேறு)

நிலையாவாரை ஒரு விளாங்காயளவு எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்துப் பசுவின் வெண்ணெய் போட்டுக் காய்ச்சி முறுகின பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு ஆறு நாளைக்கு ஒரு கறண்டி நெய்யும் கற்கமுஞ் சாப்பிடவும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

அரைப்புத் திராவகம்:-

நேர்வாளம் விராகனிடை.10, சவ்வீரம் விராகனிடை, சீனிக் காரம், நவச் சாரம், கடுகுரோகணி, காடிக் காரம், பூநீறு தேங்காய்ப் பால், பெருங்காயம் விராகனிடை.உ, வெள் வெங்காயத் தயிலத்திலும் தேங்காய் பால் விட்டு அரைத்து பீங்கான் பரணியில் அடைத்துக் கொள்ளவும்.

காசத்துக்கு:-

மருக்காரைப் பழத்தைக் கொண்டு வந்து அதுக்குள்ளே இருக்கிற விரையை போக்கி காடியில் பிசைந்து கொடுத்தால் இருமல் சுவாச காசம் நிற்கும்.

தாம்பிர பற்பம்:-

சிவந்த கீழா நெல்லியை அமுரி விட்டரைத்து கவசம் கட்டி சீலை மண் செய்து புடம் போடப் பற்பமாகும். அரிதாரமும் சிவகரந்தைச் சாறு சுருக்கு ஒரு சாமம் கொடுக்கக் கட்டிப் போகும்.

குதக வாய்வுக்கு:-

சுத்தி செய்த நேர்வாளம் பலம்.½ கொல்லன் கோவைக் கிழங்கு பலம்.½ இந்துப்பு பலம்.½, மிளகு பலம்.½, ஓமம் பலம்.½, இவை சூரணித்து இந்த மருந்து களைக் குளிர்ந்த தண்ணீரிலே ஆட்டி குளுகை கட்டி நிழலுலர்த்திக் கொண்டு வீட்டுக்குத் தூரமாய் இருக்கிறவளுக்கு தினமொரு குளிகை சேர்த்துப் பாளை தண்ணீரில் கொடுக்கவும். குதக வாய்வு நிற்கும். கெற்ப முண்டாகும்.

இடி மருந்து:-

அரிதாரங், காந்தம், எள்ளு, எட்டி விரை, சேங்கொட்டை, சித்திர மூலம்

வடி மருந்து:- ரசம், கெந்தகம், மஞ்சளோமம், மாசக்காய், சாதிக்காய், வசம் பீருள்ளி.

குடி மருந்து:- கொள்ளுக்காய், அருகு, ரத்தங், கோழி முட்டை, கார்போகம், கோஷ்ட மிந்து.

அடி மருந்து: அமுக்கிலா சம பாகமாக்கி அன்னே அப்பனே உலக்கை கொண்டு மாட்டி டாயே.

பனங் கருப்புக் கட்டி சமன் கூட்டிக் கொள்ளவும்.

மகோதரம் வீக்க மென்னப் பட்டதுக் கெல்லாம் மண்டூர செந்தூரம்:-

மண்டூரங் கொண்டு வந்து கேசரி கோழியம் விட்டரைத்து ஆறு ஏழு புடம் போடச் செந்தூரமாகும். இந்தச் செந்தூரம் தலை சுருளி வேர்க் கசாயம் போட்டு அந்தக் கசாயத்தில் இந்தச் செந்தூரம்- நேரம் ஒன்றுக்கு கால் விராகனிடை செந்தூரம் போட்டுச் சாப்பிடவும். இப்படி ஆறு நாள் சாப்பிடவும். கைப்பு, புளிப்புச் சாப்பிடவும். கவுசி, கை பொரும்பல், நீரும்பல், மகோதரம் காமாலை, சோகை பாண்டு இது வெல்லாந் தீரும்.

மருந்து:-

நீரட்டை உயிருடன் கொண்டு வந்து வெளிச்செண்ணையை விட்டு வறுத்துப் பொடி செய்து அப்பொடியுடன் பொன்னரி தாரம் பொடி செய்து பசு மாட்டு வெண்ணெயை வலது உள்ளங் கையில் தேய்த்து அந்த வெண்ணெயை மேற்படி பொடியில் போட்டுக் குளிகை செய்து நிழல் உலர்த்தி சித்திரியத்தில் ஊற வைத்துக் கொடுக்க சகல வியாதியுந் தீரும். ஸ்ரீ வசியமாகும்.

******

முற்றும்

******

சு.ச: 4.6.64.

60